# TAMIL NADU AGRICULTURAL SCHEMES MADE SIMPLE

(Central and State Government Schemes Explained in English and Tamil)

# தமிழ்நாட்டில் வேளாண்மைத் திட்டங்கள் எளிய வழிகாட்டி

(மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் ஆங்கிலம் மற்றும் தமிழில் விளக்கம்)




**Volume/தொகுதி-II**

## State and Central Schemes Implemented in Tamil Nadu

**தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மாநில மற்றும் மத்திய வேளாண்மைத் திட்டங்கள்**

भाकृअनुप
ICAR

**ICAR-SUGARCANE BREEDING INSTITUTE**
**இ.வே.ஆ.க.–கரும்பு இனப்பெருக்கு நிறுவனம்**
**COIMBATORE - 641 007 Tamil Nadu**
**கோயம்புத்தூர், தமிழ்நாடு**

# TAMIL NADU AGRICULTURAL SCHEMES MADE SIMPLE

(Central and State Government Schemes Explained in English and Tamil)

# தமிழ்நாடு வேளாண்மைத் திட்டங்கள் எளிய வழிகாட்டி

(மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள்-ஆங்கிலம் மற்றும் தமிழில் விளக்கம்)

## Volume/தொகுதி II

## State and Central Schemes Implemented in Tamil Nadu

**தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மாநில மற்றும் மத்திய வேளாண்மைத் திட்டங்கள்**

**Viksit Krishi Sankalp Abhiyan (VKSA)**

**வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம்**


**ICAR - SUGARCANE BREEDING INSTITUTE**

**भा.कृ.अनु.प. गन्ना प्रजनन संस्थान**

**COIMBATORE कोयम्बत्तूर - 641 007**

**TAMIL NADU तमिलनाड**

**Correct citation of the publication**

R. Karuppaiyan, P. Govindaraj, K. Kannan, P. Murali, A. Suganya, R. Selvakumar, N. Geetha, R. Gomathi, M. Alagupalamuthirsolai, R. Gobu, P. Geetha, K. Elayaraja, R. Raja, M. Gnanavel, K. Selvamuthu, V. Anusheela, P. Amudha, P. Jagadeshwaran, and M. Kowshika. 2026. **Tamil Nadu Agricultural Schemes Made Simple - Central and State Government Schemes Explained in English and Tamil.** Vol II. ICAR-Sugarcane Breeding Institute, Coimbatore, 166p (Bilingual)

இரா.கருப்பையன், பெ. கோவிந்தராஜ், கூ. கண்ணன், ப. முரளி, அ. சுகன்யா, இரா. செல்வகுமார், ந. கீதா, இரா. கோமதி, மு. அழகுபழமுதிர்சோலை, ரா. கோபு, பொ. கீதா, க. இளையராஜா, ரெ. ராஜா, மு.ஞானவேல், க. செல்வமுத்து, வ. அனுஷீலா, ப. அமுதா, ப. ஜகதீஷ்வரன், மற்றும் மா. கௌசிகா. 2026. **தமிழ்நாடு வேளாண்மைத் திட்டங்கள் எளிய வழிகாட்டி- மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் ஆங்கிலம் மற்றும் தமிழில் விளக்கம்.** தொகுதி II. இ.வே.ஆ.க.-கரும்பு இனப்பெருக்கு நிறுவனம், கோயம்புத்தூர். 166p (இருமொழி)

Note to the Readers

Volume I of this book presents the basic details of the Central Sector and Centrally Sponsored Schemes. Volume II provides State Government Schemes and subsidy details specific to the State of Tamil Nadu for the year 2025-26. For a better understanding of the scheme's implementation, readers are requested to consult both volumes.

**Printed and Published by**
The Director
ICAR-Sugarcane Breeding Institute
Coimbatore - 641 007, Tamil Nadu, India

February, 2026

E-Book

ISBN No. 978-93-85267-51-2

Copyrights

All Rights reserved
@ ICAR-Sugarcane Breeding Institute, Coimbatore-641 007, TN, India

# அணிந்துரை

**திருமதி. மீ. தமிழ் செல்வி, வேளாண்மை இணை இயக்குநர், கோவை** 13 பிப்ரவரி 2026

தமிழ்நாடு அரசு பயிர் உற்பத்தி, பாசனம், இயந்திரமயமாக்கல், மீன்வளம், கால்நடை மற்றும் கிராமிய தொழில்முனைவோர் மேம்பாடு ஆகிய துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. எனினும், பல விவசாயிகள் குறிப்பாக, சிறு, குறு விவசாயிகள், தொலைதூரத்தில் வசிப்போர்கள் மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் பற்றி அறிந்திருக்காவிடில் அவர்கள் வேளாண் இயந்திரங்கள், நுண் நீர்ப்பாசனம், பயிர்க் காப்பீடு, கால்நடை வளர்ப்பு போன்ற திட்டங்களுக்குக் கிடைக்கும் மானியங்களை இழக்கக்கூடும்.

மாநிலத்தில் பணியாற்றும் வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் ATMA பணியாளர்கள், மாநில அரசின் கொள்கை/திட்டங்கள் மற்றும் நடைமுறைப் படுத்துதல் இவற்றிற்கிடையேயான பாலமாகச் செயல்படுகின்றனர். அவர்கள் கிராமங்களுக்கு அடிக்கடி சென்று, விவசாயிகளுடன் தொடர்பு கொண்டு, அரசுத் திட்டங்கள், தகுதிகள், நன்மைகள் மற்றும் விண்ணப்ப முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்கள். அடித்தட்டு நிலையில் உள்ள விவசாயிகளும் நவீன தொழில் நுட்பங்கள்/ தகவல்கள்/ திட்டப் பலன்கள் பற்றி அறிந்துகொண்டு விழிப்புணர்வோடு இருக்க, மாநில அரசு அவ்வப்போது விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகிறது.

எனவே, மத்திய மற்றும் மாநில அரசுகள் செயல்படுத்தும் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிக இன்றியமையாத செயலாகப் பார்க்கப்படுகிறது. திட்டங்களும் மானியங்களும் வெறும் கொள்கைக் கருவிகள் மட்டுமல்ல; அவை கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு நிதி உதவி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் சமூகப் பாதுகாப்பை வழங்கும் உயிர்நாடிகளாகும். விவசாயிகள் இந்தத் திட்டங்களைப் புரிந்து கொண்டு அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்துவதை உறுதிசெய்வது, உணவுப் பாதுகாப்பு, நீடித்த-நிலையான வேளாண்மை மற்றும் வளமான வாழ்வு ஆகிய இலக்குகளை அடைவதற்கு அத்தியாவசியம்.

கோவையில் உள்ள கரும்பு இனப்பெருக்கு நிறுவன விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் தொகுக்கப்பட்ட "தமிழ்நாடு வேளாண்மைத் திட்டங்கள் எளிய வழிகாட்டி" என்ற இருமொழி நூல் பாராட்டத்தக்க ஒன்றாகும். எளிய நடையில் இருமொழி வடிவமைப்புடன் தொகுக்கப்பட்ட இந்நூல், வேளாண் விஞ்ஞானிகள், வேளாண் தொழில்நுட்ப வல்லுநர்கள், வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விவசாயப் பெருமக்களுக்குப் பயனுள்ள வழிகாட்டியாக அமையும் என நம்புகிறேன்.

இந்நூலை உருவாக்கிய ஆசிரியர்களின் முயற்சியை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

நல்வாழ்த்துக்களுடன்

13/2/26.

மீ தமிழ்செல்வி M.Sc (Ag)
வேளாண்மை இணை இயக்குநர்
கோயம்புத்தூர்.

# முன்னுரை

இந்திய வேளாண்மைத் துறை தற்போது வேகமான மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. தொழில்நுட்ப புதுமைகள், கொள்கை மாற்றங்கள் மற்றும் விவசாயிகளின் நலனுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் ஆகியவை இந்த மாற்றங்களுக்கு வலுவூட்டுகின்றன. இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இரண்டும் வேளாண் உற்பத்தித் திறன், வேளாண்மையில் ஒரு நிலைத்தன்மை, உழுதுண்டு வாழ்பவர்களுக்கு வருமானப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் தன்மையை மேம்படுத்தப் பல்வேறு மேம்பாட்டுத்திட்டங்கள், நலத்திட்டங்கள், ஊக்கத்தொகைகள், மானியங்கள் மற்றும் விருதுகளை அறிமுகப்படுத்தி வருகின்றன. இருப்பினும், இத்திட்டங்களின் பயன்தன்மை பெரும்பாலும் சரியான நேரத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தெளிவான தகவல்கள் வழங்குதல், மற்றும் அடித்தட்டு நிலைவரை உள்ள பயனர்களுக்கு உரிய வழிகாட்டுதல் வழங்குதல் ஆகிய காரணிகளைப் பெரிதும் சார்ந்துள்ளது.

இந்த நோக்கத்துடன்தான், ‘‘தமிழ்நாடு வேளாண்மைத் திட்டங்கள் எளிய வழிகாட்டி/Tamil Nadu Agricultural Schemes Made Simple’’ என்ற இருமொழி நூல், மத்திய அரசின் முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்களில் ஒன்றான கோயம்புத்தூரில் உள்ள ஐ.சி.ஏ.ஆர்-கரும்பு இனப்பெருக்கு நிறுவன பணியாளர்களால் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தமிழ்நாட்டில் *‘விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான்* (VKSA)’ என்னும் இந்திய வேளாண்மை வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தின் தமிழ்நாடு மாநில செயல்படுத்தும் அலுவலகமாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த மின்னூல் இரண்டு தொகுதிகளாக VKSA பிரச்சார இயக்கத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. தொகுதி I-ல் சுமார் 29 மத்தியத் துறை மற்றும் மத்திய ஆதரவு பெற்ற திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் மற்றும் செயல்பாட்டு விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தொகுதி II-ல் 2025-26-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள சுமார் 107 மாநிலத் திட்டங்கள், மானியங்கள், ஊக்கத்தொகைகள் மற்றும் விருதுகள் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. முடிந்தவரை, தகவல்கள் துல்லியமாகவும், எளிமையாகவும், மற்றும் உள்ளூர் சூழலுக்குப் பொருத்தமாகவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நூலின் முதன்மை பயனாளர்கள், ஐ.சி.ஏ.ஆர். நிறுவனங்களின் விஞ்ஞானிகள், வேளாண்மை அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள், மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், தமிழக வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் ஆகியோர் ஆவர். இவர்கள் ‘‘வேளாண்மை வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் (VKSA)" உள்ளிட்ட வேளாண் விரிவாக்கம், விவசாயிகள் தொடர்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றுகின்றனர். இப்பங்குதாரர்கள், அடிக்கடி கிராமங்களுக்குச் சென்று, விவசாயிகள்-விஞ்ஞானிகள் சந்திப்பு/கலந்துரையாடல்கள் நடத்தி, தொழில்நுட்பங்களைப் பரப்பும் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே, இந்த நூல், மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் வேளாண்மைப் பிரச்சார இயக்கத்திற்கு மிகவும் உதவும் என நம்புகிறோம். இந்த நூலில் தகவல்கள் எளிய நடைமுறையில், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலும் வழங்கப்பட்டுள்ளதால், இது விவசாயிகள் பல்வேறு அரசுத் திட்டங்கள், திட்ட விதிமுறைகள், தகுதி, நன்மைகள், விண்ணப்ப முறைகள் ஆகியவற்றை எளிதில் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

இந்த நூலை உருவாக்குவதற்கு ஆதரவு நல்கிய இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் செயலாளர், தமிழக அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் அவர்களுக்கு எங்களின் மனப்பூர்வமான நன்றியைப் பதிவு செய்கிறோம். மேலும், இந்த நூலைத் தயாரிக்கும்போது ஊக்கமளித்த எங்கள் கரும்பு இனப்பெருக்கு நிறுவன இயக்குநர் உள்ளிட்ட சக ஊழியர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூலுக்கு அணிந்துரையாக தங்கள் கருத்துகளை வழங்கிய இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சக செயலாளர் திரு. தேவேஷ் சதுர்வேதி, இ.ஆ.ப., மற்றும் திருமதி மீ. தமிழ் செல்வி, வேளாண்மை இணை இயக்குநர், கோவை அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் சிந்தனையூட்டும் வார்த்தைகள் இந்நூலை மேலும் செழுமையாக்குவதோடு, உயர்ந்த நம்பகத்தன்மையையும் ஊக்கத்தையும் அளிக்கின்றன.

இந்த நூல், தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைத்து அன்பர்களுக்கும் ஓர் எளிமையான குறிப்பு நூலாகவும், பயிற்சி கையேடாகவும் மற்றும் விழிப்புணர்வு கருவியாகவும் அமையும் என நம்புகிறோம்.

16.2.2026 ஆசிரியர்கள்

## CONTENT (Volume II)


| # | Title | Page |
|---|---|---|
| 1 | Kalaignarin All Village Integrated Agricultural Development Programme (KAVI-ADP) | 1 |
| | கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVI-ADP) | 4 |
| 2 | Chief Minister's Mannuyir Kaathu Mannuyir Kaappom Scheme (CM MK MKS) | 7 |
| | முதலமைச்சரின் மண்ணுயிர்க்காத்து மண்ணுயிர்க்காப்போம் திட்டம் (CM MK MKS) | 9 |
| 3 | Welfare Schemes for Farmers, Milk Producers and Fishermen | 11 |
| | விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் மீனவர்களுக்கான நலத்திட்டங்கள் | 16 |
| 3.1 | Chief Minister's Uzhavar Pathukappu Thittam (CMUPT) | 11 |
| | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் (CMUPT) | 16 |
| 3.2 | Pradhan Mantri Kisan Samman Nidhi (PM – KISAN) | 13 |
| | பிரதம மந்திரியின் விவசாயிகள் கௌரவ நிதித் திட்டம் (PM-KISAN) | 19 |
| 3.3 | Tamil Nadu Farmer Welfare & Safety Scheme | 13 |
| | தமிழ்நாடு விவசாயிகள் நலன் மற்றும் பாதுகாப்புத் திட்டம் | 19 |
| 3.4 | Peraringnar Anna Co-Operative Milk Producers' Welfare Fund | 13 |
| | பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி | 19 |
| 3.5 | Fishermen Welfare Schemes | 14 |
| | மீனவர் நலத்திட்டங்கள் | 20 |
| 4 | Special Package to Increase Crop Area and Food Grain Production | 23 |
| | பயிர் பரப்பளவு மற்றும் உணவு தானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கான சிறப்புத் தொகுப்பு | 24 |
| 5 | Rashtriya Krishi Vikas Yojana (RKVY) Schemes in TN | 25 |
| | தேசிய வேளாண்மை முன்னேற்றத் திட்டங்கள் (RKVY) | 28 |
| 6 | Food and Nutrition Security (FNS) Scheme | 33 |
| | உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டம் (FNS) | 36 |
| 7 | Important National Mission Schemes Implemented in TN | 40 |
| | தமிழகத்தில் செயல்படுத்தப்படும் சில முக்கிய தேசிய இயக்கத் திட்டங்கள் | 48 |
| 7.1 | National Mission on Edible Oils (NMEO)- Oilseeds and Oil Palm | 40 |
| | தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் (NMEO): எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் பனை | 48 |

| # | Title | Page |
|---|---|---|
| 7.2 | National Mission on Organic Farming (NMOF) and National Mission on Natural Farming (NMNF) | 41 |
| | தேசிய உயிர்ம வேளாண்மை இயக்கம் (NMOF) மற்றும் தேசிய இயற்கை வேளாண்மை இயக்கம் (NMNF) | 49 |
| 7.2.1 | National Mission on Organic Farming (NMOF) | 41 |
| | இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF) | 50 |
| 7.2.2 | Paramparagat Krishi Vikas Yojana (PKVY) | 42 |
| | பாரம்பரிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (PKVY) | 51 |
| 7.2.3 | Organic Certification under Organic Farming Promotion Scheme | 43 |
| | அங்கக வேளாண்மை ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் அங்ககச் சான்றிதழ் | 51 |
| 7.3 | Nutrition Farming Mission (NFM) / Nutrient-Sensitive Agriculture Mission | 43 |
| | ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் | 52 |
| 7.4 | National Horticulture Mission (NHM) | 44 |
| | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) | 53 |
| 7.5 | Tamil Nadu Millet Mission | 44 |
| | தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் | 53 |
| 7.6 | National Bamboo Mission | 45 |
| | தேசிய மூங்கில் இயக்கம் | 54 |
| 7.7 | Palmyrah Development Mission (PDM) | 45 |
| | பனை மேம்பாட்டு இயக்கம் (PDM) | 54 |
| 7.8 | National Horticulture Mission (NHM) of the MIDH | 45 |
| | MIDH-இன் தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) | 54 |
| 8 | Integrated Coconut Development Scheme (ICDS) | 58 |
| | ஒருங்கிணைந்த தென்னை மேம்பாட்டுத் திட்டம் (ICDS) | 59 |
| 9 | Schemes related to Agriculture Mechanization in Tamil Nadu | 61 |
| | தமிழ்நாட்டில் வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கா திட்டங்கள் | 64 |
| 9.1 | Sub-Mission on Agricultural Mechanization (SMAM) | 61 |
| | வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம் (SMAM) | 64 |
| 9.2 | End to End Mechanization | 62 |
| | விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்குதல் | 65 |
| 9.3 | e-Vaadagai Services | 62 |
| | e-வாடகை சேவைகள் | 65 |
| 9.4 | Skill Development Training for Operating Agricultural Machinery | 62 |
| | வேளாண் இயந்திரங்களை இயக்குவதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி | 66 |

| # | Title | Page |
|---|---|---|
| 10 | Schemes Promoting Solar Power for Agriculture in Tamil Nadu | 68 |
| | வேளாண்மையில் சூரிய சக்தியை ஊக்குவிக்கும் திட்டங்கள் | 70 |
| 10.1 | Chief Minister's Scheme of Solar Powered Pump Sets | 68 |
| | முதலமைச்சரின் சூரிய சக்தி பம்ப் செட்டுகள் திட்டம் | 70 |
| 10.2 | Solar Fencing System | 68 |
| | சூரிய மின்வேலி அமைத்தல் | 70 |
| 10.3 | Solar Driers | 69 |
| | சூரிய ஒளிக் கூடார உலர்த்தி | 71 |
| 10.4 | Agricultural Feeders Solarisation (Feeder Segregation) by TANGEDCO | 69 |
| | TANGEDCO-இன் வேளாண் பாசன மின்வழித் தடங்களை சூரிய ஆற்றல் மயமாக்கும் திட்டம் | 71 |
| 11 | Agriculture Extension Schemes Implemented in Tamil Nadu | 73 |
| | தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் வேளாண் விரிவாக்கத் திட்டங்கள் | 76 |
| 11.1 | Chief Minister's Famers Service Centre | 73 |
| | முதலமைச்சரின் உழவர் நல சேவை மையம் | 76 |
| 11.2 | Village Outreach Campaign / Uzhavarai Thedi Velanmai -Uzhavar Nalathurai | 73 |
| | உழவரைத் தேடி வேளாண்மை-உழவர் நலத்துறை | 77 |
| 11.3 | Uzhavar Aluvalar Thodarbu Thittam (UATT 2.O) | 74 |
| | உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் 2.0 (UATT 2.0) | 77 |
| 11.4 | Sub-Mission on Agricultural Extension (SMAE) under NMAET | 75 |
| | NMAET-இன் வேளாண்மை விரிவாக்கத் துணை இயக்கம் (SAME) | 79 |
| 11.5 | One Village, One Crop Demonstration | 75 |
| | ஒரு கிராமம் – ஒரு செயல் விளக்கம் | 79 |
| 12 | Schemes/ Programmes related to Seed Quality and Certification | 80 |
| | விதைத் தரம் மற்றும் சான்றளிப்பு தொடர்பான திட்டங்கள் | 83 |
| 12.1 | Seed Certification Programme | 80 |
| | விதைச் சான்றளிப்பு செயல்பாடுகள் | 83 |
| 12.2 | Seed Quality Control Programme | 80 |
| | விதை தரக் கட்டுப்பாட்டுச் செயல்பாடுகள் | 83 |
| 12.3 | Seed Testing Scheme | 81 |
| | விதைப் பரிசோதனைத் திட்டம் | 84 |
| 12.4 | Production of Quality / Certified Seeds | 81 |
| | தரமான மற்றும் சான்று விதைகள் உற்பத்தித் திட்டம் | 85 |

| # | Title | Page |
|---|---|---|
| 12.5 | Sub-Mission of Seeds and Planting Materials | 82 |
| | விதைகள் மற்றும் நடவுப் பொருட்கள் துணைத் திட்டம் | 85 |
| 12.6 | Training Scheme on Certified Seed Production and Quality Control | 82 |
| | சான்று விதை உற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாட்டிற்கான பயிற்சிகள் | 85 |
| 13 | Schemes related to Post Harvest Processing and Value Addition | 86 |
| | வேளாண் விற்பனை, அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டல் தொடர்பான திட்டங்கள் | 94 |
| 13.1 | AGMARK Quality Certification | 86 |
| | அக்மார்க் தரச் சான்றிதழ் | 94 |
| 13.2 | Agriculture Infrastructure Fund (AIF) | 87 |
| | வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF) | 95 |
| 13.3 | electronic National Agriculture Market (eNAM) | 88 |
| | மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM) | 97 |
| 13.4 | National Agriculture Development Project (NADP) | 88 |
| | தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் (NADP) | 97 |
| 13.5 | National Horticulture Mission (NHM) of the MIDH | 89 |
| | MIDH இன் தேசிய தோட்டக்கலை இயக்கம் | 98 |
| 13.6 | Pledge Loan for Farmers and Traders | 89 |
| | விவசாயிகள் மற்றும் வணிகர்களுக்கான அடமான (பொருளீட்டு) கடன் | 99 |
| 13.7 | Pradhan Mantri Kisan SAMPADA Yojana (PMKSY) | 90 |
| | பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY) | 99 |
| 13.8 | Establishment of Start-up in the Agriculture, Horticulture, Animal Husbandry and Fisheries Sectors | 91 |
| | வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளத் துறைகளில் புத்தாக்க நிறுவனங்கள் தொடங்குதல் | 101 |
| 13.9 | Supply Chain Management Project (SCMP) | 91 |
| | தமிழ்நாடு விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் (SCMP) | 101 |
| 13.10 | Tamil Nadu Irrigated Agriculture Modernization Project (TNIAMP) | 92 |
| | தமிழ்நாடு இறவைப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) | 102 |
| 13.11 | Uzhavar Sandhai | 92 |
| | உழவர் சந்தை | 103 |
| 13.12 | Value chain development of MSME | 93 |
| | குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மதிப்புக் கூட்டல் திட்டம் | 103 |

| # | Title | Page |
|---|---|---|
| 14 | Schemes related to Water Management, Watershed Development, Rainwater Harvest and Dryland Development | 105 |
| | நீர் மேலாண்மை, நீர்வடிப் பகுதி மேம்பாடு, மழைநீர் சேகரிப்பு மற்றும் மானாவாரி நில மேம்பாடு தொடர்பான திட்டங்கள் | 111 |
| 14.1 | Climate Proofing of Rainfed Watersheds in Salem and Virudhunagar Districts | 105 |
| | சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மானாவாரி நீர்வடிப் பகுதிகளின் பருவநிலை மாற்றப் பாதுகாப்புத் திட்டம் | 111 |
| 14.2 | Creation and Maintenance of Rainwater Harvesting Structures | 105 |
| | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் | 112 |
| 14.3 | Dam Rehabilitation and Improvement Programme | 106 |
| | அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் | 113 |
| 14.4 | Desilting of 'C' and 'D' Channels | 107 |
| | 'C' மற்றும் 'D' வகை வாய்க்கால்களைத் தூர் வாருதல் / கடைமடை உழவர்களுக்கும் தடையற்ற பாசனம் | 113 |
| 14.5 | Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PMKSY-HKKO & PDMC) | 107 |
| | பிரதம மந்திரி வேளாண் பாசனத் திட்டம்: ஒவ்வொரு வயலுக்கும் நீர் & ஒரு துளியில் அதிக விளைச்சல் (PMKSY-HKKO & PDMC) | 114 |
| 14.6 | Rainfed Area Development (RAD) / Dryland Development Scheme | 108 |
| | மழைசார்ந்த பகுதி மேம்பாட்டுத் திட்டம் (RAD) / மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 115 |
| 14.7 | Rehabilitation of Open Irrigation Wells | 109 |
| | திறந்தவெளிப் பாசனக் கிணறுகளைப் புனரமைத்தல் | 116 |
| 14.8 | Scheme on Electric Motor Pump Set | 109 |
| | மின் மோட்டார் பம்ப் செட் திட்டம் | 116 |
| 14.9 | Special Area Development Programme | 109 |
| | சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 116 |
| 15 | Other Schemes Implemented by the Departments of the Agriculture, Horticulture, Agricultural Engineering | 118 |
| | வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பிறத் திட்டங்கள் | 122 |
| 15.1 | Agroforestry Scheme | 118 |
| | வேளாண்காடுகள் திட்டம் | 122 |
| 15.2 | Crop Diversification Programme (CDP) | 118 |
| | மாற்றுப் பயிர் சாகுபடி திட்டம் (CDP) | 122 |

| # | Title | Page |
|---|---|---|
| 15.3 | Crop Insurance Scheme | 118 |
| | பயிர் காப்பீட்டு திட்டம் | 122 |
| 15.4 | Hill Farmers Development Scheme | 119 |
| | மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம் | 123 |
| 15.5 | Kisan Credit Card | 119 |
| | உழவர் கடன் அட்டை | 123 |
| 15.6 | Soil Health Card | 119 |
| | மண் வள அட்டை | 124 |
| 15.7 | State Horticulture Development Scheme (SHDS) | 120 |
| | மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டங்கள் (SHDS) | 124 |
| 15.8 | Sugarcane Development Scheme | 121 |
| | கரும்பு மேம்பாட்டு திட்டங்கள் | 125 |
| 15.9 | TN Cotton Production Enhancement Scheme | 121 |
| | தமிழக பருத்தி உற்பத்தி மேம்பாட்டு திட்டம் | 126 |
| 16 | Animal Husbandry and Dairy Development Schemes | 127 |
| | கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள மேம்பாட்டுத் திட்டங்கள் | 132 |
| 16.1 | Animal Husbandry Schemes | 127 |
| | கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் | 132 |
| 16.2 | Mini Dairy Scheme | 127 |
| | சிறிய (மினி) பால் பண்ணைத் திட்டம் | 132 |
| 16.3 | Mobile Veterinary Unit (MVU) | 128 |
| | நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு (MVU) | 133 |
| 16.4 | National Livestock Mission (NLM) | 128 |
| | தேசிய கால்நடை இயக்கம் (NLM) | 133 |
| 16.5 | Rashtriya Gokul Mission (RGM) | 129 |
| | ராஷ்ட்ரிய கோகுல் இயக்கம் / தேசிய பசு மேம்பாட்டு இயக்கம் (RGM) | 134 |
| 16.6 | State Fodder Development Schemes (SFDS) | 129 |
| | மாநில தீவன அபிவிருத்தித் திட்டங்கள் (SFDS) | 135 |
| 16.7 | The Rural Backyard Poultry / Backyard Poultry Development Scheme | 129 |
| | ஊரக கொல்லைப்புற கோழி வளர்ப்புத் திட்டம் / புறக்கடை கோழி வளர்ப்பு அபிவிருத்தித் திட்டம் | 136 |
| 16.8 | Vallalar Palluyir Kappagangal | 130 |
| | வள்ளலார் பல்லுயிர்க் காப்பகங்கள் | 136 |
| 17 | Fisheries Development and Fishermen Welfare Schemes | 138 |
| | மீன்வள மேம்பாடு மற்றும் மீனவர் நலத்திட்டங்கள் | 143 |

| # | Title | Page |
|---|---|---|
| 17.1 | Fishermen Welfare Schemes | 138 |
| | மீனவர்களுக்கான நலத்திட்டங்கள் | 143 |
| 17.2 | Pradhan Mantri Matsya Sampada Yojana (PMMSY) | 138 |
| | பிரதான் மந்திரி மத்ஸய சம்பதா யோஜனா (PMMSY) / பிரதம மந்திரி மீன்வளத் திட்டம் | 144 |
| 17.3 | Schemes for Inland Fisheries & Aquaculture | 140 |
| | உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புக்கானத் திட்டங்கள் | 146 |
| 17.4 | Schemes for Marine Fisheries | 141 |
| | கடல்சார் மீன்வளத் திட்டங்கள் | 147 |
| 17.5 | Schemes for Reservoir Development | 142 |
| | நீர்த்தேக்கங்களில் மீன்வளர்ப்புத் திட்டங்கள் | 148 |
| 18 | Digital Agricultural Initiatives in Tamil Nadu | 149 |
| | தமிழ்நாட்டில் டிஜிட்டல் வேளாண்மை முன்முயற்சிகள் | 154 |
| 18.1 | Aavin Plus and Aavin Covai | 149 |
| | ஆவின் பிளஸ் மற்றும் ஆவின் கோவை | 154 |
| 18.2 | AgriStack / Tamil Nadu Farmers' Registry | 149 |
| | அக்ரிஸ்டேக் / தமிழ்நாடு விவசாயிகள் பதிவேடு | 154 |
| 18.3 | Bharat Sanjeevani | 149 |
| | பாரத் சஞ்சீவனி | 155 |
| 18.4 | e-NAM | 150 |
| | இ-நாம் | 155 |
| 18.5 | e-Thottam | 150 |
| | இ-தோட்டம் | 156 |
| 18.6 | e-Vaadagai | 150 |
| | இ-வாடகை | 156 |
| 18.7 | FARMS | 150 |
| | பார்ம்ஸ் | 156 |
| 18.8 | GRAINS | 151 |
| | க்ரைன்ஸ் | 157 |
| 18.9 | Meengal | 151 |
| | மீன்கள் | 157 |
| 18.10 | Tamil Mannvalam Portal | 151 |
| | தமிழ் மண்வளம் இணைய தளம் | 158 |
| 18.11 | Thoondil | 152 |
| | தூண்டில் | 158 |
| 18.12 | Uzhavar | 152 |
| | உழவர் | 159 |

| # | Title | Page |
|---|---|---|
| 19 | Awards and Prize for Farmers and Researchers | 161 |
| | விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளுக்கான விருதுகள் மற்றும் பரிசுகள் | 164 |
| 19.1 | Awards for Agriculture Innovation | 161 |
| | வேளாண் கண்டுபிடிப்புகளுக்கான புதுமை விருதுகள் | 164 |
| 19.2 | Best Exporter-Farmer Award | 161 |
| | சிறந்த ஏற்றுமதி-விவசாயி விருது | 164 |
| 19.3 | Best performing farmers/ producers/self-help groups | 161 |
| | சிறப்பாகச் செயல்படும் விவசாயிகள் / உற்பத்தியாளர்கள் / சுய உதவிக் குழுக்கள் | 164 |
| 19.4 | Bharat Ratna Dr. M.G.R traditional paddy variety conservator award | 161 |
| | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் இரகங்கள் பாதுகாவலர் விருது | 164 |
| 19.5 | District Level Yield Competition Award | 161 |
| | மாவட்ட அளவிலான விளைச்சல் போட்டி விருது | 165 |
| 19.6 | Dr. M.S. Swaminathan Research Grant | 161 |
| | டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி | 165 |
| 19.7 | Gopal Ratna Awards and State Awards | 162 |
| | கோபால் ரத்னா விருதுகள் மற்றும் மாநில விருதுகள் | 165 |
| 19.8 | International Exposure Visit to Farmers | 162 |
| | விவசாயிகளுக்கான சர்வதேச கண்டுணர் சுற்றுலா /அனுபவப் பயணம் | 165 |
| 19.9 | Nammazhvar Award for Best organic Farmers | 162 |
| | சிறந்த இயற்கை விவசாயிகளுக்கான நம்மாழ்வார் விருது | 165 |
| 19.10 | Prize / Awards for High Yielding / Best Performing Farmer Award | 162 |
| | அதிக விளைச்சல் பெற்ற மற்றும் சிறந்த விவசாயிகளுக்கு விருதுகள் | 166 |
| 19.11 | Tamil Nadu Scientist Award (TANSA) | 162 |
| | தமிழ்நாடு விஞ்ஞானி விருது (TANSA) | 166 |
| 19.12 | Thiru C. Narayanasamy Naidu Award | 163 |
| | திரு. சி. நாராயணசாமி நாயுடு விருது | 166 |

## Volume / தொகுதி I

### Central Sector and Centrally Sponsored Schemes

### மத்திய அரசின் நேரடி ஆதரவு மற்றும் பங்களிப்புப் பெற்ற வேளாண்மை திட்டங்கள்

## Content


| # | Title |
|---|---|
| 1 | An Introduction to the Central Sector and Centrally Sponsored Agricultural Schemes |
| | மத்திய அரசின் நேரடி ஆதரவு மற்றும் பங்களிப்புப் பெற்ற வேளாண்மை திட்டங்கள்: ஓர் அறிமுகம் |
| 2 | Agri-Clinics & Agri-Business Centres (AC&ABC) |
| | விவசாய ஆலோசனை மையங்கள் & வேளாண் வணிக மையங்கள் |
| 3 | Agricultural Technology Management Agency (ATMA) |
| | வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) |
| 4 | Agriculture Infrastructure Fund (AIF) |
| | விவசாய உட்கட்டமைப்பு நிதி (AIF) |
| 5 | e-NAM |
| | மின்னணு தேசிய வேளாண்மை சந்தை (eNAM) |
| 6 | Farmers Grievance Redressal System (FGRS) |
| | விவசாயிகள் குறைதீர்க்கும் முறைமை (FGRS) |
| 7 | Farmers Producer Organisations (FPO) |
| | உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO) |
| 8 | Integrated Scheme for Agricultural Marketing (ISAM) |
| | வேளாண் சந்தைப்படுத்தலுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (ISAM) |
| 9 | Kisan Call Centre (KCC) |
| | விவசாயிகள் அழைப்பு மையம் (KCC) |
| 10 | Kisan Credit Card (KCC) |
| | உழவர் கடன் அட்டை (KCC) |
| 11 | m-Kisan |
| | எம்-கிசான் |
| 12 | National Food Security and Nutrition Mission (NFSNM) |
| | தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் (NFSNM) |
| 13 | National Pest Surveillance System (NPSS) |
| | தேசியப் பூச்சி கண்காணிப்பு முகமை (NPSS) |
| 14 | Pradhan Mantri Dhan Dhanya Krishi Yojana (PMDDKY) |
| | பிரதம மந்திரி வேளாண்மை தானியங்கள் செழிப்புத் திட்டம் |
| 15 | Pradhan Mantri Fasal Bima Yojna (PMFBY) |
| | பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) |
| 16 | Pradhan Mantri Kisan Maandhan Yojna (PMKMY) |
| | பிரதம மந்திரி விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் (PMKMY) |

| # | Title |
|---|---|
| 17 | Pradhan Mantri Kisan Samman Nidhi (PM-KISAN)<br>பிரதம மந்திரி விவசாயிகள் கௌரவ நிதித் திட்டம் (PM-KISAN) |
| 18 | Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PMKSY)<br>பிரதம மந்திரி வேளாண்மை நீர்ப்பாசனத் திட்டம் (PMKSY) |
| 19 | Rashtriya Krishi Vikas Yojana (RKVY)<br>தேசிய வேளாண்மை முன்னேற்றத் திட்டம் (RKVY) |
| 20 | Self-Help Groups (SHGs)<br>சுய உதவிக் குழுக்கள் (SHG) |
| 21 | Soil Health Card (SHC) Scheme<br>மண்வள அட்டைத் திட்டம் (SHC) |
| 22 | The National Beekeeping and Honey Mission (NBHM)<br>தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கம் (NBHM) |
| 23 | Schemes related to Natural and Organic Farming<br>இயற்கை மற்றும் அங்கக வேளாண்மை சார்ந்தத் திட்டங்கள் |
| 23.1 | Jaivik Kheti Portal / Organic Product Marketing<br>ஜெய்விக் கேத்தி இணையதளம் / அங்ககப் பொருட்களை சந்தைப்படுத்துதல் |
| 23.2 | National Mission on Natural Farming (NMNF)<br>தேசிய இயற்கை வேளாண்மை இயக்கம் (NMNF) |
| 23.3 | National Programme for Organic Production (NPOP)<br>தேசிய அங்கக உணவு உற்பத்தித் திட்டம் (NPOP) |
| 23.4 | Paramparagat Krishi Vikas Yojana (PKVY)<br>பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PKVY) |
| 24 | Schemes Related to Chemical Fertilizers<br>இரசாயன உரங்கள் தொடர்பானத் திட்டங்கள் |
| 25 | Recently launched Schemes<br>சமீபத்தில் தொடங்கப்பட்ட திட்டங்கள் |
| 25.1 | Mission for Aatmanirbharta in Pulses (Self-reliance in Pulses)<br>பருப்பு உற்பத்தி ஆத்மநிர்பார் இயக்கம் (பருப்பு வகைகளில் தன்னிறைவு) |
| 25.2 | Mission for Cotton Productivity (Cotton Mission)<br>பருத்தி உற்பத்தித்திறனுக்கான இயக்கம் (பருத்தி இயக்கம்) |
| 25.3 | National Mission on High Yielding Seeds (NMHYS)<br>உயர் விளைச்சல் விதைகளுக்கான தேசிய இயக்கம் (NMHYS) |

## (1) Kalaignarin All Village Integrated Agricultural Development Programme (KAVI-ADP)

**Launch:** Started in 2020-21, to cover all the 12,524 village panchayats in TN, in a span of 5 years, by selecting one-fifth of village Panchayat in a year for implementing the scheme.

**Objective**: To make all village panchayats self-sufficient by converting fallow lands into cultivable lands, creating community water resources, thereby improving the standard of living of farmers

**Budget Outlay**: 269.50 crore for 2025-26.

**Funding pattern:** This is a State Government-funded scheme. Funds are provided to multiple departments through the Agriculture and Farmers' Welfare Department as the nodal agency.

**Activities/ Key components**

1. **Village-level Agricultural Planning:** Preparation of a Village Agricultural Development Plan (VADP) involving all stakeholders (farmers, SHGs, Panchayats, etc.). Identification of cropping patterns, water resources, and suitable technologies specific to the soil type/village is part of the planning process,
2. **Integrated Approach:** Convergence of schemes under Agriculture, Horticulture, Agricultural Engineering, Animal Husbandry, Fisheries, and Cooperation departments at the village level. It also aims to form fallow land clusters
3. **Infrastructure Development:** Create community water sources and energise with electricity or solar power, installation of a micro irrigation system for the community and creation of water sources (digging a borewell) for individual SC/ST farmers. Planting perennial fruit or tree crops and cultivation of short-duration crops are promoted in the Panchayat/ village's fallow land. This scheme assists for the creation of farm ponds, check dams, percolation tanks, construction of threshing floors, godowns, and drying yards, lending loans through Cooperative Societies, and de-silting channels, canals, etc.
4. **Subsidies:** 100% subsidy is provided for specific components like well-digging and drip irrigation for eligible farmers. Distribution of coconut saplings, home garden saplings, and vegetable garden kits at free of cost to eligible farmers. Preference is given to small and marginal farmers, women farmers, and SC/ST farmers in the selected 2338 villages.
5. **Capacity Building and Farmer Training:** Farmers' field schools, exposure visits, and demonstration of technologies are arranged under the scheme.
6. **Promotion of Natural/Organic Farming:** This scheme **e**ncourages low-input sustainable practices and soil health management.
7. **Promoting income generating allied activities:** Dairy, poultry, goat rearing, fisheries, and mushroom cultivation are promoted to supplement farmers' income.

**Subsidy Details**

***A) Through the Agriculture Department***

**1) Conversion of fallow land into cultivable land:**

- Clearing bushes in fallow or dry land **cluster**, levelling and ploughing in community/panchayat lands**:** ₹ 3,840 per acre or 50% subsidy, whichever is lesser.

**2) Promotion of Pulse sowing on field bunds:** ₹120 per acre or 50% subsidy, whichever is lower.

**3) Field Demonstration of improving soil fertility by increasing beneficial microbes:** ₹ 180 per acre or 50% subsidy, whichever is lower.

4) **Distribution of Power / Battery-operated sprayers**: ₹3,000 or 50% subsidy, whichever is lower.

5) **Training to the Village Agriculture Development Group,** formed in the KAVI-ADS implemented village, with 8-15 women farmers (Max 40 male + female farmers)-assistance of ₹ 10,000 per group

***B) Through the Horticulture Department***

1. Area expansion of Perennial Horticultural crops: Either 50% subsidy of ₹ 60,000 or ₹18,000/ha for one year, whichever is lower.
2. Distribution of Fruit Plant Kit: ₹ 200 per kit- contains 5 fruit plant saplings with 100% subsidy
3. Promotion of vegetable cultivation: ₹ 7,500 per ha with 75% subsidy
4. Distribution of Coconut saplings: ₹ 65 per sapling, maximum 2 saplings per family with 100% subsidy.

***C) Through the Agriculture Engineering Department***

1. Expanding cultivable area: By creating water sources, community water resources, improving water storage structure and bringing fallow land under cultivation i.e. digging borewell, installation of electric or solar powered pump set, providing underground irrigation pipes for a cluster of farmers and individual SC/ST farmers registered/ selected under AGAMT II scheme with 100% subsidy.
2. Rehabilitation and improvement of Panchayat Union's minor irrigation tanks, ooranies, ponds, supply channels and other water harvesting structures.
3. Distribution of power tillers
4. Rejuvenation of village open wells: Subsidy of 50% or up to ₹ 2.50 lakh per well will be provided under PM-RKVY

***D) Through the Sugar Department***

1. Distribution of bud chip seedling of sugarcane varieties (Co 0212, Co 11015, Co 86032, CoV 09356, CoC 13339, CoG 6, CoG 7) @ 12,500 seedlings/ha with 50% Subsidy or ₹ 15,625/ha, whichever is lower.
2. Distribution of single bud direct planting of sugarcane varieties Co 0212, Co 11015, Co 86032, CoV 09356, Coc 13339, CoG6, CoG 7 @ 2.5 tonnes seed cane/ha with 50% Subsidy or ₹ 5000/ha, whichever is lower.

**Eligibility:** Selected, eligible farmers, preferably small, marginal and SC/ST farmers residing in the selected villages where the scheme is in operation.

**Contact:** Contact the concerned Assistant Executive Engineer, District Agriculture Engineering Department or Joint Director, Agriculture Department or MD/ EO of Cooperative or Public Sector Sugar Mills or Assistant Horticulture Officer, Department of Horticulture for more information.

**Sources:**


- Kalaignarin All Village Integrated Agricultural Development Programme (KAVIADP). https://aed.tn.gov.in/en/schemes/special-schemes/kagovvt.
- GoT. 2023. KAVIADP Guideline. G.O. No 44 dt 16.3.2023. Agriculture and Farmers' Welfare Department. Government of Tamil Nadu. https://www.tnagrisnet.tn.gov.in/fcms /documents /go/10-kaviadpgo.pdf
- GoT. 2025. Citizen Charter (*மக்கள் சாசனம்*). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.

## (1) கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVI-ADP)

**துவக்கம்:** 2020-21 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது, 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள சுமார் 12,524 கிராம பஞ்சாயத்துகளில் இத்திட்டத்தை செயல்படுத்தும் விதமாக, ஓராண்டில் ஐந்தில் ஒரு பங்கு கிராம பஞ்சாயத்துகளைத் தேர்ந்தெடுத்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**நோக்கம்:** தரிசு நிலங்களைச் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களாக மாற்றுவதன் மூலம் அனைத்துக் கிராம பஞ்சாயத்துகளையும் தன்னிறைவு அடையச் செய்தல், சமூகம் சார்ந்த நீர்வளங்களை/ஆதாரங்களை உருவாக்குதல், மற்றும் இதன்மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

**நிதி:** 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 269.50 கோடியாகும்.

**நிதி முறை:** இது மாநில அரசு நிதியளிக்கும் திட்டம். மாநில வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை திட்டச் செயலாக்க முகமையாக செயல்பட்டு இத்துறையின்மூலம் தொடர்புடைய பிற துறைகளுக்கு நிதி வழங்கப்படுகிறது.

**செயல்பாடுகள்/ முக்கியக் கூறுகள்**

1. **கிராம அளவிலான விவசாய திட்டமிடல்:** அனைத்து பயனாளீகலள் (விவசாயிகள், சுய உதவிக்குழுக்கள், பஞ்சாயத்து ஆகியவை) கலந்தாலோசித்து கிராம விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை (VADP) தயாரித்தல். தங்கள் கிராமத்திற்கு ஏற்ற, மண் வகைக்கேற்ற பயிர் முறைகள், நீர்வளங்கள், மற்றும் பொருத்தமான வேளாண் தொழில்நுட்பங்களை அடையாளம் காணுதல் இதில் அடங்கும்.

2. **ஒருங்கிணைந்த அணுகுமுறை:** கிராம அளவில் செயல்படும் விவசாயம், தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் கூட்டுறவுத் துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துதல். மேலும், இது தரிசு நிலத் தொகுதிகள் உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

3. **உள்கட்டமைப்பு மேம்பாடு:** சமூக நீர் ஆதாரங்களை வளபடுத்தி அவற்றை மின்சாரம் அல்லது சூரிய சக்திமூலம் இயக்குதல், நுண் நீர்ப்பாசன அமைப்பை நிறுவுதல், தனிநபர் எஸ்.சி./எஸ்.டி. விவசாயிகளுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் (ஆழ்துளை கிணறு தோண்டுதல்) ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் இத்திட்டத்தில் உண்டு. கிராம/பஞ்சாயத்து தரிசு நிலத்தில் (பயன்பாடு இல்லாத நிலம்) பழம் அல்லது மரப்பயிர்களை நடுதல் மற்றும் குறுகியக் காலப் பயிர்களைப் பயிரிடுதல் ஆகியன ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், தடுப்பணைகள் மற்றும் வடிகால் தொட்டிகள் அமைத்தல், கதிரடிக்கும் களம், கிடங்குகள், உலர்த்தும் மைதானங்கள் கட்டுதல், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் வழங்குதல், கால்வாய்கள், வாய்க்கால்களைத் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4. **மானியங்கள்:** தகுதியுள்ள விவசாயிகளுக்கு கிணறு வெட்டுதல் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் போன்ற குறிப்பிட்ட பணிகளுக்கு 100% மானியம் வழங்கப்படுகிறது. தகுதியுள்ள விவசாயிகளுக்குத் தென்னை மரக்கன்றுகள், வீட்டுத் தோட்ட மரக்கன்றுகள் மற்றும் காய்கறி விதைகள்/ சிறுகருவிகள் இலவசமாக வழங்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட 2,338 கிராமங்களில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், மற்றும் எஸ்.சி./எஸ்.டி. விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

5. **திறன் மேம்பாடு மற்றும் விவசாயிகள் பயிற்சி:** விவசாயிகள் பண்ணைப் பள்ளிகள், கண்டுணர் சுற்றுலா மற்றும் தொழில்நுட்ப செயல் விளக்கங்கள் இத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்படுகிறது.

6. **இயற்கை/உயிர்ம வேளாண்மையை ஊக்குவித்தல்:** குறைந்த இடுபொருட்களை கொண்ட, நீடித்த நிலையான வேளாண் முறைகள் மற்றும் முறையான மண்வள மேலாண்மை முறைகள் இத்திட்டத்தில் ஊக்குவிக்கப்படுகிறது.

7. **வருமானம் ஈட்டும் பிற வேளாண் சார் தொழில்களை ஊக்குவித்தல்:** விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் பால் பண்ணை அமைத்தல், கோழி, ஆடு, மீன் மற்றும் காளான் வளர்ப்பு ஆகியன ஊக்குவிக்கப்படுகிறது.

**மானிய விவரங்கள்**

*அ) வேளாண் துறை வழி*

1) **தரிசு நிலத்தைச் சாகுபடி நிலமாக மாற்றுதல்:**

- தரிசு நிலங்கள் அல்லது வறண்ட நிலங்களில் புதர்களை அகற்றுதல், சமூக/ஊராட்சி நிலங்களில் சமன் செய்தல் மற்றும் உழுதல்: ஏக்கருக்கு ₹ 3,840 அல்லது 50% மானியம், எது குறைவாக இருக்கிறதோ அது.

2) வயல் வரப்புகளில் பயறு விதைப்பை ஊக்குவித்தல்: ஏக்கருக்கு ரூ. 120 அல்லது 50% மானியம், இதில் எது குறைவோ அது.

3) நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை அதிகரிப்பதன் மூலம் மண் வளத்தை மேம்படுத்துவதற்கான திடல் செயல்விளக்கம்: ஏக்கருக்கு ரூ. 180 அல்லது 50% மானியம், இதில் எது குறைவோ அது.

4) மின்சாரம்/பேட்டரி மூலம் இயக்கப்படும் தெளிப்பான்கள் விநியோகம்: ரூ. 3,000 அல்லது 50% மானியம், இதில் எது குறைவோ அது.

5) KAVI-ADS செயல்படுத்தப்படும் கிராமத்தில் 8-15 பெண் விவசாயிகள் அடங்கிய (அதிகபட்சம் 40 ஆண்+பெண் விவசாயிகள்) கிராம வேளாண் மேம்பாட்டுக் குழுவிற்கு பயிற்சி - ஒரு குழுவிற்கு ரூ. 10,000 நிதியுதவி.

*ஆ) தோட்டக்கலைத் துறை வழி*

1) பல்லாண்டுத் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம்: ரூ. 60,000-ல் 50% மானியம் அல்லது ஒரு வருடத்திற்கு ரூ. 18,000/ஹெக்டேருக்கு, இதில் எது குறைவோ அது.

2). பழச்செடி தொகுப்பு விநியோகம்: ரூ. 200-மதிப்பில் ஒரு தொகுப்பு, இதில் 5 பழ மரக்கன்றுகள் அடங்கும், இவை 100% மானியத்துடன் வழங்கப்படுகிறது.

3). காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல்: 75% மானியத்துடன் ஹெக்டேருக்கு ரூ. 7,500.

4). தென்னை மரக்கன்று விநியோகம்: ஒரு மரக்கன்றுக்கு ரூ. 65, ஒரு குடும்பத்திற்கு 100% மானியத்துடன் அதிகபட்சம் 2 மரக்கன்றுகள்.

*இ) வேளாண் பொறியியல் துறை வழி*

1) சாகுபடி செய்யக்கூடிய பகுதியை விரிவுப்படுத்துதல்: நீர் ஆதாரங்கள், சமூக நீர் வளங்களை உருவாக்குதல், நீர் சேமிப்பு கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் தரிசு நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவருதல்- அதாவது, AGAMT II திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட/தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் குழுக்கள் மற்றும் தனிப்பட்ட SC/ST விவசாயிகளின் குழுவிற்கு ஆழ்துளைக் கிணறு தோண்டுதல், மின்சாரம்

அல்லது சூரிய சக்திமூலம் இயங்கும் பம்ப் செட்டுகளை மற்றும் நிலத்தடி நீர்ப்பாசனக் குழாய்களை 100% மானியத்துடன் வழங்குதல்.

2). பஞ்சாயத்து யூனியன் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசனத் தொட்டிகள், ஊரணிகள், குளங்கள், நீர் விநியோகக் கால்வாய்கள் மற்றும் பிற நீர் சேகரிப்பு கட்டமைப்புகளைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

3). பவர் டில்லர் விநியோகம்.

4). கிராம திறந்தவெளி கிணறுகளைப் புதுப்பித்தல்: PM-RKVY இன் கீழ் 50% மானியம் அல்லது ஒரு கிணற்றுக்கு ரூ. 2.50 லட்சம்வரை மானியம் வழங்கப்படுகிறது.

***ஈ) சர்க்கரைத் துறை மூலம்***

1. கரும்பு இரகங்களின் (கோ 0212, கோ 11015, கோ 86032, கோவி 09356, கோக 13339, கோஜி 6, கோஜி 7) ஒரு பரு கரணை நாற்றுகளை விநியோகித்தல்- சுமார் 12,500 நாற்றுகள்/ஹெக்டேர், 50% மானியம் அல்லது ரூ. 15,625/ஹெக்டேர், இதில் எது குறைவோ அது.

2. கோ 0212, கோ 11015, கோ 86032, கோவி 09356, கோசி 13339, கோஜி 6, கோஜி 7 ஆகிய கரும்பு இரகங்களின் ஒரு பரு கரணைகளை நேரடி நடவிற்கு விநியோகித்தல்- சுமார் 2.5 டன் விதை கரும்பு/ஹெக்டேருக்கு 50% மானியத்துடன் அல்லது ரூ. 5,000/ஹெக்டேர், இதில் எது குறைவோ அது.

**தகுதிகள்:** KAVI-ADS திட்டம் செயல்பாட்டில் உள்ள கிராமங்களில் வசிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட, தகுதியுள்ள விவசாயிகள், குறிப்பாக சிறு, குறு மற்றும் SC/ST விவசாயிகள்.

**தொடர்புக்கு:** மேலும் தகவல்களுக்கு சம்பந்தப்பட்ட உதவி நிர்வாகப் பொறியாளர், மாவட்ட வேளாண் பொறியியல் துறை அல்லது வேளாண் துறையின் இணை இயக்குநர் அல்லது கூட்டுறவு/பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் மேலாண்மை இயக்குநர்/ தலைமை நிர்வாக அதிகாரி அல்லது தோட்டக்கலைத் துறையின் உதவி தோட்டக்கலை அதிகாரி ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.

**ஆதாரங்கள்:**


- Kalaignarin All Village Integrated Agricultural Development Programme (KAVIADP). https://aed.tn.gov.in/en/schemes/special-schemes/kagovvt.
- GoT. 2023. KAVIADP Guideline. G.O. No 44 dt 16.3.2023. Agriculture and Farmers' Welfare Department. Government of Tamil Nadu. https://www.tnagrisnet.tn.gov.in/fcms /documents /go/10-kaviadpgo.pdf
- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.

## (2) Chief Minister's Mannuyir Kaathu Mannuyir Kaappom Scheme (CM MK MKS)

**Launch:** FY 2024-25 with a budget outlay of ₹ 206 crores.

**Objective:** To promote organic farming, enhance soil fertility, and ensure pesticide residue-free food.

**Programmes for 2025-26:** Budget Outlay: ₹ 142 crore with **15 key components.**

1. Distribution of green manure seeds to farmers @ 50 % subsidy (₹ 1000 per acre per farmer).
2. Distribution of Soil Health Cards to 4 lakh farmers, conducting 1,150 demonstrations on Integrated Nutrient Management and 385 awareness trainings to reduce chemical fertiliser usage and to increase the soil fertility.
3. Establishment of 18,440 Integrated Farming System (IFS) units to support the farmers to earn a regular income round the year by integrating crops with cattle farming, apiculture, vermi-compost production, etc.
4. Establishment of small, big and hi-tech nurseries and production of quality tree saplings.
5. Encouraging organic cultivation by supporting third-year activities for 725 organic farming clusters established during the year 2023-24 under Paramparagat Krishi Vikas Yojana (PKVY).
6. Distribution of 20,000 Vermi-compost units, Establishing 500 permanent vermicompost units (₹ 6,000 per farmer for vermi-bed creation), and Distribution of Vermibeds @ 2 vermibeds per farmer @ 50% subsidy (maximum assistance ₹ 3,000).
7. Establishment of 100 Organic Input Production Centres for farmers' groups (₹ 1 lakh per farmer group).
8. Creation of 500 model organic farm plots to promote organic farming among farmers (₹ 1 lakh /unit or ₹10,000/farmer will be given).
9. Distribution of 10 lakh neem tree saplings at no cost.
10. Distribution of 10 lakh Aadathoda and Nochi seedlings at free of cost.
11. Cultivation of Traditional paddy varieties with medicinal properties like Sivan samba, Mappillai samba, Karungkuruvai, Karuppu kavuni in 7,500 acres (assistance of ₹ 15/kg of truthfully labelled seed).
12. To produce and distribute 250 MT of traditional paddy variety seeds (50% subsidy or subsidy of ₹ 25 /kg of seeds- subsidy limit to 20 kg seeds per farmer) Nel Jayaraman Traditional Paddy Conservation Mission.
13. Distribution of 5 MT of seeds of traditional millet & pulses varieties to farmers.
14. Promotion of Good Agricultural Practices through Farmers' Field School, benefitting 10,000 farmers, to enable the farmers to solve their field problems on their own, to make them aware of the good agricultural practices and to improve the skills of farmers. Enhancement of production in rainfed area: ₹ 1,200 per acre will be provided,

i.e., for summer ploughing-₹500 (50% Subsidy) and seeds distribution-₹700 (50% Subsidy).

15. Distribution of pest and disease calendar to 1 lakh farmers, to create awareness among farmers for early identification of pests and diseases, and to take prophylactic measures.

**Sources:**


- Press Release No 762 dt 12.6.2024, Director, Department of Information and Public Relations, Chennai
- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for Agriculture and Farmers' Welfare. Government of Tamil Nadu.

## (2) முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் (CM MK MKS)

**தொடக்கம்:** 2024-25-ம் ஆண்டில் ரூ. 206 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டது.

**நோக்கம்:** இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல், மண் வளத்தை மேம்படுத்துதல் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து எச்சங்கள் இல்லாத உணவை உறுதி செய்தல்.

**2025-26 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்:** ரூ. 142 கோடி நிதி ஒதுக்கீட்டுடன், **15 முக்கிய கூறுகளுடன்** இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1. விவசாயிகளுக்கு 50% மானியத்தில் பசுந்தாள் உர விதைகளை விநியோகித்தல் (ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 1000 வீதம்).
2. சுமார் 4 லட்சம் விவசாயிகளுக்கு மண் வள அட்டைகளை விநியோகித்தல், இரசாயன உரப் பயன்பாட்டைக் குறைப்பதற்கும் மண் வளத்தை அதிகரிப்பதற்கும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து 1,150 செயல் விளக்கங்கள் மற்றும் 385 விழிப்புணர்வு பயிற்சிகளை நடத்துதல்.
3. சுமார் 18,440 ஒருங்கிணைந்த பண்ணை முறை (IFS) அலகுகள் நிறுவப்பட்டு, கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மண்புழு உரம் உற்பத்தி போன்றவற்றுடன் பயிர் சாகுபடியை ஒருங்கிணைப்பதன் மூலம் விவசாயிகள் ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்ட உதவியாக இருக்கும்.
4. சிறிய, பெரிய மற்றும் உயிரி தொழில்நுட்ப நாற்றங்கால்களை நிறுவுதல் மற்றும் தரமான மரக்கன்றுகளை உற்பத்தி செய்தல்.
5. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்(PKVY) கீழ் 2023-24 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 725 அங்கக வேளாண்மைத் தொகுப்புகளுக்கான மூன்றாம் ஆண்டு செயல் திட்டங்களை ஆதரிப்பது, இதன்மூலம் அங்கக வேளாண்மை சாகுபடியை ஊக்குவித்தல்.
6. 20,000 மண்புழு உர அலகுகள் விநியோகம், 500 நிரந்தர மண்புழு உர அலகுகளை நிறுவுதல் (மண்புழுஉர படுக்கை உருவாக்க ஒரு விவசாயிக்கு ரூ. 6,000 மானியம்), மற்றும் 50% மானியத்தில் ஒரு விவசாயிக்கு 2 மண்புழு படுக்கைகள் என்ற அளவில் மண்புழு படுக்கைகள் விநியோகம் (அதிகபட்ச உதவியாக ரூ. 3,000)
7. 100 இயற்கை இடுபொருள் உற்பத்தி மையங்களை விவசாயி குழுக்களுக்கு நிறுவுதல் (ஒரு விவசாயி குழுவிற்கு ரூ. 1 லட்சம் மானியம்)
8. இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க 500 மாதிரி இயற்கை விவசாயப் பண்ணைகளை உருவாக்குதல் (ஒரு பண்ணைக்கு ரூ. 1 லட்சம் அல்லது தனி நபருக்கு ரூ. 10,000 மானியம் வழங்கப்படும்).
9. 10 லட்சம் வேப்ப மரக் கன்றுகள் இலவசமாக விநியோகம்.
10. 10 லட்சம் ஆடுதொடா மற்றும் நொச்சி நாற்றுகள் இலவசமாக விநியோகம்.
11. மருத்துவக் குணங்கள் கொண்ட பாரம்பரிய நெல் வகைகளான சிவன் சம்பா, மாப்பிள்ளை சம்பா, கருங்குருவை, கருப்பு கவுனி ஆகியவற்றை 7,500 ஏக்கரில் பயிரிடுதல் (சுய சான்றளிக்கப்பட்ட TFL விதைக்கு கிலோவிற்கு ரூ. 15 உதவி).
12. நெல் ஜெயராமன்- பாரம்பரிய நெல் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் சுமார் 250 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் இரக விதைகளை உற்பத்தி செய்து விநியோகித்தல்

(50% மானியம் அல்லது ஒரு கிலோ விதைக்கு ரூ. 25 மானியம் - ஒரு விவசாயிக்கு 20 கிலோ விதைகள் வரை மானிய வரம்பு).

13. 5 மெட்ரிக் டன் பாரம்பரிய சிறுதானிய மற்றும் பருப்புவகை பயிர் இரகங்களின் விதைகளை விநியோகித்தல்.

14. விவசாயிகள் தங்களின் வேளாண் சார்ந்த பிரச்சினைகளைத் தாங்களாகவே தீர்க்கவும், நல்ல விவசாய நடைமுறைகள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், விவசாயிகளின் திறன்களை மேம்படுத்தவும், சுமார் 10,000 விவசாயிகளுக்கு விவசாயிகள் பண்ணைப் பள்ளிகள் மூலம் 'செம்மை சாகுபடி நடைமுறைகள்' குறித்து பயிற்சி அளிக்கப்படும். மானாவாரிப் பகுதியில் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக ஏக்கருக்கு ரூ. 1,200 மானியம் வழங்கப்படும், அதாவது கோடை உழவுக்கு - ரூ. 500 (50% மானியம்) மற்றும் விதை விநியோகம் - ரூ. 700 (50% மானியம்).

15. சுமார் 1 லட்சம் விவசாயிகளுக்கு பூச்சி மற்றும் நோய் குறித்த நாட்காட்டியை விநியோகித்தல். இதன்மூலம், விவசாயிகள் பூச்சிகள் மற்றும் நோய்களை முன்கூட்டியே அடையாளம் கண்டு, தக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

**ஆதாரங்கள்:**


- Press Release No 762 dt 12.6.2024, Director, Department of Information and Public Relations, Chennai
- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for Agriculture and Farmers' Welfare. Government of Tamil Nadu.

## (3) Welfare Schemes for Farmers, Milk Producers and Fishermen

### 3.1 Chief Minister's Uzhavar Pathukappu Thittam (CMUPT)

**Launch and Status**: The scheme is a social security or welfare scheme of the Tamil Nadu Government, intended to provide financial assistance and protection to farmers, agricultural labourers, and their families under various contingencies (old age, illness, death, etc.). It was originally introduced on 15th August 2005 as a social security scheme for farmers. Later, in 2011, a revised/renewed scheme, "Chief Minister's Uzhavar Pathukappu Thittam 2011 was introduced, replacing the earlier scheme, Tamil Nadu Agricultural Labourers – Farmers (Social Security and Welfare) Scheme, 2006.

Relief and assistance will be given for **Landless Agricultural Labourers** and their families with benefits such as old age pension, maternity benefits, natural death assistance, accident relief, funeral assistance and educational assistance under the CM's Uzhavar Pathukappu Thittam.

**Financial assistance:** Under CMUPT, multiple types of benefits are provided depending on the situation

**a) For Members**

1. **Marriage assistance:** For eligible members' children or spouses, marriage assistance is provided (quantum differs for male/female). For example: Male: ~₹8,000; Female: ~₹10,000.
2. **Old Age Pension**: For members aged above 60 years, a monthly pension amount (for example, ₹1,000) or a similar amount is given.
3. **Temporary incapacitation period**: Monthly assistance of ₹1,000 during the periods of temporary incapacitation (for example, due to TB, cancer, HIV/AIDS, or other terminal illnesses).
4. **Accident Relief**: Relief for death due to accident is ₹ 2.0 lakh, & for disability due to accident: ₹ 1.0 lakh
5. **Natural death assistance**: If a member passes away naturally, financial assistance (₹30,000) is given.
6. **Funeral expenses**: ₹ 10,000

**b) For Dependents**

1. Marriage assistance
2. Educational assistance: For the dependents of members (particularly their children), assistance will be given to persuade education such as ITI, Polytechnic, diploma, degree, PG, professional courses, etc. The assistance varies depending on the level of education.
3. Grant to Orphan: Monthly grant (₹1,000) to orphan children of farmer members who died due to HIV/death by illness, till the age of 18.
4. Funeral expenses: Small sum to help with Funeral/ Eemachadangu aid expenses (e.g., ₹2,500).

**Eligibility**

- Main Members who can be enrolled in the scheme are: (i) agricultural labourers, (ii) small and marginal farmers (including on tenancy) engaged in cultivation & possess Wet land not exceeding 2.5 acres or dry land not exceeding 5 acres and engaged in direct cultivation, (iii) inland fishing, and (iv) labourers working in plantations.

- Age shall be 18-65 years for the main membership
- The scheme extends benefits to dependents of the main member (spouse, children, etc.). Dependents who can be enrolled are: (i) Non-earning members of the family of a registered farmer member, (ii) Wife or husband, as the case may be, (iii) Children, (iv) Deceased son's wife and children and (v) Parents.
- Some benefits are only available to those with the membership card (for example, old age pension for members above 60). So, the members must possess a 'Uzhavar Pathukappu Card' / membership card under this scheme to avail of the benefits. Many schemes and district-level portals refer to "Merun card" or "Uzhavar card" as identification.

**Implementing Agency and Enrolment**

- The scheme is administered under the Revenue (Land Reforms) Department of Tamil Nadu.
- The members of Uzhavar Pathukappu Thittam may get benefits under CMCHIS (Chief Minister's Comprehensive Health Insurance Scheme) as beneficiary.
- Farmers can apply through any one of the following offices in their taluk/district: Taluk Office (Revenue Department) / Village Administrative Officer (VAO) / Block Development Office (BDO) / Assistant Director of Agriculture (ADA) Office
- Special camps are periodically held to enrol members / facilitate applications. District administrations also publicise the scheme and camps.
- Farmers have to fill out the CMUPT Enrolment Form obtained from the VAO or Taluk Office.
- Submits the filled-in Form with all supporting documents. The Revenue Department Officials will verify the landholding and agricultural status through Adangal/Chitta records. Also, Identity & residence proof.
- After verification, the farmer's name is entered in the Uzhavar Pathukappu Member Register.
- Once approved, a Membership ID / Uzhavar Card (often maroon colour) is issued to the farmer. This card serves as proof for availing assistances such as ₹1,000/month old age or illness pension, ₹20,000 death assistance, ₹2,500 funeral expense, marriage/education/accident/orphan assistance, etc.
- Membership, is then activated in the official *Uzhavar Pathukappu Thittam database* (maintained by the Land Reforms Department).
- A mobile/digital application "CMUPT – Uzhavar Digital Records TN" is available. This is intended for Government Officials to manage farmer data under this scheme.

**Key Features**

1. Under the scheme, a member in the family who are engaged in agriculture and allied to agriculture such as horticulture /sericulture / the raising of crops, grass or garden produce/dairy farming/poultry farming /livestock breeding/growing of trees/inland fishing is enumerated as 'Main member'.
2. Enumerated as a 'Dependent Member' in the family who depends upon the main member.
3. Paralysis has been included in the accident relief category, and a sum of ₹ 50,000 is given as assistance.
4. To avail the funeral expenses, an amount of ₹ 2,500, no death certificate is required, and the amount will be paid immediately.

5. Fine Arts, Teacher Education and Nursing have been included in this scheme for educational assistance. Educational assistance can be availed under the scheme even if assistance is obtained under another scheme.
6. Continuing assistance to dependent family members even after the demise of the Farmer member.
7. During temporary incapacitation of a farmer member on account of TB, Cancer, HIV/AIDS and other terminal diseases rendering the farmer member incapable of doing work, the affected farmer member shall be provided a monthly Pension of ₹ 1,000 during the ailment till the disease is cured.

### 3.2 Pradhan Mantri Kisan Samman Nidhi (PM–KISAN)

- This Central Sector scheme is being implemented in Tamil Nadu since 2019.
- Under the scheme, an amount of ₹ 6,000/- per year is transferred by the Government of India directly into the bank accounts of the eligible farmer family (one person per family), who own cultivable lands, in three equal instalments under DBT mode (Aadhar Based Payment System).

### 3.3 Tamil Nadu Farmer Welfare & Safety Scheme

**Eligibility**

- Farmers / tenant farmers who are selling at least 1 MT of his farm produce in a financial year through the regulated markets are eligible for the scheme.
- Age: 18–60 years

**Benefits**

- Death of Farmers / share crop farmers due to accident / snake bite: max. ₹1.0 lakh
- Loss of two limbs / two eyes: ₹75,000
- Loss of one limb / one eye / permanent disability: ₹50,000
- No premium payable by farmers
- Annual premium ₹10 paid equally by the Market Committee & TN Agricultural Marketing Board

**Contact:** Superintendent / Supervisor of the nearest Regulated Market

**Intimation**: In the event of an accident or death, the claim application must be sent to the Tamil Nadu State Agricultural Marketing Board within three months.

### 3.4 Peraringnar Anna Co-Operative Milk Producers' Welfare Fund

The financial assistance provided to milk producers under the Peraringnar Anna Cooperative Milk Producers Welfare Fund Scheme has been enhanced during 2025 as detailed below.

| | |
|---|---|
| Accidental death | : ₹ 4.0 lakhs |
| Permanent Disability | : ₹ 1.0 to 2.25 lakhs |
| Marriage Assistance | : ₹ 60,000 (for one girl child) |
| Educational Assistance | : ₹ 50,000 per child for 2 children |
| Funeral expenses | : ₹ 25,000 |

**Application Procedures**

- To claim the Peraringnar Anna Co-operative Milk Producers Welfare Fund in case of the death of a milk producer (member) of the Society, the family must submit an application in Form No. III with authenticated documents (including FIR and Medical Board report) to the Chairman of the Welfare Fund Committee, routed through the concerned Deputy Registrar (Dairying) who provides a report in Form No. IV.
- Contact the primary milk producers' cooperative society where the deceased was a registered pouring member.
- The society will guide on required documents (e.g., death certificate, legal heir certificate, proof of membership, milk pouring records, and possibly FIR copy, post-mortem or accident report for accidental claims).
- The application is forwarded through the District Co-operative Milk Producers' Union to the Federation for approval and disbursement

**Contact Details**

- Tamil Nadu Co-operative Milk Producers' Federation (Aavin), Aavin Illam, Madhavaram Milk Colony, Chennai– 600051, Phone: 044-25554180 / 25554181. Email: md@aavinmilk.com
- District Deputy Registrar (Dairying): Each district has a Deputy Registrar (Dairying) office. Families should contact local office for guidance and submission of forms.

### 3.5 Fishermen Welfare Schemes

These schemes aim to improve the socio-economic conditions of fishermen and their families:

**3.5.1 Welfare Package (2025**): The Hon'ble CM of Tamil Nadu, Shri M.K. Stalin, announced a ₹ 576 Crore Welfare Package during April 2025. This package includes- Net weaving and repair, Boat building and repair, Dried fish production, Ornamental fish tank making and Boat driving training.

**3.5.2 Financial Assistance Schemes**

**1 Special Allowance:** An allowance of ₹ 6,000 is provided to marine fishermen's families during the lean fishing period, and ₹ 8,000 as fishing ban period relief assistance to help them cope with the financial hardship.

**2 Marine Fishermen Savings-cum-Relief Scheme:** This scheme involves a contribution from both the fishermen and the State government, providing relief during the lean months. The relief amount is ₹ 4,500, which includes a fisherman's contribution of ₹ 1,500. This became a State Scheme since 2022-23. Beneficiaries (marine fishermen, below BPL, aged 18 to 60) across 12 coastal districts, from Tiruvallur to Ramanathapuram and Kanyakumari, can apply for the scheme at the corresponding Assistant Director (AD) Offices (Fisheries Department).

**3 Savings-cum-Relief Scheme for Marine Fisherwomen:** Like the above scheme, this is also a state scheme since 2006-07. The relief amount is ₹ 4,500, which includes a fisherman's contribution of ₹ 1,500. Beneficiaries (marine fisherwomen, below BPL, aged 18 to 60) across 12 coastal districts, from Tiruvallur to Ramanathapuram and Kanyakumari, can apply for the scheme at the corresponding AD offices (Fisheries Department).

### 3.5.3 Insurance Schemes

**1 Group Accident Insurance Scheme (GAIS):** Implemented under the PMMSY by the National Fisheries Development Board, New Delhi, this scheme provides insurance coverage with no premium cost to the beneficiary.

i. Death or permanent total disability : ₹ 5,00,000.
ii. Permanent partial disability : ₹ 2,50,000.
iii. Hospitalization expenses : Up to ₹ 25,000.

**2 State-Specific Insurance:** The Fisheries Department, Tamil Nadu, also provides a separate welfare scheme with the following insurance benefits for licensed/registered fishers:

i. Death or permanent total disability : ₹ 2,00,000
ii. Permanent partial disability : ₹ 1,00,000
iii. Hospitalization expenses : Up to ₹ 10,000

**3.5.4 Tamil Nadu Fishermen Welfare Board** (TNFWB) provides financial assistance for:

- Accident Relief : ₹ 2.0 lakh
- Death during fishing or after fishing due to reasons other than accidental death or Fishermen missing during fishing : ₹ 2.0 lakh
- Natural Death : ₹ 15,000
- Funeral Expenses : ₹ 15,000
- Education Scholarships : ₹ 1,250 to 6,750
- Marriage Assistance : ₹ 3,000 for male, ₹ 5,000 for female
- Maternity Assistance for 6 months : ₹ 1,000 per month
- Old Age Pension and Housing Subsidies

**Sources:**


- G.O. (Ms) No.265, Revenue Department, Government of Tamil Nadu, dated 10.09.2011
- GoT. 2025. Citizen Charter (*மக்கள் சாசனம்*). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- GoT. 2025. Policy Note 2025 – 2026. Demand no. 7. Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department, Government of Tamil Nadu. Presented by Hon'ble Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry, Thiru. Anitha R. Radhakrishnan
- https://aavin.tn.gov.in
- https://www.fisheries.tn.gov.in/
- https://www.landreforms.tn.gov.in/UPT.html
- https://www.pmkisan.gov.in/
- Section 18(d) in Peraringnar Anna Centenary Co-operative Milk Producers Welfare Fund Rules, 2010.
- https://tnsdma.tn.gov.in/img/document/DDMPPDF/VilupuramDDMP%20PLAN%202024.pdf?
- https://tiruvarur.nic.in/departments/tamilnadu-agricultural-marketing-and-agri-business-department/

# (3) விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் மீனவர்களுக்கான நலத்திட்டங்கள்

## 3.1 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் (CMUPT)

**துவக்கம் மற்றும் தற்போதைய நிலை:** இந்தத் திட்டம் தமிழ்நாடு அரசின் ஒரு சமூகப் பாதுகாப்பு நலத்திட்டமாகும். இது விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு முதுமை, நோய், மரணம் போன்ற பல்வேறு அவசர நிலைகளில் நிதியுதவி மற்றும் பாதுகாப்பு வழங்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் முதலில் 15 ஆகஸ்ட், 2005 அன்று விவசாயிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், 2011 ஆம் ஆண்டில், முந்தைய திட்டமான தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திட்டம், 2006 ஐ மாற்றியமைக்கப்பட்டு/ புதுப்பிக்கப்பட்டு "*முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்-2011*" என அறிமுகப்படுத்தப்பட்டது.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு முதியோர் ஓய்வூதியம், மகப்பேறு சலுகைகள், இயற்கை மரண உதவி, விபத்து நிவாரணம், இறுதிச் சடங்கு உதவி மற்றும் கல்வி உதவி போன்ற சலுகைகள் முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

**நிதி உதவி:** இத்திட்டத்தின் கீழ், சூழ்நிலையைப் பொறுத்துப் பல வகையான உதவிகள்/ சலுகைகள் வழங்கப்படுகின்றன.

**அ) உறுப்பினர்களுக்கு**

1. **திருமண உதவி:** தகுதியுள்ள உறுப்பினர்களின் குழந்தைகள் அல்லது வாழ்க்கைத் துணைவர்களுக்கு, திருமண உதவி வழங்கப்படுகிறது (ஆண்/பெண் இருவருக்கும் அளவு வேறுபடும்). உ.மாக: ஆண் மகனுக்கு ~ரூ.8,000; பெண் மகளுக்கு ~ ரூ.10,000.

2. **முதியோர் ஓய்வூதியம்:** 60 வயதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களுக்கு, மாதாந்திர ஓய்வூதியத் தொகை (உ.மாக, ரூ. 1,000) அல்லது அதற்கு சமமான தொகை வழங்கப்படுகிறது.

3. **தற்காலிக இயலாமை காலம்:** தற்காலிக இயலாமை காலங்களில் (எ.கா. காசநோய், புற்றுநோய், எச்.ஐ.வி/எய்ட்ஸ், பிற கொடிய உயிர்க்கொல்லி நோய்கள் காரணமாக) மாதாந்திர உதவித் தொகையாக ரூ. 1,000 வழங்கப்படுகிறது.

4. **விபத்து நிவாரணம்:** விபத்தால் ஏற்படும் மரணத்திற்கு நிவாரணமாக ரூ.2.0 லட்சம் மற்றும் விபத்து காரணமாக ஏற்படும் இயலாமைக்கு: ரூ.1.0 லட்சம்வரை நிவாரணம் அளிக்கப்படுகிறது.

5. **இயற்கை மரண உதவி:** ஓர் உறுப்பினர் இயற்கையாக மரணமடைந்தால், ரூ.30,000 நிதியுதவி வழங்கப்படுகிறது.

6. **இறுதிச் சடங்கு செலவுகள்:** ₹ 10,000

**ஆ) சார்ந்திருப்பவர்களுக்கு**

1. திருமண உதவி

2. கல்வி உதவி: உறுப்பினர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு (குறிப்பாக அவர்களது குழந்தைகள்), ஐ.டி.ஐ, பாலிடெக்னிக், டிப்ளமோ, பட்டம், முதுகலை, தொழில்முறை

படிப்புகள் படிக்க உதவித்தொகை வழங்கப்படும். இத்தொகை, கல்வியின் அளவைப் பொறுத்து மாறுபடும்.

3. ஆதரவற்றவர்களுக்கு மானியம்: எச்.ஐ.வி/பிற நோய்களால் இறந்த (விவசாயி) உறுப்பினர்களின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு, 18 வயது வரை மாதாந்திர மானியம் (ரூ.1, 000) வழங்கப்படுகிறது.

4. இறுதிச் சடங்குச் செலவுகள்: ஈமச்சடங்கு செலவுகளுக்கு உதவ சிறிய அளவிலான நிதியுதவி (ரூ. 2, 500).

**தகுதி**

- இந்த திட்டத்தில் சேரத் தகுதியுடைய முதன்மை உறுப்பினர்கள்: (i) விவசாயத் தொழிலாளர்கள், (ii) 2.5 ஏக்கருக்கு மிகாமல் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மிகாமல் புஞ்சை நிலம் வைத்திருக்கும் நேரடி சாகுபடியில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் (குத்தகை விவசாயிகள் உட்பட), (iii) உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் பிடிக்கும் மீனவர்கள், மற்றும் (iv) தோட்டத் தொழிலாளர்கள்.
- முதன்மை உறுப்பினரின் வயது 18-65 ஆக இருத்தல் வேண்டும்
- இத்திட்டத்தில் முக்கிய உறுப்பினரைச் சார்ந்திருப்பவர்களுக்கு (மனைவி, குழந்தைகள், ஆகியோர்) உதவிகள்/சலுகைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் பதிவு செய்ய தகுதியுடைய சார்புடையவர்கள் யாவரெனில்: (i) பதிவுசெய்யப்பட்ட விவசாயி உறுப்பினரின் குடும்பத்தில் உள்ள வருமானம் ஈட்டாத நபர்கள், (ii) மனைவி அல்லது கணவர், (iii) குழந்தைகள், (iv) இறந்த மகனின் மனைவி மற்றும் குழந்தைகள், மற்றும் (v) பெற்றோர்.
- உறுப்பினர் அட்டை உள்ளவர்களுக்கு மட்டுமே சில சலுகைகள் கிடைக்கும் (உதாரணமாக, 60 வயதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களுக்கு முதியோர் ஓய்வூதியம்). எனவே, இத்திட்டத்தில் உள்ள பயன்களைப் பெற, உறுப்பினர்கள் 'உழவர் பாதுகாப்பு அட்டை'/ உறுப்பினர் அட்டை பெற்றிருக்க வேண்டும். பல திட்டங்கள் மற்றும் மாவட்ட அளவிலான இணையதளங்கள் "மெரூன் அட்டை" அல்லது "உழவர் அட்டை" ஆகியவற்றை அடையாளமாகப் பயன்படுத்துகின்றன.

**செயல்படுத்தும் நிறுவனம் மற்றும் சேர்க்கை**

- இத்திட்டம் தமிழ்நாட்டின் வருவாய் (நில சீர்திருத்தங்கள்) துறையின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது.
- உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் உறுப்பினர்கள், CMCHIS-ன் (முதலமைச்சரின் விரிவான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம்) கீழ் பயனாளிகளாகச் சலுகைகள் பெறலாம்.
- விவசாயிகள் தங்கள் தாலுகா/மாவட்டத்தில் உள்ள பின்வரும் அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றில் விண்ணப்பிக்கலாம்: வட்டாட்சியர் அலுவலகம் (வருவாய்த் துறை) / கிராம நிர்வாக அலுவலர் (VAO) / வட்டார வளர்ச்சி அலுவலகம் (BDO) / வேளாண் உதவி இயக்குநர் (ADA) அலுவலகம்.
- உறுப்பினர்களைச் சேர்க்க/ விண்ணப்பங்களைப் பெற அவ்வப்போது சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. மாவட்ட நிர்வாகங்களும் இந்தத் திட்டம் பற்றியும், முகாம்கள் பற்றியும் விளம்பரப்படுத்துகின்றன.
- விவசாயிகள் கிராம அதிகாரி அல்லது வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட CMUPT விண்ணப்பப் படிவத்தை நிரப்ப வேண்டும்.

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தைத் தேவையான ஆவணங்களுடனும் சமர்ப்பிக்க வேண்டும். வருவாய்த் துறை அதிகாரிகள் அடங்கல்/சிட்டா பதிவுகள் மூலம் நில உடைமை மற்றும் தற்போதைய விவசாய நிலை, அடையாளச் சான்று மற்றும் குடியிருப்புச் சான்றுகளை சரிபார்ப்பார்கள்.
- சரிபார்ப்பிற்குப் பின், விவசாயியின் பெயர் உழவர் பாதுகாப்பு உறுப்பினர் பதிவேட்டில் எழுதப்படும்.
- உறுப்பினர் சேர்க்கை அங்கீகரிக்கப்பட்டவுடன், விவசாயிக்கு உறுப்பினர் அட்டை/ உழவர் அட்டை வழங்கப்படும் (பெரும்பாலும் மெரூன் நிறத்தில் இருக்கும்). இந்த அட்டை விவசாயிகள் கீழ்க்கண்ட ஏதேனும் ஓர் உதவியப் பெறும் சான்றாகக் கருதப்படும்: முதியோர்/ நோயுற்றோர் ஓய்வூதியம் (மாதம் ரூ. 1,000), விபத்து/ இறப்பு உதவி (ரூ. 20,000), இறுதிச் சடங்கு செலவு (ரூ. 2,500), திருமணம்/கல்வி/விபத்து/ஆதரவற்றோர் உதவித்தொகை போன்றவை.
- பின்னர், உறுப்பினர் சேர்க்கை அதிகாரப்பூர்வ உழவர் பாதுகாப்புத் திட்டம் தரவுத்தளத்தில் (நிலச் சீர்திருத்தத் துறையால் பராமரிக்கப்படுகிறது) பதிவேற்றப்படும்.
- “CMUPT– உழவர் மின்னணு பதிவேடு தமிழ்நாடு” என்ற மொபைல் செயலி/ தரவுத் தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளின் தரவுகளை நிர்வகிக்க அரசு அதிகாரிகளுக்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**முக்கிய அம்சங்கள்**

1. விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களான தோட்டக்கலை/ பட்டுப்புழு வளர்ப்பு/ புல் அல்லது தோட்ட செடிகள் வளர்ப்பு/ பால் பண்ணை / கோழி வளர்ப்பு / கால்நடை இனப்பெருக்கம் /மரங்கள் வளர்ப்பு /உள்நாட்டு மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ள குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் இத்திட்டத்தில் முக்கிய உறுப்பினராக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.
2. குடும்ப முக்கிய உறுப்பினரைச் சார்ந்திருக்கும் மற்றவர்கள் சார்பு உறுப்பினராகக் கணக்கிடப்படுகிறார்கள்.
3. பக்கவாதப் பாதிப்பு விபத்து நிவாரணப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது, எனவே உதவித் தொகையாக ரூ. 50,000 வழங்கப்படுகிறது.
4. இறுதிச் சடங்குச் செலவுத் தொகையான ரூ. 2,500-ஐ பெற, இறப்புச் சான்றிதழ் தேவையில்லை. அந்தத் தொகை உடனடியாக வழங்கப்படும்.
5. நுண்கலை படிப்பு, ஆசிரியர் பயிற்சிக் கல்வி மற்றும் செவிலியர் படிப்புகளும் இந்தத் திட்டத்தில் கல்வி உதவிக்காக சேர்க்கப்பட்டுள்ளது. வேறு திட்டத்தின் கீழ் ஏதேனும் உதவி பெற்றாலும், இந்தத் திட்டத்தின் கீழ் கல்வி உதவி பெறலாம்.
6. விவசாயி உறுப்பினர் இறந்த பிறகும் அவரை சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு சலுகைகள்/உதவிகள் தொடரும்.
7. காசநோய், புற்றுநோய், எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பிற கொடிய நோய்களால் விவசாயி உறுப்பினர் தற்காலிக இயலாமை நிலையை அடைந்து, அவரால் வேலை செய்ய இயலாமல் போய்விட்டால், பாதிக்கப்பட்ட விவசாயி உறுப்பினருக்கு நோய் குணமாகும் வரை ரூ. 1,000 மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும்.

## 3.2 பிரதம மந்திரியின் விவசாயிகள் கௌரவ நிதித் திட்டம் (PM-KISAN)

- இந்த மத்தியத் துறை திட்டம் தமிழ் நாட்டில் 2019-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டத்தின் கீழ், சொந்தமாக சாகுபடி நிலம் வைத்திருக்கும், தகுதியுள்ள விவசாய குடும்பங்களுக்கு (ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும்), அவரவர்கள் வங்கிக் கணக்கில் ஆண்டிற்கு ரூ. 6,000/-, நேரடிப் பலன் பரிமாற்றம் முறையில் (ஆதார் அடிப்படையிலான பணம் செலுத்தும் முறை), மூன்று சம தவணைகளில் இந்திய அரசால் செலுத்தப்படுகிறது.

## 3.3 தமிழ்நாடு விவசாயிகள் நலன் மற்றும் பாதுகாப்புத் திட்டம்

தகுதி

- நிதியாண்டில் குறைந்தது 1 மெட்ரிக் டன் (MT) விவசாய விளைபொருளை ஒழுங்குமுறை சந்தைகள் மூலம் விற்பனை செய்யும் விவசாயிகள் / குத்தகை விவசாயிகள் இத்திட்டத்திற்கு தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
- வயது: 18–60 வயது

பலன்கள்

- விபத்து / பாம்புக் கடி காரணமாக விவசாயிகள் அல்லது குத்தகை நில சாகுபடி செய்பவர்கள் இறந்தால்: அதிகபட்சம் ரூ. 1.0 லட்சம் நிதியுதவி
- இரு கைகள் / இரு கண்கள் இழப்பு: ரூ. 75,000
- ஒரு கை / ஒரு கண் இழப்பு அல்லது நிரந்தர ஊனம்: ரூ. 50,000
- விவசாயிகள் எந்த பிரீமியமும் செலுத்த தேவையில்லை
- ஆண்டு பிரீமியம் ரூ. 10-ஐ ஒழுங்குமுறை விற்பனைக்குழு & தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியம் சமமாக செலுத்தும்

தொடர்புக்கு: அருகிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கண்காணிப்பாளர்/ மேற்பார்வையாளரை அணுகவும்.

தகவல்: விபத்து அல்லது இறப்பு ஏற்பட்டால், அதற்கான உரிமைகோரல் விண்ணப்பத்தை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு மூன்று மாதங்களுக்குள் அனுப்ப வேண்டும்.

## 3.4 பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி

பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதியின்கீழ் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி 2025-ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| விபத்து மரணம் | : ரூ. 4.0 லட்சம் |
| நிரந்தர இயலாமை | : ரூ. 1.0 முதல் 2.25 லட்சம் வரை |
| திருமண உதவி | : ரூ. 60,000 (ஒரு பெண் குழந்தைக்கு) |
| கல்வி உதவி | : ஒரு குழந்தைக்கு ரூ. 50,000 வீதம் இரு குழந்தைகளுக்கு |

இறுதிச் சடங்கு செலவு: ரூ. 25,000

**விண்ணப்பிக்கும் முறை**

- பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர் எவரேனும் மரணமடைந்தால்/விபத்தில் சிக்கினால், பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர் நல நிதியிலிருந்து நிவாரணம் பெற, அவரது குடும்பத்தினர் படிவம் எண் III-ல் விண்ணப்பத்தை,

தேவையான ஆதார ஆவணங்களுடன் (முதல் தகவல் அறிக்கை நகல், மருத்துவக் குழு அறிக்கை உள்ளிட்டவை) தயாரித்து, சம்பந்தப்பட்ட துணைப் பதிவாளர் (பால்வளத் துறை) மூலம் படிவம் எண் IV-ல் அறிக்கையுடன் நல நிதிக் குழுத் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

- மறைந்தவர் குடும்ப உறுப்பினர்/ விபத்தில் பாதிக்கப்பட்டவர் தங்கள் உறுப்பினராக இருந்த/உள்ள முதன்மை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தை முதலில் தொடர்புகொள்ள வேண்டும்.
- தேவையான ஆவணங்கள் குறித்து (மரணச் சான்றிதழ், சட்ட வாரிசுச் சான்றிதழ், உறுப்பினர் சான்று, பால் ஊற்றிய பதிவுகள், விபத்து மரணம் எனில் முதல் தகவல் அறிக்கை நகல், பிரேதப் பரிசோதனை அல்லது விபத்து அறிக்கை போன்றவை) அந்தச் சங்கம் உங்களுக்கு வழிகாட்டும்.
- விண்ணப்பம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலம் மாநில கூட்டமைப்பிற்கு அனுப்பப்பட்டு, அங்கு அனுமதி பெற்று நிதி வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம்**

- தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு (ஆவின்) ஆவின் இல்லம், மாதவரம் பால் காலனி, சென்னை–600051. தொலைபேசி: 044-25554180 / 25554181 மின்னஞ்சல்: md@aavinmilk.com
- மாவட்ட துணைப் பதிவாளர் (பால்வளத் துறை) ஒவ்வொரு மாவட்டத்திலும் துணைப்பதிவாளர் (பால்வளத் துறை) அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகத்தை குடும்பத்தினர் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்கள் நிரப்புவது, சமர்ப்பிப்பது பற்றிய விவரங்களைப் பெறலாம்.

## 3.5 மீனவர் நலத்திட்டங்கள்

இந்தத் திட்டங்கள் மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன:

**3.5.1 நலத்திட்டத் தொகுப்பு (2025)**: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் சுமார் ரூ. 576 கோடி நலத்திட்டங்கள் கடந்த ஆண்டு (2025) ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்டது. இந்தத் தொகுப்பில் மீன்வலை பின்னுதல் மற்றும் பழுதுநீக்கம், படகு கட்டுதல் மற்றும் பழுதுபார்ப்பு, கருவாடு உற்பத்தி, அலங்கார மீன் தொட்டிகள் தயாரித்தல் மற்றும் படகு ஓட்டுநர் பயிற்சி ஆகியவை அடங்கும்.

### 3.5.2 நிதி உதவித் திட்டங்கள்

**1 சிறப்பு உதவித்தொகை:** மீன்பிடிக் காலத்தில் மீனவர் குடும்பங்களுக்கு ரூ. 6,000 உதவித்தொகையும், மீன்பிடித் தடைக் காலத்தில் நிவாரண உதவியாக ரூ. 8,000 உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இது அவர்களின் நிதி நெருக்கடியை சமாளிக்க உதவியாக இருக்கும்.

**2 கடல்சார் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்:** இத்திட்டம் மீனவர்கள் மற்றும் மாநில அரசின் பங்களிப்புடன் கூடிய திட்டமாகும். இதன்மூலம் மீன்பிடி இல்லாத மழைக்காலங்களில் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ. 4,500 வழங்கப்படுகிறது. இதில் மீனவர் பங்களிப்பு ரூ. 1,500 ஆகும். இது 2022-23 முதல் மாநிலத் திட்டமாக மாறியுள்ளது. இந்தத் திட்டத்திற்கு, திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி வரையிலான 12 கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்கள் (வறுமைக் கோட்டிற்குகீழே உள்ள, 18 முதல் 60 வயது நிரம்பிய கடல்சார் மீனவர்கள்) அருகிலுள்ள உதவி இயக்குநர் அலுவலகங்களில் (மீன்வளத் துறை) விண்ணப்பிக்கலாம்.

**3 கடல்சார் மீனவப் பெண்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்:** மேற்கண்ட திட்டத்தைப் போலவே இதுவும் 2006-07 முதல் மாநில நலத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகையாக ரூ. 4,500 வழங்கப்படுகிறது, இதில் மீனவர்களின் பங்களிப்பு ரூ. 1,500 அடங்கும். திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி வரையிலான 12 கடலோர மாவட்டங்களில் உள்ள பயனாளிகள் (வறுமைக் கோட்டிற்குகீழே உள்ள, 18 முதல் 60 வயது நிரம்பிய கடல்சார் மீனவப் பெண்கள்) அருகிலுள்ள உதவி இயக்குநர் அலுவலகங்களில் (மீன்வளத் துறை) விண்ணப்பிக்கலாம்.

### 3.5.3 காப்பீட்டுத் திட்டங்கள்

**1 குழு விபத்து காப்பீட்டுத் திட்டம் (GAIS):** புது தில்லியில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தால் PMMSY-இன் கீழ் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம் பயனாளிக்கு பிரீமியம் செலவு இல்லாமல் காப்பீட்டுத் திட்டத்தை வழங்குகிறது.

iv. இறப்பு அல்லது நிரந்தர முழு ஊனம் : ரூ. 5,00,000.
v. நிரந்தர பகுதி இயலாமை : ரூ. 2,50,000.
vi. மருத்துவமனை செலவுகள் : ரூ. 25,000 வரை.

**2 மாநிலத்திற்கு உரித்தான காப்பீடு:** தமிழ்நாடு மீன்வளத் துறையிடம் உரிமம் பெற்ற/பதிவு செய்யப்பட்ட மீனவர்களுக்கு பின்வரும் காப்பீட்டு சலுகைகளை ஒரு தனி நலத்திட்டமாக தமிழக மீன்வளத்துறை செயல்படுத்தி வருகிறது:

iv. இறப்பு அல்லது நிரந்தர முழு ஊனம் : ரூ. 2,00,000
v. நிரந்தர பகுதி இயலாமை : ரூ. 1,00,000
vi. மருத்துவமனை செலவுகள் : ரூ. 10,000 வரை.

**3.5.4 தமிழ்நாடு மீனவர் நல வாரியம்** (TNFWB) கீழ்க்கண்ட நிதியுதவிகளை வழங்கி வருகிறது:

- விபத்து நிவாரணம் : ரூ. 2.0 லட்சம்
- மீன்பிடிக்கும்போது அல்லது மீன்பிடித்த பிறகு விபத்தால் மரணம் அல்லது மீன்பிடிக்கும்போது காணாமல் போன மீனவர்கள் தவிர வேறு காரணங்களால் ஏற்படும் மரணம் : ரூ. 2.0 லட்சம்
- இயற்கை மரணம் : ரூ. 15,000
- இறுதிச் சடங்கு செலவுகள் : ரூ. 15,000
- கல்வி உதவித்தொகை : ரூ. 1,250 முதல் 6,750 வரை
- திருமண உதவித் தொகை : ஆண்களுக்கு ரூ. 3,000<br>பெண்களுக்கு ரூ. 5,000
- மகப்பேறு உதவி (6 மாதங்களுக்கு) : மாதத்திற்கு ரூ. 1,000
- முதியோர் ஓய்வூதியம் மற்றும் வீட்டுவசதி மானியங்கள்

**ஆதாரங்கள்:**


- G.O. (Ms) No.265, Revenue Department, Government of Tamil Nadu, dated 10.09.2011
- GoT. 2025. Citizen Charter (*மக்கள் சாசனம்*). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- GoT. 2025. Policy Note 2025 – 2026. Demand no. 7. Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department, Government of Tamil Nadu. Presented by Hon'ble Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry, Thiru. Anitha R. Radhakrishnan
- https://aavin.tn.gov.in
- https://www.fisheries.tn.gov.in/

- https://www.landreforms.tn.gov.in/UPT.html
- https://www.pmkisan.gov.in/
- Section 18(d) in Peraringnar Anna Centenary Co-operative Milk Producers Welfare Fund Rules, 2010.
- https://tnsdma.tn.gov.in/img/document/DDMPPDF/VilupuramDDMP%20PLAN%202024.pdf?
- https://tiruvarur.nic.in/departments/tamilnadu-agricultural-marketing-and-agri-business-department/

## (4) Special Package to Increase Crop Area and Food Grain Production

**Aim:** To increase paddy area in the delta and non-delta areas from the present 52 lakh ha (130 lakh acres) during the *Kar, Kuruvai, and Sornavari* seasons.

**Budget outlay**: Special Package of ₹ 160 crores.

### A) Special Package for Non-Delta Area during Kar/Kuruvai/Sornavari Seasons

- Introduced in 2025-26 with an allocation of ₹ 102 crores.
- Districts covered: 29 non-Cauvery delta districts.
- Incentive for use of mechanised paddy transplantation-₹ 4000/acre, *i.e.,* 100% subsidy.
- Distribution of certified quality seeds at a subsidised rate (₹ 20 /kg).
- Bio-fertilisers and micronutrients will be issued at 50% subsidy (or ₹ 200 /acre for micronutrient mixture and ₹1250/acre for liquid biofertilizers).

### B) Delta Area: Kuruvai Special Package

- Districts covered: Thanjavur, Thiruvarur, Nagapattinam, Mayiladuthurai, Cuddalore, Tiruchirappalli and Ariyalur districts.
- Budget: ₹ 58 crores.
- Incentive for use of mechanised paddy transplantation- ₹ 4000/acre, *i.e.,* 100% subsidy.
- Distribution of certified quality seeds at a subsidised rate (₹ 20 /kg).
- Incentives for liquid bio-fertilisers and micronutrients.
- Micronutrients: Zn Sulfate and Gypsum will be given at 50% subsidy.

### International Exposure Visit to farmers

- Budget: 2 crores for 2025-26
- 100 farmers will be selected for an exposure visit to Japan, China and Vietnam to learn the latest technologies adopted in these countries, which have achieved high productivity in paddy

**Source:**

GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.

## (4) பயிர் பரப்பளவு மற்றும் உணவு தானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கான சிறப்புத் தொகுப்பு

**நோக்கம்:** கார், குருவை மற்றும் சொர்னவாரி பருவங்களில் டெல்டா மற்றும் டெல்டா அல்லாத பகுதிகளில் நெல் சாகுபடி பரப்பளவை தற்போதைய 52 லட்சம் ஹெக்டேரிலிருந்து (130 லட்சம் ஏக்கர்) அதிகரிப்பது.

நிதி ஒதுக்கீடு: சிறப்பு தொகுப்பாக ரூ. 160 கோடி.

**அ) டெல்டா அல்லாத பகுதிகளில் கார்/குருவை/சொர்னவாரி பருவங்களுக்கான சிறப்புத் தொகுப்பு**

- 2025-26-ஆம் ஆண்டு பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது, ரூ. 102 கோடி.
- உள்ளடக்கிய மாவட்டங்கள்: காவிரி டெல்டா அல்லாத 29 மாவட்டங்கள்
- இயந்திரமயமாக்கப்பட்ட நெல் நடவிற்கான ஊக்கத்தொகை- ஏக்கருக்கு ரூ. 4,000/ அதாவது 100% மானியம்.
- மானிய விலையில் சான்றளிக்கப்பட்ட தரமான விதைகள் விநியோகம் (ரூ. 20/கிலோ)
- உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் 50% மானியத்தில் (அல்லது நுண்ணூட்டச்சத்து கலவைக்கு ரூ. 200 /ஏக்கர், திரவ உயிர் உரங்களுக்கு ரூ. 1250 /ஏக்கர்) வழங்கப்படும்.

**ஆ) டெல்டா பகுதி: குருவை சிறப்பு தொகுப்பு**

- உள்ளடக்கிய மாவட்டங்கள்: தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் மாவட்டங்கள்.
- நிதி ஒதுக்கீடு: ரூ. 58 கோடி
- இயந்திரமயமாக்கப்பட்ட நெல் நடவிற்கான ஊக்கத்தொகை- ஏக்கருக்கு ரூ. 4,000 அதாவது 100% மானியம்.
- மானிய விலையில் சான்றளிக்கப்பட்ட தரமான விதைகளை விநியோகித்தல் (ரூ. 20/கிலோ)
- திரவ உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களுக்கான ஊக்கத்தொகை.
- நுண்ணூட்டச் சத்துக்கள்: துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்ஸம் 50% மானியத்தில் வழங்கப்படும்.

**விவசாயிகளுக்கான சர்வதேச கண்டுணர் சுற்றுலா**

- நிதி: 2025-26-ஆம் ஆண்டில் 2 கோடி
- நெற்பயிரில் அதிக உற்பத்தித்திறனை அடைந்துள்ள ஜப்பான், சீனா மற்றும் வியட்நாம் நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் சமீபத்திய தொழில்நுட்பங்களைக் கண்டுணர சுமார் 100 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த நாடுகளுக்கு கண்டுணர் சுற்றுலாவிற்கு அனுப்பப்படுவார்கள்.

**ஆதாரம்:** GoT. 2025. Citizen Charter (*மக்கள் சாசனம்*).. Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.

## (5) Rashtriya Krishi Vikas Yojana (RKVY) Schemes in TN

**Introduction:** The Rashtriya Krishi Vikas Yojana is a centrally sponsored scheme of the Ministry of Agriculture & Farmers Welfare, Government of India, to strengthen farm productivity, infrastructure, value addition, and income generation through flexible and State-driven agricultural development projects. The funding pattern for RKVY in Tamil Nadu is 60 (Central Share): 40% (State Share). The Department of Agriculture & Farmers Welfare, Government of Tamil Nadu, is the Nodal Department for implementing RKVY schemes in the State. The Departments/ Agencies implementing the schemes in TN are:

- Department of Agriculture
- Department of Horticulture and Plantation Crops
- Department of Agricultural Engineering
- Department of Animal Husbandry and Fisheries
- Agricultural Marketing & Agri Business Department
- TANUVAS, TNAU and TNJFU

**RKVY- Paddy**

- Objectives: To enhance the area, production and productivity of rice
- Implemented in all the districts in TN
- Focusing on improved seed, SRI method and soil test-based nutrient management
- Subsidy pattern: Seed distribution to all farmers- Paddy, millet and pulses seeds - 50% subsidy (limited to a ceiling fixed per ha).
- Promotion of certified seed production and use of newly released varieties (not older than 10 years from release)- ₹ 8/kg of seed- applicable to all farmers & crops like Paddy, millet and pulses seeds for seed production; Subsidy of ₹ 20/kg for use of certified seeds.

**RKVY- Maize**

- Objective: To enhance the area, production and productivity of maize
- Implemented in all the 35 districts in TN except Chennai and Kanyakumari
- Maize is cultivated in 10 lakh acres in TN
- Focusing on improved seed, line sowing and soil test-based nutrient management
- Cluster demonstration- subsidy ₹ 2400/acre

**RKVY- Pulses**

- Major crop covered: red gram (other pulses are promoted under state Government Schemes)
- Pro-tray cultivation of red gram and other pulses
- Adoption of climate resilient techniques such as red gram transplantation: subsidy ₹ 3,100/acre or 50% subsidy.

**RKVY- Cotton**

- Promotion of seed production of ELS cotton through farmers or SIMA producer group: 25% subsidy or ₹ 70/kg seeds, whichever is less.
- Distribution of certified seeds of ELS cotton: 50% subsidy or ₹ 140/kg seeds, whichever is less.
- Intercropping pulses in cotton: ₹ 256/ acre.
- Bud clipping in cotton: ₹ 500/ acre.

**NADP/ RKVY/KAVI-ADS-Sugarcane**

- Assistance for purchase of breeder seed canes @ ₹ 15,625/ha (50% subsidy)
- Assistance for purchase of tissue culture seedlings @ ₹ 1,50,000/ha (50% subsidy)
- Purchase of bud chip settlings of sugarcane varieties (Co 0212, Co 11015, Co 86032, CoV 09356, CoC 13339, CoG 6, CoG 7) @ 12500 seedlings/ha - 50% Subsidy ₹ 15,625/ha.
- Distribution of single bud direct planting of sugarcane varieties Co 0212, Co 11015, Co 86032, CoV 09356, CoC 13339, CoG 6, CoG 7 @ 2.5 t seed cane/ha with 50% Subsidy or ₹ 5,000/ha.
- Trash shredding and trash mulching: 50% Subsidy or ₹ 3,000/ha.
- Wider row planting of settlings: 50% Subsidy or ₹ 3,000/ha.
- Use of micronutrient mixture: 50% Subsidy or ₹ 875/ha.

**RKVY- Horticulture crops**

- Crops covered: Banana, Mango, Coconut, Vegetables, Spices, and Flowers.
- Focus Area: Area expansion, rejuvenation, micro-irrigation.
- For DPR based project: 40–50% subsidy for area expansion-depending on the crop (e.g., input subsidy of ₹ 26,400 per farmer per ha for 2 ha banana cultivation; ₹ 30,000 per farmer per ha for 2 ha mango cultivation; ₹ 48,000 per farmer per ha for 2 ha high density guava cultivation; ₹ 24,000 per farmer per ha for 2 ha tomato/brinjal/chillies protray seedling production; ₹ 18,000 per farmer per ha for 2 ha cashew cultivation)
- Creation of additional infrastructure for cultivation of Horticulture crops (e.g., Pandal cultivation of vegetables- 50% subsidy- ₹ 3.0 lakhs per farmer for one ha).
- Promotion on use of copper sulphate – 50 % subsidy or ₹ 200 per farmer, whichever is lower.

**RKVY-Farm Mechanization**

- Subsidy for power tillers, transplanters, harvesters, and drones.
- Subsidy: 40% or a maximum of ₹ 75,000 for individual farmers (for SC/ST farmers 50% subsidy).
- Use of micro irrigation and machine transplanting: subsidy of ₹ 2,400/acre as a back-end subsidy.

**RKVY-Micro-irrigation (PDMC-per drop more crop)**

- This is implemented by the Department of Horticulture, TN.
- Covers all crops (horticulture & field crops).
- Drip/sprinkler unit installation.
- 100% subsidy for small/marginal farmers (maximum subsidy allowed is 2 ha per farmer) and 75 % subsidy for others (maximum subsidy allowed per farmer is 5 ha).
- The State Government bears GST on micro-irrigation systems for all farmers.

**Soil Health Management**

- Applicable for all crops. It includes promotion of soil testing, micronutrients, organic manure application.
- 50% subsidy for micronutrients or actual cost, whichever is less

**Post-Harvest & Value Addition**

- Applicable to major crops, for establishment of processing units, packhouses, cold storages, etc.
- 40% subsidy or up to ₹10 lakh for an individual/FPO for the construction of a Pack House/ Shed/Godown.
- Agri-Business/Value Addition Unit: 25–35% subsidy (ceiling ₹50 lakh).

**Animal Husbandry & Fisheries**

- Cattle, Goat, Poultry, Fish culture.
- Breed improvement, input assistance.

**Innovation / Agri Start-ups**

- Innovation may be based on any agri-based idea.
- Assistance through the TNAU's Agri Business Incubator (R-ABI).
- ₹ 5 to 25 lakh grants under innovation and seed stage funding for Start-ups/graduates

**How to Apply**

**A) Farmers**

1. Under RKVY, farmers are given a subsidy for a maximum of 5 acres.
2. Small, Marginal and SC/ST farmers will be given preference.
3. Visit the nearest Block / District Agriculture Office (DAO / ADA) or Horticulture Office.
4. Obtain the RKVY component application form or apply through the TN Agriculture e-portal (https://www.tnagriculture.in).
5. Submit: Land ownership proof (Chitta / Adangal copy), Aadhaar, Bank passbook copy, Passport-size photo, Estimate/quotation for machinery or inputs.
6. There will be a field inspection by the Dept. officials.
7. Subsidy released either directly to the vendor or through DBT (Direct Benefit Transfer) to the farmer's account after verification.

**B) Agri-Entrepreneurs / Start-ups**

1. Apply through RKVY – RAFTAAR Agri Business Incubator (R-ABI) at Tamil Nadu Agricultural University, Coimbatore.
2. Visit the website: https://tnau.ac.in/tnau-rkvy-raftar/
3. Submit a business plan proposal → shortlisted → presentation before expert committee → approved projects will get grant-in-aid (₹5–25 lakhs) and mentorship.

**Monitoring and Fund Flow**

1. The State Government make proposal annually under the State Agriculture Development Plan (SADP).
2. These projects are approved by the State Level Sanctioning Committee (SLSC), chaired by the Chief Secretary.
3. The Central and State Government releases funds (60:40 ratio) to The State Nodal Department and beneficiaries through DBT mode.
4. Outcomes are monitored by TNAU/NABCONS and reported to the M/o A&FW, Government of India.

**Source:** GoT. 2025. Citizen Charter (*மக்கள் சாசனம்*). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.

## (5) தேசிய வேளாண்மை முன்னேற்றத் திட்டங்கள் (RKVY)

**அறிமுகம்:** ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா (RKVY) என்பது இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் செயல்படுத்தப்படும் மத்திய நிதியுதவி திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கம், மாநிலங்கள் தங்களால் உருவாக்கப்படும் இளக்கமுள்ள விவசாய மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் பண்ணை உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், அடிப்படை வசதிகளை வலுப்படுத்துதல், மதிப்பூட்டல் மற்றும் வருமானம் ஈட்டும் கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு ஆதரவு வழங்குவதாகும். தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் RKVY திட்டங்களுக்கான நிதி பகிர்வு 60:40 (மத்திய: மாநில பங்கு) ஆகும். மாநிலத்தில் RKVY திட்டங்களை செயல்படுத்தும் திட்ட செயலாக்கத் துறையாக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை திகழும். தமிழ்நாட்டில் RKVY திட்டங்களை செயல்படுத்தும் முக்கியத் துறைகள்/அமைப்புகளாவன:

- வேளாண்மைத் துறை
- தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை
- வேளாண் பொறியியல் துறை
- கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை
- வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை
- தமிழ்நாடு வேளாண்மை/ கால்நடை/மீன்வளப் பல்கலைக்கழகங்கள்

**RKVY- நெல்**

- நோக்கங்கள்: நெல் சாகுபடி பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.
- மேம்படுத்தப்பட்ட விதை, செம்மை நெல் சாகுபடி மற்றும் மண் பரிசோதனை அடிப்படையிலான உர மேலாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- மானியம்: அனைத்து விவசாயிகளுக்கும் விதை விநியோகம்- நெல், தானியம் மற்றும் பருப்பு வகை விதைகள் - 50% மானியதில் வழங்கப்படுகிறது (ஒரு ஹெக்டேருக்கு, நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்புக்குள்).
- சான்று விதை உற்பத்தி மற்றும் புதிய பயிர் இரகங்களின் பயன்பாட்டை (வெளியானதிலிருந்து 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட இரகங்கள்) ஊக்குவித்தல்: விதை உற்பத்திக்கு மானியம் 8 ரூபாய் /கிலோ விதை- அனைத்து விவசாயிகளுக்கும் பொருந்தும்; நெல், தானியம் மற்றும் பருப்பு வகைகளுக்கு பொருந்தும்; சான்று விதைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு கிலோவிற்கு ரூபாய் 20 மானியம்.

**RKVY- மக்காச்சோளம்**

- குறிக்கோள்: மக்காச்சோளத்தின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர, தமிழ்நாட்டில் உள்ள 35 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.
- தற்பொழுது, தமிழ்நாட்டில் சுமார் 10 லட்சம் ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது.
- தரமான விதை, வரிசை விதைப்பு மற்றும் மண் பரிசோதனை அடிப்படையிலான உர மேலாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

- தொகுப்பு செயல் விளக்கங்கள்- மானியம் ஏக்கருக்கு ரூ. 2,400.

**RKVY- பருப்பு வகைகள்**

- முக்கிய பயிர்கள்: துவரை (மற்ற பருப்பு வகைப் பயிர்கள் மாநில அரசின் பிற திட்டங்களின் கீழ் ஊக்குவிக்கப்படுகின்றன)
- துவரை மற்றும் பிற பருப்பு வகைப் பயிர்களின் நாற்றுகளைக் குழித்தட்டில் வளர்த்து சாகுபடி செய்தல்.
- காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற தொழில்நுட்பத்தை பின்பற்றுதல்: உ.மாக துவரை நேரடி நடவு- ஏக்கர் ஒன்றிக்கு ரூ. 3,100 அல்லது 50% மானியம்.

**RKVY- பருத்தி**

- மிக நீண்ட இழைப் பருத்தி (ELS) இரகங்களில் விதை உற்பத்தியை விவசாயிகள் அல்லது SIMA உற்பத்தியாளர் குழு மூலம் ஊக்குவித்தல்: 25% மானியம் அல்லது ஒரு கிலோ விதைக்கு ரூ. 70, இதில் எது குறைவோ அது.
- ELS பருத்தி இரகங்களின் சான்று விதைகள் விநியோகம்: 50% மானியம் அல்லது ஒரு கிலோ விதைக்கு ரூ. 140, இதில் எது குறைவோ அது.
- பருத்தியில் பயறு வகைப் பயிர்களை ஊடுபயிராக பயிரிடுதல்: ஏக்கருக்கு 256 ரூபாய்.
- பருத்தியில் மொட்டு கிள்ளுதல்: ஏக்கருக்கு 500 ரூபாய்.

**NADP/ RKVY/KAVI-ADS- கரும்பு**

- வல்லுநர் விதைகளை வாங்குவதற்காக உதவியாக ஹெக்டேருக்கு ரூ. 15,625 அல்லது 50% மானியம்.
- திசு வளர்ப்பு நாற்றுகளை வாங்குவதற்கான உதவியாக ஹெக்டேருக்கு ரூ. 1,50,000 அல்லது 50% மானியம்.
- கரும்பு இரகங்களின் (Co 0212, Co 11015, Co 86032, CoV 09356, CoC 13339, CoG 6, CoG 7) பருச் சீவல் விதைகளை வாங்குவதற்கு உதவியாக @ 12,500 நாற்றுகள்/ஹெக்டேருக்கு -50% மானியம் அல்லது ரூ. 15,625 / ஹெக்டேர்.
- CoV 09356, CoC 13339, CoG 6, CoG 7 கரும்பு இரகங்களின் ஒற்றைப் பருக்களை நேரடி நடவுக்காக விநியோகம் @ 2.5 டன் விதைக்கரும்பு/ஹெக்டேருக்கு- 50% மானியம் அல்லது 5,000 ரூபாய் / ஹெக்டேர்.
- கரும்பு தோகைகளை மிகச்சிறிய துண்டாக்கி தழைக்கூளம் அமைத்தல்: 50% மானியம் அல்லது ஹெக்டேருக்கு 3,000 ரூபாய்.
- அகலப் பார்களில் கரும்பு நாற்றுகளை நடவு செய்தல்: 50% மானியம் அல்லது ஹெக்டேருக்கு 3,000 ரூபாய்.
- நுண்ணூட்டச்சத்து கலவையின் பயன்பாடுகளை ஊக்குவித்தல்: 50% மானியம் அல்லது ஹெக்டேருக்கு 875 ரூபாய்.

**RKVY- தோட்டக்கலைப் பயிர்கள்**

- திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பயிர்கள்: மா, வாழை, தென்னை, காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மற்றும் பூக்கள்.
- கவனம் செலுத்தும் பகுதி: பரப்பளவு விரிவாக்கம், திறன் குன்றிய பழமரத் தோட்டங்களைப் புதிப்பித்தல்/புத்துயிர் அளித்தல், நுண்ணீர் பாசனம்.

- விரிவான திட்ட அறிக்கை (DPR) அடிப்படையிலான திட்டங்களுக்கு: பரப்பளவு விரிவாக்கத்திற்கு 40–50% மானியம், இவை பயிரை பொறுத்து மாறுபடும் (எ.கா. 2 ஹெக்டேர் வரையிலான வாழை சாகுபடிக்கு ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 26,400 இடுபொருள் மானியம்; 2 ஹெக்டேர் வரை மா சாகுபடிக்கு ஹெக்டேருக்கு ரூ. 30,000 மானியம்; 2 ஹெக்டேர் வரை அடர் கொய்யா சாகுபடிக்கு ஹெக்டேருக்கு ரூ. 48,000 மானியம்; 2 ஹெக்டேர் வரை தக்காளி/கத்தரி/மிளகாய் குழித்தட்டு நாற்று உற்பத்திக்கு ஹெக்டேருக்கு ரூ. 24,000 மானியம்; 2 ஹெக்டேர் வரை முந்திரி சாகுபடிக்கு ஒரு விவசாயிக்கு ஹெக்டேருக்கு ரூ. 18,000 மானியம்)
- தோட்டக்கலை பயிர்களின் சாகுபடிக்கு கூடுதல் உள்கட்டமைப்புகளை உருவாக்குதல் (எ.கா. பந்தல் காய்கறி சாகுபடி- 50% மானியம் - ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 3.0 லட்சம் வரை).
- காப்பர் சல்பேட் (மயில் துத்தம்) பயன்பாட்டை ஊக்குவித்தல்- 50% மானியம் அல்லது ஒரு விவசாயிக்கு 200 ரூபாய், இதில் எது குறைவோ அது.

**RKVY- பண்ணை இயந்திரமயமாக்கல்**

- நாற்று நடும் இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள், ட்ரோன்கள் ஆகியவற்றிற்கு மானியம். மானியம்: தனிநபர் விவசாயிக்கு 40% மானியம் அல்லது அதிகபட்சம் ரூ. 75,000 (எஸ்.சி /எஸ்.டி பிரிவினருக்கு 50% வரை மானியம்).
- நுண்ணீர் பாசனம் மற்றும் இயந்திர நடவு: பின் ஏற்பு மானியமாக ஏக்கருக்கு ரூ. 2,400 மானியம்.

**RKVY- நுண்ணீர் பாசனம் (PDMC- ஒரு துளியில் அதிக பயிர்)**

- இத்திட்டம் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படுகிறது.
- அனைத்து பயிர்களும் (தோட்டக்கலை மற்றும் உணவு தானியப் பயிர்கள்) உள்ளடக்கம்.
- சொட்டு நீர்/ தெளிப்பான் பசன அலகுகளை நிறுவுதல்.
- சிறு/குறு விவசாயிகளுக்கு 100% மானியம் (ஒரு விவசாயிக்கு அதிகபட்ச மானியம் 2 ஹெக்டேர் வரை) மற்றும் பிற பிரிவினருக்கு 75% மானியம் ( ஒரு விவசாயிக்கு அதிகபட்ச மானியம் 5 ஹெக்டேர் வரை).
- அனைத்து விவசாயிகளுக்கும் அளிக்கப்படும் நுண்ணீர் பாசன உதவிகளுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை மாநில அரசு ஏற்கிறது.

**மண்வள மேலாண்மை**

- இது அனைத்து பயிர்களுக்கும் பொருந்தும். இதில் மண் பரிசோதனை, நுண்ணூட்ட உரங்கள், மற்றும் உயிர் உரங்கள் பயன்பாட்டை ஊக்குவித்தல் ஆகியன அடங்கும்.
- நுண்ணூட்டச்சத்துக்களுக்கு 50% மானியம் அல்லது உண்மையான செலவு, இதில் எது குறைவாக இருக்கிறதோ அதை வழங்குதல்.

**அறுவடைக்குப் பிந்தைய & மதிப்பு கூட்டல் செயல்கள்**

- அனைத்து முக்கியமான பயிர்களுக்கும் பொருந்தும். பதப்படுத்தும் நிலையங்கள், சிப்பம் கட்டுதல் மையங்கள், குளிர் கிடங்குகள் அமைத்தல்.
- கிடங்கு / சிப்பம் கட்டும் அறைகள் / கொட்டகை அமைப்பதற்குத தனிநபர்/ FPO-க்கு 40% மானியம் அல்லது ரூபாய் 10 லட்சம் வரை.

- வேளாண் வணிகம்/ மதிப்பூட்டல் அலகுக்கு: 25–35% மானியம் (உச்சவரம்பு 50 லட்சம் ரூபாய் வரை).

**கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம்**

- கால்நடை, ஆடு, கோழி, மீன் வளர்ப்பு போன்றவற்றிற்கு நிதி உதவி.
- கால்நடை இன மேம்பாடு, இடுபொருட்களுக்கு உதவி.

**புதுமை / வேளாண் புத்தாக்க நிறுவனங்கள்**

- புதுமை- விவசாயம் சார்ந்த எந்த யோசனையாக இருக்கலாம்.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக காப்பகம் (R-ABI) மூலம் உதவி வழங்கப்படும் (R-ABI).
- புத்தாக்க நிறுவனங்கள்/பட்டதாரிகளுக்கு புதுமை மற்றும் தொடக்க நிலை நிதியுதவியின் கீழ் 5 முதல் 25 லட்சம் ரூபாய் வரை மானியம்.

**எப்படி விண்ணப்பிப்பது?**

**அ) விவசாயிகள்**

1. RKVY திட்டத்தின் கீழ், ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் நிலத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது.
2. சிறு, குறு மற்றும் எஸ்.சி/எஸ்.டி விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
3. அருகிலுள்ள தொகுதி/மாவட்ட வேளாண் அலுவலகம் (DAO/ADA) அல்லது தோட்டக்கலை அலுவலகத்தை அணுகவும்.
4. RKVY திட்டக் கூறுகளின் விண்ணப்பப் படிவத்தைப் பெறுங்கள் அல்லது த.நா. வேளாண்மைத் துறையின் வலைதளம் (https://www.tnagriculture.in) மூலம் விண்ணப்பிக்கலாம்.
5. சமர்ப்பிக்கபட வேண்டிய சான்றுகள் : நில உரிமைச் சான்று ( சிட்டா / அடங்கல் நகல்), ஆதார் அட்டை நகல், வங்கி பாஸ்புக் நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், இயந்திரங்கள் அல்லது இடுபொருட்களுக்கான மதிப்பீடு / விலைப்புள்ளி முதலிய ஆவணங்களுடன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும்.
6. பின்பு, அது துறை அதிகாரிகளால் கள ஆய்வு செய்யப்படும்.
7. மானியம் விற்பனையாளருக்கு நேரடியாகவோ அல்லது சரிபார்ப்பிற்குப் பிறகு விவசாயியின் கணக்கில் நேரடிப் பலன் பரிமாற்றம் மூலமாகவோ விடுவிக்கப்படும்.

**ஆ) வேளாண் தொழில்முனைவோர் / புத்தாக்க நிறுவனங்கள்**

1. கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் RKVY–RAFTAAR வேளாண் வணிக காப்பகம் (R-ABI) மூலம் விண்ணப்பிக்கவும்.
2. மேலும் விவரங்களுக்கு அவர்களின் வலைதளத்தைப் பார்வையிடவும் (https://tnau.ac.in/tnau-rkvy-raftar/).
3. உங்களின் வணிகத் திட்ட முன்மொழிவை இந்த இணையதளத்தில் சமர்ப்பிக்கவும்; அவை பின்னர் பட்டியலிடப்படும்; பின்னர், நிபுணர்கள் குழுவின் முன் விளக்கப்பட வேண்டும்; அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு மானியம் (ரூ. 5–25 லட்சம் வரை) மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.

**கண்காணிப்பு மற்றும் நிதிப் பயன்பாடு**

1. தமிழ்நாடு அரசு மாநில வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் (SADP) கீழ், ஆண்டுதோறும் புதிய திட்டங்களை முன்மொழிகிறது.
2. இத்திட்டங்களுக்குத் தலைமைச் செயலாளர் தலைமையிலான, மாநில அளவிலான ஒப்புதல் அளிப்பு குழு (SLSC) ஒப்புதல் அளிக்கிறது.
3. மத்திய அரசு 60% மற்றும் மாநில அரசு 40% செலவுகளைப் பகிர்ந்து கொள்கின்றன. நிதி மாநில திட்டச் செயலாக்கத் துறை மற்றும் பயனாளிகளுக்கு நேரடி மானிய முறையில் விடுவிக்கப்படுகிறது.
4. திட்ட செயல்பாடுகளை / விளைவுகளை TNAU / NABCONS கண்காணித்து, இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாய நலத்துறைக்கு அறிக்கை அளிக்கின்றன.

**ஆதாரம்:**


- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.

## (6) Food and Nutrition Security (FNS) Scheme

**Introduction:** This is a centrally sponsored scheme, implemented by the M/o. Agriculture and Farmers Welfare, Government of India, to ensure food security and balanced nutrition by increasing productivity of major food crops, especially paddy, millets, and nutri-cereal, pulses, and oilseeds, and promoting integrated nutrient management and sustainable farming practices. In Tamil Nadu, this scheme is implemented in all districts under the State Plan. Priority districts are the Delta, Cauvery basin, and rainfed areas for paddy and pulses. Focus crops in 2025–26 are: Paddy, Millets (Cumbu, Ragi), Pulses (Black gram, Green gram), and Oilseeds (Groundnut, Gingelly). The funds for this scheme are allocated through the Department of Agriculture, Chennai, to the Joint Directors of Agriculture in the districts.

**Components of FNS Schemes in TN**

**FNS-Rice**

1. To enhance the productivity of rice, restore soil fertility and increase paddy area in 9 districts, *viz.* Pudukkottai, Thiruvarur, Nagapattinam, Mayiladuthurai, Ramanathapuram, Sivagangai, Thanjavur, Tiruvannamalai and Cuddalore.
2. Cluster demonstration with direct-seeded rice, rice-pulses cropping system-based demonstration: input subsidy of ₹ 3,000/acre.
3. Cluster demonstration of drought-tolerant / biofortified paddy cultivation: input subsidy of ₹ 3,000/acre.
4. Distribution of inputs like seeds of high-yielding varieties of paddy, micro nutrient mixture, liquid bio-fertilisers, bio-control agents, green manure seeds and Azadirachtin distribution to farmers.

**FNS- Nutri-cereal**

1. To enhance the area, production and productivity of nutri-cereals.
2. Major focus on sorghum, cumbu, ragi, samai, Kudiraivali, thinai and varagu.
3. Implemented in 15 districts in TN- Villupuram, Kallakurichi, Salem, Erode, Namakkal, Karur, Dharmapuri, Krishnagiri, Madurai, Tiruppur, Dindigul, Virudhunagar, Tiruchirappalli, Coimbatore and Thoothukudi.
4. Cluster demo, POP etc.: subsidy of ₹ 2400/acre (1 demo).
5. Summer ploughing: subsidy of ₹ 800/acre or 50% subsidy, whichever is lower.
6. Nano urea foliar spray: ₹ 480/acre.

**FNS- Coarse Cereal - Maize**

1. To enhance the area, production and productivity of coarse cereal- Maize.
2. Implemented in 9 districts in TN- Kallakurichi, Salem, Erode, Perambalur, Cuddalore, Tiruppur, Dindigul, Virudhunagar and Thoothukudi.
3. Distribution of hybrid maize seeds- Subsidy of ₹ 100/kg seeds or 50% seed cost, whichever is lower.

**FNS- Pulses & Targeting Rice Fallow Areas (TRFA) (Pulses) Schemes**

1. Pulses are cultivated in 7.9 lakh acres in TN.
2. To enhance the area, production and productivity of pulses.
3. Crop covered: red gram, black gram, green gram, horse gram and cowpea.
4. Seed production, fertiliser distribution, distribution of biocontrol agents: maximum subsidy limit is 2 ha/ year.
5. Demonstration of improved PoP with/without intercrop: subsidy ₹ 2,000 to 2400/acre (1 demo).

**Subsidy Pattern (2025–26)**

Subsidies are released under **Direct Benefit Transfer (DBT)** directly to the farmer's bank account.

| Components | Subsidy / Assistance |
|---|---|
| Summer ploughing in a rainfed area | 50% subsidy or @ ₹ 800 per acre; Maximum subsidy limited to ₹ 2000/- per farmer. |
| Promotion of certified seed production and use of newly released varieties (not older than 10 years from release): Paddy / Millets / Pulses | 50% cost or ₹ 10/Kg of seed, whichever is less |
| Distribution of Certified Seeds (not older than 10 years from release): Paddy / Millets / Pulses | 50% cost or ₹ 20/kg, whichever is less |
| Liquid Bio-fertilisers | ₹ 120/acre or 50% subsidy, whichever is less. |
| Micronutrients | ₹ 200/acre or 50% subsidy, whichever is less |
| Distribution of Organic Inputs (Green Manure, Vermicompost) | 50% subsidy for promoting organic practices |
| Distribution of Plant Protection Chemicals / Bio-pesticides | 50% subsidy or input subsidy of ₹ 200/acre for pest/disease management |
| Distribution of Green manure seeds | ₹ 900/acre or 50% subsidy, whichever is lower. |
| Distribution of Neem Oil/ Azadirachtin | ₹ 200/acre or 50% subsidy, whichever is lower. |
| IPM practices | ₹ 200/ acre |
| Foliar spray (twice in pulses) | ₹ 800/acre |
| Bee keeping | 50% subsidy or ₹ 2000/unit |
| Training & Demonstration | Free for farmers, conducted by ADA / AOs in each block.<br>Cluster demo of 250 acre- single crop- improved technologies-pulses: Assistance ₹ 3600/acre.<br>Intercropping demo- in cereals/pulses- Cost ₹ 3600/acre |

**Eligibility Criteria**

- Small and marginal farmers with cultivable land.
- Land ownership proof (Chitta / Adangal) required.
- Priority for SC/ST, women farmers, and differently abled farmers.
- Farmer must register in the Uzhavan App / Tamil Nadu Agriculture department's e-portal.

**Application Procedure**

**Physical Mode:**

1. Visit Block / District Agriculture Office (Assistant Director of Agriculture).
2. Fill the FNS scheme Application Form (component-wise).
3. Attach: Aadhaar Card copy, Chitta / Adangal (land record), Bank passbook, Passport-size photo
4. Field verification by Agriculture Officer.
5. Subsidy amount credited through DBT after implementation.

**Online Mode**

1. Go to: https://www.tnagriculture.in
2. Register/log in under 'Farmer Services'.
3. Select 'components' under the Nutrition Security Scheme (FNS).
4. Upload documents and submit online.
5. Get SMS confirmation and track status through the web portal or Uzhavan App.

**Sources:**

G.O (Ms) No 258 Agriculture and Farmers' Welfare (AP4) Department dt 27.12.2023 https://cms.tn.gov.in/cms_migrated/document/GO/agri_e_258_2023.pdf

GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.

## (6) உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டம் (FNS)

**அறிமுகம்:** நெல், சிறுதானியங்கள், மற்றும் ஊட்டச்சத்துத் தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தித்திறனை அதிகரித்து, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளை ஊக்குவித்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் சமச்சீர் ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்காக, மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய இந்த "உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டம் (FNS)," இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில், இந்தத் திட்டம் மாநிலத் திட்டத்தின் கீழ், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில் டெல்டா, காவிரிப் படுகை மற்றும் மானாவாரிப் பகுதிகள் நெல் மற்றும் பருப்பு வகைகளுக்கான முன்னுரிமை மாவட்டங்களாகச் செயல்படும். இத்திட்டத்தின் கீழ் 2025-26-ஆம் நிதி ஆண்டில் கவனம் பெறும் பயிர்களாவன: நெல், சிறுதானியங்கள் (கம்பு, கேழ்வரகு), பருப்பு வகைகள் (உளுந்து, பச்சைப்பயறு) மற்றும் எண்ணெய் வித்துக்கள் (நிலக்கடலை, எள்) ஆகியவை. இந்தத் திட்டத்திற்கான நிதி வேளாண்மைத் துறை, சென்னை மூலம், மாவட்டங்களில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர்களுக்கு ஒதுக்கப்படுகிறது.

**தமிழ்நாட்டில் FNS திட்டங்களின் கூறுகள்**

**FNS- நெல்**

5. நெல் உற்பத்தியை அதிகரித்தல், மண் வளத்தை மீட்டெடுத்தல், 9 மாவட்டங்களில் (புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர்) நெல் சாகுபடி பரப்பை விரிவுபடுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.
6. நேரடி நெல் விதைப்பு, நெல்-பருப்பு வகைப் பயிர்கள் அடிப்படையிலான பயிர் சாகுபடி முறை தொடர்பான தொகுப்பு செயல் விளக்கங்கள்: இடுபொருள் மானியமாக ஏக்கருக்கு ரூ. 3,000.
7. வறட்சியைத் தாங்கும் / உயிரி ஊட்டமேற்றிய நெல் இரகங்களின் தொகுப்பு செயல் விளக்கங்கள்: இடுபொருள் மானியமாக ஏக்கருக்கு ரூ. 3,000.
8. அதிக மகசூல் தரும் நெல் இரக விதைகள், நுண்ணூட்டச்சத்து கலவை, திரவ உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், பசுந்தாள் பயிர் விதைகள் மற்றும் அசாடிராக்டின் போன்ற இடுபொருட்களை விவசாயிகளுக்கு விநியோகித்தல்.

**FNS- ஊட்டச்சத்துத் தானியங்கள் (சிறு தானியங்கள்)**

7. ஊட்டச்சத்து தானியங்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்.
8. கம்பு, கேழ்வரகு, சாமை, குதிரைவாலி, தினை மற்றும் வரகு ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.
9. இத்திட்டம் தமிழகத்தின் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது- கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, மதுரை, திருப்பூர், திண்டுக்கல், விருதுநகர், திருச்சிராப்பள்ளி, கோவை, மற்றும் தூத்துக்குடி.
10. தொகுப்பு செயல் விளக்கம், POP போன்றவற்றுக்கு: மானியம் ரூ. 2,400/ஏக்கர் (1 செயல் விளக்கம்).

11. கோடை உழவு: ஏக்கருக்கு ரூ. 800 அல்லது 50% மானியம், இதில் எது குறைவோ அது.

12. நானோ யூரியா இலைவழி தெளிப்பு: ரூ. 480/ஏக்கர்.

**FNS- பெருந் (கடின) தானியங்கள் - மக்காச்சோளம்**

4. கடினத் தானியப் பயிர்களின் (மக்காச்சோளம்) பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.

5. இத்திட்டம் கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, பெரம்பலூர், கடலூர், திருப்பூர், திண்டுக்கல், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

6. வீரிய ஒட்டு இரக மக்காச்சோள விதைகள் விநியோகம்: கிலோ விதைக்கு ரூ. 100 அல்லது விதை விலையில் 50% மானியம், இதில் எது குறைவாக இருக்கிறதோ அது.

**FNS- பருப்பு வகைகள் மற்றும் நெல் தரிசு நிலங்களை இலக்கு வைத்தல் (TRFA) (பருப்பு வகைகள்) திட்டங்கள்**

6. தமிழ்நாட்டில் 7.9 லட்சம் ஏக்கரில் பருப்பு வகைப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

7. பருப்பு வகைகளின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.

8. சாகுபடி செய்யப்படும் பயிர்கள்: துவரை, உளுந்து, பச்சைப்பயறு, கொள்ளு மற்றும் தட்டைப் பயறு.

9. விதை உற்பத்தி, உர விநியோகம், உயிரியல் கட்டுப்பாட்டுப் பூச்சிகளின் விநியோகம்: இவற்றுக்கு அதிகபட்ச மானிய வரம்பு ஆண்டுக்கு 2 ஹெக்டேர் வரை.

10. ஊடுபயிருடன் கூடிய/அல்லாத மேம்படுத்தப்பட்ட பயிர் சாகுபடி முறைகளின் செயல் விளக்கங்கள்: மானியம் ரூ. 2,000 - 2400/ஏக்கர் (1 செயல் விளக்கம்).

**மானியம் (2025–26)**

நேரடிப் பலன் பரிமாற்றத்தின் கீழ் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணம் செலுத்தப்படுகின்றது.

| கூறுகள் | மானியம் / உதவி |
|---|---|
| மானாவாரிப் பகுதிகளில் கோடை உழவு | 50% மானியம் அல்லது ஏக்கருக்கு ரூ. 800; அதிகபட்ச மானியம் ஒரு விவசாயிக்கு ரூ. 2,000. |
| சான்று விதை உற்பத்தியை ஊக்குவித்தல், புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் பயன்பாடு (வெளியானதிலிருந்து 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட இரகங்கள்): நெல் / தானியங்கள் / பருப்பு வகைகள். | 50% விலை அல்லது ரூ. 10/கிலோ விதை, இதில் எது குறைவோ அது. |
| சான்றளிக்கப்பட்ட விதைகளின் விநியோகம் (வெளியிடப்பட்டதிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மிகாத இரகங்கள்): நெல் / தானியங்கள் / பருப்பு வகைகள் | 50% விலை அல்லது ரூ. 20/கிலோ, இதில் எது குறைவோ அது. |

| | |
|---|---|
| திரவ உயிர் உரங்கள் | ஏக்கருக்கு ரூ. 120 அல்லது 50% மானியம், இதில் எது குறைவோ அது. |
| நுண்ணூட்ட உரங்கள் | ஏக்கருக்கு ரூ. 200 அல்லது 50% மானியம், இதில் எது குறைவோ அது. |
| அங்கக இடுபொருட்களின் விநியோகம் (பசுந்தாள் உரம், மண்புழு உரம்) | இயற்கை விவசாய நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு 50% மானியம். |
| பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் / உயிரி பூச்சிக்கொல்லிகளின் விநியோகம் | பூச்சி/நோய் மேலாண்மைக்கு 50% மானியம் அல்லது இடுபொருள் மானியம் ஏக்கருக்கு ரூ. 200. |
| பசுந்தாள் உர விதைகள் விநியோகம் | ஏக்கருக்கு ரூ. 900 அல்லது 50% மானியம், இதில் எது குறைவோ அது. |
| வேப்ப எண்ணெய்/ அசாடிராக்டின் விநியோகம் | ஏக்கருக்கு ரூ. 200 அல்லது 50% மானியம், இதில் எது குறைவோ அது. |
| ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சிகள் | ஏக்கருக்கு ரூ. 200. |
| இலைவழி மருந்து தெளிப்பு (பருப்பு பயிர்களில் இரண்டு முறை) | ஏக்கருக்கு ரூ. 800. |
| தேனீ வளர்ப்பு | 50% மானியம் அல்லது ரூ. 2000/யூனிட் |
| பயிற்சி மற்றும் செயல்விளக்கம் | விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி, ஒவ்வொரு தொகுதியிலும் ADA/AO அவர்களால் நடத்தப்படுகிறது.<br>250 ஏக்கர் பரப்பில், பருப்பு வகைப் பயிர்களின் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களின் தொகுப்புச் செயல் விளக்கம் - ஒரு பயிருக்கு: உதவி ரூ. 3600/ஏக்கர்.<br>தானியங்கள்/பருப்பு வகைகளில் ஊடுபயிர் திடல் விளக்கம்: உதவி ரூ. 3,600/ஏக்கர். |

**தகுதிகள்**

- சாகுபடி செய்யக்கூடிய நிலமுடைய சிறு மற்றும் குறு விவசாயிகள்.
- நில உரிமைச் சான்று (சிட்டா / அடங்கல்) தேவை.
- எஸ்.சி/எஸ்.டி, பெண் விவசாயிகள் மற்றும் மாற்றுத்திறனாளி விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- இத்திட்டத்தின் பலன்களைப் பெற உழவர் செயலி அல்லது தமிழ்நாடு வேளாண்மைத் துறை e-தளத்தில் விவசாயிகள் பதிவு செய்ய வேண்டும்.

**விண்ணப்ப நடைமுறைகள்**

**நேரடியாக விண்ணப்பித்தல்**

6. அருகில் உள்ள வட்டாரம்/ மாவட்ட வேளாண்மை அலுவலகத்தை (வேளாண்மை உதவி இயக்குநர்) அணுகவும்.
7. FNS திட்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்பவும் (உட்திட்டங்கள் வாரியாக).

8. ஆதார் அட்டை நகல், சிட்டா / அடங்கல் (நில ஆவணம்), வங்கி பாஸ்புக், பாஸ்போர்ட் அளவுப் புகைப்படம் ஆகியவற்றை விண்ணப்பத்துடன் இணைக்கவும்.
9. விண்ணப்பங்கள் வேளாண் அலுவலர்களால் சரிபார்க்கப்படுகிறது.
10. மானியத் தொகை நேரடிப் பலன் பரிமாற்ற முறையில் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

**ஆன்லைன் முறை**

6. https://www.tnagriculture.in என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.
7. ‘விவசாயி சேவைகள்’ என்ற பகுதியில் பதிவு செய்யவும் / உள்நுழையவும்.
8. ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டத்தின் (FNS) கீழுள்ள உட்கூறுகளைத் தேர்ந்தெடுக்கவும்.
9. தேவைப்படும் ஆவணங்களைப் பதிவேற்றி, ஆன்லைனில் சமர்ப்பிக்கவும்.
10. உங்கள் விண்ணப்பம் சென்றடைந்ததை மொபைல் குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவீர்கள். மேலும், உங்கள் விண்ணப்ப நிலையை வலைதளம் அல்லது உழவன் செயலிமூலம் கண்காணிக்க முடியும்.

**ஆதாரங்கள்:**


- G.O (Ms) No 258 Agriculture and Farmers’ Welfare (AP4) Department dt 27.12.2023 https://cms.tn.gov.in/cms_migrated/document/GO/agri_e_258_2023.pdf
- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers’ Welfare Department, Government of Tamil Nadu.

# (7) Important National Mission Schemes Implemented in TN

Below are important centrally sponsored schemes of the National Mission, implemented by the Ministry of Agriculture and Farmers' Welfare, Government of India, in collaboration with State Governments.

## 7.1 National Mission on Edible Oils (NMEO)- Oilseeds and Oil Palm

The National Mission on Edible Oils Scheme is implemented in TN with two components (i) oilseeds component under National Mission on Edible Oils -NMEO- Oilseeds and (ii) Oil palm under National Mission on Edible Oils-Oil Palm (NMEO-OP).

### 7.1.1 NMEO-Oil Palm Scheme

- The NMEO-OP was launched in 2021-22 to boost India's edible oil production, particularly to expand the area of Oil palm cultivation in India.
- The National Mission aims to bring 6.50 lakh hectares under the Oil Palm cultivation in India, during the 2021-2026 period.
- Mission Duration: 2021–22 to 2025–26 (five years).
- Fund sharing pattern: 60 (Central):40 (State) for general States and 90:10 for NE States.

**Activities and Assistance in Tamil Nadu**

- Seed distribution/planting material: 100% subsidy, up to ₹ 8,000/acre (for indigenous seedlings).
- Annual Maintenance during gestation period (first 4 years): 50% subsidy or ₹ 800/acre/year (*i.e.,* about ₹ 21,000 over 4 years)
- Inter-cropping in Oil Palm plantation: 50% subsidy or ₹ 400/acre/year (for four years)
- Irrigation (digging a borewell) for oil palm: 50% or up to ₹ 50,000 / unit as back-ended subsidy.
- Intercropping/input support: often 50% of cost up to specified cap (e.g., ₹ 20,000/ha for intercropping inputs in some notifications).
- Purchase of machinery & tools for harvesting and maintenance, etc., such as oil palm cutter, wire mesh protection, motorised chisel, aluminium ladder, chaff cutter, tractor trolley: up to 50% subsidy on cost for specific harvesting/maintenance tools (vary from ₹ 2,500/unit to ₹ 2.0 lakh/unit).
- Production incentive ("Flexi fund"): Incentive for yield of Fresh Fruit Bunches (FFBs) above a threshold- ₹ 1,000/metric ton of FFB for FFB yield ≥ 8 MT/ha in plantations aged 5 years and above.
- Subsidy for establishing a small oil expeller/processing unit

### 7.1.2 NMEO-Oilseeds Scheme

- Objective: The main objective of the Mission is to increase the production of edible oilseeds (oilseeds) in India from 39 million tons in 2022-23 to 70 million tons by 2031.

- Mission Duration: 2024–25 to 2030–31 (seven years).
- Fund sharing pattern: 60 (Central):40 (State) for general States and 90:10 for NE States.

**Activities and assistance in TN**

1. Coverage in TN: 24 districts in TN
2. Crops covered in TN: Groundnut, gingelly, sunflower and castor
3. Promoting high-yielding new varieties and Distribution of inputs – Seeds of new varieties (< 5 years from release) such as Groundnut (₹ 11,400/q), Sesamum (₹ 12,000/q) and sunflower (₹ 43,900/q).
4. Conducting block demonstrations: Groundnut (₹5,600/acre), Sesamum and Castor (₹ 3200/acre) and sunflower (₹ 3600/acre).
5. Training to farmers (₹30,000/training) and Farmer Field School (₹ 35,000/programme).
6. Promoting beekeeping (₹ 2000 per unit)
7. Post-harvest infrastructure support subsidy: 33% subsidy or ₹ 9,90,000 per unit, whichever is lower.
8. Setting up of Rice Bran Oil Processing unit: Subsidy ₹ 50 lakh per unit.

## 7.2 National Mission on Organic Farming (NMOF) and National Mission on Natural Farming (NMNF)

These are centrally sponsored schemes to promote chemical-free, ecological-based farming using organic inputs and traditional knowledge. The Department of Agriculture and Farmers' Welfare, Government of India, is the implementing agency of these Central Schemes in collaboration with State Governments. The funding ratio is 90:10 (Centre: State) for hilly and North-Eastern States and 60:40 for other States. The Tamil Nadu Government has launched multiple initiatives to boost organic farming: cluster formation, organic certification, market support, quality control labs, subsidies for inputs and residue testing, and awareness programmes. In the 2025-26 Budget, the Tamil Nadu Government made several announcements aimed at organic farming such as Creating organic/natural farming clusters in 37 districts, full subsidy for pesticide-residue testing for farmers practicing organic farming, exemption of certification fee for organic certification, setting up quality control laboratories (in TNAU) in some districts (Chennai, Thoothukudi, Coimbatore, Madurai) for organic produce testing, incentives/awards to farmers who attain organic status such as '*Nammazhvar Award*', cash prize, certificate.

### 7.2.1 National Mission on Natural Farming (NMNF)

- Implemented as 2 years programme during the FY 2025-26 & 2026-27.
- Creation of market facilities for marketing organic and natural farming products in Government buildings like '*Poomaalai Complex*'.
- Creation of awareness on organic farming and necessary technologies in 37 districts under ATMA schemes.

- Exposure visits to organic farms for 38,600 higher secondary school and college students.
- Subsidy details under the mission are shown below:

| Item/ Works | Subsidy Details |
|---|---|
| Land preparation | Subsidy (farmer's contribution nil) up to ₹ 2,500 per ha (for some crops) |
| Green manure and seed material | ₹500 subsidy per ha for that component, etc. |
| Biocontrol / bio-fertiliser / VAM etc. | ₹ 1,000 per ha subsidy for some items. |
| Vermicompost / organic manure, etc. | Up to ₹ 4,000 per ha (full or partial subsidy depending on the item).<br>Vermicompost units (1000 sqm or 30'x8'x25' unit or 25 tonnes/year production) -Assistance of ₹ 50,000 or 50% subsidy |
| Promoting pollination through beekeeping | Bee hive with bees: 40% subsidy or ₹ 1,600 per box; Honey extractor: 40% subsidy or ₹ 8,000 per unit (maximum for1 beneficiary) |

### 7.2.2 Paramparagat Krishi Vikas Yojana (PKVY)

This centrally sponsored scheme is implemented in TN from 2023-24 to promote organic farming among farmers, rural youths, consumers and traders through the Participatory Guarantee System of certification (PGS). Various activities of this scheme are:

1. Cluster formation (20 ha, 20 farmers in each cluster).
2. Capacity building training, including exposure visits to organic farming fields or units.
3. Incentive directly to registered farmers for obtaining organic certification– ₹ 800/acre per farmer per year for 3 years.
4. PGS Certification through Regional Councils (farmer-to-farmer inspected fields).
5. Scope certificate (C1 & C2) issued to beneficiaries of all 20 clusters. This scope certificate is useful for internal marketing of their products.
6. Value addition of organic products, Brand building, sales point creation like kiosk in public places and in 'Uzhavar Sandhai' for promoting daily sales.
7. Trade fairs, exhibitions, and local publicity for creating awareness among beneficiaries.
8. *PGS India Green logo* may be used for the Farm/products under conversion (first 3-year farmers).
9. *PGS India Organic logo* may be used for completely converted organic Farm/products.

### 7.2.3 Organic Certification under Organic Farming Promotion Scheme

**Description of the scheme:** Under the Organic Farming Promotion Programme, Organic Certification is provided to farmers who adopt organic farming practices. The certification process is carried out through the following steps:

(i) Receipt and scrutiny of applications
(ii) Field inspections and
(ii) Issuance of organic certification.

Any farmer who wishes to undertake organic cultivation can register under this certification scheme. All the crops grown by these registered applicants are eligible to receive Organic Certification.

*Organic certification is granted for the following categories:*

- Organic Crop Production
- Organic Food Processing
- Organic Trade and Export Activities

*Registration Fee*

- Individual small/marginal farmers : ₹ 2,700
- Other individual farmers : ₹ 3,200
- Group registration : ₹ 7,200
- Commercial companies : ₹ 9,400

*Application / Approval Process*

- Applications received will be accepted or rejected within 30 days, and the applicant will be informed accordingly.
- Provisional Certificate (acknowledgement) will be issued within 180 days from the date of acceptance.

*Implementing / Contact Authority*

The Director, Seed Certification and Organic Certification Department, Thiru. Vi. Ka Industrial Estate, Guindy, Chennai – 600 032. Email: tnocd2024@gmail.com

### 7.3 Nutrition Farming Mission (NFM) / Nutrient-Sensitive Agriculture Mission

**Launch**: New Scheme launched in July 2025

**Objective:** The scheme aims to boost production of nutritious crops (fruits, vegetables, pulses) in Tamil Nadu, thereby enhancing both farmers' income and nutritional security for the people

**Funding source:** 125 crores from the Centre and State Government funds

**Scope/Activities of the mission**

- Distribution of vegetable seed kits (6 vegetables- tomato, brinjal, bhendi, chillies, cluster beans and green leafy vegetables) will be distributed to 15 lakh families at 75 % subsidy.
- Distribution of Fruit plant kits: three quick-bearing fruit plants like Papaya, Guava and Acid-lime will be distributed to 9 lakh families at 75 % subsidy

- Pandal structures will be established in 1200 acres.
- Increase the area of vegetables like tomato, onion, moringa, brinjal, green chillies, bhendi and green leafy vegetables in the peri-urban area (adjoining Chennai).
- Promoting red gram as a pure and border crop or intercrop will be promoted in 80,000 acres.
- Distribution of pulses kit- red gram, cowpea, etc., at 75 % subsidy.
- Assistance will be provided for 5 new entrepreneurs who establish mushroom production units in rural areas.
- Assistance for the purchase of 4000 mobile vending carts.

## 7.4 National Horticulture Mission (NHM)

- This scheme is a sub-scheme of Mission for Integrated Development of Horticulture (MIDH), Government of India.
- It is implemented in 26 Districts from 2014-15.
- Fund sharing pattern is 60:40 between the Centre and State.
- Activities under the schemes are:
    1. Mushroom Production Units
    2. Establishment of Water Storage Structure
    3. Promotion of Protected Cultivation
    4. Establishment of Post-harvest Management infrastructure
    5. Pollination support through beekeeping
    6. Rejuvenation of senile orchards

## 7.5 Tamil Nadu Millet Mission

This was announced as a five-year programme from 2023-24 to 2027-28, in 2 millet zones. The agriculture and allied Departments will work in coordination to implement the scheme. The target districts are: Dharmapuri, Krishnagiri and Salem (under RKVY); Other districts (under FNSS).

**Subsidy / Assistance**

- Summer ploughing in rainfed area: 50% subsidy or @ ₹ 800 per acre; Maximum subsidy limited to ₹ 2000/- per farmer.
- Formation of millet farmer clusters/group: ₹ 1000/ group
- Training for the millet farmers group: ₹ 10,000/training
- Demo on millet cultivation: ₹ 2400/acre (sorghum, ragi, cumbu, samai, kudiraivali, thinai, varagu).
- Promotion of certified seed production of millets: ₹ 3000/quintal subsidy
- Cultivation of minor millets: ₹ 1600/acre as back-end subsidy
- Minor millet minikit distribution: ₹ 300/ kit (100 % subsidy)
- Cultivation of minor millets as an alternative for water guzzling crops: ₹ 1,250/acre

- Under the scheme, 50 millet primary processing Centres and 40 millet processing Centres were established from 2024 to 2025. Establishment of two Millet primary processing units under Malaivazh Uzhavar Munnetra Thittam is in progress.

### 7.6 National Bamboo Mission (NBM)

- Funding Source: Centre State sharing 60:40.
- Expansion of bamboo area in Non-Forest Government/ Panchayat land- 100% subsidy @ ₹1,20,000/ha (together for 2 years)
- Expansion of bamboo area in Non-Forest Private land- 50% subsidy @ ₹ 60,000/ha (together for 2 years).

### 7.7 Palmyrah Development Mission (PDM)

1. The Mission is being implemented from the year 2021-22 onwards to increase the number of Palmyrah trees, to promote value addition in Palmyrah products and to generate employment opportunities.
2. Seed distribution for planting through NGO/Panchayat in common / community lands @ 50 % subsidy – 100 seeds will be given through Tamil Nadu Palm Products Development Board.
3. Seedling distribution for planting through NGO/Panchayat in common / community lands @ 100 % subsidy – 30 seedlings produced in State Horticultural Nurseries will be given.
4. Support for setting up of Parks for the manufacture of value-added palm products: ₹ 50,000 per unit as a back-end subsidy.
5. Established Palmyrah Research Station at Killikulam under the Tamil Nadu Agricultural University (TNAU).

### 7.8 National Horticulture Mission (NHM) of the MIDH

**What it is?** The Integrated Development of Horticulture (MIDH) is a Centrally Sponsored Scheme (from 2014) for the **holistic growth** of the horticulture sector covering fruits, vegetables, root & tuber crops, mushrooms, spices, flowers, aromatic plants, coconut, cashew, cocoa and bamboo. The **National Horticulture Mission (NHM)** was also a Centrally Sponsored Scheme, implemented since 2005-06 by State Horticulture Missions (SHM) in selected districts of 18 States and 6 Union Territories. The NHM was subsumed under MIDH since 2014 and kept as a sub-scheme of MIDH.

**Fund sharing pattern:** The new scheme, MIDH, has a fund sharing pattern of 85:15 between the Centre and the State. The fund sharing pattern of the old NHM operational in TN is 60:40.

**Implementing Agency**: The National Horticulture Board (NHB) is implementing various schemes under Mission for Integrated Development of Horticulture (MIDH) in all States and UTs. In TN, the NHM is implemented through the Tamil Nadu Horticulture Development Agency (TANHODA). It prepares annual action plans and coordinates with District level NH Mission Committee.

**Participating Districts:** The NHM scheme is implemented in 20 districts, *viz.* Coimbatore, Erode, Salem, Dharmapuri, Krishnagiri, Cuddalore, Madurai, Theni, Dindigul, Trichy, Tirunelveli, Sivagangai, Ramanathapuram. Nilgiris, Perambalur, Vellore, Pudukkottai, Villupuram, Kanyakumari and Thanjavur.

**Crops covered:** The scheme covers the crops such as mango, aonla, banana, cashew, cocoa, chillies, turmeric, aromatic plants and flowers which are promoted through a **cluster approach**.

**Key Components and Activities**

1. **Nursery expansion & planting material production:**

- For larger nurseries: For general category- 100% subsidy (₹ 30 lakhs/ha) or for individual farmer 40% back end subsidy (₹ 12 lakhs/ha).
- For smaller nurseries: For general category-100% subsidy (₹ 20 lakhs/ha) or for individual farmer- 50% back end subsidy (₹ 10 lakhs/ha).
- Development of infrastructure of nurseries: For general category- 100% subsidy (₹ 4 lakhs/ha) or for individual farmer- 50% back end subsidy (₹ 2 lakhs/ha).
- Production of vegetable seed kits and fruit sapling kits: For general/ cluster category- 100% subsidy (₹ 50,000/ha) or for individual farmer- 35% back end subsidy (₹ 17,500 /ha).

2. **Area Expansion**

- New planting of high-value horticultural crops: Cultivation of hybrid vegetables- Subsidy of 40% or ₹ 24,000/ha/farmer for maximum 2 ha.
- Assistance/ Subsidy of ₹20,000 for garlic and onion.
- High density planting of mango/ guava: 40% subsidy or ₹48,000/ha/ farmer for maximum 2 ha.
- Planting tissue culture banana: 40% subsidy or ₹ 42,000/ha/farmer (maximum 2 ha).
- Likewise, subsidies for other crops are available.

3. **Promotion of mushroom cultivation**

- For the general category-100% subsidy, and for individual 40% subsidy (maximum ₹ 12 lakhs loan for creating infrastructure with back-end subsidy); Span production - maximum ₹ 8 lakhs loan for creating infrastructure with back-end subsidy.

4. **Protected Cultivation**

- Poly houses, shade net houses, plastic mulching, etc: For erecting square type green house- 50% subsidy, maximum 2500 sq.m. per farmer (@ 500-600 per sqm).
- Erection of rectangle or cylindrical shade net: 50% subsidy, maximum 2500 sq.m. per farmer (@ 355/sqm).
- Erecting bird scarring (protecting) net - 50% subsidy, maximum 10,00 sq.m. per farmer (@ 25/sqm).
- Erecting of walk-in poly tunnel: 50% subsidy, maximum 800 sq.m. or 3 units per farmer (@ 360/sqm).

5. **Post-Harvest Management (PHM) Infrastructure**: Assistance will be given for creation of pack houses, low-cost storage, pre-cooling units. For example, in the year 2019-20 about 691 pack houses and 976 low-cost onion storage units were created in Tamil Nadu.

6. **Rejuvenation of senile old plantation**: For the rejuvenation of mango, guava, cashew, orange, curry leaf, sapota, aonla and jack plantations– 40% subsidy or ₹ 4,000/ha/farmer, for a maximum of 2 ha.
7. **Creation of water resource:** Subsidy for 20x20x3 m water tank or digging a well **@** ₹ 125/sqm (maximum limit it ₹ 75,000/farmer)
8. **Centres of Excellence (CoE)**: To promote adoption of advanced technologies e.g., for cut flowers at Thally (Krishnagiri), for vegetables at Reddiyarchatram (Dindigul) in Tamil Nadu.
9. **Cluster Approach**: Crops promoted under cluster model e.g., flower clusters, spice clusters.

**Application Procedures**

1) **Register yourself as a 'Farmer'** on any one of the following State web Portals/mobile App so that DBT and benefit linkage will work.
    - Uzhavan Mobile App / Agri portal (tnagrisnet.tn.gov.in)
    - AgriStack / tnfr.agristack (if the scheme requires AgriStack registration)
2) Visit the nearest Block/Assistant Agricultural Officer (AAO) / Deputy Director / District Horticulture Officer (many schemes require an application through the Block Level Officers).
3) **Submit documents** (Aadhaar, land proof, soil test, bank passbook, receipts as applicable). For cluster-based schemes (natural farming / organic), farmers may need to apply as a group; the cluster leader or FPO submits the cluster application.
4) Inspection / physical verification by field staff (AAO / Horticulture).
5) After verification, the work or supply will be sanctioned. Many capital items are purchased through approved suppliers; reimbursements are made on production of bills.
6) Subsidy will be released mostly as back-ended reimbursement or rarely as front-payment.

**Sources:**


- DAC 2014. Mission for Integrated Development of Horticulture. Operational Guidelines. Dept. of Agriculture & Cooperation, Ministry of Agriculture, New Delhi
- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for Agriculture and Farmers' Welfare. Government of Tamil Nadu.
- GoT. 2025. Citizen Charter (*மக்கள் சாசனம்*). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- https://agritech.tnau.ac.in/horticulture/horti_schemes_nhm.html.
- https://cmhelpline.tnega.org/
- https://cms.tn.gov.in/cms_migrated/document/docfiles/agri_e_pn_2020_21.pdf?
- https://nmeo.dac.gov.in/
- https://perambalur.nic.in/ Hon'ble Chief Minister of Tamil Nadu inaugurated a new scheme called "Nutrient-sensitive Agriculture Mission" on 04.07.2025
- www.midh.gov.in

# (7) தமிழகத்தில் செயல்படுத்தப்படும் சில முக்கிய தேசிய இயக்கத் திட்டங்கள்

மத்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுத்தும் சில முக்கிய மத்திய ஆதரவு பெற்ற தேசிய இயக்கத் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 7.1 தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் (NMEO): எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் பனை

தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் (NMEO) தமிழ்நாட்டில் இரண்டு கூறுகளாகச் செயல்படுத்தப்படுகிறது: (i) எண்ணெய் வித்துக்கள் கூறு (NMEO–Oilseeds) மற்றும் (ii) எண்ணெய் பனை கூறு (NMEO–Oil Palm).

### 7.1.1 எண்ணெய் பனைக் கூறு/திட்டம் (NMEO–Oil Palm)

- திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு: 2021–22
- நோக்கம்: இந்தியாவின் சமையல் எண்ணெய் உற்பத்தியை உயர்த்துவதற்காக, குறிப்பாக எண்ணெய் பனை பயிரிடும் பரப்பளவை அதிகரித்தல்.
- மொத்த இலக்கு: 2021–2026 காலத்திற்குள் நாடு முழுவதும் 6.50 லட்சம் ஹெக்டேரில் எண்ணெய் பனை பயிரிடல்.
- திட்டக் காலம்: 2021–22 முதல் 2025–26 வரை (5 ஆண்டுகள்)
- நிதிப் பகிர்வு: பொதுப்பிரிவு மாநிலங்களுக்கு- 60 (மையம்): 40 (மாநிலம்); வடகிழக்கு மாநிலங்களுக்கு 90:10.

**தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் உதவித் தொகைகள்**

- விதை / நாற்று விநியோகம்: 100% மானியம், அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ. 8,000 (உள்நாட்டு நாற்றுகளுக்கு).
- காய்க்கும் காலம் வரை தோட்டப் பராமரிப்புக்கு (முதல் 4 ஆண்டுகள்): 50% மானியம் அல்லது ரூ. 800/ஏக்கர்/வருடம் (4 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ. 21,000).
- ஊடுபயிரிடல்: 50% மானியம் அல்லது ரூ. 400/ஏக்கர்/வருடம் (முதல் 4 ஆண்டுகள்).
- நீர்ப்பாசன வசதி (ஆழ்துளைக் கிணறு அமைத்தல்): 50% மானியம் அல்லது ஓர் அலகிற்கு ரூ. 50,000 வரை (பின் ஏற்பு மானியம்).
- ஊடுபயிர்/இடுபொருள்கள் உதவி: செலவின் 50% வரை, அதிகபட்ச மானியம் ரூ. 20,000/ஹெக்டேர்.
- கருவிகள் / இயந்திரங்கள் வாங்குதல்: எண்ணெய் பனை வெட்டும் கருவி, வயர் மெஸ்ஸால் ஆன முகக்கவசம், மின்சார துளையிடும் இயந்திரம், அலுமினிய ஏணி, புல்வெட்டும் கருவி, டிராக்டர் டிராலி போன்றவற்றுக்கு- செலவில் 50% வரை மானியம் (ஒரு கருவிக்கு ரூ. 2,500 முதல் ரூ. 2.0 லட்சம்வரை மானியம்)
- அதிகப் பழக்கூம்புகள் உற்பத்திக்கு ஊக்கத் தொகை (“Flexi Fund”): 5 ஆண்டுகள் வயதான தோட்டங்களில் ஹெக்டேருக்கு 8 டன் பழக்கூம்புகள் (FFB) உற்பத்தி அல்லது அதற்கு மேல் இருந்தால் ஊக்கத் தொகையாக ஒரு டன்னுக்கு ரூ. 1,000.
- சிறிய அளவிலான எண்ணெய் சுத்திகரிப்பு / பதப்படுத்தும் அலகுகள் நிறுவுவதற்கு மானியம் வழங்கப்படுகிறது.

**7.1.2 எண்ணெய் வித்துக்கள் கூறு/ திட்டம் (NMEO–Oilseeds)**

- நோக்கம்: 2022–23-ஆம் ஆண்டில் 39 மில்லியன் டன் இருந்த இந்தியாவின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை 2031-ஆம் ஆண்டுக்குள் 70 மில்லியன் டன்னாக உயர்த்துதல்.
- திட்டக் காலம்: 2024–25 முதல் 2030–31 வரை (7 ஆண்டுகள்).
- நிதிப் பகிர்வு: பொதுவான மாநிலங்களுக்கு 60:40 (மத்திய: மாநில); வடகிழக்கு மாநிலங்களுக்கு 90:10.

**தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் மானியங்கள்**

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: 24 மாவட்டங்கள்.
- பயிர்கள்: நிலக்கடலை, எள், சூரியகாந்தி, மற்றும் ஆமணக்கு.
- உயர் விளைச்சல் தரும் புதிய இரகங்களின் சாகுபடியை ஊக்குவித்தல் மற்றும் விதை விநியோகம்: மானியமாக நிலக்கடலைக்கு ரூ. 11,400/குவிண்டால், எள்ளுக்கு ரூ. 12,000 /குவிண்டால், சூரியகாந்திக்கு ரூ. 43,900/குவிண்டால் (இரகம் வெளியீட்டு தேதியிலிருந்து 5 ஆண்டுக்கு உட்பட்ட புதிய இரகங்களுக்கு மட்டும்).
- வட்டார அளவில் செயல் விளக்கங்கள் நடத்துதல்: நிலக்கடலை – ரூ. 5,600 /ஏக்கர், எள் மற்றும் ஆமணக்கு – ரூ 3,200 /ஏக்கர், சூரியகாந்தி – ரூ. 3,600 /ஏக்கர்.
- விவசாயிகளுக்குப் பயிற்சி: ஒரு பயிற்சிக்கு உதவி ரூ. 30,000 மற்றும் உழவர் பண்ணைப் பள்ளிகள் நடத்துதல் ரூ 35,000/பயிற்சி.
- தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல்: (ஒரு அலகுக்கு ₹ 2000).
- அறுவடைக்கு பிந்தைய செயல்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஆதரவு: 33% மானியம் அல்லது ஓர் அலகிற்கு ரூ. 9.9 லட்சம், இதில் எது குறைவோ அது.
- அரிசி தவிட்டு எண்ணெய் தயாரிப்பு-சுத்திகரிப்பு அலகு நிறுவுதல்: ஓர் அலகிற்கு ரூ. 50 லட்சம்வரை மானியம்.

## 7.2 தேசிய உயிர்ம வேளாண்மை இயக்கம் (NMOF) மற்றும் தேசிய இயற்கை வேளாண்மை இயக்கம் (NMNF)

இவ்விரு திட்டங்களும் இரசாயனங்கள் இல்லாத, சுற்றுச்சூழலுக்கு இணக்கமான வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில், அங்கக இடுபொருட்கள் மற்றும் பாரம்பரிய அறிவைப் பயன்படுத்தி செயல்படுத்தப்படும் உயிர்ம வேளாண்மை மற்றும் இயற்கை வேளாண்மைக்கான மத்திய அரசு ஆதரவு திட்டங்களாகும். இந்தத் திட்டங்கள் இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை மூலம், மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களுக்கு நிதி பகிர்வு விகிதம்: மலைப்பகுதி மற்றும் வடகிழக்கு மாநிலங்களுக்கு 90 (மத்திய அரசு):10 (மாநில அரசு), பிற மாநிலங்களுக்கு 60:40 என்ற விகிதம். உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தின் 2025–26 ஆண்டு நிதிநிலை அறிக்கையில், உயிர்ம வேளாண்மைக்கான பல முக்கிய அறிவிப்புகள் வெளியாயின. அவற்றுள் சில:

மாநிலத்தின் 37 மாவட்டங்களில் உயிர்ம/இயற்கை விவசாயத்திற்கான தொகுப்புகளை உருவாக்குதல், அங்கக இடுபொருள்களுக்கு மானியம், அங்கக

வேளாண்மை மேற்கொள்ளும் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு பூச்சிமருந்து எச்சம் பரிசோதனைக்கு முழு மானியம் வழங்குதல், சான்றிதழ் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்தல், அங்கக விளைபொருட்களின் பரிசோதனைக்காக சென்னை, தூத்துக்குடி, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் அமைத்தல், அங்ககப் பொருட்கள் விற்பனைக்கு ஆதரவு, உயிர்ம சான்றிதழ் வழங்குதல், இயற்கை விவசாயம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இயற்கை விவசாயத்தை முழுமையாகப் பின்பற்றும் விவசாயிகளுக்கு 'நம்மாழ்வார் விருது', பரிசு மற்றும் சான்றிதழ் வழங்குதல் மற்றும் பிற.

### 7.2.1 இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF)

- 2025–26 மற்றும் 2026–27 நிதியாண்டுகளில் 2 ஆண்டுத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- அரசு கட்டிடங்களான 'பூமாலை வளாகம்' போன்ற இடங்களில் அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை விளைபொருட்கள் விற்பனைக்கான சந்தை வசதிகள் உருவாக்கம்.
- ATMA திட்டத்தின் கீழ் 37 மாவட்டங்களில், அங்கக வேளாண்மை மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்.
- 38,600 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவர்களுக்கு உயிர்ம பண்ணைகள் பார்வை செய்யும் அனுபவப் பயணங்கள் ஏற்பாடு செய்தல்.
- இத்திட்டத்தின் மானிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| பொருள்/ செயல்பாடுகள் | மானிய விவரம் |
|---|---|
| நிலம் தயாரித்தல் | சில பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ. 2,500 வரை மானியம் (விவசாயி பங்கு இல்லை) |
| பசுந்தாள் உரப் பயிர்கள் மற்றும் விதை பொருள்களுக்கு | ஹெக்டேருக்கு ரூ. 500 மானியம் |
| உயிரியியல் கட்டுப்பாடு / உயிர் உரம் / VAM (தாவரங்களின் வேர்களில் வாழும் கூட்டு வாழ்வு பூஞ்சை) | சில கூறுகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 1,000 வரை மானியம் |
| உயிர் உரம் / மண்புழு உரம் போன்றவை | பொருளைப் பொறுத்து முழு அல்லது பகுதி மானியமாக ஹெக்டேருக்கு ரூ. 4,000 வரை மானியம் |
| மண்புழு உரம் உற்பத்தி அலகுகள் (1000 ச.மீ. அல்லது 30'x8'x25' அளவிலான அலகு அல்லது ஆண்டுக்கு 25 டன் உற்பத்தித் திறன் கொண்ட அலகு) | ரூ. 50,000 அல்லது 50% மானியம் (இவற்றில் குறைவானது வழங்கப்படும்) |
| தேனீ வளர்ப்பின் மூலம் மகரந்தச் சேர்க்கையை ஊக்குவித்தல் | தேனீக்களுடன் கூடிய தேன்கூடு: 40% மானியம் அல்லது ஒரு பெட்டிக்கு ரூ. 1,600; தேன் பிழிந்தெடுக்கும் கருவி: 40% மானியம் அல்லது ஓர் இயந்திரத்துக்கு ரூ. 8,000 (அதிகபட்சம் 1 பயனாளருக்கு) |

### 7.2.2. பாரம்பரிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (PKVY)

இந்த மத்திய ஆதரவு திட்டம், தமிழ்நாட்டில் 2023–24 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கம், பங்கேற்பு உத்தரவாத சான்றிதழ் வழங்கும் முறையின்மூலம் (PGS), விவசாயிகள், கிராமப்புற இளைஞர்கள், நுகர்வோர் மற்றும் வணிகர்கள் ஆகியோரிடையே உயிர்ம வேளாண்மையை ஊக்குவித்தல் ஆகும்.

**இத்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள்**

- தொகுப்பு உருவாக்கம் (ஒவ்வொரு தொகுப்பும் 20 ஹெக்டேர் பரப்பளவு மற்றும் 20 விவசாயிகளைக் கொண்டதாக இருக்கும்).
- திறன் மேம்பாட்டு பயிற்சிகள் (இயற்கை வேளாண்மை பண்ணைகளை பார்வையிடக் கண்டுணர் (அனுபவ) சுற்றுலா உட்பட்ட பயிற்சிகள்).
- சான்றளிப்பு பெறுவதற்கான ஊக்கத் தொகை, விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்படும்: ஒரு விவசாயிக்கு வருடத்திற்கு ஏக்கருக்கு ரூ. 800 என மூன்று ஆண்டுகள் வரை.
- மண்டலக் கழகம் மூலம் PGS சான்றிதழ் வழங்கல்: ஒரு அங்கக பண்ணை விவசாயி பிற அங்கக விவசாயி பண்ணையை பார்வையிட்டுப் பங்கேற்பு உத்தரவாத முறையில் சான்றிதழ் வழங்கப்படும்.
- 20 அங்கக தொகுப்புகளில் உள்ள பயனாளர்களுக்கும் வழங்கப்படும் பங்கேற்பு உத்தரவாத சான்றிதழ்களின் (C1 & C2) பயன்கள்: இந்தச் சான்றிதழ் உள்நாட்டு சந்தையில் அவர்களின் விளைபொருட்களை கூடுதல் விலையில் விற்க உதவியாக இருக்கும்.
- உயிர்ம விளை பொருட்களுக்கு மதிப்பு கூட்டல், பிராண்ட் உருவாக்கம், விற்பனை மையங்கள் உருவாக்கம் (பொது இடங்களில் உள்ள பெட்டிக்கடைகள் மற்றும் உழவர் சந்தைகள் போன்ற இடங்களில் தினசரி விற்பனைக்கு வசதி).
- வாணிபக் கண்காட்சிகள், மண்டல கண்காட்சிகள், உள்ளூர் விளம்பரங்கள் மூலம் திட்டப் பயனாளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- *PGS India பச்சை இலச்சினை*: இயல்பான விவசாய முறையிலிருந்து அங்கக வேளாண்மைக்கு மாறும் 'மாற்றுக்காலத்தில்' (முதல் 3 ஆண்டுகள்) உள்ள பண்ணைகள்/விளைபொருட்கள் இந்த லோகோவை பயன்படுத்தலாம்.
- *PGS India ஆர்கானிக் இலச்சினை*: முழுமையாக உயிர்ம வேளாண்மைக்கு மாறிய பண்ணைகள்/விளைபொருட்கள் இந்த லோகோவை பயன்படுத்தலாம்.

### 7.2.3. அங்கக வேளாண்மை ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் அங்ககச் சான்றிதழ்

**விளக்கம்:** அங்கக வேளாண்மை ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ், அங்கக வேளாண்மை முறைகளை பின்பற்றும் விவசாயிகளுக்கு அங்கக சான்றிதழ் வழங்கப்படுகிறது. சான்றிதழ் செயல்முறை பின்வரும் படிகள் மூலம் மேற்கொள்ளப் படுகிறது:

(i) விண்ணப்பங்களைப் பெறுதல் மற்றும் ஆய்வு செய்தல்
(ii) கள ஆய்வுகள் மற்றும்
(iii) அங்ககச் சான்றிதழ் வழங்குதல்

அங்கக சாகுபடியை மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு விவசாயியும் இந்த சான்றிதழ் திட்டத்தின் கீழ் பதிவு செய்யலாம். இந்தத் திட்டத்தின்கீழ் பதிவு செய்த விண்ணப்பதாரர்களால் சாகுபடி செய்யப்படும் அனைத்து பயிர்களும் அங்கக சான்றிதழைப் பெற தகுதியுடையவை.

*பின்வரும் வகைகளுக்கு அங்ககச் சான்றிதழ் வழங்கப்படுகிறது*

- அங்ககப் பயிர் உற்பத்தி
- அங்கக உணவு பதப்படுத்துதல்
- அங்கக வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள்

*பதிவுக் கட்டணம்*

- தனிநபர் சிறு, குறு விவசாயிகள் : ரூ. 2,700
- பிற தனிப்பட்ட விவசாயிகள் : ரூ. 3,200
- குழுக்கள்/ தொகுப்புப் பதிவு : ரூ. 7,200
- வணிக நிறுவனங்கள் : ரூ. 9,400

*விண்ணப்பம் / ஒப்புதல் செயல்முறை*

- பெறப்பட்ட விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரருக்கு அதற்கேற்ப தகவல் தெரிவிக்கப்படும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து 180 நாட்களுக்குள் தற்காலிக சான்றிதழ் (ஒப்புதல்) வழங்கப்படும்.

*செயல்படுத்துதல் / தொடர்பு அதிகாரி*

- இயக்குநர், விதைச் சான்றிதழ் மற்றும் அங்ககச் சான்றிதழ் துறை, திரு. வி. க. தொழில்துறை எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032. மின்னஞ்சல்: tnocd2024@gmail.com.

## 7.3 ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் (NFM)

**திட்டம் தொடக்கம்:** 2025 ஜூலை மாதத்தில் புதியதோர் திட்டமாக இது அறிமுகப்படுத்தப்பட்டது.

**நோக்கம்:** தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து மிகுந்த பயிர்களின் (பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள்) உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல் மற்றும் சராசரி மக்களின் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

**நிதி ஆதாரம்:** மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து ரூ. 125 கோடி நிதியுடன் இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன.

**திட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள்**

- காய்கறி விதைத்தொகுப்பு விநியோகம்: 6 வகைக் காய்கறிகள்— தக்காளி, கத்திரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை மற்றும் கீரை வகைகள்— 15 லட்சம் குடும்பங்களுக்கு 75% மானியத்தில் வழங்கப்படும்.
- பழமரக் கன்றுகள் தொகுப்பு விநியோகம்: விரைவில் விளைச்சல் தரும் பப்பாளி, கொய்யா மற்றும் எலுமிச்சை ஆகிய 3 வகைப் பழமரங்கள்— 9 லட்சம் குடும்பங்களுக்கு 75% மானியத்தில் வழங்கப்படும்.
- பந்தல் அமைப்புகள்: சுமார் 1,200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும்.
- சென்னையை சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில், தக்காளி, வெங்காயம், முருங்கை, கத்திரி, பச்சை மிளகாய், வெண்டை மற்றும் கீரை போன்ற காய்கறி பயிர்களின் பரப்பளவை அதிகரித்தல்.

- துவரை சாகுபடியை— தனிப் பயிராகவும், வயலோரப் பயிராகவும் அல்லது இடைப்பயிராகவும்- சுமார் 80,000 ஏக்கரில் ஊக்குவித்தல்.
- பருப்பு விதைத் தொகுப்பு (துவரை, காராமணி போன்றவை): 75% மானியத்தில் வழங்குதல்.
- கிராமப்புறங்களில் புதிய 5 தொழில் முனைவோர்கள் காளான் உற்பத்திப் பண்ணைகளை அமைப்பதற்கு உதவி வழங்குதல்.
- சுமார் 4,000 நடமாடும் விற்பனை வண்டிகளை வாங்குவதற்கு உதவித்தொகை வழங்குதல்.

## 7.4 தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)

- இத்திட்டம், மத்திய அரசின் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின் (MIDH) ஒரு துணைத் திட்டமாகும்.
- தமிழகத்தில் இது 2014–15-ஆம் ஆண்டிலிருந்து, 26 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.
- நிதி பகிர்வு விகிதம்: மத்திய, மாநில அரசுகள் முறையே 60: 40.
- இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் முக்கிய செயல்பாடுகள்:

    1. காளான் உற்பத்தி பண்ணைகள் அமைத்தல்.
    2. நீர் சேமிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல்.
    3. பாதுகாப்பு சாகுபடி முறைகளை ஊக்குவித்தல்.
    4. அறுவடைப் பிந்தைய வசதிகளை அமைத்தல்.
    5. தேனீ வளர்ப்பின் மூலம் மகரந்தச் சேர்க்கை ஊக்குவித்தல்.
    6. மூப்பு அடைந்த / விளைச்சல் குன்றிய பழத் தோட்டங்களைப் புதுப்பித்தல்.

## 7.5 தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் (TNMM)

- இத்திட்டம் 2023–24 முதல் 2027–28 வரை ஐந்து ஆண்டு திட்டமாக, இரண்டு சிறுதானிய மண்டலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகள் ஒருங்கிணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன.
- இலக்கு மாவட்டங்கள்: தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் (RKVY திட்டத்தின் கீழ்); மற்ற மாவட்டங்கள் (FNSS திட்டத்தின் கீழ்).

**மானியம் / உதவி விவரங்கள்**

- கோடை உழவு (மழை சார்ந்த பகுதிகளில்): 50% மானியம் அல்லது ஏக்கருக்கு ரூ. 800; ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் ரூ. 2,000 வரை.
- சிறுதானிய விவசாயிகள் குழு (தொகுப்பு) அமைத்தல்: குழுவிற்கு ரூ. 1,000.
- சிறுதானிய விவசாயிகள் குழுவிற்கு பயிற்சி: ஒரு பயிற்சிக்கு ரூ. 10,000.
- சிறுதானிய பயிர்கள் திடல் விளக்கம்: ஏக்கருக்கு ரூ. 2,400 (சோளம், கேழ்வரகு, கம்பு, சாமை, குதிரைவாலி, தினை, வரகு போன்ற பயிர்கள்).
- சிறுதானியப் பயிர்களில் சான்று விதை உற்பத்தியை ஊக்குவித்தல்: குவின்டாலுக்கு ரூ. 3,000 மானியம்.
- குறுந் தானியங்கள் பயிரிடல்: ஏக்கருக்கு ரூ. 1,600 பின் ஏற்பு மானியமாக.

- சிறுதானிய சிறுதளை வழங்குதல்: கிட் ஒன்றுக்கு ரூ. 300 (100% மானியம்).
- அதிக நீர் தேவையுள்ள பயிர்களுக்கு மாற்றாகச் சிறுதானியங்கள் பயிரிடுதல்: ஏக்கருக்கு ரூ. 1,250.
- இத்திட்டத்தின் கீழ் 2024–25-ம் ஆண்டில் 50 முதற்கட்ட தானியங்கள் பதப்படுத்தும் மையங்கள், 40 தானியங்கள் பதப்படுத்தும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் 2 முதற்கட்ட தானியங்கள் பதப்படுத்தும் மையங்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகின்றது.

## 7.6 தேசிய மூங்கில் இயக்கம் (NBM)

- நிதிப் பகிர்வு விகிதம்: மத்திய, மாநில அரசுகள் முறையே 60 : 40.
- காடு சாரா, அரசு/ஊராட்சி நிலங்களில் மூங்கில் வளர்ப்பு பரப்பளவை விரிவாக்குதல்: ஹெக்டேருக்கு ரூ. 1,20,000 வரை, 100% மானியம் (2 ஆண்டுகளுக்கு ஒன்றாக).
- காடு சாரா, தனியார் நிலங்களில் மூங்கில் வளர்ப்பு பரப்பளவை விரிவாக்குதல்: ஹெக்டேருக்கு ரூ. 60,000 வரை 50% மானியம் (2 ஆண்டுகள் ஒன்றாகக் கணக்கிட்டு வழங்கப்படும்).

## 7.7 பனை மேம்பாட்டு இயக்கம் (PDM)

- 2021–22ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் இந்த இயக்கத்தின் நோக்கம் பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், பனைப் பொருட்களில் மதிப்பு கூட்டலை ஊக்குவித்தல், மற்றும் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- விதைகள் வழங்குதல்: அரசு சாரா அமைப்புகள் / ஊராட்சி மன்றங்கள் வழியாகப் பொது / சமூக நிலங்களில் பனை விதைகளை விதைத்து, வளர்க்க 50% மானியத்தில் 100 பனை விதைகள் வழங்கப்படும் (தமிழ்நாடு பனைப் பொருட்கள் மேம்பாட்டு வாரியம் மூலம்).
- நாற்றுகள் வழங்குதல்: அரசு சாரா அமைப்புகள் / ஊராட்சி மன்றங்கள் வழியாகப் பொது / சமூக நிலங்களில் பனை நாற்றுகளை நட்டு, வளர்க்க 100% மானியத்தில் 30 பனை நாற்றுகள் வழங்கப்படும் (இவை மாநில தோட்டக்கலை நாற்றங்கால்களில் தயாரிக்கப்பட்டவை).
- பனைப் பொருட்களில் மதிப்பூட்டல் மேற்கொள்ளும் தொழில் பூங்காக்கள் அமைப்பதற்கான உதவி: ஓர் அலகிற்கு ரூ. 50,000 பின் ஏற்பு மானியமாக வழங்கப்படும்.
- பனை ஆராய்ச்சி நிலையம்: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் கிள்ளிகுளம் பகுதியில் பனை ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

## 7.8 MIDH-இன் தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)

**அறிமுகம்:** ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம் (MIDH) என்பது 2014 முதல் மத்திய-மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் ஒரு பெருந்திட்டமாகும். இதன் நோக்கம், தோட்டக்கலைத் துறையின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். இத்திட்டம் பழங்கள், காய்கறிகள், கிழங்குகள், காளான், மலர்கள், நறுமணப் பயிர்கள், வாசனைப் பயிர்கள், தென்னை, முந்திரி, கோகோ

மற்றும் மூங்கில் ஆகிய பயிர்களை உள்ளடக்கியது. தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) என்பது 2005–06 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு ஆதரவுடன் மாநில தோட்டக்கலை இயக்கங்களால் (SHM) 18 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் மற்றொரு திட்டமாகும். 2014-ஆம் ஆண்டிலிருந்து NHM இயக்கம் MIDH திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு, MIDH-ன் துணைத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**நிதிப் பகிர்வு விகிதம்:** புதிய MIDH திட்டம் 85:15 என்ற (மத்திய : மாநில) நிதிப் பகிர்வுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட முந்தைய NHM திட்டங்களின் நிதிப் பகிர்வு 60:40 ஆகும்.

**திட்டச் செயலாக்க முகமை:** தேசிய தோட்டக்கலை வாரியம் (NHB) ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கத்தின் (MIDH) கீழ் அனைத்து மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. தமிழ்நாட்டில், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டமானது தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு நிறுவனம் (TANHODA) மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்த TANHODA மாவட்ட அளவிலான தோட்டக்கலை இயக்கக் குழுக்களுடன் இணைந்து ஆண்டுதோறும் ஆண்டு செயல் திட்டங்களை வகுத்து, NHM திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**பங்கேற்கும் மாவட்டங்கள்:** இத்திட்டம் 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது, அவை: கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, கடலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சி, திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம், நீலகிரி, பெரம்பலூர், வேலூர், புதுக்கோட்டை, விழுப்புரம், கன்யாகுமரி, மற்றும் தஞ்சாவூர்.

**முக்கியப் பயிர்கள்:** மா, நெல்லி, வாழை, முந்திரி, கோகோ, மிளகாய், மஞ்சள், வாசனை பயிர்கள் மற்றும் மலர்கள். இவை அனைத்தும் தொகுப்பு அடிப்படையில் ஊக்குவிக்கப்படுகின்றன.

**முக்கியக் கூறுகள் மற்றும் செயல்பாடுகள்**

**1. நாற்றங்கால்கள் விரிவாக்கம் மற்றும் நடவுப் பொருட்கள் உற்பத்தி**

- பெரிய நாற்றங்கால்களுக்கு: பொதுப் பிரிவில் உள்ளவர்களுக்கு 100% மானியம் (ரூ. 30 லட்சம்/ஹெக்டேர்), தனிநபர் விவசாயிக்கு 40% பின் ஏற்பு மானியம் (ரூ. 12 லட்சம்/ஹெக்டேர்).
- சிறிய நாற்றங்கால்களுக்கு: பொதுப் பிரிவினருக்கு 100% மானியம் (ரூ. 20 லட்சம்/ஹெக்டேர்) தனிநபர் விவசாயிக்கு 50% பின் ஏற்பு மானியம் (ரூ. 10 லட்சம்/ஹெக்டேர்);
- நாற்றங்கால்களின் உள்கட்டமைப்பு மேம்பாடு: பொதுப் பிரிவினருக்கு 100% மானியம் (ரூ. 4 லட்சம்/ஹெக்டேர்), தனிநபர் விவசாயிக்கு 50% மானியம் (ரூ. 2 லட்சம்/ஹெக்டேர்).
- காய்கறி விதைத் தொகுப்பு மற்றும் பழமர நாற்று (கன்னுகள்) உற்பத்தி: பொதுப் பிரிவில் 100% மானியம் (ரூ. 50,000/ஹெக்டேர்), தனிநபர் விவசாயிக்கு 35% மானியம் (ரூ. 17,500/ஹெக்டேர்).

**2. பரப்பளவு விரிவாக்கம்**

- உயர் மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்கள் நடவு: வீரிய ஒட்டு காய்கறிப் பயிர்கள் நடவுக்கு 40% மானியம் அல்லது ரூ. 24,000/ஹெக்டேர் (அதிகபட்சம் 2 ஹெக்டேர்).
- வெங்காயம் மற்றும் பூண்டு நடவு: ரூ. 20,000/ஹெக்டேர்.

- மா, கொய்யா அடர் நடவுக்கு: 40% மானியம் அல்லது ரூ. 48,000/ஹெக்டேர்.
- திசு வளர்ப்பு வாழைக் கன்றுகள்: 40% மானியம் அல்லது ரூ. 42,000/ஹெக்டேர்.
- இது போன்று, பிற பயிர்களுக்கும் உதவி/ மானியம் வழங்கப்படுகிறது.

**3. காளான் வளர்ப்பு ஊக்குவிப்பு**

- பொதுப் பிரிவில் உள்ளவர்களுக்கு 100% மானியம்.
- தனிநபர் விவசாயிக்கு 40% மானியம் (அதிகபட்சம் ரூ. 12 லட்சம் கடன் + பின் ஏற்பு மானியம்).
- விதைக் காளான் (ஸ்பான்) உற்பத்தி மையங்கள் அமைக்க: அதிகபட்சம் ரூ. 8 லட்சம் கடன் + பின் ஏற்பு மானியம்.

**4. பாதுகாக்கப்பட்ட பயிர் சாகுபடி**

- பசுமைக்குடில், நிழல் வலைக் கூடம், பிளாஸ்டிக் நிலப்போர்வை (மல்சிங்) அமைக்க: சதுர வடிவ பசுமைக்குடில் அமைப்பதற்கு 50% மானியம், அதிகபட்சம் ஒரு விவசாயிக்கு 2,500 சதுர மீட்டர் (ரூ. 500–600 / ச.மீட்டருக்கு).
- செவ்வக அல்லது உருளை வடிவ நிழல் வலைக் கூடம் அமைக்க: 50% மானியம், அதிகபட்சம் ஒரு விவசாயிக்கு 2,500 ச. மீ.(ரூ. 355 / ச.மீ.).
- பறவைகளைத் தடுக்கும் பாதுகாப்பு வலை அமைக்க: 50% மானியம், அதிகபட்சம் ஒரு விவசாயிக்கு 10,000 ச. மீ. (ரூ. 25 /ச.மீ.).
- பாலித்தீன் சீட்டால் ஆன உள்புகக்கூடிய பயிர் சாகுபடி டன்னல் (குடில்) அமைக்க: 50% மானியம், அதிகபட்சம் ஒரு விவசாயிக்கு 800 ச. மீ. அல்லது 3 அலகுகள் (ரூ. 360 / ச.மீ.).

**5. அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை:** சிப்பம் கட்டும் (பேக்கிங்) மையங்கள், குறைந்த செலவு குளிர் சேமிப்பு கிடங்கு, முன்-குளிரூட்டும் அறைகள் அமைக்க நிதியுதவி வழங்கபடுகிறது. எ.கா. 2019–20ல் தமிழ்நாட்டில் 691 பாக்கிங் மையங்கள், 976 வெங்காய சேமிப்புக் கிடங்குகள் நிறுவப்பட்டுள்ளன.

**6. பழமையான பழமரத் தோட்டங்களைப் புதுப்பித்தல்:** மா, கொய்யா, முந்திரி, ஆரஞ்சு, கறிவேப்பிலை, சப்போட்டா, நெல்லிக்காய், பலாப்பழம் போன்ற தோட்டங்களைப் புதுப்பிக்க: 40% மானியம் அல்லது ரூ. 4,000/ஹெக்டேர் (அதிகபட்சம் 2 ஹெக்டேர்).

7. **நீர்வள மேம்பாடு:** சுமார் 20 x 20 x 3 மீட்டர் நீர்த் தொட்டி அல்லது கிணறு தோண்டுதல்– ரூ. 125/ச. மீ., அதிகபட்ச மானியம் ஒரு விவசாயிக்கு ரூ. 75,000.

**8. சிறப்புத் திறன் (தகைசால்) மையங்கள்:** மேம்பட்ட தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தத் தகைசால் மையங்கள் உருவாக்கப்படுகிறது. உ.ம்: மலர்களுக்கான தகைசால் மையங்கள்– தள்ளை (கிருஷ்ணகிரி), காய்கறிகளுக்கான தகைசால் மையங்கள்– ரெட்டியார்சத்திரம் (திண்டுக்கல்).

**9. தொகுப்பு அணுகுமுறை:** மலர்ப் பயிர்கள், நறுமணப் பயிர்களுக்குத் தொகுப்பு அடிப்படையில் நிதியுதவி அளித்து ஊக்குவிக்கப்படுகின்றது.

**விண்ணப்பிக்கும் முறை**

1) கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு மாநில வலைதளம் அல்லது மொபைல் செயலியில் தங்களை 'விவசாயி' எனப் பதிவு செய்ய வேண்டும். இதனால், தங்களுக்கு கிடைக்கும் நேரடி பணப் பரிமாற்றம் மற்றும் நிதி இணைப்புகள் செயல்பாட்டிற்கு வரும்.

- உழவன் மொபைல் ஆப் / வேளாண்மை இணைய தளம் (tnagrisnet.tn.gov.in)
- AgriStack / tnfr.agristack (AgriStack பதிவு தேவைப்படும் திட்டங்களாக இருந்தால்)

2) அருகிலுள்ள வேளாண்மை அலுவலகத்தை அணுகி, வட்டார / உதவி வேளாண்மை அலுவலர் /வேளாண்மை துணை இயக்குநர் அல்லது மாவட்ட தோட்டக்கலை அலுவலர் மூலம் விண்ணப்பிக்கலாம் (பெரும்பாலான திட்டங்களுக்கு வட்டார அலுவலர்கள் மூலம் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன).

3) தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் (ஆதார் அட்டை, நில உடமைச் சான்று, மண் பரிசோதனை, வங்கி புத்தகம், ரசீது முதலியன). குழு அடிப்படையிலான திட்டங்களுக்கு (உ.ம். இயற்கை/அங்கக விவசாயம்), விவசாயிகள் குழுவில் சேர்ந்து, குழுவாக விண்ணப்பிக்க வேண்டும். உங்கள் குழுத் தலைவர் அல்லது FPO (உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்) குழுவின் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பார்.

4) கள ஆய்வு: துறை அதிகாரிகள் (உதவி வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர்) நேரடி ஆய்வு / சரிபார்ப்பு மேற்கொள்வார்கள்.

5) அனுமதி மற்றும் செயல்படுத்தல்: சரிபார்ப்பு முடிந்த பின், வேலை அல்லது பொருட்களுக்கான ஒப்புதல் வழங்கப்படும். சில மூலதனப் பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் மூலம் வழங்கப்படுகின்றன. நீங்கள் ரசீதுகளைச் சமர்ப்பித்த பின், பின் ஏற்பு மானியம் வழங்கப்படும்.

5) மானியம் வழங்கும் முறை: பெரும்பாலும் உதவிகள் பின் ஏற்பு மானியமாக (செலவினங்களைத் திருப்பி அளித்தல்) வழங்கப்படும்; அரிதாக, சில நேரங்களில் முன்பணம் வழங்கப்படலாம்.

**ஆதாரங்கள்:**


- DAC 2014. Mission for Integrated Development of Horticulture. Operational Guidelines. Department of Agriculture & Cooperation, Ministry of Agriculture, New Delhi
- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for Agriculture and Farmers' Welfare. Government of Tamil Nadu.
- GoT. 2025. Citizen Charter (*மக்கள் சாசனம்*). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- https://agritech.tnau.ac.in/horticulture/horti_schemes_nhm.html.
- https://cmhelpline.tnega.org/
- https://cms.tn.gov.in/cms_migrated/document/docfiles/agri_e_pn_2020_21.pdf?
- https://nmeo.dac.gov.in/
- https://perambalur.nic.in/ Hon'ble Chief Minister of Tamil Nadu inaugurated a new scheme called "Nutrient-sensitive Agriculture Mission" on 04.07.2025
- www.midh.gov.in

## (8) Integrated Coconut Development Scheme (ICDS)

The Scheme operate as a sub-scheme under the Mission for Integrated Development of Horticulture (MIDH). The Coconut Development Board (CDB), Ministry of Agriculture and Farmers' welfare, Government of India. In Tamil Nadu, this scheme is implemented through the State Horticulture Department and the Coconut Development Board via the State Nodal arrangements and District Horticulture Offices.

**Activities, Subsidy and Assistance**

- *Seedling production and distribution*: Saplings of Tall, Tall x Dwarf and Dwarf x Tall will be distributed as per the farmer's preference at an outlay of ₹ 4.8 crore. Replanting and rejuvenation of senile, disease-affected and unproductive plantations- subsidy of ₹ 45 per sapling, a maximum of 100 saplings will be given per hectare.
- *Replanting and Rejuvenation*: Removal of old, unproductive, diseased trees – assistance of ₹ 1000 per tree, maximum up to 32,000 per hectare.
- *Productivity improvement*: Adoption of Integrated farming practice – assistance of ₹ 8750 per year per hectare for 2 years (₹ 17500).
- *Demo*: Demonstration on Integrated farming practice to improve productivity– assistance of ₹ 17500 per year for 1 ha.
- *Area Expansion*: Subsidy of ₹ 56,000 per hectare will be given.
- *Promoting multi-tier cropping* with banana, nutmeg and pepper in Coconut plantations to generate additional income throughout the year at an outlay of ₹ 4.8 crore.
- *Management of Rugose Spiralling Whitefly* infestation, including mass multiplication of the Predator A*pertochrysa* and *Encarsia* species at Aliyar Nagar, Paiyur, Veppankulam and Thirupathisaram Research Stations - ₹ 4.46 crores.
- *Processing/value addition***:** The CDB provides back-ended financial assistance as a percentage of project cost (typical earlier norms: 25% of project cost up to ₹50 lakh for SC/ST/Women entrepreneurs).

**Eligibility:** Small & marginal coconut farmers, individual farmers, farmer groups, entrepreneurs for processing units, nursery operators for seedling support, and Coconut Producer Societies (CPS) may apply for the subsidy.

**How to apply?**

1. Approach the District Horticulture / Agriculture Office or the State Horticulture Mission Office, or the nearest Coconut Development Board Regional Office.
2. Fill the prescribed application form (component-wise) and attach land proof, identity, nursery certificate (if seedling component), and estimates for processing units (if applying for industry support).
3. Technical verification/field inspection by the implementing officer will follow.
4. Release of assistance as per norms (instalments/reimbursement).
5. Beneficiaries must implement an integrated package (spacing, inputs, IPM, irrigation) and submit utilisation certificates whereever required.

**References:** See under Tamil version

## (8) ஒருங்கிணைந்த தென்னை மேம்பாட்டுத் திட்டம் (ICDS)

இந்தத் திட்டம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கத்தின் (MIDH) துணைத் திட்டமாகும். இதற்கு, இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் உள்ள தென்னை வளர்ச்சி வாரியம் (CDB) நிதியுதவி அளிக்கின்றது. தமிழ்நாட்டில், இத்திட்டம் மாநில தோட்டக்கலைத் துறை மற்றும் தென்னை வளர்ச்சி வாரியம் மூலமாக, மாநில திட்டச் செயலாக்க முகமைகள் மற்றும் மாவட்ட தோட்டக்கலை அலுவலகங்கள் வழியாக செயல்படுத்தப்படுகிறது.

**செயல்பாடுகள், மானியம் மற்றும் உதவி**

- *நாற்று உற்பத்தி மற்றும் விநியோகம்:* நெட்டை, நெட்டை x குட்டை மற்றும் குட்டை x நெட்டை கலப்பின தென்னை நாற்றுகளை விவசாயிகளின் விருப்பப்படி விநியோகிக்க ரூ. 4.8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பழைய, நோய் பாதித்த மற்றும் உற்பத்தி குறைந்த தென்னை தோப்புகளில் மீண்டும் கன்றுகளை நடுதல் மற்றும் புத்துயிர் பெற செய்தல்- ஒரு மரத்திற்கு ரூ. 45 மானியம், அதிகபட்சம் ஒரு ஹெக்டேருக்கு 100 மரக்கன்றுகள் வழங்கப்படும்.
- *மறு நடவு மற்றும் புதுப்பிதல்:* பழைய, உற்பத்தி குன்றிய, நோய்வாய்ப்பட்ட மரங்களை அகற்றுதல்- ஒரு மரத்திற்கு ரூ. 1000 உதவி, அதிகபட்சம் ஒரு ஹெக்டேருக்கு 32,000 வரை.
- *உற்பத்தித்திறன் மேம்பாடு:* ஒருங்கிணைந்த பண்ணை முறையை மேற்கொள்ள ஒரு ஹெக்டேருக்கு ஆண்டுக்கு உதவி ரூ. 8,750, 2 ஆண்டுகளுக்கு உதவி (ரூ. 17500) வழங்கப்படும்.
- *செயல் விளக்கம்:* உற்பத்தித்திறனை மேம்படுத்த ஒருங்கிணைந்த பண்ணை முறை செயல் விளக்கம்- 1 ஹெக்டேருக்கு ஆண்டுக்கு ரூ. 17,500 உதவி வழங்கப்படும்.
- *பரப்பளவு விரிவாக்கம்:* ஒரு ஹெக்டேருக்கு ரூ. 56,000 மானியம் வழங்கப்படும்.
- *ஊடுபயிர்:* தென்னை தோட்டங்களில் வாழை, ஜாதிக்காய் மற்றும் மிளகு ஆகிய பயிர்களை நட்டுப் பல அடுக்கு பயிர் சாகுபடியை ஊக்குவித்து, ஆண்டு முழுவதும் கூடுதல் வருமானத்தை ஈட்ட ரூ 4.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- *உயிரி பூச்சி கட்டுப்பாடு*: தென்னையைத் தாக்கும் ரூகோஸ் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த ஆலியார் நகர், பையூர், வேப்பங்குளம் மற்றும் திருப்பதிசாரம் தென்னை ஆராய்ச்சி நிலையங்களில் இறை விழுங்கிகளான *அபெர்டோகிரைசா* மற்றும் *என்கார்சியா* பூச்சிகளை பெருமளவில் இனப்பெருக்கம் செய்தல் உள்ளிட்ட செயல்களுக்காக ரூ. 4.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- *பதப்படுத்துதல்/ மதிப்புக் கூட்டல்*: ஆதி திராவிடர்/ பழங்குடியினர்/ பெண் தொழில்முனைவோருக்குத் திட்ட செலவில் 25% வரை (ரூ. 50 லட்சம் வரை) தென்னை வளர்ச்சி வாரியம் பின் ஏற்பு மானியமாக வழங்குகிறது.

**தகுதிகள்:** சிறு மற்றும் குறு தென்னை விவசாயிகள், தனிநபர் விவசாயிகள், விவசாய குழுக்கள், தென்னை பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்முனைவோர்(கள்), தென்னை நாற்று உற்பத்தியாளர்கள் மற்றும் தென்னை உற்பத்தியாளர் சங்கங்கள் இத்திட்டத்தின் மானியத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. மாவட்ட தோட்டக்கலை/வேளாண்மை அலுவலகம் அல்லது மாநில தோட்டக்கலை இயக்கம் அலுவலகம் அல்லது அருகிலுள்ள தென்னை வளர்ச்சி வாரிய மண்டல அலுவலகத்தை அணுகவும்.

2. பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை (கூறு வாரியாக) நிரப்பி நில உடமைச் சான்று, அடையாள அட்டை, நாற்றங்கால் சான்றிதழ் (நாற்று உற்பத்திக் கூறுக்கு விண்ணப்பித்தால்), பதப்படுத்தும்/மதிப்புக் கூட்டும் அலகுகளுக்கான மதிப்பீடுகள் (தொழில் ஆதரவுக்கு விண்ணப்பித்தால்) போன்ற தேவையான ஆவணங்களை இணைக்கவும்.

3. திட்டச் செயலாக்க அதிகாரியால் தொழில்நுட்ப சரிபார்ப்பு/கள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

4. விதிமுறைகளின்படி உதவி/மானியம் விடுவிக்கப்படும் (தவணை முறையில் /பின் ஏற்பு மானியமாக).

5. பயனாளிகள் ஒருங்கிணைந்த சாகுபடி முறையை (பயிர் இடைவெளி, இடுபொருட்கள், ஒருங்கிணைந்த பூச்சி/நோய்க் கட்டுப்பாடு, நீர்ப்பாசன முறைகள்) பின்பற்ற வேண்டும். தேவைப்படும் பட்சத்தில், நிதி பயன்பாட்டுச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

**ஆதாரங்கள்:**


- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- Kumar, P., Gowda, H. and Kurian, P.P. 2025. Schemes of Coconut Development Board – Operational Guidelines. Coconut Development Board, Ministry of Agriculture & Farmers Welfare, Government of India. https://coconutboard.gov.in /docs /operational-guidelines.pdf

## (9) Schemes Related to Agriculture Mechanisation in Tamil Nadu

### 9.1 Sub-Mission on Agricultural Mechanization (SMAM)

**About SMAM:** The Sub-Mission on Agricultural Mechanisation (SMAM) is a Central Government initiative to promote the use of farm machinery by providing subsidies for purchase, establishing rental (custom hiring) centres, and increasing awareness. The SMAM is implemented as a component of RKVY.

**Funding source:** The SMAM scheme has both centrally sponsored and central sector scheme components. In the centrally sponsored scheme components, the Government of India funds 60% of the cost, and the states' share is 40% in all States except North-eastern and Himalayan States and Uts.

**Implements provided**: Agricultural machinery and implements such as tractors, rotavators, power tillers, paddy transplanters, seed cum fertiliser drills, power weeder, brush cutter, chaff cutter, crop reaper, multi crop thresher, coconut frond chopper, baler, solar driers and value addition machineries.

**Subsidy**: 50% of the cost of machinery for SC/ST farmers, small and marginal farmers and women farmers and 40% for other beneficiary farmers. An additional subsidy from State Fund @ 20% is provided over and above the existing subsidy of 50% for SC/ST farmers, thus making the total subsidy to 70%. For small and marginal farmers of General category, an additional 10% subsidy is given from the State fund for the purchase of paddy transplanters and power weeders (so, maximum subsidy is 60%).

In case of purchase and distribution of value addition machineries for value addition of various crop products, the subsidy ranges from 40 to 70%.

**Custom hiring Centres:** Under this scheme, custom hiring Centres for machinery with high-performance, high-value agricultural machinery and equipment, such as tractors, harvesters and drones, are promoted. Subsidy @ 40% is provided to Cooperative Societies of farmers, SHG, Registered Farmers Societies, Rural Entrepreneurs and FPO for the establishment of Block-level Custom Hiring Centres (applicable for all districts except Chennai). Higher subsidy, i.e., 80% for these groups for the establishment of village-level custom hiring centres/ maximum ₹ 8 lakh per Centre (applicable to all districts except Chennai, Tiruvannamalai and Villupuram).

**Registration in Mobile App**: The Agricultural Engineering Department is facilitating farmers to hire Farm Machinery and implements from private persons to carry out their agricultural works timely manner without any hindrance. The details of private agricultural machinery owners are uploaded in the Uzhavar App. The Department is assisting to create separate Mobile App for hiring private farm machinery/implements.

Farmers who availed subsidy assistance for the purchase of high-cost agricultural machinery, including Tractors, must register in the Mobile App developed by the Agricultural Engineering Department (e-vaadagai in Uzhavar App) for letting private agricultural machinery on a hire basis, and they have to hire out the machinery for at least 100 days to the needy farmers.

**Contact**: Assistant Executive Engineer (AE) in the concerned project districts for getting details of the scheme. Application may be made through the Uzhavar mobile app.

## 9.2 End to End Mechanization

**Purpose**: Demonstration of 'End to End Mechanisation' in crops like paddy, maize, banana, groundnut and black gram is being taken up in farmers' fields.

**Scheme Area**: This scheme is implemented in all districts of TN except Chennai – Target is 1550 acres during 2025-26.

**Subsidy:** One-acre field of one agri-preneur will be chosen to demonstrate the scheme. 100% subsidy will be given to the farmer for mechanisation-related works. However, the farmer will bear the cost of seed, fertilisers and pesticides.

## 9.3 e-Vaadagai Services

**Department machinery**: The Agricultural Engineering Department has its own farm machinery and implements. The Department is continuously purchasing tractors, other farm machinery/implements from the funds of various schemes, including Sub-mission of Agriculture Mechanisation (SMAM), Watershed Development Fund of Tamil Nadu Watershed Development Agency (TAWDEVA-WDF) and State funds.

**Hiring**: These machineries and implements are given to farmers on 'hire basis'.

**Mobile App**: The e-Vaadagai feature in the Uzhavar Mobile App is helpful in facilitating farmers to book the required agricultural machinery and implements from anywhere and to pay advance hire charges online.

**Hiring charge**s: The hiring charge of bull dozer is ₹ 1,230/hr, tactor (with/ without implements) ₹ 500/hr, paddy combine harvester – ₹ 1,160/hr (wheel type) and ₹ 1,880 (track type), sugarcane harvester with infielder – ₹ 1,880/hr, Heavy Duty Chain Saw ₹ 85/hr, Tractor operated pump set ₹ 500/hr, etc.

## 9.4 Skill Development Training for Operating Agricultural Machinery

**Objectives:** To create skilled youth for repair and maintenance of farm machinery, train qualified operators for agricultural machinery, promote on-field machinery repair and to generate rural employment.

**Funding:** Central Govt – 60% and State Govt – 40% from the schemes PM-RKVY, ATMA and SMAM.

**Training Details**

1. Assistant Tractor Operator Training: Training related to repair & maintenance – of agriculture machinery- duration 16 working days.
2. Agricultural Machinery Operator Training- Tractor, Drone, Earth moving and Harvesting machines – duration: 27 working days.
3. Training on Entrepreneurial Opportunities in Agricultural Engineering Technologies- 2025-26: To impart knowledge on agricultural entrepreneurship to the youth, to enhance their entrepreneurial skills, and to enable them to independently start agricultural enterprises, 5 days training will be provided through the Department of Agricultural Engineering at the State Agricultural Machinery Information Data Centre. Students, farmers and youth who interested in agriculture can apply.

**Training Centres:** Agricultural Engineering Department owned Tractor Workshops at Vellore, Tiruchirappalli, Thiruvarur, Coimbatore, Madurai and Tirunelveli

**Training Fee:** Free of cost

**Eligibility:** Age shall be 18 to 35 years (age relaxation may be allowed up to 50 years?)

**Contact:**

1. For Machinery Operator / Assistant Operator training submit your application in the Workshops of Agricultural Engineering Department at Coimbatore, Vellore, Thiruvarur, Tiruchirappalli, Madurai and Tirunelveli or in the nearest Office of Assistant Executive Engineer, Agricultural Engineering Department.
2. For 5 days training on Entrepreneurial opportunities, application form must be filled out and submitted through online (https://forms.gle/TY5xkj5imMc4tdtt5 link). Contact Tmt. R. Hilda Kanmani, Assistant Executive Engineer (AE), Thiru. R. Jeeva, Assistant Engineer (AE) through e mail: tnsamidc@gmail.com.

**Sources:**


- AED. 2025. வேளாண்மை பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் 2025-26. Agriculture Engineering Department, Agriculture and Farmers' Welfare Department, Tamil Nadu
- https://aed.tn.gov.in/
- https://aed.tn.gov.in/en/schemes/agricultural-mechanisation/awareness-training-on-agricultural-engineering-technologies-for/
- https://agrimachinery.nic.in/
- MAFW. 2024. Sub-Mission on Agricultural Mechanisation (SMAM). Operational Guidelines -2024. Ministry of Agriculture and Farmers Welfare Department of Agriculture & Farmers Welfare, Government of India.

# (9) தமிழ்நாட்டில் வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான திட்டங்கள்

## 9.1 வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம் (SMAM)

**முன்னுரை:** வேளாண் இயந்திரமயமாக்கலுக்கான துணை இயக்கம் என்பது வேளாண் இயந்திரங்களை வாங்குவதற்கு மானியங்களை வழங்குதல், வாடகை மையங்களை நிறுவுதல் மற்றும் வேளாண்மையில் இயந்திரமயமாக்கல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய செயல்பாடுகள் மூலம் விவசாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் ஒரு மத்திய அரசின் முன்முயற்சி இயக்கமாகும். இந்தத் திட்டம் "தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் (RKVY)" ஒரு கூறாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**நிதி ஆதாரம்:** SMAM திட்டம் மத்திய ஆதரவு மற்றும் மத்திய நேரடித் திட்டம் என இரு கூறுகளைக் கொண்டுள்ளது. மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களில் (துணைத் திட்டங்களில்), வடகிழக்கு, இமயமலை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசம் தவிர பிற அனைத்து மாநிலங்களிலும் மத்திய அரசு மொத்த செலவினத்தின் 60 சதவிகிதத்தை ஏற்கிறது, மீதமுள்ள 40% செலவினத்தை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் ஏற்கின்றன.

**வழங்கப்படும் இயந்திரங்கள்:** டிராக்டர், ரோட்டாவேட்டர், பவர் டில்லர், நெல் நடவு இயந்திரம், விதை விதைப்புடன் சேர்த்து உரமிடும் இயந்திரம், பவர் வீடர், புல் வெட்டும் இயந்திரம், தீவனம் நறுக்கும் இயந்திரம், அறுவடை இயந்திரம், பலபயிர் கதிர் அடிக்கும் இயந்திரம், தென்னை ஓலை நறுக்கும் இயந்திரம், வைக்கோல் கட்டும் இயந்திரம், சூரிய ஒளி உலர்த்திகள் மற்றும் மதிப்புக் கூட்டல் இயந்திரங்கள் ஆகிய பல்வேறு வேளாண் இயந்திரங்கள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றன.

**மானியம்:** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு இயந்திர செலவில் 50% மானியம், மற்ற விவசாயிகளுக்கு 40% மானியம் வழங்கப்படுகிறது. எஸ்.சி/எஸ்.டி விவசாயிக்குத் தற்போதுள்ள 50% மானியத்திற்குமேல், மாநில நிதியிலிருந்து 20% கூடுதல் மானியம் வழங்கப்படுகிறது. ஆக, மொத்த மானியம் 70 சதவிகிதமாகும். பொதுப்பிரிவு சிறு, குறு விவசாயிகளுக்கு, பவர் வீடர் அல்லது நெல் நடவு இயந்திரங்களை வாங்குவதற்கு மாநில நிதியிலிருந்து கூடுதலாக 10% மானியம் வழங்கப்படுகிறது (ஆக, அதிகபட்ச மானியம் 60%).

சில மதிப்புக கூட்டும் இயந்திரங்களை வாங்க / விநியோகிக்க 40% முதல் 70% மானியம் வரை வழங்கப்படுகிறது.

**இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல்:** இந்தத் திட்டத்தின் கீழ் அதிகச் செயல் திறன், அதிகத் திறன் மற்றும் உயர் மதிப்பு கொண்ட வேளாண் இயந்திரங்களின் (டிராக்டர், அறுவடை இயந்திரம், ட்ரோன் போன்றவை) பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் தனியார் வாடகை மையங்கள் அமைக்கப்படுகின்றன. வேளாண் கூட்டுறவு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் சங்கங்கள், கிராமிய தொழில் முனைவோர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஆகியோர் வட்டார அளவில் வாடகை மையங்கள் அமைக்கும் போது, மொத்த செலவின் 40% மானியமாக வழங்கப்படுகிறது (சென்னை மாவட்டத்தைத் தவிரப் பிற அனைத்து மாவட்டங்களுக்கும் இது பொருந்தும்). இதே குழுக்கள், கிராம மட்டத்திலான வாடகை மையங்கள் அமைக்கும் போது 80% மானியம், ஒருமையத்திற்கு அதிகபட்சம் ரூ. 8 லட்சம் வரை வழங்கப்படுகிறது

(சென்னை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களுக்கும் இது பொருந்தும்).

**மொபைல் செயலியில் பதிவு செய்தல்:** வேளாண் பெருமக்கள் எவ்வித தடையும் இன்றி சரியான நேரத்தில் விவசாயப் பணிகளை மேற்கொள்ள, குறிப்பாக விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்குப் பெற வேளாண் பொறியியல் துறை உதவி வருகிறது. இதற்காகத் தனியார் இயந்திர உரிமையாளர்களின் விவரங்கள்/தரவுகள் "உழவர்" செயலியில் பதிவேற்றப்பட்டுள்ளன. அதிக விலைக் கொண்ட வேளாண் இயந்திரங்களை (எ.கா., டிராக்டர் முதலியவை) வாங்குவதற்கு மானியம் பெற்ற விவசாயிகள், வேளாண் பொறியியல் துறையால் உருவாக்கப்பட்ட மொபைல் செயலியில் (உழவர் App-ல் உள்ள "e-வாடகை" பகுதியில்) கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும். மேலும், அவர்கள் தங்களது இயந்திரங்களை குறைந்தது 100 நாட்கள் தேவையுள்ள பிற விவசாயிகளுக்கு வாடகைக்கு விட வேண்டும்.

**மேலும் தொடர்புக்கு:** இத்திட்டத்தின் விவரங்களைப் பெற சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி நிர்வாக பொறியாளர் (AE) அவர்களை தொடர்பு கொள்ளவும். உழவர் மொபைல் செயலி மூலம் விண்ணப்பம் செய்யலாம்.

## 9.2 விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்கல்

**நோக்கம்:** நெல், மக்காச்சோளம், வாழை, நிலக்கடலை மற்றும் கரும்பு போன்ற பயிர்களில் "விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்கல்" முறையை விளக்கிக்காட்டும் வகையில், விவசாயிகளின் நிலங்களில் திடல்/செயல் விளக்கம் நிகழ்த்துதல்.

**திட்டப்பகுதி:** இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர) நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2025–26 ஆண்டிற்கான இலக்கு 1,550 ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மானியம்:** தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாய தொழில் முனைவோரின் ஓர் ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அந்த நிலத்தில் இயந்திரமயமாக்கல் செயல்முறைகள் செயல் விளக்கம் செய்யப்படும். இயந்திரமயமாக்கலுடன் தொடர்புடைய பணிகளுக்கு 100% மானியம் வழங்கப்படும். ஆனால், விதை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி செலவுகளை விவசாயிகள் தானே ஏற்கவேண்டும்.

## 9.3 இ-வாடகை சேவைகள்

**வேளாண் பொறியியல் துறையின் இயந்திரங்கள்:** வேளாண் பொறியியல் துறை சில சொந்த இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வைத்துள்ளது. மேலும், வேளாண் இயந்திரமயமாக்கலுக்கான துணை இயக்கம் (SMAM), தமிழ்நாடு நீர்நிலை மேம்பாட்டு முகமையின் நீர்நிலை மேம்பாட்டு நிதி ((TAWDEVA-WDF) மற்றும் மாநில நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் நிதியிலிருந்து டிராக்டர்கள் உள்ளிட்ட பண்ணை இயந்திரங்கள் /கருவிகளை வேளாண் பொறியியல் துறை தொடர்ந்து வாங்குகிறது.

**வாடகைக்கு விடுதல்:** மேற்குறிப்பிட்ட இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விவசாயிகளுக்கு 'வாடகை முறையில்' பயன்பாட்டிற்காக வழங்கப்படுகின்றன.

**மொபைல் செயலி:** உழவர் மொபைல் செயலியில் உள்ள 'இ-வாடகை' அம்சம் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை

எங்கிருந்தும் முன்பதிவு செய்தும், ஆன்லைனில் முன்கூட்டியே வாடகைக் கட்டணங்களை செலுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

**வாடகைக் கட்டணங்கள்:** புல்டோசர் கட்டணம் மணிக்கு ரூ. 1,230, டிராக்டர் (கருவிகளுடன்/ கருவிகள் இல்லாமல்) வாடகை மணிக்கு ரூ. 500, நெல் அறுவடை இயந்திரம் மணிக்கு ரூ. 1,160 (டயர் வண்டி) / ரூ. 1,880 (செயின் வண்டி), இன்பீல்டருடன் கூடிய கரும்பு அறுவடை இயந்திரம் மணிக்கு ரூ. 1,880, கனரக ட்ரீட்டி செயின் மரம் அறுக்கும் இயந்திரம் ரூ. 85/மணி, மற்றும் டிராக்டர் மூலம் இயக்கப்படும் பம்ப் செட் ரூ. 500/மணி.

## 9.4 வேளாண் இயந்திரங்களை இயக்குவதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

**நோக்கங்கள்:** பண்ணை இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பில் திறமையான இளைஞர்களை உருவாக்குதல், வேளாண் இயந்திரங்களை இயக்குவதற்கான தகுதியான ஓட்டுனர்களை /ஆபரேட்டர்களை உருவாக்கப் பயிற்சி அளித்தல், வயலில் இயந்திரங்களை உடனடியாக பழுதுபார்த்தலை ஊக்குவித்தல் மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

**நிதியுதவி:** மத்திய அரசு – 60% மற்றும் மாநில அரசு – 40% (PM-RKVY, ATMA மற்றும் SMAM திட்டங்களிலிருந்து).

**பயிற்சி விவரங்கள்:**

1. உதவி டிராக்டர் ஓட்டுனர் பயிற்சி: வேளாண்மை இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் & பராமரிப்பு தொடர்பான பயிற்சி – கால அளவு 16 வேலை நாட்கள்.

2. வேளாண் இயந்திர இயக்குநர்/ஆபரேட்டர் பயிற்சி- டிராக்டர், டிரோன், மண் அள்ளும் இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள்- கால அளவு: 27 வேலை நாட்கள்.

3. வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களில் தொழில்முனைவு வாய்ப்புகள் பயிற்சி-2025-26: இளைஞர்களுக்கு வேளாண் தொழில்முனைவு பற்றிய அறிவை வழங்குதல், அவர்களின் தொழில்முனைவு திறன்களை மேம்படுத்துதல் மற்றும் சுயமாக வேளாண் தொழில் நிறுவனங்களை தொடங்க உதவுதல். இதற்கு, மாநில வேளாண்மை இயந்திர தகவல் தரவு மையத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 5 நாட்கள் பயிற்சி வழங்கப்படும். விவசாயத்தில் ஆர்வமுள்ள மாணவர்கள், விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

**பயிற்சி மையங்கள்:** வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான வேலூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள டிராக்டர் பட்டறைகள்/பணிமனைகள்

**பயிற்சிக் கட்டணம்:** இலவசம்

**தகுதி:** வயது 18 முதல் 35 ஆண்டுகள் வரை (வயது தளர்வு 50 ஆண்டுகள் வரை அனுமதிக்கப்படுகிறது?)

**தொடர்புக்கு:**

- இயந்திர உதவி ஓட்டுநர்/ ஓட்டுநர் பயிற்சிக்கு விண்ணப்பத்தை கோயம்புத்தூர், வேலூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலியில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை ட்ராக்டர் பணிமனைகளில் அல்லது அருகிலுள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல் துறை) அலுவலகத்திலோ சமர்ப்பிக்கவும்.

- ஐந்து நாட்கள் தொழில்முனைவு வாய்ப்புகள் பயிற்சிக்கு, விண்ணப்பப் படிவத்தை ஆன்லைனில் நிரப்பி சமர்ப்பிக்கவும் (https://forms.gle/TY5xkj5imMc4tdtt5). தொடர்புக்கு: திருமதி ஆர். ஹில்டா கன்மணி, உதவி செயற்பொறியாளர் (AE), திரு. ஆர். ஜீவா, உதவி பொறியாளர் (AE) மின்னஞ்சல்: tnsamidc@gmail.com.

**ஆதாரங்கள்:**


- AED. 2025. வேளாண்மை பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் 2025-26. Agriculture Engineering Department, Agriculture and Farmers' Welfare Department, Tamil Nadu
- https://aed.tn.gov.in/
- https://aed.tn.gov.in/en/schemes/agricultural-mechanisation /awareness-training-on agricultural-engineering -technologies-for/
- https://agrimachinery.nic.in/
- MAFW. 2024. Sub-Mission on Agricultural Mechanisation (SMAM). Operational Guidelines - 2024. Ministry of Agriculture and Farmers Welfare Department of Agriculture & Farmers Welfare, Government of India.

## (10) Schemes Promoting Solar Power for Agriculture

1. Tamil Nadu is promoting solar power schemes through the National PM-KUSUM scheme for agriculture and State-level initiatives like the Chief Minister's Solar Rooftop Capital Incentive Scheme for residential users.
2. The PM-KUSUM (Pradhan Mantri Kisan Urja Suraksha Evam Utthan Mahabhiyan) is a Centrally sponsored Scheme, which provides financial assistance for solar pumps and power plants on Farms.
3. Another national initiative is the PM-Surya Ghar: Muft Bijli Yojana, which provides subsidies for rooftop solar systems in the State.
4. The Chief Minister's Solar Rooftop Capital Incentive Scheme offers a state subsidy of ₹ 20,000 per kW for residential rooftop solar installations, supplementing the central government's subsidy.
5. The State also has broader promotion policies through the Tamil Nadu Energy Development Agency (TEDA) and policies like the Tamil Nadu Solar Policy.

### 10.1 Chief Minister's Scheme of Solar Powered Pump Sets

- Under this scheme, the State provides subsidy assistance to farmers for installing *stand-alone solar-powered pumping systems* for lift irrigation.
- For the year 2025-26, there is a proposal to provide up to 1,000 solar pumps (up to 15 HP capacity).
- The subsidy assistance is 80% for small and marginal farmers of SC/ST category, 70% for other farmers of SC / ST 68radhan68 and 60% for other farmers.
- The rate of solar-powered pump set approved by the Government is ₹ 3.14 lakh for 5 HP, ₹ 4.42 lakh for 7.5 HP and ₹ 5.41 lakh for 10 HP.
- Funding pattern: Union Government- MNRE Fund – 30% and State fund – 30 to 50%.
- Contact the Assistant Executive Engineer (AE), Agricultural Engineering Department at the revenue division level for obtaining further details.

### 10.2 Solar Fencing System

- To protect crops from animals, Solar powered Fencing systems are installed in farmers' fields with subsidy assistance
- The fencing type may be (i) normal type with 5 lines, 7 lines and 10 lines of fence wire and (ii) special hanging type of Solar Fencing units with 5 lines, 7 lines and 10 lines for all animals, including elephants.
- Funding pattern: 60: 40 (Centre: State).
- Contact the Assistant Executive Engineer (AE), Agricultural Engineering Department at the revenue division level for getting details.

### 10.3 Solar Driers

- To reduce post-harvest losses in agricultural produce and to ensure uniform drying and to maintain quality, greenhouse-type polycarbonate sheet-covered solar drying units are being provided to farmers with subsidy assistance.
- This structure may be 400 to 1000 sq. feet and be used for drying various agricultural products like Copra, Gingelly, Groundnut, Fruits like Banana, Amla, Clove, Ginger, Chilli, Moringa leaves, Curry leaves, Herbal leaves, etc.
- Funding pattern: 60: 40 (Centre: State).
- Subsidy Assistance: ₹ 3.50 lakh or 50% of total cost, whichever is less per unit for SC/ST, small, marginal and women farmers and ₹ 2.80 lakh or 40% of total cost, whichever is less per unit for other beneficiaries (Note: Additional 20% subsidy for SC/ST farmers from State Fund).

### 10.4 Agricultural Feeders Solarisation (Feeder Segregation) by TANGEDCO

- The objective of the scheme is to convert existing agricultural power feeders into solar-powered feeders to provide reliable, day-time electricity to farmers.
- This is not a direct subsidy scheme for individual farmers. It is an infrastructure-level solarisation project aimed at improving power supply reliability.
- The indirect benefit of the scheme is that farmers will get reliable day-time power for irrigation through solar-powered feeders and reduced power shortage. Issues like load shedding and low voltage will be minimised.
- This scheme is undertaken under the Centrally sponsored PM-KUSUM scheme
- Fund Share: 30 % by the Centre, 30% by the State and 40% by bank or private investment.
- In some places, the work is carried out through public private partnership mode.
- The Tamil Nadu Generation and Distribution Corporation (TANGEDCO) is the implementing agency in the State.
- The power utility TANGEDCO plans to power 1,685 agricultural feeders via solar energy over the next 3 years, using segregated feeders for agriculture connections.
- The idea is to reduce the cost of supply (which was high for agricultural connections) and reduce losses in the distribution system by shifting to solar-powered feeders.

**Sources:**


1. Chief Minister's Scheme of Solar Powered Pumpsets. https://aed.tn.gov.in/en/schemes/renewal-energy-in-agriculture/chief-ministers- scheme -of -solar-powered-pumpsets/
2. GoT. 1999. Tamil Nadu Solar Energy Policy 2019. Government of Tamil Nadu. https://tidco.com/https://mnre.gov.in/en/69radhan-mantri- kisan-urja-suraksha-evam-utthaan-mahabhiyaan-pm-kusum/
3. https://www.tnrd.tn.gov.in/schemes/st_cmspghs.php?utm_source=chatgpt.com

## (10) வேளாண்மையில் சூரிய சக்தியை ஊக்குவிக்கும் திட்டங்கள்

1. PM-KUSUM (பிரதம மந்திரியின் வேளாண் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் உயர்வுக்கான பிரச்சாரம்) திட்டம் மற்றும் முதலமைச்சரின் சூரிய சக்தி மேற்கூரை மூலதன ஊக்கத்தொகை திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் தமிழக வேளாண் துறையில் சூரிய சக்தி பயன்பாட்டை ஊக்குவித்து வருகின்றது.
2. பி.எம்-குசும் என்பது மத்திய அரசு நிதியுதவி பெறும் திட்டமாகும். இது விவசாய நிலங்களில் சூரிய சக்தியால் இயங்கும் பம்ப் செட்டுகள் மற்றும் சூரிய மின் நிலையங்கள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்குகிறது.
3. மேலும், பிரதம மந்திரி சூர்யா கர்: முஃப்த் பிஜ்லி யோஜனா திட்டம் மூலம் மாநிலத்தில் சூரிய மேற்கூரை அமைப்புகளுக்கு மானியம் வழங்குகிறது.
4. முதலமைச்சரின் சூரிய மேற்கூரை மூலதன ஊக்கத்திட்டத்தின் கீழ் வீட்டு சூரிய மின் அமைப்புகளுக்கு மத்திய அரசின் மானியம் போகக் கூடுதலாக கிலோவாட்டுக்கு ரூ. 20,000 மானியம் வழங்கப்படுகிறது.
5. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் (TEDA) மற்றும் தமிழ்நாடு சூரிய கொள்கை போன்றவற்றின் மூலம் மாநிலத்தில் சூரிய ஆற்றல் ஊக்குவிக்கப்படுகிறது.

### 10.1 முதலமைச்சரின் சூரிய சக்தி பம்ப் செட்டுகள் திட்டம்

- இந்தத் திட்டத்தின் கீழ், இறவை பாசனத்திற்கு சூரிய சக்தி மூலம் தனித்தியங்கும் பம்புகளை அமைக்க விவசாயிகளுக்கு மாநில அரசு மானியம் வழங்குகிறது.
- 2025-26 ஆம் ஆண்டில் 1,000 சூரிய பம்புகள் (அதிகபட்சம் 15 HP) வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.
- மானியம்: எஸ்.சி/எஸ்.டி பிரிவை சேர்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு 80% மானியம், பிற எஸ்.சி/எஸ்.டி விவசாயிகளுக்கு 70%, பிற விவசாயிகளுக்கு 60% மானியம் வழங்கப்படுகிறது.
- அரசு அங்கீகரித்த சூரிய சக்தி பம்பின் விலை: 5 HP பம்ப் ஒன்றிற்கு ரூ. 3.14 லட்சம், 7.5 HP பம்ப் ஒன்றிற்கு ரூ. 4.42 லட்சம், 10 HP பம்ப் ஒன்றிற்கு ரூ. 5.41 லட்சம் ஆகும்.
- நிதியளிப்பு முறை: மத்திய அரசு MNRE திட்ட நிதி 30%, மாநில அரசு நிதி 30–50%.
- மேலும் தகவல்களுக்கு, வட்டார வேளாண் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளரை (AE) தொடர்பு கொள்ளவும்.

### 10.2 சூரிய மின்வேலி அமைத்தல்

- பயிர்களை /விளைச்சலை வன விலங்குகளிலிருந்து காக்க, சூரிய சக்தி மின்வேலி அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.
- மின்வேலி வகைகள்: (i) சாதாரண வகை- 5, 7 மற்றும் 10 கம்பி வரிசைகள் கொண்ட வேலி, (ii) சிறப்பு தொங்கும் வகை- 5, 7 மற்றும் 10 கம்பி வரிசைகள் கொண்ட வேலி, இது யானைகள் உள்ளிட்ட அனைத்து விலங்குகளிலிருந்தும் பாதுகாப்பு அளிக்கும்.
- நிதிப் பகிர்வு முறை: மத்திய அரசு 60 பங்கு, மாநிலம் அரசு 40 பங்கு (60:40)

- மேலும் தகவல்களுக்கு, வட்டார விவசாய பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளரை (AE) தொடர்பு கொள்ளவும்.

## 10.3 சூரிய ஒளிக் கூடார உலர்த்தி

- விளை பொருட்களில் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்து, சீரான உலர்த்தலை மேற்கொண்டு, தரத்தைப் பேண, பசுமைக்குடில் போன்ற பாலிகார்பனேட் சீட்டால் மூடப்பட்ட சூரிய ஒளி கூடார உலர்த்தி அமைப்புகள் மானியத்துடன் வழங்கப்படுகின்றன.
- இவ்வகை சூரிய ஒளி கூடார உலர்த்திகளை 400–1,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கலாம். இதில் தேங்காய் (கொப்பரை), எள், நிலக்கடலை, வாழை, நெல்லி, கிராம்பு, இஞ்சி, மிளகாய், முருங்கை இலை, கறிவேப்பிலை, மூலிகை இலைகள் ஆகியவற்றை உலர்த்தலாம்.
- நிதிப் பகிர்வு முறை: இத்திட்டத்திற்கு மத்திய, மாநில அரசுகள் 60:40 விகிதத்தில் நிதி வழங்குகிறது.
- மானியம்: எஸ்.சி/எஸ்.டி பிரிவு சிறு, குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு ரூ. 3.50 லட்சம் அல்லது மொத்த செலவின் 50% வரை மானியம், பிற விவசாயிகளுக்கு ரூ. 2.80 லட்சம் அல்லது மொத்த செலவின் 40% மானியம் வழங்கப்படுகிறது (குறிப்பு: எஸ்.சி/எஸ்.டி விவசாயிகளுக்கு 20% கூடுதல் மானியம் மாநில நிதியிலிருந்து வழங்கப்படுகிறது).

## 10.4 TANGEDCO-இன் வேளாண் பாசன மின்வழித் தடங்களை சூரிய ஆற்றல் மயமாக்கும் திட்டம்

- நடப்பில் உள்ள விவசாய மின்வழித் தடங்களை சூரிய ஆற்றல் மூலம் கிடைக்கும் மின்சாரத்தை எடுத்துச் செல்லும் வகையில் மாற்றி, விவசாயிகளுக்குப் பகல் நேரத்தில் நம்பகமான மின்சாரத்தை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இது தனிநபர் விவசாயிகளுக்கான நேரடி மானியத் திட்டமாக அல்ல. மாறாக, மின்சார விநியோகத்தில் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட உட்கட்டமைப்பை மேம்படுத்தும் சூரிய மின்சக்தித் திட்டமாகும்.
- இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்குப் பகலில் நம்பகமான, பற்றாக்குறையற்ற மின்சாரம் கிடைக்கும். மேலும் குறைந்த மின் அழுத்தம் மற்றும் மின்வெட்டு சிக்கல்கள் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இத்திட்டம் மத்திய அரசின் ஆதரவுடன் கூடிய PM-KUSUM திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.
- நிதிப் பகிர்வு: மத்திய அரசு நிதி 30%, மாநில அரசு நிதி 30% மற்றும் வங்கி/தனியார் முதலீடுகள் 40%.
- சில இடங்களில் இத்திட்டம் பொதுத்துறை-தனியார் கூட்டாண்மை முறையில் செயல்படுத்தப்படுகிறது.
- இத்திட்டத்தைத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் (TANGEDCO) மாநிலத்தில் செயல்படுத்துகிறது.
- அடுத்த 3 ஆண்டுகளில் 1,685 வேளாண் மின் தடங்கள் சூரிய ஆற்றலாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

- வேளாண் மின் தடங்களுக்கான செலவைக் குறைத்து (பொதுவாக, இவை அதிக செலவினத்தில் வழங்கப்படுகிறது), மின் விநியோக இழப்பைக் குறைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

**ஆதாரங்கள்:**


1. Chief Minister's Scheme of Solar Powered Pumpsets. https://aed.tn.gov.in/en/schemes/renewal-energy-in-agriculture /chief-ministers- scheme -of -solar-powered-pumpsets/
2. GoT. 1999. Tamil Nadu Solar Energy Policy 2019. Govt of Tamil Nadu. https://tidco.com/https://mnre.gov.in/en/pradhan-mantri- kisan-urja-suraksha- evam-utthaan-mahabhiyaan-pm-kusum/
3. https://www.tnrd.tn.gov.in/schemes/st_cmspghs.php?utm_source=chatgpt.com

# (11) Agricultural Extension Schemes Implemented in Tamil Nadu

## 11.1 Chief Minister's Famers Service Centre

- Announced in the 2025-26 Budget speech with an outlay of ₹ 42 crores
- Its objective is to establish 1,000 Farmers Service Centres in the State with bank loan assistance. These Centres will be set up in all the districts across the state (excluding Chennai).
- The CM-FSC will act as a one-stop hub and will provide various services and support to farmers utilising the expertise and services of agriculture graduate /diploma holders (provides employment to them)
- The Centre will provide essential inputs (seeds, fertilisers, etc.) along with expert guidance on enhancing crop productivity, pest and disease management, the adoption of modern technologies, and value addition techniques.
- The scheme envisages employing unemployed agricultural graduates and diploma holders. Their age limit shall be between 20 and 45 years, and they should hold a degree/diploma Certificate in agriculture/horticulture/Agri Engineering.
- The applicants cannot be currently employed in government or government-aided institutions and should know computer operations.
- The title of the firm of entrepreneurs who got a loan for establishing the service centre should be on his/her individual name.
- Subsidy will be available for one person in a family.
- The eligible applicant should prepare a detailed project report-DPR (of about ₹ 10-20 lakhs), apply via banks (to get sanction), and then register on the AGRISNET portal (www.agrinet.tn.gov.in/KaviaDP/register/getOTP) to claim the subsidy.
- Cost of establishing one Farmer Service Centre is about ₹ 20 to 30 lakhs, out of which 30% subsidy will be given (i.e., ₹ 3 to 6 lakhs per Centre) to the eligible applicant.
- Training for the Centre operators will be provided through District Farmers' Training Centres and KVKs.
- There will be a State-level monitoring committee to oversee implementation.

## 11.2 Village Outreach Campaign / Uzhavarai Thedi Velanmai -Uzhavar Nalathurai

- The Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru M.K. Stalin has launched the project "Uzhavarai Thedi Velanmai -Uzhavar Nalathurai/உழவரைத் தேடி வேளாண்மை-உழவர் நலத்துறை" on 29th May 2025.
- The purpose of this campaign is to bring agricultural technical advice, awareness of schemes, and services directly to farmers in their revenue villages rather than expecting them to visit district/block offices.
- This scheme is designed to enable the Block Level Officials of the Department of Agriculture, Horticulture, Agricultural Engineering, Agricultural Marketing, Sericulture, Fisheries, subordinate departments such as Animal Husbandry,

Cooperative Department, and scientists of the Agricultural Science Institute to **meet farmers twice in a month** (usually on the **2nd and 4th Friday** of the month) directly in their revenue villages and provide them with necessary advice, as well as to highlight crop-related technologies and subordinate sector schemes/programmes that will take agriculture to the next level.

- Target: To cover 17,166 revenue villages.

### 11.3 Uzhavar Aluvalar Thodarbu Thittam (UATT 2.0)

- It's an extension service mechanism of the Tamil Nadu Government aimed at improving farmers–Officers interaction, disseminating agricultural technologies, giving farmers information about ongoing Govt. schemes, and enhancing extension services in the villages.
- UATT-2.0 is implemented during the FY 2024-25 and 2025-26.
- Under the scheme, "lead farmers" are identified in each village panchayat (often 10 farmers, including at least 2 from SC/ST) who are trained and act as link-persons between the agriculture / horticulture extension officers and other farmers in the village.
- Extension officers (AAO / AO / Deputy Aos / Horticulture Officers, etc.) are supposed to visit village panchayats on a fixed schedule (fortnightly for some officers, once a month for others) and log details of visits, give guidance, and collect feedback.
- Monitoring *via* digital tools: The UATT App is used by extension functionaries to upload details of visits, photos, etc. Dashboards exist for tracking.

**What Changes / Enhancements in UATT 2.0?**

The UATT 2.0 version of the scheme introduces some changes or enhancements over the original. Key changes are shown here.

| Aspects | UATT original (or earlier version) | Changes / Additions in UATT-2.0 |
|---|---|---|
| Scope of Departments | Earlier, extension by the Agriculture / Horticulture Departments was mostly. | **Integration** of more departments: Agriculture, Horticulture, Plantation Crops, Agricultural Marketing & Agri-Business, Agricultural Engineering, etc. All are being pooled in 2.0 to reduce overlaps and ensure comprehensive service. |
| Allocation of Officers / Coverage | Previously, one Assistant Agriculture Officer (AAO) covered ~ 8-10 Village Panchayats; one Assistant Horticulture Officer covers ~ 10-15 villages. Visits are done fortnightly or monthly. | The UATT 2.0, aim to reduce the number of villages per officer so that each extension official is assigned **3-4 villages** in many cases. This means more frequent / more focused visits. |
| Monitoring / Digital Tools | The earlier scheme had use of "Uzhavar App" / "UATT App" for scheduling and place-of-visit information; also logging of visits, etc. | Under UATT 2.0, more robust monitoring dashboards (block-, district-, state-level), more frequent data uploads, possibly stronger integration of information related to |

| | | |
|---|---|---|
| | | scheme benefit + technology adoption tracking. Also, to reduce desk work and increase field work. |
| Lead Farmers' role | Lead farmers were identified earlier, but their training/engagement may have been less frequent or less integrated. | In UATT 2.0, frequent training to lead farmers related to agro- technology / allied activities; also, these lead farmers help with dissemination in their villages; dates & place of extension visits to be communicated /posted/ displayed (via app, etc.). |

### 11.4 Sub-Mission on Agricultural Extension (SAME) under NMAET

**Training to farmers**: Other state training- cost of ₹ 1,250/day/farmer for 5-7 days; within the state training- ₹ 1,000/day/farmer (3 days); within the district training- ₹ 250/day/farmer (1 day).

**Exposure visits to farmers**: Other state training/visit- cost of ₹ 1,000/day/farmer for 5-7 days; within the state training/visit- Rs 500/day/farmer (2 days); within the district training/visit- ₹ 300/day/farmer (1 day).

**Formation and Capacity Building of Farmers Interest Group (FIG), Farm Producer Group (PG) or Self-Help Group (SHG)**: Assistance for capacity building – ₹ 5,000/ group; Seed money for FIG, PG, Women SHG @ ₹ 10,000/ group.

**Farmers-Scientists Interactive Meeting**: Assistance of ₹ 20,000 per meeting with 25 farmers.

**Formation of Farm Field School (FFS):** In the field of Progressive farmers, shall be on a cluster basis- 3 FFS per Block per year- Assistance of ₹ 29,414 per FFS with 25 Farmers

### 11.5 One Village- One Crop Demonstration

1) The objective of the programme is to demonstrate improved agro-technologies, covering technologies such as land preparation, use of high-yielding varieties, seed treatment, sowing, integrated nutrient management and other agricultural technologies ***in 15,280 revenue villages, selecting one crop per village with an area of 5 to 10 acres.***

2) Under this programme, permanent 'Pest Monitoring Plots' will be laid out in the fields to distinguish between beneficial and harmful insects and recommend effective plant protection measures to the farmers

**Sources:**


- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for AFW, Govt. of Tamil Nadu.
- G.O No 814/2025 dt 30.9.2025. Public Relation Office, Salem District, https://cdn.s3waas.gov.in/s3c81e728d9d4c2f636f067f89cc14862c/uploads/2025/09/17592346532032.pdf
- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- https://tnhorticulture.tn.gov.in/ and https://www.tnagrisnet.tn.gov.in/

# (11) தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் வேளாண் விரிவாக்கத் திட்டங்கள்

### 11.1 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையம்

- இந்தத் திட்டம் 2025-26-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 42 கோடி நிதியுடன் அறிவிக்கப்பட்டது.
- தமிழகம் முழுவதும், அதாவது சென்னை தவிர உள்ள பிற மாவட்டங்களில் வங்கிக் கடன் உதவியுடன் சுமார் 1,000 உழவர் சேவை மையங்கள் அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- வேளாண்மை பட்டதாரிகள், வேளாண்மை பட்டயம் படித்தவர்களின் நிபுணத்துவத்தை பயன்படுத்தி விவசாயிகளுக்கு ஒரே இடத்தில் அனைத்து சேவைகளையும் வழங்கும் மையமாக இவைகள் செயல்படும்.
- இந்த மையங்கள் விவசாயிகளுக்கு தேவையான அத்தியாவசிய இடுபொருள்களை (விதை, உரம் போன்றவை) வழங்கும். மேலும் உற்பத்தி திறனை அதிகரித்தல், பூச்சி-நோய் மேலாண்மை, நவீன தொழில்நுட்பங்கள், மதிப்பூட்டல் ஆகியவற்றிற்கான நிபுணர் வழிகாட்டுதல்களையும் இம்மையங்கள் வழங்கும்.
- இத்திட்டத்தில் வேலைவாய்ப்பில்லாத வேளாண்மை பட்டதாரிகள் மற்றும் டிப்ளமா படித்தவர்கள் சேர்க்கப்படுவார்கள். அவர்களின் வயது 20 முதல் 45 ஆண்டுக்குள் இருக்க வேண்டும். மேலும் இவர்கள் வேளாண்மை/ தோட்டக்கலை/ வேளாண்மை பொறியியல் துறைகளில் பட்டம்/ டிப்ளமா சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் அரசு அல்லது அரசு உதவிபெறும் நிறுவனங்களில் தற்போது பணியாற்றக் கூடாது, மேலும் கணினி செயல்பாட்டில் குறைந்தபட்ச அறிவு இருக்க வேண்டும்.
- சேவை மையங்கள் அமைக்கக் கடன் பெறும் தொழில் முனைவோரின் நிறுவனம் அவர்களது தனிப்பட்ட பெயரில் இருக்க வேண்டும்.
- ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும் மானியம் கிடைக்கும்.
- தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் விரிவான திட்ட அறிக்கை (சுமார் 10–20 லட்சம் மதிப்பிலான திட்டங்கள்) தயாரித்து, வங்கியில் விண்ணப்பித்து அனுமதி பெற்ற பின்னர் AGRISNET வலைதளத்தில் (www.agrinet.tn.gov.in/KaviaDP/register/getOTP) பதிவு செய்து மானியம் கோர வேண்டும்.
- ஒரு உழவர் சேவை மையம் அமைக்க சுமார் ரூ. 20–30 லட்சம் செலவாகும். இதில் தகுதி உள்ளவர்களுக்கு 30% மானியம் (ரூ. 3–6 லட்சம்) வழங்கப்படும்.
- இந்த மையங்களை செயல்படுத்துவோர்களுக்கு மாவட்ட விவசாயிகள் பயிற்சி மையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் மையங்கள்மூலம் பயிற்சி வழங்கப்படும்.
- இத்தகைய மையங்களின் செயல்பாட்டை கண்காணிக்க மாநில அளவிலான கண்காணிப்பு குழு அமைக்கப்படும்.

## 11.2 உழவரைத் தேடி வேளாண்மை – உழவர் நலத்துறை

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் மே 29, 2025 அன்று 'உழவரைத் தேடி வேளாண்மை–உழவர் நலத்துறை' திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.
- விவசாயிகள் மாவட்ட/வட்டார வேளாண்மை அலுவலகங்களுக்கு வர வேண்டிய அவசியமின்றி, ஒவ்வொரு வருவாய் கிராமங்களுக்கும் வேளாண் அலுவலர்கள் சென்று வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை, வேளாண் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் சேவைகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டத்தில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் வணிகத் துறை, பட்டுப்புழு வளர்ப்பு, மீன்வளத் துறை, வேளாண் சார்ந்த துறைகளான கால்நடைத் துறை, கூட்டுறவுத் துறை சார்ந்த அதிகாரிகள், மற்றும் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மாதத்தில் இருமுறை (பொதுவாக 2 மற்றும் 4-வது வெள்ளிக் கிழமைகளில்) வருவாய் கிராமங்களுக்கு நேரடியாக சென்று ஆலோசனை வழங்குவார்கள். மேலும், இவர்கள் விவசாய தொழில்நுட்பங்கள் மற்றும் துணைத்துறை திட்டங்களை விவசாயிகளுக்குத் எடுத்துக்கூறி வேளாண்மையை அடுத்த நிலைக்கு முன்னேற்ற உதவுவார்கள்.
- இலக்கு: சுமார் 17,166 வருவாய் கிராமங்களை இத்திட்டத்தை செயல்படுத்துதல்.

## 11.3 உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் 2.0 (UATT 2.0)

- தமிழக அரசின் இந்த திட்டம், விவசாயிகள்–அதிகாரிகள் இடையேயான தொடர்பை மேம்படுத்தி, வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரப்பி, நடப்பில் உள்ள பல்வேறு வேளாண் திட்டங்கள் பற்றிய தகவல்களை வழங்கி, கிராம மட்டத்தில் வேளாண் விரிவாக்க சேவைகளை வலுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.
- உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் 2.0, 2024–25 மற்றும் 2025–26 நிதியாண்டுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டத்தில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் முன்னோடி விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு (பொதுவாக 10 விவசாயிகள், அதில் குறைந்தபட்சம் 2 பேர் எஸ்.சி/எஸ்.டி பிரிவினர்) பயிற்சி அளிக்கப்படுவார்கள். இவர்கள் கிராமதில் உள்ள பிற விவசாயிகள் மற்றும் வேளாண்மை / தோட்டக்கலை விரிவாக்க அலுவலர்களுக்கிடையே இணைப்பு பாலமாக செயல்படுவார்கள்.
- வேளாண் விரிவாக்க அலுவலர்கள் (உதவி வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் உள்ளிட்டோர்) நிர்ணயிக்கப்பட்ட அட்டவணைப்படி மாதத்தில் ஒரிரு முறை கிராமங்களுக்கு சென்று, தங்கள் வருகை விவரங்களை பதிவு செய்து, ஆலோசனைகள் வழங்கி, விவசாயிகளின் கருத்துகளை கேட்பார்கள்.
- மின்னணு முறையில் கண்காணிப்பு: வேளாண் விரிவாக்க அலுவலர்கள் தங்கள் வருகை விவரங்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை UATT 2.0 செயலியில் பதிவேற்றம் செய்வார்கள். அலுவலர்களின் வருகை/ தொடர்பு பற்றிய கண்காணிப்பு/ கட்டுபாட்டுத் திரை இந்த செயலியில் உள்ளது.

**UATT 2.0 இல் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் / மேம்பாடுகள்**

உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 2.0, முந்தைய திட்டத்துடன் ஒப்பிடும்போது சில மாற்றங்கள் அல்லது மேம்பாடுகளை கொண்டுள்ளது. சில முக்கிய மாற்றங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.

| அம்சங்கள் | UATT – முந்தைய திட்டம் | UATT – 2.0 இல் உள்ள மாற்றங்கள் / மாறுதல்கள் |
|---|---|---|
| சேர்க்கப்பட்ட துறைகள் | பெரும்பாலும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகள் மட்டும் இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டன. | வேளாண்மைத் துறை, தோட்டக்கலை & மலைத்தோட்டப் பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், வேளாண்மை பொறியியல் போன்ற பல துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதனால், மீள்-மீண்டும் நிகழ்வுகள் குறைந்து, ஒட்டுமொத்த சேவைகள் ஒருங்கிணைந்த முறையில் வழங்கப்படும். |
| அலுவலர்களின் பொறுப்பு / வரம்பு | ஒரு உதவி வேளாண்மை அலுவலர் சுமார் 8–10 ஊராட்சி பகுதிகளை கண்காணித்தார்கள்; ஒரு உதவி தோட்டக்கலை அலுவலர் சுமார் 10–15 கிராமங்களைப் பார்வையிட்டார்கள். மாதம் ஒருமுறை அல்லது இருமுறை நேரடி பார்வை. | UATT 2.0-இல், ஒவ்வொரு அலுவலருக்கும் சுமார் 3–4 கிராமங்கள் மட்டுமே ஒதுக்கப்படும். இதனால் அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராமத்தில் தீவிர கவனம் செலுத்தி, புலப் பணிகள் மேற்கொள்ள முடியும். |
| கண்காணிப்பு / டிஜிட்டல் கருவிகள் | முந்தைய திட்டத்தில் “உழவர் செயலி” / “UATT செயலியைப்” பயன்படுத்தி அலுவலர்களின் பயண அட்டவணை மற்றும் வருகை தகவல் பதிவிடப்பட்டது. | UATT 2.0-இல் வலுவான கண்காணிப்பு டாஷ்போர்டுகள் (வட்டம், மாவட்டம், மாநில மட்டத்தில்) உள்ளது, அதிக/அடிக்கடி தரவு பதிவேற்றம், திட்ட நன்மைகள் மற்றும் தொழில்நுட்ப ஏற்றுக்கொள்ளல் தொடர்பான தகவல்கள் இடம்பெறுகின்றன. மேலும், இதில் அலுவலகப் பணிகளை குறைத்து, புலப்பணிகளை அதிகரிக்கும் நோக்கமும் உள்ளது. |
| முன்னோடி விவசாயிகளின் பங்கு | முன்னோடி விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டிருந்தாலும், அவர்களின் பயிற்சி மற்றும் பங்கேற்பு குறைவாக இருந்தது. | UATT 2.0-இல், தொழில்நுட்பம் / வேளாண்மை சார்ந்த செயல்பாடுகள் தொடர்பாக முன்னோடி விவசாயிகள் அடிக்கடி பயிற்சி பெறுவார்கள்; அவர்கள் தங்கள் கிராமங்களில் இத்தகவல்களைப் பரப்புவதில் உதவுவார்கள். அதிகாரிகளின் பயண விவரங்கள் (சந்திப்பு தேதிகள் மற்றும் இடங்கள்), பயிற்சி, ஆகியவை மொபைல் செயலி மூலம் பதிவேற்றப்பட்டு, பொதுமக்கள் பார்வையிடும் வகையில் உள்ளது. |

## 11.4 NMAET-இன் வேளாண்மை விரிவாக்கத் துணை இயக்கம் (SAME)

**விவசாயிகளுக்கான பயிற்சி**: மற்ற மாநிலங்களில் நடைபெறும் பயிற்சிகளுக்கு, விவசாயி ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 1,250 (5–7 நாட்கள்), மாநிலத்திற்குள் நடைபெறும் பயிற்சிகளுக்கு, விவசாயி ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 1,000 (3 நாட்கள்), மாவட்டத்திற்குள் நடைபெறும் பயிற்சிகளுக்கு, விவசாயி ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 250 (1 நாள்) வழங்கபடுகிறது.

**கண்டுணர் சுற்றலா/ அனுபவ பயணங்கள்**: மற்ற மாநிலங்களில் நடைபெறும் பயிற்சிகளுக்கு/பயணங்களுக்கு, விவசாயி ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 1,000 (5–7 நாட்கள்), மாநிலத்திற்குள் நடைபெறும் பயிற்சிகளுக்கு/பயணங்களுக்கு, விவசாயி ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 500 (2 நாட்கள்), மாவட்டத்திற்குள் நடைபெறும் பயிற்சிகளுக்கு/பயணங்களுக்கு, விவசாயி ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 300 (1 நாள்) வழங்கபடுகிறது.

**விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் (FIG), பண்ணை உற்பத்தியாளர் குழுக்கள் (PG), சுய உதவிக் குழுக்கள் (SHG) உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு**: குழுவொன்றுக்கு திறன் மேம்பாட்டுக்கான உதவியாக ரூ. 5,000, FIG, PG மற்றும் பெண்கள் SHG-க்கான விதை நிதியாக குழுவொன்றுக்கு ரூ. 10,000 வழங்கப்படுகிறது.

**விவசாயிகள்–விஞ்ஞானிகள் சந்திப்பு கூடங்கள்**: 25 விவசாயிகளுடன் நடைபெறும் ஒவ்வொரு சந்திப்பு கூடத்திற்கும் ரூ. 20,000 உதவி வழங்கப்படுகிறது.

**பண்ணைப் பயிற்சி பள்ளிகள் அமைத்தல்**: முன்னோடி விவசாயிகளின் வயல்களில், தொகுப்பு அடிப்படையில், ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆண்டிற்கு 3 பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படும். 25 விவசாயிகள் கொண்ட ஒவ்வொரு பண்ணைப் பயிற்சிக்கும் ரூ. 29,414 நிதியுதவி வழங்கப்படுகிறது.

## 11.5 ஒரு கிராமம் – ஒரு செயல் விளக்கம்

1) இத்திட்டத்தின் நோக்கம் மேம்பட்ட வேளாண் தொழில்நுட்பங்களை செயல் விளக்கம் (திடல் விளக்கம்) செய்து காட்டுவதாகும். இதில், நிலத்தை சாகுபடிக்கு தயார் செய்தல், உயர் விளைச்சல் தரும் இரகங்களை உபயோகித்தல், விதை நேர்த்தி, விதைத்தல், ஒருங்கிணைந்த உர/ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பிற வேளாண் தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்படும். சுமார் **15,280 வருவாய் கிராமங்களில், ஒவ்வொரு கிராமத்திலும் 5 முதல் 10 ஏக்கர் பரப்பளவில் ஒரு பயிர் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல் விளக்கப் பண்ணை முறை காட்சிப்படுத்தப்படும்**.

2) இத்திட்டத்தின் கீழ், சில வயல்களில் நிரந்தர 'பூச்சி கண்காணிப்பு தளங்கள்' அமைக்கப்படும். இதன் மூலம் பயிர்களில் காணப்படும் பயனுள்ள மற்றும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை வேறுபடுத்தி காண்பித்து, விவசாயிகளுக்கு பயனுள்ள பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படும்.

**ஆதாரங்கள்:**


- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for A&FW, Govt. of Tamil Nadu.
- G.O No 814/2025 dt 30.9.2025. Public Relation Office, Salem District, https://cdn.s3waas.gov.in/s3c81e728d9d4c2f636f067f89cc14862c/uploads/2025/09/17592346532032.pdf
- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- https://tnhorticulture.tn.gov.in/ and https://www.tnagrisnet.tn.gov.in/

# (12) Schemes/ Programmes related to Seed Quality and Certification

## 12.1 Seed Certification Programme

- This scheme ensures that seeds produced in the state meet prescribed quality standards.
- Under the Seed Certification Scheme, farmers or seed producers or any individual belonging to government, government-aided, or private institutions who wishes to produce certified seeds may register them with the Seed Certification Department and undertake certified seed production.
- The process of seed certification involves:
    1. Field inspections during crop growth.
    2. Post-harvest inspection during seed cleaning and bagging.
    3. Sampling and laboratory analysis of seed quality.
    4. Certification tags issued only for seeds that pass all tests.
- The decision regarding acceptance/rejection of the application will be intimated to the applicant within 15 days.
- The crops/varieties notified u/s 5 of the Seeds Act, 1966 are eligible for certification.
- For each application, a fee of ₹ 25 is charged towards 'sowing report registration'. The fees for field inspection and laboratory analysis are collected separately, depending on the crop and the area.
- The benefit of the scheme is that farmers receive assured quality seeds, which improves productivity and reliability.
- For further details contact the Assistant Director, Office of the District Seed Certification and Organic Certification

## 12.2 Seed Quality Control Programme

- This scheme regulates the sale of seeds in the market.
- Seed selling outlets must obtain licenses from the Deputy Directors / Seed Inspection Officers, Govt. of Tamil Nadu. License for seed sale in the State is issued under the Seed (Control) Order, 1983.
- Regular inspections are carried out, and seed samples are tested. Complaints about poor-quality seeds are investigated, and legal action is taken against violators.
- To establish a seed selling outlet, a license fee of ₹ 1,000 must be paid, and for renewal of the license, a fee of ₹ 500 must be remitted.
- The decision regarding acceptance/rejection of the application will be intimated to the applicant within 30 days.
- The benefit is that farmers are protected from spurious or substandard seeds, ensuring trust in the seed market.
- For further details contact the Deputy Director, Office of the District Seed Certification and Organic Certification

## 12.3 Seed Testing Scheme

- This scheme provides laboratory testing of seed samples for quality parameters such as Seed Purity, germination percentage, moisture content, and genetic identity.
- International certificates (Orange and Blue ISTA certificates) are issued for export purposes.
- DNA fingerprinting is used for testing varietal purity testing in crops like rice.
- Benefits: Farmers and companies can verify seed quality scientifically, and exporters can access international markets.
- Anyone who wishes to test seed samples may send them to the notified seed testing laboratories. The testing fee is ₹ 80 per seed sample.
- As indicated under the Seeds Act, 1966, the results of seed testing for the crop species specified in schedule 1 to 4 will be communicated within 30 days. For other crops, as specified under the Seeds (Control) Order, 1983, the seed testing results will be communicated within 60 days,
- For obtaining the *Orange International Seed Certificate* and *Blue International Seed Certificate*, samples must be sent to the Government Seed Testing Laboratory at Coimbatore, which is accredited by the International Seed Testing Association (ISTA).
- The fee for the *Orange International Seed Certificate* is ₹4,000 per sample.
- The fee for the *Blue International Seed Certificate* is ₹2,000 per sample.
- For DNA fingerprinting of specific rice varieties, samples may be sent to the Govt. DNA Fingerprinting Laboratory at Coimbatore. The testing fee is ₹ 1,400 per sample
- Contact: For obtaining international certification contact the Seed Testing Officer, Government Seed Testing Laboratory, Coimbatore. For general seed testing contact the respective Regional Seed Testing Officers or the Assistant Director of Seed Certification (Seed Analyst, Coimbatore).

## 12.4 Production of Quality / Certified Seeds

- The Tamil Nadu State Seed Development Agency (TANSEDA) is operating 33 State Seed Farms (SSF), 1 State Pulses Multiplication Farm (SPMF), and 6 State Oilseed Farms (SOSF), which cater to the foundation seed requirement of the state.
- Target: During 2025-26 about 39,500 tons of paddy, millets, pulses and oilseeds will be produced in farmers' field and procured with a budget estimate of ₹ 250 crores.
- Also, plan to establish 7 State Seed Processing Units with a budget outlay of ₹ 15.05 crores.
- For the first time, it was announced to use the 4,451 PACs in Tamil Nadu for the distribution of certified seeds along with fertilisers and other inputs to the farmers.

### 12.5 Sub-Mission of Seeds and Planting Materials

- This is a centrally sponsored scheme, implemented in Tamil Nadu.
- During 2024-25, about 10,630 MT of certified seeds of paddy, millets, pulses and oilseeds have been distributed at subsidised cost.
- Distribution of Foundation / Certified seeds of paddy, millets, pulses and oilseeds at subsidised cost to farmers (50% subsidy for paddy and millet seeds -Foundation and Certified seeds & 60% subsidy for pulses and oilseeds) are also undertaken under the scheme.

### 12.6 Training Scheme on Certified Seed Production and Quality Control

- Training is offered to government, quasi-government, and private seed producers, as well as seed sellers.
- This scheme provides training on:
    1. Certified seed production techniques and
    2. seed quality control measures.
- No fee is charged for the training.
- The benefit is capacity building of farmers, producers, and sellers gain knowledge about modern seed technologies and quality assurance.
- Contract the respective Regional Assistant Directors of Seed Certification and the Deputy Directors of Seed Inspection

**Source:**


- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.

# (12) விதைத் தரம் மற்றும் சான்றளிப்பு தொடர்பான திட்டங்கள்

## 12.1 விதைச் சான்றளிப்பு செயல்பாடுகள்

- மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் நிர்ணயிக்கப்பட்ட தரம்/ தரநிலைகளைப் பூர்த்தி செய்வதை இந்தத் திட்டம் உறுதி செய்கிறது.
- இத்திட்டத்தின் கீழ், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், அரசு, அரசு உதவி பெறும் அல்லது தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த எந்தவொரு நபரும் சான்று விதைகளை உற்பத்தி செய்ய விரும்பினால், விதை சான்றிதழ் துறையில் பதிவு செய்து சான்றளிப்பு விதை உற்பத்தியை மேற்கொள்ளலாம்.
- விதை சான்றிதழ் வழங்கும் செயல்முறைகள்:
    - பயிர் வளர்ச்சி காலத்தில் வயல் ஆய்வு.
    - அறுவடைக்குப் பிந்தைய ஆய்வு-விதை சுத்திகரிப்பு மற்றும் பைகளில் நிரப்பும்போது.
    - விதை மாதிரி எடுத்தல் மற்றும் ஆய்வகத்தில் தரப் பரிசோதனை.
    - அனைத்துப் பரிசோதனைகளிலும் தேறிய விதைகளுக்கே சான்றிதழ் குறிச்சீட்டுகள்/அட்டைகள் வழங்கப்படும்.
- விண்ணப்பம் ஏற்கப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்ற முடிவு 15 நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும்.
- விதைச் சட்டம், 1966 இன் பிரிவு 5-ன் கீழ் அறிவிக்கப்பட்ட பயிர்கள்/ இரகங்கள் மட்டுமே சான்று விதை உற்பத்திக்குத் தகுதியானவை.
- ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ‘விதைப்பு அறிக்கை பதிவுக் கட்டணமாக’ ரூ. 25 வசூலிக்கப்படும். பயிர் மற்றும் பரப்பளவைப் பொறுத்து வயல்-ஆய்வு மற்றும் ஆய்வகப் பரிசோதனை கட்டணங்கள் தனித்தனியாக வசூலிக்கப்படும்.
- திட்டத்தின் பயன்கள்: விவசாயிகள் தரமான விதைகளைப் பெறுகின்றனர்; மகசூல் உற்பத்தித் திறன் மற்றும் சான்று விதைகள் மீதான நம்பகத்தன்மை அதிகரிக்கிறது.
- மேலும் விவரங்களுக்கு: மாவட்ட விதை சான்றிதழ் மற்றும் உயிர் உரச் சான்றிதழ் அலுவலகத்தின் உதவி இயக்குநரைத் தொடர்புகொள்ளவும்.

## 12.2 விதை தரக் கட்டுப்பாட்டுச் செயல்பாடுகள்

- இது சந்தையில் விதைகள் விற்பனை செய்யப்படுவதை ஒழுங்குபடுத்தும் திட்டமாகும்.
- விதை விற்பனை மையங்கள் தமிழ்நாடு அரசின் துணை இயக்குநர்கள் / விதை ஆய்வு அலுவலர்களிடமிருந்து உரிமம் பெற வேண்டும்.
- மாநிலத்தில் விதை விற்பனைக்கான உரிமம், விதை (கட்டுப்பாடு) ஆணை, 1983-ன் கீழ் வழங்கப்படுகிறது.
- முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விதை மாதிரிகள் பரிசோதிக்கப்படுகின்றன.
- தரமற்ற விதைகள் குறித்துப் பெறப்படும் புகார்கள் விசாரிக்கப்பட்டு விதிமீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

- விதை விற்பனை மையம் உரிமம் பெற ரூ. 1,000 கட்டணமாகச் செலுத்த வேண்டும்; உரிமம் புதுப்பிப்பிற்கு ரூ. 500 கட்டணம் செலுத்த வேண்டும்.
- விண்ணப்பம் ஏற்கப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்ற முடிவு 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும்.
- திட்டத்தின் பயன்கள்: போலி அல்லது தரமற்ற விதைகளிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்படுகின்றனர்; விதை சந்தையில் நம்பிக்கை உறுதி செய்யப்படுகிறது.
- மேலும் விவரங்களுக்கு: மாவட்ட விதைச் சான்றிதழ் மற்றும் உயிர்ம சான்றிதழ் அலுவலகத்தின் துணை இயக்குநரைத் தொடர்புகொள்ளலாம்.

## 12.3 விதைப் பரிசோதனைத் திட்டம்

- இது விதைத் தூய்மை, விதை முளைப்புத் திறன், ஈரப்பத அளவு, மரபணு அடையாளம் போன்ற தர அளவுகோல்களுக்காக ஆய்வகத்தில் விதை மாதிரிகளைப் பரிசோதிக்கும் திட்டமாகும்.
- ஏற்றுமதி நோக்கத்திற்கு சர்வதேச சான்றிதழ்கள் (ஆரஞ்சு மற்றும் நீல நிற ISTA சான்றிதழ்கள்) வழங்கப்படுகின்றன.
- நெல் போன்ற பயிர்களில் சிலவகை இரகங்களில் மரபணு தூய்மை பரிசோதனைக்காக டி.என்.எ ரேகை சோதனை பயன்படுத்தப்படுகிறது.
- விதை பரிசோதனை செய்ய விரும்பும் எவரும் அறிவிக்கப்பட்ட விதை பரிசோதனை ஆய்வகங்களுக்கு மாதிரிகளை அனுப்பலாம். ஒவ்வொரு விதை மாதிரிக்கும் பரிசோதனை கட்டணம் ரூ. 80 வசூலிக்கப்படும்.
- விதைச் சட்டம், 1966-ன் படி, அட்டவணை 1 முதல் 4 வரை குறிப்பிடப்பட்ட பயிர் இனங்களுக்கான பரிசோதனை முடிவுகள் 30 நாட்களுக்குள் அறிவிக்கப்படும். விதை (கட்டுப்பாடு) ஆணை, 1983-ன் கீழ் குறிப்பிடப்பட்ட பிற பயிர்களுக்கு விதை ஆய்வு முடிவுகள் 60 நாட்களுக்குள் அறிவிக்கப்படும்.
- ஆரஞ்சு மற்றும் நீல நிற சர்வதேச விதை சான்றிதழ்கள் பெற, ISTA அங்கீகாரம் பெற்ற கோயம்புத்தூர் அரசு விதை பரிசோதனை ஆய்வகத்திற்கு மாதிரிகள் அனுப்ப வேண்டும்.
    - ஆரஞ்சு நிற சர்வதேச விதை சான்றிதழ் கட்டணம்: மாதிரிக்கு ரூ. 4,000
    - நீல நிற சர்வதேச விதை சான்றிதழ் கட்டணம் : மாதிரிக்கு ரூ. 2,000
- DNA கைரேகை/ மரபணு தூய்மை சோதனைக்கு கோயம்புத்தூர் அரசு DNA விரல் ரேகை ஆய்வகத்திற்கு விதை மாதிரிகளை அனுப்பலாம். பரிசோதனை கட்டணம்: மாதிரிக்கு ரூ. 1,400.
- தொடர்புக்கு: சர்வதேச சான்றிதழ்களைப் பெற- விதை பரிசோதனை அலுவலர், அரசு விதை பரிசோதனை ஆய்வகம், கோயம்புத்தூர் அவர்களைத் தொடர்பு கொள்ளவும். விதை பரிசோதனைக்காக, சம்பந்தப்பட்ட மண்டல விதை பரிசோதனை அலுவலர்கள் அல்லது விதை சான்றிதழ் உதவி இயக்குநர் (விதை பகுப்பாய்வாளர், கோயம்புத்தூர்) அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.
- திட்டத்தின் பயன்கள்: விவசாயிகள் மற்றும் நிறுவனங்கள் விதை தரத்தை அறிவியல் ரீதியாக உறுதி செய்யலாம்; விதை ஏற்றுமதியாளர்கள் சர்வதேச சந்தைகளில் தரமான விதைகளை விற்பனை செய்ய இத்தகைய சான்றிதழ்கள் உதவியாக இருக்கும்.

## 12.4 தரமான மற்றும் சான்று விதைகள் உற்பத்தித் திட்டம்

- தமிழக விவசாயிகளின் ஆதார விதை தேவைகளைப் பூர்த்தி செய்ய, தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (TANSEDA) 33 மாநில விதைப்பண்ணைகள் (SSF), 1 மாநில பயறு வகை விதைப்பெருக்கப் பண்ணை (SPMF) மற்றும் 6 மாநில எண்ணெய்வித்துப் பண்ணைகளை (SOSF) நிர்வகித்து வருகிறது.
- இலக்கு: 2025-26-ஆம் ஆண்டில் ரூ. 250 கோடி நிதி ஒதுக்கீட்டில், விவசாயிகளின் வயல்களில் 39,500 டன் நெல், சிறுதானியங்கள், பயறு, மற்றும் எண்ணெய் வித்துக்களின் விதை உற்பத்தி செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்படும்.
- மேலும், 7 மாநில விதைச் சுத்திகரிப்புப் அலகுகளை நிறுவ ரூ. 15.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- முதன் முறையாக, தமிழ்நாட்டில் உள்ள 4,451 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் விதைகள், உரங்கள் மற்றும் பிற இடுபொருட்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 12.5 விதைகள் மற்றும் நடவுப் பொருட்கள் துணைத் திட்டம்

- இது ஒரு மத்திய அரசின் நிதியுதவித் திட்டம் ஆகும்.
- இத்திட்டத்தின் கீழ், 2024-25 ஆம் ஆண்டில் 10,630 மெட்ரிக் டன் நெல், சிறுதானியங்கள், பயறு மற்றும் எண்ணெய் வித்துகளின் விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளன.
- ஆதார மற்றும் சான்று விதைகள்: நெல் மற்றும் சிறுதானிய விதைகள் 50% மானியத்திலும், பயறு மற்றும் எண்ணெய் வித்துக்கள் 60% மானியத்திலும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

## 12.6 சான்று விதை உற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாட்டிற்கான பயிற்சிகள்

- இத்திட்டத்தின் கீழ் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது.
- பின்வரும் பாடங்களில் பயிற்சி வழங்கப்படுகிறது:

    அ) சான்று விதை உற்பத்தி முறைகள்
    ஆ) விதை தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

- பயிற்சிக்காகக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படாது.
- பயன்கள்: திறன் மேம்பாடு – விவசாயிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் நவீன விதை தொழில்நுட்பங்கள் மற்றும் தர உறுதிப்பாடு குறித்த அறிவைப் பெறுகின்றனர்.
- தொடர்புக்கு: சம்பந்தப்பட்ட மண்டல விதைச் சான்று உதவி இயக்குநர்கள் மற்றும் விதை ஆய்வு துணை இயக்குநர்கள்.

**ஆதாரம்:**


- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.

## (13) Schemes related to Agriculture Marketing, Post-Harvest Processing and Value Addition

The Tamil Nadu Government's post-harvest management initiatives are implemented through several schemes such as:

- Agriculture Infrastructure Fund (AIF)
- Tamil Nadu Irrigated Agriculture Modernisation Project (TNIAMP)
- Supply Chain Management Project (SCMP)
- National Agricultural Development Programme (NADP)
- Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PM-KSY)
- Value chain development programmes of the Micro, Small and Medium Enterprises (MSME) Department.

These schemes focuses on the modernising markets, establishing primary processing centres (PPCs), forming new farmer producer organisations (FPOs), and creating value chains for various crops like rice and mangoes.

### 13.1 AGMARK Quality Certification

- AGMARK is a government-backed quality certification for agricultural products in India, legally enforced under the Agricultural Produce (Grading and Marking) Act, 1937 (amended in 1986). The aim of the AGMARK Certification is to provide unadulterated food products to consumers and ensure consumers' trust.
- AGMARK Certificate is issued for the '*notified agricultural products*', and by the Directorate of Marketing and Inspection (DMI), Government of India.
- AGMARK Certification is a voluntary scheme, but but highly recommended for consumer credibility as AGMARK Certification/Standards are widely adopted for both domestic trade and exports.
- In Tamil Nadu, the Department of Agricultural Marketing & Agri Business operates 30 State Agmark Grading Laboratories and one Principal Laboratory which are involved in grading commodities like rice, pulses, ghee, honey, ground spices, whole spices, sago, vegetable oils, gram flour, compounded asafoetida, etc

***AGMARK Certification Process in Tamil Nadu (Apply in-person)***

1. Visit to the nearest field Office of the Directorate of Marketing & Inspection (DMI) (Regional Office located in Chennai)
2. Get the required Application Form or download the it.
3. Submit the filled application (2 copies) along with required documents
4. Enclose application fee & registration fee (DD) in accordance with the nature of the commodity.
5. The Authority will scrutinize the application and send an acknowledgement to the applicant if the application is in order.
6. Then, this application will be processed internally, i.e. it will be moved to the respective authority for verification of the necessary infrastructure.
7. The approved Chemist tests the raw material and the processed commodity as per the norm before getting it packed in a suitable packing materials / container.
8. Samples are tested in State Agmark Grading Laboratories (SAGLs) across Tamil Nadu.
9. The verification/ inspection report will be sent to the certification division.

10. If all norms are complied with by the applicant, the authorities will issue AGMARK certification.
11. The applicant will also get SMS from the DMI.

*Contact:*

1. Directorate of Marketing and Inspection, Shashtri Bhawan, Haddows Road, Chennai – 600006. Phone: 044-28218314 / 28278065, Email: dmirotn@nic.in
2. Commissionerate of Agricultural Marketing and Agri Business, Inner Ring Road, SIDCO Industrial Estate, Guindy, Chennai – 600 032, Phone: 044-22253885 / 044-22253884 Email: agrimarkbusiness@rediffmail.com

## 13.2 Agriculture Infrastructure Fund (AIF)

*Introduction:* The Agriculture Infrastructure Fund (AIF) is a Central Sector Scheme launched by the Government of India in 2020 as part of the Atmanirbhar Bharat package. This scheme is implemented in Tamil Nadu since 2020 to boost agricultural and allied infrastructure. Under the AIF provides medium- to long-term debt financing facility enabling farmers, agribusinesses, FPOs, SHGs, PACS and other stakeholders to create post-harvest and value-chain infrastructure such as warehouses, cold storage, silos, grading units, packhouses, etc.

*Scheme Periods:* 2020-21 to 2032–33

*Benefits/ Features*

- Credit for post-harvest infrastructure such as warehouses and silos, cold storage and ripening chambers, sorting, grading and packaging units, supply-chain and logistics facilities, custom hiring centres and other value-chain facilities
- Loan up to ₹2 crore per eligible project with 3% interest subvention
- Credit Guarantee under CGTMSE for loans up to ₹2 crore (govt. pays guarantee fee)
- Repayment up to 7 years (with moratorium up to 2 years)

*Eligible Applicants:* Individua Farmers, FPOs, SHGs, Agripreneurs/Start-up, PACS, State Agencies, PPP projects, etc.

*Nodal Department*: The Agricultural Marketing & Agri Business Department is the nodal agency for processing and value-addition projects.

*Approval:* Within 2 months.

1. Farmers and FPOs may first approach the District Joint Director of Agriculture or District Agri Business Center. They will guide in preparing proposals and linking with banks under AIF.
2. The Cooperatives/PACS officials may contact the Registrar of Cooperative Societies through District Offices. They may apply directly through the web portal https://agriinfra.dac.gov.in/.
3. The entrepreneurs/startups may contact the Agricultural Marketing & Agri Business Department for processing and value-addition projects.

### 13.2.1 Establishment of 100 Value Addition Centers in Tamil Nadu (2025 Initiative)

In September 2025, as part of the Tamil Nadu Agriculture Budget 2025-26, the state government launched a dedicated scheme to establish **100 Value Addition Centres** across Tamil Nadu. This initiative supports processing, packaging, and marketing of agricultural produce, targeting farmers, FPOs/FPCs, SHGs, and agri-entrepreneurs.

**Key Benefits**

- Capital subsidy: 25% of project cost (for projects up to ₹10 crore).
- Additional subsidy: +10% (total 35%) for centers in industrially backward blocks (as per MSME schedule), women entrepreneurs, or enterprises promoted by SC/ST categories.
- Maximum subsidy capped at ₹1.5 crore.
- Interest subvention: 5% for all beneficiaries for 5 years.
- Focus on secondary/tertiary processing (e.g., puree, powders, oils, flakes, snacks from crops like tomato, chilli, turmeric, banana, mango, drumstick, jasmine, millets).

Projects requires bank-approved reports and are evaluated by District Technical Committees and a State Level Project Approval Committee.

Subsidy releases in instalments (60% initial, 40% later).

This scheme can converge with central schemes like AIF for enhanced benefits (e.g., combining state subsidy with AIF's interest subvention and credit guarantee)

Contact: The Director, Department of Agriculture, Chennai Phone: 044-28524894, Email: diragri@nic.in (or) the Commissioner of Agricultural Marketing & Agri Business, Chennai, Phone: 044-22253884 com.amab@gmail.com

## 13.3 electronic National Agriculture Market (eNAM)

- In Tamil Nadu, eNAM is being implemented in 157 Regulated Markets.
- During 2025-26, about 56 Regulated Markets will be linked with the electronic National Agricultural Market (eNAM) platform.
- Through eNAM 219, agricultural commodities, including coconut, are traded
- To facilitate online trading in all the Regulated Markets of the State, a Unified Single License is issued to the traders.

## 13.4 National Agriculture Development Project (NADP)

- NADP is the Centrally Sponsored Scheme with 60% (Central): 40% (State) share.
- Infrastructure such as Cold Storages, Specialised Market Complex, Market Complex with Cold Storage, Input shops, Spice Complex, Storage Godown, Transaction Shed, Rural Business Hub, Ripening Chamber, Drying Yard, e-learning Centre and Machinery/Equipment have been established under the NADP scheme since 2008-09, and it is being utilised by the farmers.
- To enable farmers to store their produce during down market prices and get remunerative prices when the price is reasonable, so far, 111 cold storage units were constructed under NADP, RIDF (rural infrastructure development fund) and APEDA

(agricultural and processed food products export development authority) Schemes all over Tamil Nadu with a total capacity of 13,565 MT, and they are in use.

- In addition, 3,908 MTs of Cold Storage structures are established in the Primary Processing Centres and 54 MTs of Cold Storage in Uzhavar Sandhai.
- The total capacity of cold storage in the State as of March 2025 is 17527 MT.

## 13.5 National Horticulture Mission (NHM) of the MIDH

Under the mission, creation of Pack-houses, integrated pack-houses, pre-cooling units, cold rooms, ripening chambers, mobile/fixed sorting–grading–packing units, small-scale processing units (juices, pulps), and capacity building for PHM are supported.

**Assistance / Subsidy pattern (irrespective of schemes)**

*1. Primary processing centre (Pack house) construction*: Basic Unit- Facilities such as grading tables, washing units, and small cold-storage rooms. Subsidy @ 50 % of the total cost, subject to a maximum of ₹ 12.50 lakh per unit of 9 m × 6 m size.

*2. Integrated pack house construction*: Facilities include washing, grading, drying, and packing machines. Subsidy @ 35 % of the total cost, with a maximum of ₹ 56.00 lakh per 18 m × 22 m unit. Given as credit-linked back-ended subsidy.

*3. Cold storage construction:* Credit-linked back-ended subsidy @35%. Maximum assistance of ₹ 12.25 lakh per unit.

*4. Ripening chamber Construction:* Credit-linked back-ended subsidy @ 35%. ₹ 1.75 lakh per metric ton (MT) capacity, limited to 6 MT per unit.

*5. Reefer vehicle (Refrigerated Van) procurement:* 50% subsidy, limited to 1,000 MT capacity per beneficiary.

  - 5–25 MT : ₹ 5,000 / MT
  - 25–500 MT : ₹ 4,000 / MT
  - 500–1,000 MT : ₹ 3,000 / MT

*6. Cold room construction*: Type II cold room, credit-linked back-ended subsidy @ 35%.

*7. Reefer transport vehicle operation:* Subsidy for the hilly region @ ₹ 3,360 per MT. Maximum assistance up to 5,000 MT capacity per beneficiary.

*8. Cold-chain transport vehicle (Insulated truck):* Subsidy for the hilly region. Credit-linked back ended subsidy of 35 %. ₹ 10.85 lakh per 14 MT capacity truck. Maximum limit–4 MT.

*9. Urban marketing facilities*: Urban Farmers' Market Stall- 50% subsidy, limited to ₹15,000 per unit.

## 13.6 Pledge Loan for Farmers and Traders

*Benefits to farmers*

- Farmers can store their produce in regulated market godowns for up to 6 months
- Turmeric farmers can store their produce up to 1 year
- This kind of loan will helps farmers to meet their immediate cash needs and facilitate them to prepare for next cropping season.
- Small and marginal farmers may get pledge loan up to 75% of their produce value while other farmers may get up to 50% (or maximum of ₹5 lakhs)
- No interest for first 15 days but 5% interest is charged after 15 days.

Benefits to traders

- Traders who purchase agricultural produce in the regulated markets are provided with pledge loans, enabling them to make immediate payments to farmers.
- This loan helps the traders to make immediate payments to farmers.
- Loan up to 50% of stock value or ₹2 lakh, at 9% interest.
- Traders can store the purchased farm produces up to 6 months in the godowns.

*Eligibility:* Farmers who are selling their farm produce through regulated markets and Licensed traders who purchase the produce in the regulated markets.

*Contact:* Superintendent / Supervisor of the nearest Regulated Market

### 13.7 Pradhan Mantri Kisan SAMPADA Yojana (PMKSY)

- PMKSY is a central-sector scheme implemented by the Ministry of Food Processing Industries (MoFPI). This Scheme is extended until 31 March 2026.
- To implement the scheme, the Central Government provides *Grants-in-aid* to the State Government
- This scheme focuses on creating and modernising food processing infrastructure such as Integrated Cold Chain and Value Addition Infrastructure, Food Processing and Preservation capacities, such as mega food parks and agro-processing clusters, Food Safety and Quality Assurance infrastructure, including food testing laboratories, to increase farmer income and reduce post-harvest waste.
- An additional scheme called **Operation Greens (OG)** was added to the PMKSY in November 2018. It focused on stabilizing prices of **10 fruits** (Mango, Banana, Apple, Pineapple, Orange, Grapes, Amla, Pomegranate, Guava, Litchi), **11 vegetables** (Tomato, Onion, Potato, Green Peas, Carrot, Cauliflower, Beans, Okra, Garlic, Ginger, and various gourds) and **1 marine product** (Shrimp) by offering financial help for transport and storage.
- Another important component under PMKSY is the **Multi-Product Food Irradiation Unit**. This is part of the **Integrated Cold Chain and Value Addition Infrastructure (ICCVAI)** scheme. These units include facilities like cold storage, grading, sorting, and refrigerated vans for transporting irradiated food.
- A Mega Food Park has been established in SIPCOT Industrial Estate, Gangaikondan of Tirunelveli district in 2025 with basic and core infrastructure facilities.
- Delta Foods is established as a Private Cluster in Thanjavur. Its shared infrastructure allows processing of traditional rice varieties, millets, pulses, edible oils, and ready-to-cook mixes.
- Several Agro-Processing Clusters have been announced for districts like Ariyalur, Perambalur, Karur, Nagapattinam, Dharmapuri, Ramanathapuram, and Tenkasi.
- The is a demand-driven scheme. An applicant can propose projects for processing, cold-chain, etc. Entrepreneurs, FPOs, cooperatives, and processing companies can apply.
- Subsidy / financial support: Grants-in-aid or capital subsidy of ~35% of the eligible project cost in general areas (maximum subsidy limit is ₹ 5 crore). Assistance is generally back-ended*, i.e.,* provided through reimbursement mode.

### 13.8 Establishment of Start-up in the Agriculture, Horticulture, Animal Husbandry and Fisheries Sectors

Subsidy for establishment of Start-ups in the agriculture and allied sector will be given, subject to the fulfilment of the following conditions.

- The Start-up must be registered under the TANSIM and STARTUP India.
- The Start-up may be either as private enterprise or as joint liability company.
- The last 3-year average income of the Start-up should be less than 5 lakhs.
- The Start-up should promote value addition, employment generation and direct benefit to the society.
- The Start-up should not be a subsidiary of large enterprise or a company spun off from them.
- It should not have any loans from the government or government-related institutions.
- The applicant must be an Indian Citizen.

Contact: District-level Joint Director of Agriculture, Department of Agricultural Extension and Agri-Business.

### 13.9 Supply Chain Management Project (SCMP)

- This is a State-funded Scheme, first of its kind in Tamil Nadu, implemented in 11 Districts, namely, Krishnagiri, Dharmapuri, Coimbatore, The Nilgiris, Tiruchirappalli, Dindigul, Theni, Ramanathapuram, Thoothukudi, Tirunelveli and Tenkasi.
- This scheme will be expanded to eight more districts (Salem, Erode, Tiruvallur, Kancheepuram, Tiruvannamalai, Cuddalore, Villupuram, and Karur) in Phase II.
- The Department of Agriculture Marketing and Agri-Business is implementing the scheme.
- This scheme aims to integrate and strengthen the supply chain of fruits and vegetables in the State. Under the scheme, grant/support will be given to agro-entrepreneurs for setting up cold stores, custom hiring centres, mechanisation and establishment of primary processing Centres (PPCs) that reduce post-harvest losses.
- Till March 2025, 64 Primary Processing Centres (PPCS) were established in 11 districts with assistance from NABARD’s Warehouse Infrastructure Fund (WIF). Facilities such as Pack houses, Cold storages, Storage Godowns and Primary Processing machineries for cleaning, sorting and packing are available in the PPCs.
- These PPCs are being operated by the Market Integration Partners (MIP), such as Farmer Producer Organisations, Cooperative Societies and private companies.
- An International Flower Auction Centre was established in Moranappalli Village of Krishnagiri district. Facilities such as cold storage, auction centre, assaying, handling, packing and training hall are established in this centre.

## 13.10 Tamil Nadu Irrigated Agriculture Modernization Project (TNIAMP)

- It is a multi-departmental project in Tamil Nadu, implemented by the State Government in collaboration with the World Bank (WB) assistance/loan.
- The project was approved in December 2017 with a World Bank loan of US$ 318 million (~₹2,200-3,000 crore) to Tamil Nadu.
- This project was originally for a period of 7 years from 2017-18 but has been extended till 2 December 2025.
- The project primarily aimed at irrigated agriculture, such as modernising infrastructure, improving water use efficiency, encouraging crop diversification (particularly away from water-intensive crops), enhancing climate resilience, and improving market opportunities for farmers in selected sub-basins of the State.
- This scheme also supports the creation of new Farmer Producer Companies, business development for existing Farmer-Producer Companies, promotion of agri-entrepreneurs and modernisation of Regulated Markets.
- The Tamil Nadu Government has been supporting Farmer Producer Organisations (FPOs) since 2014-15. About 1,274 FPOs have been registered in the state through various implementing agencies such as TNSFAC (Tamil Nadu Small Farmers' Agri Business Consortium) and TNIAMP, and under various schemes NADP, NMSA, etc (https://www. agrimark.tn.gov.in). Assistance is given to FPOs under TNIAMP and other schemes are given below.
    1. A start-up grant of ₹ 10 lakh is extended to each FPO
    2. Productive Investment grant of ₹ 20 lakh is extended to each Farmer-Producer Company
    3. Business Expansion grant of ₹ 30 lakh per FPC is extended to the best-performing FPCs.
- Market modernisation and digitisation of regulated markets in Srimushnam, Kurinjipadi, and Sivagiri were undertaken under TNIAMP.
- e-NWR (electronic Negotiable Warehouse Receipt) is being piloted in four selected godowns.

## 13.11 Uzhavar Sandhai

- Uzhavar Sandhai scheme was initiated in Tamil Nadu by the Hon'ble former Chief Minister Kalaignar Thiru Karunanidhi in 1999, to promote direct marketing between farmers and consumers by eliminating middlemen.
- The daily price details of Uzhavar Sandhai are uploaded on the website of the Department of Agricultural Marketing and Agri Business (www.agrimark.tn.gov.in ) and the "Uzhavar App".
- Food Safety and Standards Authority of India (FSSAI) certification was obtained for 93 Uzhavar Sandhai. The quality of vegetables sold in Uzhavar Sandhai is ensured by this certification.
- Shops are being allocated to FPO in 85 Uzhavar Sandhai.

- Delivery of Uzhavar Sandhai Vegetables at Consumers' doorsteps through an Online Trading Platform will be undertaken during 2025-26.

### 13.12 Value chain development of MSME

- The Tamil Nadu Food Processing and Agriculture Export Promotion Corporation (TNAPEx) was created to revitalise the food processing sector and create value chains for farm products, aiming to increase exports.
- During the FY 2022-23, the responsibility for schemes and institutions related to food processing has been transferred from the Agriculture Department to the MSME Department to boost value addition and exports.
- The MSME Department under the Value Chain Development Scheme promotes the creation of a value chain for crops such as rice, mango, banana, and tomato, including post-harvest management, processing, and marketing.
- The value chains will be created in the districts and for the selected crops in three phases shown below:
    - Phase I (2024-25)- Ramanathapuram (chilli), Theni (Banana)
    - Phase II (2025-26)- Dharmapuri (Mango), Thiruvarur (Rice)
    - Phase III (2026-27)-Dindigul (Guava and Tomato) and Nagapattinam (Fish)

**Sources:**


- G.O. (MS) No 68. Micro, Small and Medium Enterprises (D1) Department on 27.12.2024.
- GoT. 2024. Manual under the Right to Information Act, 2005. Micro, Small and Medium Enterprises Department, Government of Tamil Nadu
- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for Agriculture and Farmers' Welfare. Government of Tamil Nadu.
- https://www.agrimark.tn.gov.in/Infra/agmark_lab
- https://dmi.gov.in/GradesStandard.aspx/Contacts.aspx
- https://iamwarm.gov.in/iamwarm/old/wro.asp?utm
- https://sampada-mofpi.gov.in/
- https://www.agrimark.tn.gov.in/index.php/scheme/view/1#.
- https://www.pib.gov.in/PressNoteDetails.aspx?NoteId=154987&ModuleId=3#.
- https://www.worldbank.org/en/news/press-release/2017/12/01/usd318-million-project-support-climate-resilient-agriculture-over-500000-farmers-benefit-tamil-nadu-india?utm_source=chatgpt.com

# (13) வேளாண் விற்பனை, அறுவடைக்குப் பின்பான பதப்படுத்துதல் மற்றும் மதிப்பூட்டல் தொடர்பான திட்டங்கள்

தமிழக அரசின் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை முன்முயற்சிகள், பல்வேறு திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. அவை:

- வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF)
- தமிழ்நாடு இறவைப் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)
- விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் (SCMP)
- தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP)
- பிரதம மந்திரி கிருஷி சிஞ்சாயி யோஜனா (PM-KSY)
- சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் (MSME) துறையின் மதிப்புச் சங்கிலி மேம்பாட்டுத் திட்டங்கள்

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் சந்தைகளை நவீனப்படுத்துதல், முதன்மை பதப்படுத்தும் மையங்களை நிறுவுதல், புதிய உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்குதல், அரிசி மற்றும் மா போன்ற பல்வேறு பொருட்களுக்கு மதிப்புத் தொடர்களை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன.

## 13.1 அக்மார்க் தரச் சான்றிதழ்

- அக்மார்க் என்பது இந்தியாவில் வேளாண் பொருட்களுக்கான அரசு வழங்கும் தரச் சான்றிதழ் ஆகும். இது வேளாண் பொருட்கள் (தர நிர்ணயம் மற்றும் குறியிடுதல்) சட்டம், 1937-இன் (1986-இல் திருத்தப்பட்டது) கீழ் சட்டப்பூர்வமாக வழங்கப்படுகிறது. அக்மார்க் சான்றிதழின் நோக்கம் நுகர்வோருக்குக் கலப்படமற்ற உணவுப் பொருட்களை வழங்குதல் மற்றும் நுகர்வோர் நம்பிக்கையைப் பெறுதல் ஆகும்.
- அக்மார்க் சான்றிதழ் 'அறிவிக்கப்பட்ட வேளாண் பொருட்களுக்கு' மட்டும் வழங்கப்படுகிறது; இது இந்திய அரசின் விற்பனை மற்றும் ஆய்வு இயக்ககம் (DMI) மூலம் வழங்கப்படுகிறது.
- அக்மார்க் சான்றளிப்பு ஒரு தன்னார்வத் திட்டமாகும் (கட்டாயம் இல்லை), இருப்பினும், நுகர்வோர் நம்பகத்தன்மைக்காக இது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. ஏனெனில் அக்மார்க் சான்றிதழ் மற்றும் தரநிலைகள் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி ஆகிய இரண்டிற்கும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
- தமிழ்நாட்டில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை 30 மாநில அக்மார்க் தர நிர்ணய ஆய்வகங்கள் மற்றும் ஒரு முதன்மை ஆய்வகத்தை நிர்வகிக்கிறது. இவை அரிசி, பயறுவகைகள், நெய், தேன், தூள் மசாலா, முழு மசாலா, சவ்வரிசி, தாவர எண்ணெய்கள், கடலை மாவு, கூட்டுப் பெருங்காயம் போன்ற பொருட்களைத் தர நிர்ணயம் செய்கின்றன.

**தமிழ்நாட்டில் அக்மார்க் சான்றிதழ் செயல்முறை (நேரில் விண்ணப்பித்தல்)**

1. அருகிலுள்ள வேளாண் விற்பனை மற்றும் ஆய்வு இயக்ககத்தின் (DMI) கள அலுவலகத்தை அணுகவும் (சென்னையில் உள்ள பிராந்திய அலுவலகம்).
2. தேவையான விண்ணப்பப் படிவத்தைப் பெறவும் அல்லது பதிவிறக்கம் செய்யவும்.

3. நிரப்பப்பட்ட விண்ணப்பத்தை (2 பிரதிகள்) தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்கவும்.

4. பொருளின் தன்மைக்கு ஏற்ப விண்ணப்பக் கட்டணம் & பதிவுக் கட்டணம் மாறும். உரிய கட்டணத்தை (DD) விண்ணப்பத்துடன் இணைக்கவும்.

5. விண்ணப்பத்தை அதிகாரிகள் ஆராய்ந்து, சரியாக இருந்தால் விண்ணப்பதாரருக்கு ஒப்புதல் அனுப்புவார்கள்.

6. பின்னர், இந்த விண்ணப்பம் துறை ரீதியாகப் பரிசீலிக்கப்படும், அதாவது தேவையான உள்கட்டமைப்பைச் சரிபார்க்க தொடர்புடைய அதிகாரிக்கு அனுப்பப்படும்.

7. அங்கீகரிக்கப்பட்ட வேதியியலாளர்/ஆய்வாளர் உங்கள் பொருளை பொருத்தமான பையில்/ சாக்கில்/கொள்கலன்களில் அடைப்பதற்கு முன் மூலப்பொருள் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருளைத் தரநிலைக்கு உட்படுகின்றனவா என்று சோதிப்பார்கள்.

8. எடுக்கப்பட்ட விளைபொருள் மாதிரிகள் தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநில அக்மார்க் தர நிர்ணய ஆய்வகங்களில் (SAGLs) சோதிக்கப்படும்.

9. சரிபார்ப்பு/ ஆய்வு அறிக்கை DMI-இன் சான்றிதழ் பிரிவுக்கு அனுப்பப்படும்.

10. விண்ணப்பதாரர் (விளைபொருள்) அனைத்துத் தரநிலைகளையும் பின்பற்றியிருந்தால், அதிகாரிகள் அக்மார்க் சான்றிதழை வழங்குவார்கள்.

11. DMI அலுவலகம் விண்ணப்பதாரருக்கு மொபைல் குறுஞ்செய்தி மூலம் முடிவுகளை அறிவிக்கும்.

*தொடர்புக்கு:*

1. விற்பனை மற்றும் ஆய்வு இயக்ககம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, சென்னை–600 006. தொலைபேசி: 044-28218314/28278065, மின்னஞ்சல்: dmirotn@nic.in.

2. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரகம், உள் வளைவு சாலை, SIDCO தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032, தொலைபேசி: 044-22253885 / 044-22253884, மின்னஞ்சல்: agrimarkbusiness@rediffmail.com.

## 13.2 வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF)

*அறிமுகம்:* வேளாண் உட்கட்டமைப்பு நிதி என்பது இந்திய அரசின் மத்திய துறைத் திட்டமாகும். 2020-ஆம் ஆண்டு ஆத்மநிர்பார் பாரத் தொகுப்பின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்ட இத்திட்டம் தமிழ் நாட்டிலும் செயல்படுத்தப்படுகிறது. அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை உட்கட்டமைப்பு மற்றும் சமூக விவசாய சொத்துக்களுக்கு நடுத்தர-நீண்டகாலக் கடன் நிதி வசதியை வழங்குகிறது.

*திட்டக் காலம்:* 2020-21 முதல் 2032-33 வரை செயல்படுகிறது

*பலன்கள்/சிறப்பம்சங்கள்*

- தகுதியான திட்டங்களுக்குக் கடன் (எ.கா. கிடங்குகள், குளிர் சேமிப்பு, சிலோக்கள், வகைப்படுத்துதல், தரப்படுத்துதல், சிப்பம் கட்டும் அலகுகள், பழுக்க வைக்கும் அறைகள், விநியோகத் தொடர் வசதிகள், மற்றும் வாடகை மையங்கள் அமைக்க).
- ரூ.2 கோடி வரை கடன், ஆண்டுக்கு 3% வட்டி மானியம்.

- CGTMSE கீழ் ரூ.2 கோடி வரை கடன் உத்தரவாதம் (அரசு உத்தரவாதக் கட்டணத்தை செலுத்தும்).
- அதிகபட்ச திருப்பிச் செலுத்தல் காலம்: 7 ஆண்டுகள் (2 ஆண்டுகள் வரை இடைநீக்கம்).

*தகுதியான விண்ணப்பதாரர்கள்:* தனிநபர் விவசாயிகள், விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPCs), சுய உதவிக் குழுக்கள் (SHGs), வேளாண் தொழில்முனைவோர்/புத்தாக்க நிறுவனங்கள், தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் (PACS), கூட்டுறவு சங்கங்கள், மாநில நிறுவனங்கள், பொது-தனியார் கூட்டுத் திட்டங்கள்.

*திட்ட செயலாக்க நிறுவனம்*: தமிழ்நாட்டில் வேளாண் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல் திட்டங்களுக்கு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை செயலாக்க அமைப்பாக செயல்படுகிறது.

*ஒப்புதல்*: 2 மாதங்களுக்குள்.

1. விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் முதலில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அல்லது மாவட்ட வேளாண் வணிக மையத்தை அணுகலாம். அவர்கள் AIF திட்டத்தின் கீழ் திட்ட முன்மொழிவு தயாரிப்பதற்கும் வங்கிகளுடன் இணைப்பதற்கும் வழிகாட்டுதல் அளிப்பார்கள்.
2. கூட்டுறவு சங்கங்கள்/தொடக்க வேளாண்மை கடன் சங்க அதிகாரிகள் தங்கள் மாவட்ட அலுவலகங்கள் வழியாகக் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களைத் தொடர்பு கொண்டு, நேரடியாக அதிகாரப்பூர்வ இணைய வாசல் தகவு (https://agriinfra.dac.gov.in/) விண்ணப்பிக்கலாம்.
3. தொழில்முனைவோர்/தொடக்க நிறுவனங்கள் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல் திட்டங்களுக்கு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையைத் தொடர்பு கொள்ளலாம்.

#### 13.2.1 தமிழ்நாட்டில் 100 மதிப்புக்கூட்டு மையங்கள் அமைத்தல் (2025 முன்னெடுப்பு)

கடந்த 2025 செப்டம்பரில், தமிழ்நாடு வேளாண்மை பட்ஜெட் 2025-26 இன் ஒரு பகுதியாக, மாநில அரசு தமிழ்நாடு முழுவதும் **100 மதிப்புட்டும் மையங்கள்** அமைக்க அறிவித்தது. இந்த முன்னெடுப்பு வேளாண் விளைபொருட்களின் பதப்படுத்துதல், சிப்பம் கட்டுதல்/பேக்கேஜிங் மற்றும் சந்தைப்படுத்தலை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்/நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் வேளாண் தொழில்முனைவோர்கள் ஆதரிக்கப்படுகிறார்கள்.

**முக்கியப் பலன்கள்**

- மூலதன மானியம்: புதிய திட்டச் செலவில் 25% (ரூ.10 கோடி வரையிலான திட்டங்களுக்கு).
- கூடுதல் மானியம்: தொழில்துறையில் பின்தங்கிய (MSME அட்டவணைப்படி) வட்டாரங்களில் தொடங்கப்படும் திட்டங்கள், பெண் தொழில்முனைவோர் அல்லது SC/ST வகையினரால் தொடங்கப்படும் நிறுவனங்களுக்கு: கூடுதலாக 10% மானியம் (ஆக மொத்தம் 35%).
- அதிகபட்ச மானியம் ரூ.1.5 கோடி வரை.
- வட்டி மானியம்: அனைத்துப் பயனாளிகளுக்கும் 5%, 5 ஆண்டுகளுக்கு.

இத்திட்டம் இரண்டாம்/மூன்றாம் நிலை பதப்படுத்தல் செயல்களில் கவனம் செலுத்துகிறது (எ.கா. தக்காளி, மிளகாய், மஞ்சள், வாழை, மாம்பழம், முருங்கை,

மல்லிபூ, சிறுதானியங்கள் போன்றவற்றிலிருந்து பொரி, பவுடர் (பொடி), எண்ணெய், சீவல்கள், நொறுக்குத்தீனி தயாரித்தல்).

முன்மொழியப்படும் திட்டங்களுக்கு வங்கி ஒப்புதல் அறிக்கை வேண்டும்.

மேலும், மாவட்ட தொழில்நுட்பக் குழு மற்றும் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு மூலம் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்படும்.

மானியம் தவணைகளில் வெளியிடப்படும் (முதல் 60%, பின்னர் 40%).

இத்திட்டம் AIF போன்ற மத்தியத் திட்டங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படலாம் (எ.கா. மாநில மானியத்துடன் AIF இன் வட்டி மானியம் மற்றும் கடன் உத்தரவாதத்தை இணைத்தல்).

*தொடர்புக்கு:* வேளாண்மை இயக்குநர், சென்னை. தொலைபேசி: 044-28524894, மின்னஞ்சல்: diragri@nic.in மற்றும் வேளாண் சந்தைப்படுத்தல் & வேளாண் வணிக ஆணையர், சென்னை. தொலைபேசி: 044-22253884, மின்னஞ்சல்: com.amab@gmail.com

## 13.3 மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM)

- தமிழ்நாட்டில் சுமார் 157 ஒழுங்குமுறை சந்தைகளில் eNAM திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- 2025-26-ஆம் ஆண்டில், சுமார் 56 ஒழுங்குமுறை சந்தைகள் மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM) தளத்துடன் இணைக்கப்படும்.
- தமிழகத்தில் eNAM மூலம் தேங்காய் உள்ளிட்ட 219 வேளாண் பொருட்கள் வர்த்தகம் செய்யப்படுகின்றன.
- மாநிலத்தின் அனைத்து ஒழுங்குமுறை சந்தைகளிலும் மின்னணு வர்த்தகத்தை எளிதாக்க, வணிகர்களுக்கு ஒருங்கிணைந்த ‘ஒற்றை உரிமம்’ வழங்கப்பட்டு வருகிறது.

## 13.4 தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் (NADP)

- இது மத்திய, மாநில (60: 40) பங்களிப்புடன் கூடிய மத்தியத் திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் 2008-09-ஆம் ஆண்டு முதல் சில உள்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டு விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவை: குளிர்பதனக் கிடங்குகள், சிறப்புச் சந்தை வளாகம், குளிர்பதன சேமிப்புடன் கூடிய சந்தை வளாகம், இடுபொருட்கள் வளாகம், நறுமணப் பயிர்கள் வளாகம், சேமிப்புக் கிடங்கு, பரிவர்த்தனை கொட்டகை, கிராமப்புற வணிக மையம், பழுக்க வைக்கும் அலகுகள், உலர்த்தும் களம், மின்னணு பயிலகம் மற்றும் இயந்திரங்கள்/உபகரணங்கள்.
- சந்தை விலை குறைவாக உள்ளபொழுது விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சேமித்து வைக்கவும், விலை நியாயமானதாக இருக்கும்போது லாபகரமான விலையைப் பெறவும், இதுவரை, தமிழ்நாடு முழுவதும் NADP, RIDF (கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி) மற்றும் APEDA (வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்)-இன் திட்டங்களின் கீழ் 111 குளிர்பதன சேமிப்பு கூடங்கள் கட்டப்பட்டுள்ளன, இவை மொத்தம் 13,565 டன் கொள்ளளவு கொண்டவை. இவை யாவும் தற்போது பயன்பாட்டில் உள்ளன.

- இதைத்தவிர, முதல்நிலை பதப்படுத்தும் மையங்களில் 3,908 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன சேமிப்பு கட்டமைப்புகளும், உழவர் சந்தைகளில் 54 டன் குளிர்பதன சேமிப்பு கட்டமைப்புகளும் நிறுவப்பட்டுள்ளன.
- மார்ச் 2025 நிலவரப்படி மாநிலத்தில் குளிர்பதன சேமிப்பு கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 17,527 டன் ஆகும்

## 13.5 MIDH இன் தேசிய தோட்டக்கலை இயக்கம்

இந்த இயக்கத்தின் கீழ், சிப்பம் (பொதி/ மூட்டை / பொட்டலம்) கட்டும் அறைகள், ஒருங்கிணைந்த சிப்பம் கட்டும் அறைகள், முன்-குளிரூட்டும் அலகுகள், குளிர் அறைகள், பழுக்க வைக்கும் அறைகள், நகரும்/நிலையாக இருக்கும் பிரித்தல் - தரப்படுத்துதல்- சிப்பமிடுதல் பிரிவுகள், சிறிய அளவிலான பதப்படுத்தும் அலகுகள் (பழச் சாறுகள், கூழ்கள்), அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மையில் திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகியன ஆதரிக்கப்படுகின்றன.

**உதவி / மானிய முறை (திட்டங்கள் தொடர்பின்றி)**

1. *முதன்மை பதப்படுத்தும் மையம் (சிப்பம் கட்டுதல்) அமைத்தல்*: அடிப்படை அலகு- தரப்படுத்தும் மேசைகள், அலசுதல் பிரிவு மற்றும் சிறிய குளிர் சேமிப்பு அறைகள் கட்டுதல். மொத்த செலவில் 50% மானியம் அல்லது 9 மீ × 6 மீ அளவுள்ள ஓர் அலகுக்கு அதிகபட்சமாக ரூ. 12.50 லட்சம் மானியம்.
2. *ஒருங்கிணைந்த சிப்பம் கட்டும் அலகு கட்டுதல்*: கழுவுதல், தரம் பிரித்தல், உலர்த்துதல் மற்றும் பேக்கிங் இயந்திரங்கள் ஆகியவை வசதிகள் அடங்கிய அலகு. மொத்தச் செலவில் 35% மானியம் அல்லது 18 மீ × 22 மீ அளவுள்ள ஓர் அலகுக்கு அதிகபட்சம் ரூ. 56.00 லட்சம் மானியம். இவை கடன்-இணைக்கப்பட்ட பின்-ஏற்பு மானியத்துடன் வழங்கப்படுகிறது.
3. *குளிர்பதன சேமிப்பு கிடங்கு கட்டுதல்*: கடன் இணைக்கப்பட்ட- பின் ஏற்பு மானியம் 35%, அதிகபட்ச உதவி ஓர் அலகுக்கு ரூ. 12.25 லட்சம்.
4. பழுக்க வைக்கும் அறை கட்டுதல்: கடன் இணைக்கப்பட்ட- பின் ஏற்பு மானியம் 35%, ஒரு மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட அலகுக்கு ரூ. 1.75 லட்சம், (அதிக பட்சம் 6 மெட்ரிக் டன்).
5. ரீஃபர் வாகனம் (குளிர்சாதன வேன்) கொள்முதல்: 50% மானியம், ஒரு பயனாளிக்கு 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுக்கு மட்டுமே.
    - 5–25 MT : ரூ. 5,000 / MT
    - 25–500 MT : ரூ. 4,000 / MT
    - 500–1,000 MT : ரூ. 3,000 / MT

6. *குளிர்பதன அறை கட்டுமானம்*: டைப் II குளிர் அறை, 35% கடன்-இணைக்கப்பட்ட பின் ஏற்பு மானியம்.

7. *ரீஃபர் போக்குவரத்து வாகன இயக்கம்*: மானியம்- மலைப்பாங்கான பகுதிகளுக்கு மட்டும், ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. 3,360. ஒரு பயனாளிக்கு அதிகபட்ச உதவி 5,000 MT கொள்ளளவு வரை.

8. *குளிரூட்டப்பட்ட போக்குவரத்து வாகனம் (காப்பிடப்பட்ட டிரக்)*: மானியம்- மலைப்பாங்கான பகுதிகளுக்கு மட்டும், கடன்-இணைக்கப்பட்ட, பின் ஏற்பு மானியம் 35%. 14 MT கொள்ளளவு கொண்ட ஒரு டிரக்கிற்கு ரூ. 10.85 லட்சம் அல்லது அதிகபட்ச வரம்பு- 4 மெட்ரிக் டன் வரை.

9. *நகர்ப்புறச் சந்தைப்படுத்தல் வசதிகள்:* நகர்ப்புற விவசாயிகள் சந்தையில் ஸ்டால் அமைக்க- 50% மானியம், ஓர் அலகிற்கு ரூ. 15,000 வரை.

## 13.6 விவசாயிகள் மற்றும் வணிகர்களுக்கான அடமான (பொருளீட்டு) கடன்

***விவசாயிகளுக்கான நன்மைகள்***

- விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிடங்குகளில் 6 மாதங்கள் வரை இருப்பு வைத்து கடன் பெறலாம்.
- மஞ்சள் விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை 1 ஆண்டு வரை இருப்பு வைக்கலாம்.
- இத்தகைய கடன் விவசாயிகளின் உடனடி பணத் தேவைகளைப் பூர்த்தி செய்து, அடுத்த பருவச் சாகுபடிக்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள உதவுகிறது.
- சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களின் மதிப்பில் 75% வரை அடமானக் கடன் பெறலாம், மற்ற விவசாயிகள் 50% வரை (அதிகபட்சம் ரூ. 5 இலட்சம்) பெறலாம்.
- முதல் 15 நாட்களுக்கு வட்டி இல்லை, 15 நாட்களுக்குப் பிறகு 5% வட்டி விதிக்கப்படும்

***வணிகர்களுக்கான நன்மைகள்***

- ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைபொருட்களை கொள்முதல் செய்யும் வியாபாரிகள், விவசாயிகளுக்கு உடனடியாகப் பணப்பட்டுவாடா செய்திட ஏதுவாக வியாபாரிகளுக்கு அடமானக்கடன் வழங்கப்படுகிறது.
- இதனால், வணிகர்கள் விவசாயிகளுக்கு உடனடியாகப் பணம் செலுத்த உதவுகிறது.
- பொருள் இருப்பு மதிப்பில் 50% வரை அல்லது ரூ. 2 இலட்சம் வரை கடன் பெறலாம், வட்டி 9%.
- வணிகர்கள் தங்கள் வாங்கிய வேளாண் பொருட்களை 6 மாதங்கள் வரை கிடங்குகளில் சேமித்து வைக்கலாம்.

*தகுதி:* ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வழியாக விளைபொருட்களை விற்கும் விவசாயிகள் மற்றும் ஒழுங்குமுறை சந்தைகளில் உரிமம் பெற்ற வணிகர்கள்.

*தொடர்புக்கு:* அருகிலுள்ள ஒழுங்குமுறை சந்தையின் கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர்களை அணுகவும்.

## 13.7 பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY)

- பிரதம மந்திரி விவசாயிகளின் செழிப்பு மேம்பாட்டுத் திட்டம் என்பது உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகத்தால் (MoFPI) செயல்படுத்தப்படும் ஒரு மத்தியத் துறை திட்டமாகும். இந்தத் திட்டம் மார்ச் 31, 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தை செயல்படுத்த, மத்திய அரசு மாநில அரசுக்கு முழு மானிய-உதவி வழங்குகிறது.
- இத்திட்டம், உணவு பதப்படுத்துதல் உள்கட்டமைப்புகளை உருவாக்குவதிலும் நவீனமயமாக்குவதிலும் கவனம் செலுத்துகிறது. விவசாயிகளின் வருமானத்தை

அதிகரிக்கவும் அறுவடைக்குப் பிந்தைய கழிவுகளைக் குறைக்கவும் ஒருங்கிணைந்த குளிர் சங்கிலி மற்றும் மதிப்புக் கூட்டல் உள்கட்டமைப்பு, பெரிய உணவுப் பூங்காக்கள் மற்றும் வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள், உணவுப் பரிசோதனை ஆய்வகங்கள் உள்ளிட்ட உணவு பாதுகாப்பு மற்றும் தர உறுதி உள்கட்டமைப்புகள் உருவாக்குவதற்கு நிதி உதவி அளிக்கிறது.

- ***ஆபரேஷன் கிரீன்ஸ்*** (OG) என்ற திட்டம் 2018 நவம்பரில் PMKSY-இல் கூடுதலாக சேர்க்கப்பட்டது. இது **10 வகைப் பழங்கள்** (மா, வாழை, ஆப்பிள், அன்னாசி, ஆரஞ்சு, திராட்சை, நெல்லி, மாதுளை, கொய்யா, லிச்சி), **11 வகைக் காய்கறிகள்** (தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு, பச்சைப்பட்டாணி, கேரட், காலிஃப்ளவர், பீன்ஸ், வெண்டை, பூண்டு, இஞ்சி மற்றும் பூசணிக் குடும்பக் காய்கறிகள்) மற்றும் **1 கடல்சார் பொருள்** (இறால்) ஆகியவற்றிற்குப் போக்குவரத்து மற்றும் சேமிப்பிற்கு நிதி உதவி வழங்குதல் மூலம் விலைகளைச் சீராக்குவதில் கவனம் செலுத்துகிறது.
- PMKSY இன் மற்றொரு முக்கியமான அங்கம் பல்வேறு உணவுப்பொருட்களை கதிர்வீச்சு மூலம் பதனம் செய்யும் அலகு ஆகும். இது ஒருங்கிணைந்த குளிர் சங்கிலி மற்றும் மதிப்புக் கூட்டல் உள்கட்டமைப்பு (ICCVAI) திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்த அலகுகளில் குளிர்பதன சேமிப்பு, தரப்படுத்தல், வகைப்படுத்துதல் மற்றும் கதிரியக்கம் செலுத்திய உணவைக் கொண்டு செல்வதற்கான குளிர்பதன ஊர்திகள் போன்ற வசதிகள் உள்ளன.
- திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் உள்ள SIPCOT தொழில்துறை எஸ்டேட்டில் 2025-ஆம் ஆண்டில் அடிப்படை மற்றும் முக்கிய உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு 'மெகா உணவுப் பூங்கா' நிறுவப்பட்டுள்ளது.
- 'டெல்டா புட்ஸ்' என்ற நிறுவனம் தஞ்சாவூரில் தனியார் தொகுப்பு முறையில் நிறுவப்பட்டது. இதன் பகிரப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி, பாரம்பரிய அரிசி இரகங்கள், சிறுதானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் மற்றும் சமைக்க தயாராக உள்ள ரெடிமிக்ஸ் மாவுகளைப் பதப்படுத்தப்படுகின்றன.
- அரியலூர், பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், தர்மபுரி, ராமநாதபுரம் மற்றும் தென்காசி மாவட்டங்களுக்குப் பல வேளாண்-பதப்படுத்தும் தொகுப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- இது தேவைக்கேற்ப இயக்கப்படும் திட்டமாகும், அதாவது விண்ணப்பதாரர்கள் பதப்படுத்துதல், குளிர்பதன-தொடர் போன்றவற்றுக்கான திட்டங்களை முன்மொழியலாம். தொழில்முனைவோர், FPO-கள், கூட்டுறவு சங்கங்கள், பதப்படுத்தும் நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம்.
- மானியம் / நிதியுதவி: பொதுவான பகுதிகளில் உள்ளவர்களுக்குத் தகுதியான திட்டச் செலவில் ~35% மானியமாக / மூலதன மானியமாக வழங்கப்படும் (அதிகபட்ச மானிய வரம்பு ரூ. 5 கோடி). உதவி பொதுவாகப் பின் ஏற்பு முறையில் வழங்கப்படும், அதாவது செலவு செய்தபின் ரசீது அடிப்படையில் பணம் திரும்பக் கிடைக்கும்.

### 13.8 வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளத் துறைகளில் புத்தாக்க நிறுவனங்கள் தொடங்குதல்

வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் புத்தாக்க நிறுவனங்கள் தொடங்குவதற்கு மானியம், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படும்.

- புத்தாக்க நிறுவனம் TANSIM மற்றும் STARTUP India-வில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- புத்தாக்க நிறுவனம் தனியார் நிறுவனமாகவோ அல்லது பொறுப்பு கூட்டாண்மை நிறுவனமாகவோ இருக்கலாம்.
- புத்தாக்க நிறுவனத்தின் கடந்த 3 ஆண்டுகளுக்கான சராசரி வருமானம் 5 இலட்ச ரூபாய்க்கும் குறைவாக இருக்க வேண்டும்.
- புத்தாக்க நிறுவனம் மதிப்பூட்டல், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் சமூகத்திற்கு நேர்மறை நன்மை ஆகியவற்றை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும்.
- புத்தாக்க நிறுவனம் பெரு நிறுவனங்களின் கிளையாகவோ அல்லது அதிலிருந்து பிரிந்த நிறுவனமாகவோ இருக்கக் கூடாது.
- அரசு அல்லது அரசு சார நிறுவனங்களில் எந்தக் கடனும் நிலுவையில் வைத்திருக்க கூடாது.
- விண்ணப்பதாரர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.

தொடர்புக்கு: மாவட்ட அளவிலான வேளாண்மை துணை இயக்குநர் (இணை இயக்குநர்), வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையை அணுகவும்.

### 13.9 தமிழ்நாடு விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் (SCMP)

- இது மாநில அரசின் நிதியுதவியுடன், தமிழகத்தில் முதன்முறையாக செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டமாகும். இது கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 11 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.
- இந்தத் திட்டம் இரண்டாம் கட்டமாக மேலும் எட்டு மாவட்டங்களுக்கு (சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் கரூர்) விரிவுபடுத்தப்படும்.
- வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இத்திட்டத்தை செயல்படுத்துகிறது.
- இந்தத் திட்டம் மாநிலத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகளின் விநியோகத் தொடர்களை ஒருங்கிணைத்து, வலுப்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் குளிர்பதனச் சேமிப்பு, வாடகை மையங்கள், இயந்திரமயமாக்கல் மற்றும் முதன்மை பதப்படுத்தும் மையங்களை நிறுவுவதற்கு வேளாண் தொழில்முனைவோருக்கு மானியம் / நிதியுதவி வழங்கப்படுகிறது.
- மார்ச் 2025 வரை, நபார்டு வங்கியின் கிடங்கு உள்கட்டமைப்பு நிதி (WIF) உதவியுடன் 11 மாவட்டங்களில் சுமார் 64 முதன்மை பதப்படுத்தும் மையங்கள்

(PPC) நிறுவப்பட்டுள்ளன. சுத்தம் செய்தல், வகைப்படுத்துதல் மற்றும் சிப்பம் கட்டுவதற்கான பொதி அறைகள், குளிர்பதனக் கிடங்குகள், சேமிப்பு கிடங்குகள் மற்றும் முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள் போன்ற வசதிகள் PPC மையங்களில் கிடைக்கின்றன.

- இந்த PPC-கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்ற சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரர்களால் (MIP) இயக்கப்படுகின்றன.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தின் மாரணப்பள்ளி கிராமத்தில் ஒரு 'சர்வதேச மலர் ஏல மையம்' நிறுவப்பட்டுள்ளது. குளிர்பதனக் கிடங்கு, ஏல மையம், மதிப்பீடு செய்தல், கையாளுதல், பொதி கட்டுதல் மற்றும் பயிற்சி மண்டபம் போன்ற வசதிகள் இந்த மையத்தில் நிறுவப்பட்டுள்ளன.

## 13.10 தமிழ்நாடு இறவைப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)

- இது தமிழ்நாட்டில் பல துறைகளை உள்ளடக்கிய திட்டமாகும். இது உலக வங்கி நிதியுதவி/கடனுடன் மாநில அரசால் செயல்படுத்தப்படுகிறது.
- தமிழ்நாட்டிற்கு இத்திட்டம் 2017 டிசம்பரில் 318 மில்லியன் அமெரிக்க டாலர் (~ரூ. 2,200-3,000 கோடி) உலக வங்கி கடனுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் காலம் முதலில் 7 ஆண்டுகளாக (2017-18 வரை) இருந்தது, ஆனால் தற்போது 2 டிசம்பர் 2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் இறவை / நீர்ப்பாசன விவசாயத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதாவது, உள்கட்டமைப்பு வசதிகளை நவீனமயமாக்குதல், நீர் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துதல், பயிர்ப் பல்வகைப்படுத்தலை ஊக்குவித்தல் (குறிப்பாக மிகுந்த நீர்த்தேவை பயிர்களிலிருந்து விலகிப் பிற பயிர்களை ஊக்குவித்தல்), காலநிலை மாற்றத்தைத் தாங்கும் சக்தியை மேம்படுத்துதல் மற்றும் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட துணை- படுகைகளில் விவசாயிகளுக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துதல்.
- இந்தத் திட்டம் புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை (FPO) உருவாக்குதல், ஏற்கனவே உள்ள FPO-களுக்கான வணிக மேம்பாடு, வேளாண் தொழில்முனைவோரை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குமுறை சந்தைகளை நவீனமயமாக்குதல் ஆகியவற்றை ஆதரிக்கிறது.
- தமிழ்நாடு அரசு 2014-15 முதல் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) உருவாக்கி வருகிறது. TNSFAC (தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு), TNIAMP போன்ற திட்டச் செயல்படுத்தும் நிறுவனங்கள் மூலமாகவும், NADP, NMSA போன்ற திட்டங்களின் கீழும் (https://www.agrimark.tn.gov.in) சுமார் 1,274 FPOs-கள் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. TNIAMP மற்றும் பிற திட்டங்கள் வழியாக FPO-களுக்கு வழங்கப்படும் சில உதவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
    1. தொடக்க மானியமாக ஒவ்வொரு FPO-கும் ரூ. 10 லட்சம் வழங்கப்படுகிறது.
    2. உற்பத்தி முதலீட்டு மானியமாக ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் ரூ. 20 லட்சம் வழங்கப்படுகிறது.
    3. வணிக விரிவாக்க மானியமாக சிறப்பாக செயல்படும் FPC-களுக்கு ரூ. 30 லட்சம் வழங்கப்படுகிறது.

- ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி மற்றும் சிவகிரியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் TNIAMP-இன் கீழ் நவீனமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.
- நான்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கிடங்குகளில், சோதனை முறையில் e-NWR (மின்னணு கைமாறத்தக்க கிடங்கு ரசீது) வழங்கப்படுகிறது.

## 13.11 உழவர் சந்தை

- இடைத்தரகர்களை நீக்கி விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையே நேரடி விற்பனையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், 1999-ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதல்வர், கலைஞர் திரு. கருணாநிதி அவர்களால் ‘உழவர் சந்தை’ திட்டம் தமிழகத்தில் தொடங்கப்பட்டது.
- உழவர் சந்தைகளில் நிலவும் தினசரி விலை விவரங்கள் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் வலைதளத்திலும் (www.agrimark.tn.gov.in) "உழவர் செயலி"யிலும் பதிவேற்றப்படுகின்றன.
- தமிழகத்தில் உள்ள 93 உழவர் சந்தைகளுக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) சான்றிதழ் கிடைத்துள்ளது. உழவர் சந்தைகளில் விற்கப்படும் காய்கறிகளின் தரம் இந்தச் சான்றிதழின் மூலம் உறுதி செய்யப்படுகிறது.
- சுமார் 85 உழவர் சந்தைகளில், FPO-களுக்கு கடைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- உழவர் சந்தை காய்கறிகளை ஆன்லைன் வர்த்தகத் தளம் மூலம் நுகர்வோரின் வீடு தேடி விநியோகிக்கும் திட்டம், 2025-26-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

## 13.12 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மதிப்புக் கூட்டல் திட்டம்

- ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில், உணவு பதப்படுத்தும் துறையை மேம்படுத்தவும், பண்ணை விளைபொருட்களுக்கான மதிப்புத் தொடர்களை உருவாக்கவும் தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்புக் கழகம் (TNAPEx) உருவாக்கப்பட்டது.
- மதிப்புக் கூட்டல் மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில், 2022-23 நிதியாண்டில், உணவு பதப்படுத்துதல் தொடர்பான திட்டங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கான பொறுப்பு, வேளாண்மைத் துறையிலிருந்து MSME எனப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் துறைக்கு மாற்றப்பட்டது.
- MSME துறை தங்கள் துறையின் மதிப்புச் சங்கிலி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நெல், மா, வாழை மற்றும் தக்காளி போன்ற பயிர்களில் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் உள்ளிட்ட மதிப்புத் தொடர்களை உருவாக்குவதை ஊக்குவிக்கிறது.
- கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில மாவட்டங்களில் குறிப்பிட்ட பயிர்களுக்கு மதிப்புத் தொடர்கள் மூன்று கட்டங்களாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
    - முதற் கட்டம் (2024-25): இராமநாதபுரம் (மிளகாய்), தேனி (வாழை)
    - இரண்டாம் கட்டம் (2025-26): தர்மபுரி (மா), திருவாரூர் (நெல்)
    - மூன்றாம் கட்டம் (2026-27): திண்டுக்கல் (கொய்யா மற்றும் தக்காளி) மற்றும் நாகப்பட்டினம் (மீன்).

**ஆதாரங்கள்:**


- G.O. (MS) No 68. Micro, Small and Medium Enterprises (D1) Department on 27.12.2024.
- GoT. 2024. Manual under the Right to Information Act, 2005. Micro, Small and Medium Enterprises Department, Government of Tamil Nadu
- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for Agriculture and Farmers' Welfare. Government of Tamil Nadu.
- https://www.agrimark.tn.gov.in/Infra/agmark_lab
- https://dmi.gov.in/GradesStandard.aspx/Contacts.aspx
- https://iamwarm.gov.in/iamwarm/old/wro.asp?utm
- https://sampada-mofpi.gov.in/
- https://www.agrimark.tn.gov.in/index.php/scheme/view/1#.
- https://www.pib.gov.in/PressNoteDetails.aspx?NoteId=154987&ModuleId=3#.
- https://www.worldbank.org/en/news/press-release/2017/12/01/usd318-million-project-support-climate-resilient-agriculture-over-500000-farmers-benefit-tamil-nadu-india?utm_source=chatgpt.com

## (14) Schemes related to Water Management, Watershed Development, Rainwater Harvest and Dryland Development

### 14.1 Climate Proofing of Rainfed Watersheds in Salem and Virudhunagar Districts

*Aim:* The programme aims to make rainfed farming systems more resilient to climate change through soil and water conservation, livelihood diversification, and community empowerment.

*Implementing Agency:* Tamil Nadu Watershed Development Agency (TAWDEVA). The Watershed Committees decide the required works and identify the beneficiaries for each respective watershed.

*Funding support:* NABARD under the National Adaptation Fund on Climate Change (NAFCC) and MoEFCC, Govt. of India.

*Coverage:* 19 micro-watersheds (Attur & Thalaivasal blocks in Salem, Sivakasi block in Virudhunagar).

*Beneficiaries:* Small and marginal farmers

*Duration:* Originally planned from 2019 to 2023 (implementation of few components have been extended due to seasonal and community mobilisation needs).

*Key Interventions*

*1. Entry Point Activities (EPA):* These are early engagement works meant to build rapport with the local community and establish basic infrastructure such as borewell & hand pump installation, pipe networks for drinking water supply, mini-tanks, renovation of ponds and community water bodies, drinking water supply and public building support

*2. Water harvesting structures*: Farm ponds, check dams, percolation tanks.

*3. Soil and water conservation*: Contour bunds, vegetative barriers, trenching, etc.

*Some of the activities undertaken in private lands are*: reclamation and improvement of fallow lands, spreading of silt, construction of farm ponds, fodder crop cultivation, incorporation of crop residues and farmyard manure through ploughing, application of organic manure, green manure, enriched farmyard manure and desilting of wells.

*Activities undertaken in common lands are:* construction of field bunds / sectional bunds, establishment of bio-fencing, construction of medium and major check dams, water recharge structures, seepage water ponds, desilting of village tanks and construction of percolation ponds.

*4. Afforestation & pasture development*: Tree planting, fodder plots cluster formation.

*5. Livelihood support:* Dairy, goat rearing, horticulture, climate-resilient crop varieties, alternate cropping systems, short-duration varieties, irrigation management demonstrations, kitchen gardens and fish culture in farm ponds

6. *Capacity building:* Farmer training in climate-resilient practices.

### 14.2 Creation and Maintenance of Rainwater Harvesting Structures

*Aim:* To harvest rainwater and increase the groundwater level

*Scope of works:*

1*) Maintenance of existing water harvesting structures*: To improve dry lands by harvesting rain water and increase the ground water level, maintenance works (removal of shrubs and desilting) in the existing rainwater harvesting structures created by Tamil Nadu Watershed Development Agency (TAWDEVA) under Drought Prone Areas Programme (DPAP), Integrated Watershed Development Programme (IWDP) and Integrated Watershed Management Programme (IWMP) are undertaken by the Agriculture Engineering Department. The structures identified by the District-level Committee and approved by the District Collector are taken up for maintenance work.

*2) Creation of water harvesting structure*: The scheme also assists in creating new rainwater harvesting structures, like community ponds, by using using the machinery available with the Agricultural Engineering Department. Porambokku land is also selected for the creation of new rainwater harvesting structures.

*Project area*: All Districts in TN except Thanjavur, Thiruvarur, Nagapattinam, Mayiladuthurai, Kanyakumari, The Nilgiris and Chennai.

*Priority Area:*

1. New works- watershed area identified in the State
2. Maintenance works; Water harvesting/storage structures identified by the District Level Committee which get the approval of the District Collector

*Implementing Department*: Agricultural Engineering Department, Tamil Nadu

*Subsidy:* 100% (State fund), for individual farmer 50% or a maximum of ₹ 2.5 lakh subsidy will be given as a back-ended subsidy.

*Contact Officials:* Block level Assistant Engineer (AE) of the Agricultural Engineering Department.

### 14.3 Dam Rehabilitation and Improvement Programme

*Objectives:* To prevent fertile silt being carried away by the streams during monsoon season by adoption of soil conservation measures in catchment areas and to stabilize the water storage capacity of multipurpose reservoirs by reducing siltation.

*Scheme Area:* Vaigai Dam catchment area in Theni District and Mettur Dam catchment area in Salem District.

*Funding Source:* World Bank Aided State Plan Scheme

*Scope of works*

- Field bunding with vegetation cover
- Stream maintenance works (stream bank protection walls)
- Wire fencing check dams (gabion check dam) and Check dams
- Silt monitoring stations.

*Subsidies:* 100% subsidy for all works.

*Contact:* The Assistant Executive Engineer of the concerned Project District.

## 14.4 Desilting of 'C' and 'D' Channels

*Aim:* This scheme is implemented with an objective to ensure smooth flow of water in irrigation channels and to facilitate supply of required quantity of irrigation water at the correct time in the tail end of the river or canal basin command area.

*Project Area:* 'C' and 'D' category channels in the Cauvery, Vennar, Vellar river basins and Kallanai canal command areas covering the districts of Thanjavur, Thiruvarur, Nagapattinam, Mayiladuthurai, Cuddalore, Ariyalur, and Tiruchirappalli.

*Scope of works:* The works undertaken under the scheme are removal of weeds and shrubs and desilting of 'C' and 'D' category irrigation channels.

**C-Type Channels** are the medium-sized distributary channels branching from larger irrigation canals. It carries water to village-level or block-level fields.

**D-Type Channels** are the small, tail-end channels that directly deliver water to farmers' fields. These channels are critical for ensuring equity in water distribution, especially in delta regions.

*Funding Source*: State Plan Scheme

*Subsidy:* 100%

*Contact:* Revenue Division level Assistant Executive Engineer (AE) of the Agricultural Engineering Department.

## 14.5 Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PMKSY-HKKO & PDMC)

- In Tamil Nadu, the Agricultural Engineering Department is coordinating these schemes (PM-RKVY, PM-KSY component like PMDC) with the officials of Agriculture, Horticulture, and Sugar Departments.
- Micro-irrigation, particularly drip irrigation, is a highly efficient water management technique for sugarcane cultivation, offering benefits like increased yield, reduced water consumption & man power, and improved fertiliser use.
- Subsidy: Small and marginal farmers get 100% subsidy, and other category" farmers get 75% subsidy.
- Beneficiary's land area limits for the purpose of subsidy: Up to 2 ha per farmer for small and marginal farmers, and up to 5 ha for other farmers.
- Example: Sugarcane- Subsidy @ ₹ 97,245/ ha for adopting drip irrigation under wider row planting (1.5 x 1.5 m). The maximum subsidy is limited to 5 ha/farmer (large farmer category).

### 14.5.1 Supplementary water management activities

To promote micro irrigation technology among the farming community by creation of water source for micro irrigation near farm gate, supplementary water management activities are being undertaken through:

(a) Sinking of shallow tube wells/ Bore wells/ wells
(b) Installation of diesel pump set/ electric motor pump set
(c) Laying of conveyance pipes &
(d) Construction of water harvesting systems for individuals

This component is implemented under the RKVY-PDMC by the Department of Agriculture and Department of Horticulture & Plantation Crops. A joint inspection of the above listed, completed components will be carried out by the Agricultural Engineering Department, along with the Agriculture and Horticulture Department Block Officials.

#### 14.5.2 Watershed Development Programme- A component of the PMKSY 2.0

- This programme is implemented under the Watershed Development Component of Pradhan Mantri Krishi Sinchayee Yojana (WDC–PMKSY 2.0)
- Aim: The scheme aims to enhance crop productivity and income of the village community in the watersheds by optimal, integrated, sustainable and efficient use of natural resources.
- Scheme area: coverage 303 watersheds in seven districts, namely Perambalur, Thoothukudi, Dindigul, Krishnagiri, Ramanathapuram, Dharmapuri and Virudhunagar, covering 1.35 lakh hectares in 303 watersheds.
- Period: The programme runs from 2021–22 to 2025–26, with an outlay of ₹300.73 crore
- The Tamil Nadu Watershed Development Agency (TAWDEVA) is the State Level Nodal Agency for the implementation of the scheme.
- Activities: Natural resources development activities in eligible watershed development works (on private/public lands) are undertaken. These works are identified by the Committee in the Watershed Area.
    - Farm pond
    - Recharge structures
    - Small, medium and large check dams
    - Desilting tanks, ponds, canals
    - Water diversion channels
    - Village pond
- In the case of development works in the private lands, an amount of 5% of the cost from the SC/ST farmers and 10% from other category farmers are charged.
- Subsidy: ₹ 28,000 per hectare.
- Contact: The President, District Watershed Development Committee or the Joint Director (Agriculture) or the Project Officer, District Watershed Development Agency Director (Dharmapuri, Dindigul, Krishnagiri, Perambalur, Ramanathapuram, Thoothukudi, and Virudhunagar districts).

**14.5.3. Watershed Development Fund scheme assisted by National Bank for Agriculture and Rural Development (NABARD)**: This scheme is implemented through Tamil Nadu Watershed Development Agency since 2004. It is funded by State Government (with 50% loan) and NABARD (50% grant assistance).

### 14.6 Rainfed Area Development (RAD) / Dryland Development Scheme

#### 1) RAD-Promotion of summer ploughing in rainfed areas

- Summer ploughing in rainfed area: 50% subsidy or @ ₹ 800 per acre; Maximum subsidy limited to ₹ 2000/- per farmer.

**2) RAD -Integrated Farming System (IFS)**

- Funding Source: Centre State sharing 60:40.
- Cultivation of crops and fodder with rearing of milch cow, poultry, apiary, and vermicompost production.
- Cluster-based approach: 20 ha or more area in one cluster has been selected in rainfed areas, irrespective of the land holding area
- Subsidy ₹ 30,000 per IFS unit for purchase of 1 milch cow or 9+1 goat.
- Subsidy also available for the purchase of vegetable seeds, cultivation of horticulture crops, beekeeping and vermi compost units.
- The pattern of assistance for each IFS unit is @ 50% subsidy limited to ₹ 30,000.

## 14.7 Rehabilitation of Open Irrigation Wells

*Purpose:* To maintain and protect open irrigation wells without protective walls, or wells remain unsafe to animals and humans, or where the surrounding wall is damaged, broken, or filled with soil. If such wells are properly repaired and maintained, it will improve their utility and irrigation efficiency. Construction of protective walls and water-level-raising structures around such wells is promoted in this scheme.

*Subsidy:* A subsidy of 50% or up to ₹ 2.5 lakhs will be provided to individual farmers.

## 14.8 Scheme on Electric Motor Pump Set

*Purpose:* In this scheme, subsidy assistance is given for the purchase of a new electric motor pump set for replacing the old ones or for the purchase of a new electric motor pump set for newly created wells.

*Eligibility:* All farmers having agricultural lands up to 5 acres are eligible to apply for this scheme.

*Subsidy:* Assistance is available for the purchase of Government approved 4 star rated electric motor pump set or to replace the old, inefficient electric motor pump set with new ones. 50% of the total cost for the purchase of an electric motor pump set, or a maximum of ₹ 15,000/-, is provided as a subsidy to the farmers.

*Funding pattern:* 60:40 between Centre and State.

## 14.9 Special Area Development Programme

*Objectives:* To restore and protect the ecology through integrated watershed management, to enhance agricultural productivity and to create sustainable livelihoods.

*Funding Source:* State Plan Scheme

*Scheme Area:*

1) Western Ghats: Hill areas and villages near forest areas of the Nilgiris, Coimbatore, Erode, Tiruppur, Dindigul, Madurai, Theni, Virudhunagar, Tirunelveli, Tenkasi, Kanyakumari districts

2) Eastern Ghats: Hill areas and villages near forest areas of the Dharmapuri, Krishnagiri, Salem, Namakkal, Erode, Kallakurichi, Dindigul, Tiruchirappalli, Tirupattur, Vellore, and Tiruvannamalai districts.

*Works undertaken*

- Wire fencing check dams (Gobion check dam)
- Check dams
- Stream bank protection walls
- Landslide prevention works
- Creation / improvement of irrigation facilities
- Renovation of water harvesting structures.

*Subsidies and Benefits:*

1. All works in Community Land – 100% subsidy.
2. For individual farmers:
    - Scheduled Tribes – 90% subsidy.
    - Scheduled Castes – 80% subsidy.
    - Other categories – 50% subsidy.

*Contact:* The Assistant Executive Engineer (AE), Special Area Development Project (SADP) or Revenue Division level Assistant Executive Engineer (AE) of the concerned project districts.

**Sources:**


- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- NABARD. 2022. Climate Change Interventions of NABARD– A Glimpse. Available at https://www.nabard.org/auth/writereaddata/Flipbook/2022/august/digital-dossier-of-climate-change-initiatives-2022/index.html
- https://tnwatershed.a2zweb.in/scheme

## (14) நீர் மேலாண்மை, நீர்வடிப் பகுதி மேம்பாடு, மழைநீர் சேகரிப்பு மற்றும் மானாவாரி நில மேம்பாடு தொடர்பான திட்டங்கள்

### 14.1 சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மானாவாரி நீர்வடிப் பகுதிகளின் பருவநிலை மாற்றப் பாதுகாப்புத் திட்டம்

*நோக்கம்*: மண் மற்றும் நீர்வளங்கள் பாதுகாப்பு, வாழ்வாதாரத்தைப் பல்வகைப்படுத்தல் மற்றும் சமூக அதிகாரமளிப்பு மூலம் மானாவாரி விவசாய முறைகளை காலநிலை மாற்றத்திற்கு தக்கவாறு தாங்கும் தன்மை உடையதாக மாற்றுதல்.

*செயல்படுத்தும் அமைப்பு*: தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை (TAWDEVA). நீர்வடிப்பகுதியில் உள்ள குழுக்கள் தேவையான பணிகளை தீர்மானித்து, பயனாளிகளை அடையாளம் காண்கின்றனர்.

*நிதி ஆதரவு*: NABARD (தேசியக் காலநிலை மாற்றத் தகவமைப்பு நிதி - NAFCC) மற்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்.

*திட்டப் பகுதி*: 19 சிறு நீர்வடிப் பகுதிகள் (சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் மற்றும் தலைவாசல் வட்டங்கள், விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி வட்டம்).

*பயனாளிகள்*: சிறு மற்றும் குறு விவசாயிகள்.

*திட்டக் காலம்:* 2019 முதல் 2023 வரை திட்டமிடப்பட்டது (சில கூறுகளின் செயல்பாடு, பருவகால மற்றும் சமூக அணிதிரட்டல் காரணமாக நீட்டிக்கப்பட்டுள்ளது).

**முக்கிய செயல்பாடுகள்**

1. *நுழைவுப் புள்ளி நடவடிக்கைகள் (EPA):* இவை உள்ளூர் சமூகத்துடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான ஆரம்பப் பணிகள் உ.ம் கிணறு மற்றும் கை பம்பு அமைத்தல், குடிநீர்க் குழாய்கள் பதித்தல், சிறு தொட்டிகள், குளங்கள் மற்றும் சமூக நீர்நிலைகள் (ஊருணி) புதுப்பித்தல், குடிநீர் விநியோகம் மற்றும் பொதுக் கட்டிடம் கட்ட ஆதரவு.

2. *நீர் சேகரிப்பு கட்டமைப்புகள்*: பண்ணை குளங்கள், தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டை/ சுனைநீர்த் தொட்டிகள் அமைத்தல்.

3. *மண் மற்றும் நீர்வளங்கள் பாதுகாப்பு*: சமமட்ட வரப்பு அமைத்தல், தாவர தடுப்புகள், மழைநீர் பள்ளங்கள் தோண்டுதல்.

*தனியார் நிலங்களில் மேற்கொள்ளப்படும் சில திட்ட வேலைகள்*: பயன்படுத்தப்படாத நிலங்களை மீட்டெடுத்தல் மற்றும் மேம்படுத்துதல், வண்டல்மண் பரப்புதல், பண்ணைக் குளங்கள் கட்டுதல், தீவனப் பயிர் சாகுபடி, பயிர் எச்சங்கள் மற்றும் தொழு உரங்களை உழவு மூலம் மண்ணில் மடக்குதல், உயிர்ம உரம், பசுந்தாள் உரம் மற்றும் ஊட்டமேற்றிய தொழு உரம் இடுதல் மற்றும் கிணறுகளைத் தூர் வாருதல்.

*பொது நிலங்களில் மேற்கொள்ளப்படும் சில திட்ட வேலைகள்*: வயல் வரப்புகள் / பிரிவு வரப்புகள் அமைத்தல், உயிர் வேலி அமைத்தல், நடுத்தர மற்றும் பெரிய தடுப்பணைகள் கட்டுதல், நீர் செறிவூட்டும் அமைப்புகள் கட்டுதல், கசிவு நீர்க் குளங்கள், ஊருணிகளில் தூர் வாருதல், மற்றும் சுனைநீர் குளங்கள் கட்டுதல்.

4. *காடு வளர்ப்பு மற்றும் மேய்ச்சல் வசதி மேம்பாடு*: மரம் நடுதல், தீவனப் புல் தொகுப்புகள் உருவாக்குதல்.

5. *வாழ்வாதார ஆதரவுகள்*: கறவை மாடு வளர்த்தல், ஆடு வளர்ப்பு, தோட்டக்கலை, காலநிலை மாற்றத்தைத் தாங்கும் பயிர் இரகங்களை சாகுபடி செய்தல், மாற்றுப் பயிர் முறைகள், குறுகிய கால இரகங்கள், நீர்ப்பாசன மேலாண்மை திடல் விளக்கம், வீட்டுத் தோட்டங்கள் மற்றும் பண்ணைக் குளங்களில் மீன் வளர்ப்பு ஆகியன ஊக்குவிக்கப்படுகிறது.

6. *திறன் மேம்பாடு*: காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நடைமுறைகள் பற்றிய பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

## 14.2 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்

*நோக்கம்:* மழைநீரை சேகரித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துதல்.

***மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரம்:***

*1) தற்போதுள்ள நீர்சேகரிப்பு அமைப்புகளின் பராமரிப்பு:* மழை நீரை அறுவடை செய்து, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தி தரிசு நிலங்களை / வறட்சி பகுதிகளை மேம்படுத்த, வறட்சி பாதிப்பு பகுதிகள் திட்டம் (DPAP), ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IWDP) மற்றும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் (IWMP) ஆகிய திட்டங்களின் கீழ் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை (TAWDEVA) உருவாக்கிய மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் இத்திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படுகின்றன (புல் புதர்களை நீக்குதல் உட்பட). இத்தகைய நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மாவட்டக் குழுவால் அடையாளம் காணப்பட்டு, மாவட்ட ஆட்சியர் ஒப்புதலுடன் வேளாண் பொறியியல் துறையால் பராமரிக்கப்படுகின்றன.

*2) புதிய நீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்குதல்:* இத்திட்டத்தின்கீழ், புதிய மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் (எ.கா., சமூகக் குளங்கள் / குட்டைகள்) உருவாக்குவதற்கு வேளாண் பொறியியல் துறையின் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. புதிய மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்க புறம்போக்கு நிலங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

*திட்டப் பகுதி:* தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்களைத் தவிர, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

*முன்னுரிமைப் பகுதி*:

- புதிய பணிகள் - மாநிலத்தில் அடையாளம் காணப்பட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகள்
- பராமரிப்புப் பணிகள் - மாவட்ட அளவிலான குழுவால் அடையாளம் காணப்பட்டு மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட நீர் சேகரிப்பு/சேமிப்பு கட்டமைப்புகள்.

*செயல்படுத்தும் துறை*: தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை

*மானியம்:* மாநில நிதி மூலம் 100% மானியம் வழங்கப்படுகிறது. தனிநபர் விவசாயிகளுக்கு 50% மானியம் அல்லது அதிகபட்சம் ரூ. 2.5 லட்சம் வரை பின் ஏற்பு மானியம் வழங்கப்படும்.

*தொடர்புக்கு:* வட்டார அளவிலான வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் (AE) அவர்களை அணுகவும்.

## 14.3 அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

*நோக்கங்கள்*: பருவமழையின் போது வளமான வண்டல்மண் நீர்த்தேக்கங்களின் நீர்பிடிப்புப் பகுதிகளிலிருந்து ஓடைகள் வழியே அடித்து செல்லப்படுவதைத் தடுத்தல் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மண் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பல்நோக்கு நீர்த்தேக்கங்களின் நீர் சேமிப்பு திறனை நிலைப்படுத்துதல்.

*திட்டப் பகுதி*: தேனி மாவட்டத்தில் வைகை அணை நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணை நீர்ப்பிடிப்பு பகுதி.

*நிதி ஆதாரம்*: உலக வங்கி உதவியோடு செயல்படும் மாநிலத் திட்டம்

*பணிகளின் விவரம்*:

- தாவரப் போர்வையுடன் கூடிய வயல் வரப்புகள்
- ஓடை பராமரிப்பு பணிகள் (ஓடைக் கரை பாதுகாப்பு சுவர்கள்)
- கம்பி வேலி தடுப்பணைகள் (கேபியன் தடுப்பணை)
- தடுப்பணைகள்
- வண்டல் படிவு (சேறு) கண்காணிப்பு நிலையங்கள்

*மானியம்*: அனைத்துப் பணிகளுக்கும் 100%

*தொடர்புக்கு*: சம்பந்தப்பட்ட திட்ட மாவட்டத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் அவர்களை அணுகவும்.

## 14.4 ‘C’ மற்றும் ‘D’ வகை வாய்க்கால்களைத் தூர் வாருதல் / கடைமடை உழவர்களுக்கும் தடையற்ற பாசனம்

*நோக்கம்*: பாசன வாய்க்கால்களில் நீர் சீராக ஓடுவதை உறுதி செய்து, ஆற்று/கால்வாய் பாசனப் பகுதியின் கடைமடைப் பகுதிகளுக்கு தேவையான அளவு பாசன நீரை சரியான நேரத்தில் வழங்குதல்.

*திட்டப் பகுதி*: காவிரி, வெண்ணாறு, வெள்ளாறு ஆற்றுப் படுகைகள் மற்றும் கல்லணை கால்வாய் பகுதிகளில் (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்) உள்ள ‘C’ மற்றும் ‘D’ வகை வாய்க்கால்கள்.

*பணிகளின் விவரம்*: புதர்கள் மற்றும் செடிகள் அகற்றுதல் மற்றும் ‘C’ மற்றும் ‘D’ வகைப் பாசன வாய்க்கால்களில் தூர் வாருதல்.

**C-வகை வாய்க்கால்கள்**: பெரிய பாசன வாய்க்கால்களிலிருந்து கிளைத்து செல்லும் நடுத்தர அளவிலான விநியோக வாய்க்கால்கள். இவை, கிராம அல்லது வட்டார அளவிலான வயல்களுக்கு நீர் கொண்டு செல்லும்.

**D-வகை வாய்க்கால்கள்**: விவசாயிகளின் வயல்களுக்கு நேரடியாக நீர் வழங்கும் சிறிய கடைமடை வாய்க்கால்கள். இவை டெல்டா பகுதிகளில் நீர் விநியோகச் சமநிலைக்கு மிகவும் முக்கியமானவை.

*நிதி ஆதாரம்*: மாநில அரசுத் திட்டம்

*மானியம்:* 100%

*தொடர்புக்கு:* வருவாய் கோட்ட அளவிலான வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் (AE) அவர்களை அணுகவும்.

## 14.5 பிரதம மந்திரி வேளாண் பாசனத் திட்டம்: ஒவ்வொரு வயலுக்கும் நீர் & ஒரு துளியில் அதிக விளைச்சல் (PMKSY-HKKO & PDMC)

- பிரதம மந்திரி கிருஷி சிஞ்சாயி யோஜனா மற்றும் அதன் துணைத் திட்டங்களை PM-RKVY, PM-KSY-ன் அங்கமான PDMC) தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைக் துறை மற்றும் சர்க்கரைத் துறைகளின் அதிகாரிகளுடன் இணைந்து வேளாண்மைப் பொறியியல் துறை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துகிறது.
- நுண் நீர்ப்பாசனம், குறிப்பாக சொட்டு நீர்ப்பாசனம், கரும்பு சாகுபடிக்கு மிகவும் ஏற்ற நீர் மேலாண்மை நுட்பமாகும். இது அதிக மகசூல், குறைந்த நீர்த் தேவை, குறைவான ஆட்கள் மற்றும் மேம்பட்ட உர நிர்வாகம் போன்ற நன்மைகளை வழங்குகிறது.
- மானியம்: சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100% மானியமும், மற்றப் பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 75% மானியமும் வழங்கப்படுகிறது.
- பயனாளிக்கு மானியத்திற்காக வரையறுக்கப்பட்ட நில வரம்பு: சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஒரு விவசாயிக்கு 2 ஹெக்டேர் வரை, மற்ற விவசாயிகளுக்கு 5 ஹெக்டேர் வரை.
- உதாரணம்: கரும்பு- அகலப் பார் நடவு (1.5 x 1.5 மீ) முறையில் சொட்டுநீர்ப்பாசனம் அமைப்பதற்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 97,245 மானியம் வழங்கப்படுகிறது. அதிகபட்ச மானியம் ஒரு விவசாயிக்கு 5 ஹெக்டேர் வரை (பெரு விவசாயிகள்) வழங்கப்படுகிறது.

### 14.5.1 துணை நீர் மேலாண்மை நடவடிக்கைகள்

வேளாண் சமூகத்தினரிடையே நுண் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தை ஊக்குவிக்கவும், பண்ணை அருகே நுண் பாசனத்திற்கான நீர் ஆதாரத்தை உருவாக்கவும், பின்வரும் துணை நீர் மேலாண்மை நடவடிக்கைகள் (SWMA) மேற்கொள்ளப்படுகின்றன:

(அ) ஆழம் குறைந்த குழாய்க் கிணறுகள்/ ஆழ்துளைக் கிணறுகள்/ கிணறுகள் அமைத்தல்
(ஆ) டீசல் பம்ப் செட்/ மின் மோட்டார் பம்ப் செட் பொருத்துதல்
(இ) பாசனக் குழாய்கள் அமைத்தல்
(ஈ) தனிநபர்களுக்கான மழைநீர் சேகரிப்பு அமைப்புகளைக் கட்டுதல்

RKVY-PDMC திட்டத்தின் இந்தக் கூறு வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகளால் செயல்படுத்தப்படுகிறது. முடிக்கப்பட்ட, மேற்கண்ட திட்டங்களின் கூட்டு ஆய்வினை வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை ஆகியவை வட்டார அதிகாரிகளுடன் இணைந்து நடத்துகிறது.

### 14.5.2 நீர்வடிப் பகுதி மேம்பாட்டு திட்டம் (PMKSY 2.0 -ன் ஒரு கூறு)

- இந்தத் துணைத் திட்டம் பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாயீ யோஜனா-நீர்வடிப் பகுதி மேம்பாட்டுக் கூறின் (WDC–PMKSY 2.0) இன் கீழ் செயல்படுத்தப்படுகிறது.
- நோக்கம்: இயற்கை வளங்களை ஒருங்கிணைந்த, நீடித்த மற்றும் திறமையான முறையில் பயன்படுத்தி நீர்வடிப் பகுதிகளில் உள்ள கிராம சமூகத்தின் பயிர் உற்பத்தித்திறனையும், வருமானத்தையும் உயர்த்துவதாகும்.

- திட்டப் பகுதி: பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தர்மபுரி மற்றும் விருதுநகர் ஆகிய 7 மாவட்டங்களில் 303 நீர்ப்பிடிப்புகளை உள்ளடக்கிய 1.35 லட்சம் ஹெக்டேரில் செயல்படுத்தப்படுகிறது.
- காலம்: 2021–22 முதல் 2025–26 வரை, ரூ 300.73 கோடி நிதி ஒதுக்கீட்டுடன்.
- திட்டச் செயலாக்க நிறுவனம்: தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை (TAWDEVA) மாநில அளவிலான திட்டச் செயலாக்க முகமையாக செயல்படுகிறது.
- திட்ட நடவடிக்கைகள்: தகுதியான நீர்ப்பிடிப்பு பகுதிகளில் (தனியார் / பொது நிலங்கள்) இயற்கை வள மேம்பாடு.
    - பண்ணைக் குட்டைகள்
    - நீர் செறிவூட்டும் அமைப்புகள்
    - சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தடுப்பணைகள்
    - ஏரிகள், குளங்கள், வாய்க்கால்களை தூர் வாருதல்
    - மடை மாற்றும் வாய்க்கால்கள்
    - ஊருணி
- தனியார் நிலங்கள் மேம்பாட்டுக்கு செலவில் 5% (எஸ்.ஸி./எஸ்.டி விவசாயிகள்) முதல் 10% (பிற பிரிவினர்) வரை வசூலிக்கப்படும்.
- மானியம்: ஹெக்டேருக்கு ரூ. 28,000.
- தொடர்புக்கு: மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டுக் குழு தலைவர் அல்லது வேளாண்மை இணை இயக்குநர் அல்லது மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை திட்ட அலுவலர் (தர்மபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், ராமநாதபுரம், தூத்துக்குடி, மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்).

**14.5.3 நபார்டு உதவியுடன் கூடிய நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி:** இத்திட்டம், 2004 முதல் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு நிதியளிப்பு-மாநில அரசு (50% கடன்) மற்றும் NABARD (50% மானிய உதவி).

## 14.6 மழைசார்ந்த பகுதி மேம்பாட்டுத் திட்டம் (RAD) / மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**1) RAD - மழை சார்ந்த பகுதிகளில் கோடை உழவை ஊக்குவித்தல்**

- மானாவாரி பகுதிகளில் கோடை உழவு மேற்கொள்ள: 50% மானியம் அல்லது ஏக்கருக்கு ரூ. 800 வழங்கப்படும்; ஒரு விவசாயிக்கு அதிகபட்ச மானியம் ரூ. 2,000.

**2) RAD - ஒருங்கிணைந்த பண்ணையம் (IFS)**

- நிதி ஆதாரம்: மத்திய-மாநில அரசின் நிதிப் பகிர்வு விகிதம் முறையே 60:40.
- நோக்கம்: உணவு தானிய பயிர்களுடன் தீவனப் பயிர் சாகுபடி, பால் மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மண்புழு உரப் படுக்கை போன்றவற்றை ஒருங்கிணைந்த பண்ணையமாக மாற்றுதல்.
- தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறை: தனிநபர் நில உடமை அளவு எவ்வளவாக இருந்தாலும், மழை சார்ந்த பகுதிகளில் ஒரு தொகுப்புக்கு 20 ஹெக்டேர் அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகள் இத்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும்.

- மானியம்: ஓர் ஒருங்கிணைந்த பண்ணைய அலகிற்கு 1 பால் மாடு அல்லது 9+1 ஆடுகள் வாங்குவதற்கு ரூ. 30,000 மானியம் வழங்கப்படுகிறது.
- மேலும், காய்கறி விதைகள் வாங்குதல், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி, தேனீ வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு ஆகியவற்றிற்கும் மானியம் வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஒருங்கிணைந்த பண்ணைக்கும் 50% மானியம் வழங்கப்படுகிறது (அதிகபட்சமாக ரூ. 30,000 வரை).

## 14.7 திறந்தவெளிப் பாசனக் கிணறுகளைப் புனரமைத்தல்

*நோக்கம்:* பாதுகாப்பு சுவர்கள் அற்ற திறந்தவெளி நீர்ப்பாசன கிணறுகளைப் பராமரித்தல் /பாதுகாத்தல்; விலங்குகள் மற்றும் மனிதர்களுக்குப் பாதுகாப்பற்றதாக இருக்கும் கிணறுகள், அல்லது சுற்றியுள்ள சுவர் சேதமடைந்து, உடைந்து, மண்ணால் நிரம்பியது போன்ற திறந்த பாசனக்கிணறுகள் முறையாகப் பராமரிக்கப்பட்டு அதன் பயன்பாடு மற்றும் பாசனத் திறனை அதிகரித்தல். இத்திட்டத்தின்கீழ் கிணறுகளின் பாதுகாப்புச் சுவர்கள் மற்றும் நீர் மட்டத்தை உயர்த்தும் அமைப்புகள் கட்டுவதற்கு உதவி வழங்கப்படுகிறது.

*மானியம்:* தனிநபர் விவசாயிகளுக்கு 50% மானியம் அல்லது அதிகபட்சம் ரூ. 2.5 லட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

## 14.8 மின் மோட்டார் பம்ப் செட் திட்டம்

*நோக்கம்:* இந்தத் திட்டத்தில் பழைய மின் மோட்டார்களை மாற்றுவதற்கும், புதிய மின்சார மோட்டார் பம்ப் செட்டுகள் வாங்குவதற்கும் அல்லது புதிதாக உருவாக்கப்பட்ட கிணறுகளுக்குப் புதிய மின்மோட்டார் பம்ப் செட் வாங்குவதற்கும் மானிய/நிதி உதவி வழங்கப்படுகிறது.

*தகுதி:* 5 ஏக்கர் வரை விவசாய நிலங்களைக் கொண்ட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

*மானியம்:* அரசால் அங்கீகரிக்கப்பட்ட 4-நட்சத்திர மதிப்பீட்டுப் பெற்ற மின் மோட்டார் பம்ப் செட் வாங்குவதற்கும் அல்லது பழைய, குறைந்த திறனுடைய மின் மோட்டார் பம்ப் செட்டை புதியதாக மாற்றுவதற்கும் மானியம் வழங்கப்படுகிறது. மொத்தச் செலவின் 50% வரை மானியம் அல்லது அதிக பட்சம் ரூ. 15,000 வரை மானியம் வழங்கப்படுகிறது.

*நிதிப் பகிர்வு:* மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பகிர்வு 60:40 ஆகும்.

## 14.9 சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

*நோக்கம்:* நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மேலாண்மை அணுகுமுறை மூலம் சுற்றுசூழலை மறுசீரமைத்து, பாதுகாத்து, வேளாண் உற்பத்தித்திறனைப் பெருக்கி, நீடித்த நிலையான வாழ்வாதாரங்களை உருவாக்குதல்.

*நிதி ஆதாரம்*: மாநிலத் திட்டம்

*திட்டப் பகுதி*:

1) மேற்கு தொடர்ச்சி மலைகள்: நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களின் மலைப்பகுதிகள் மற்றும் வனப்பகுதியின் விளிம்பில் உள்ள கிராமங்கள்.

2) கிழக்கு தொடர்ச்சி மலைகள்: தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களின் மலைப்பகுதிகள் மற்றும் வனப்பகுதியின் விளிம்பில் உள்ள கிராமங்கள்.

*மேற்கொள்ளப்படும் பணிகள்*

- கம்பி வேலி தடுப்பணைகள் (கேபியன் தடுப்பணைகள்)
- தடுப்பணைகள்
- ஓடை பராமரிப்புப் பணிகள் (கரைகளை பலப்படுத்துதல்)
- நிலச்சரிவு தடுப்புப் பணிகள்
- புதிய நீர் ஆதாரங்களை உருவாக்குதல் / பாசன வசதிகளை மேம்படுத்துதல்
- நீர் சேகரிப்பு கட்டமைப்புகளைப் புனரமைத்தல்

*மானியம் மற்றும் நன்மைகள்:*

1. சமூக நிலங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளுக்கும்- 100% மானியம்.

2. தனிநபர் விவசாயிகளுக்கு:

    - பழங்குடியினர் - 90% மானியம்
    - தாழ்த்தப்பட்டோர் - 80% மானியம்
    - பிற வகையினர் - 50% மானியம்

*தொடர்புக்கு:* சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் உதவி செயற்பொறியாளர் (AE) அல்லது சம்பந்தப்பட்ட திட்ட மாவட்டத்தின் வருவாய் கோட்ட அளவிலான உதவி செயற்பொறியாளர் (AE) அவர்களை அணுகவும்.

**ஆதாரங்கள்:**


- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- NABARD. 2022. Climate Change Interventions of NABARD– A Glimpse. Available at https://www.nabard.org/auth/writereaddata/Flipbook/2022/august/digital-dossier-of-climate-change-initiatives-2022/index.html
- https://tnwatershed.a2zweb.in/scheme

## (15) Other Schemes Implemented by the Departments of the Agriculture, Horticulture, Agricultural Engineering

### 15.1 Agroforestry Scheme

- Funding Source: Centre State sharing 60:40.
- Subsidy for the establishment of forest nurseries: Small nursery of < 1 ha (Actual area 1 ha or less, but nursery area may be 0.5 ha) -Subsidy up to ₹ 5 lakhs per nursery.
- Nurseries established under the Agroforestry scheme have to be Geo-Tagged in the 'Krishimapper App' of the Government of India.
- Seed source for raising Quality Planting Material (QPM) may be sourced from the Forest Department, Forest College and Research Institute, TNAU.
- The emphasis shall be given for raising the site-specific, high-value, native tree species such as Mahogany, *Melia dubia*, Red Sanders, Sandal, Rosewood, Teak, Neem, Pungam, etc.
- The concerned Blocks ADAs will identify the eligible private nurseries and implement the scheme.
- The tree saplings raised in the Government nurseries will be distributed to the farmers at 100% subsidy @ 160 saplings for general planting or 500 saplings for high density planting (max: 2 ha per farmer) by the concerned District JD- Agriculture.

### 15.2 Crop Diversification Programme (CDP)

- Under this scheme, farmers are encouraged to cultivate vegetables as an alternative crop to Tobacco.
- Subsidy of ₹ 20,000 per ha per farmer, for a maximum of 2 ha will be given.

### 15.3 Crop Insurance Scheme

- Crops overed: Field crops such as Paddy (Thanjavur, Thiruvarur, Nagapattinam, Ramanathapuram, Sivagangai, Ariyalur districts), Maize (Coimbatore, Salem, Erode, Dindigul, Madurai districts), Cumbu and Cholam in dry districts, black gram, green gram, red gram, ground nut (Villupuram, Thiruvannamalai districts), gingelly, sunflower, cotton (Coimbatore, Virudhunagar, Salem, and Perambalur districts) sugarcane and horticultural crops like banana, brinjal, tomato, onion, tapioca and turmeric.
- The Central Government decides the premium paid by farmers for crop insurance (under PM-FBY). The premiums paid by farmers are usually lower than the maximum premium determined for a particular indemnity level of insurance. For example, the premium paid by farmers for the Kharif season crop in TN is 2% of the total premium determined for a crop; 1.5% for the Rabi season crop; and 5% for annual or perennial horticultural crops.
- The remaining premiums are borne by the Central and State Governments on a 50:50 share basis. In Tamil Nadu, for irrigated districts, a -25% premium and for rainfed districts – 30% premium are paid by the Central and State Governments.

### 15.4 Hill Farmers Development Scheme

- The scheme is specifically designed for hill and upland farmers in Tamil Nadu and was announced in the 2025-26 budget.
- Outlay: 22.80 crores to cover 63,000 hill farmers in 20 districts
- Eligible Area: 20 Districts - Tiruvannamalai, Nilgiris, Salem, Kallakurichi, Namakkal, Tiruchirappalli, Dindigul, Tiruppattur, Tirunelveli, Vellore, Kanyakumari, Theni, Tenkasi, Virudhunagar, Krishnagiri, Dharmapuri, Erode, Tiruppur, Villupuram, Coimbatore
- Modus operandi: By integrating various schemes of the Department of Agriculture, Horticulture and Plantation crops, Agricultural marketing, Agri Business and Agricultural Engineering.
- Focused crops and activities:
  a) Minor millets cultivation (*e.g.,* varagu, thinai, etc.)
  b) Expansion of hill vegetables
  c) Value-addition of agricultural produce
  d) Integrated farming systems
  e) Micro-irrigation
  f) Farm mechanisation
  g) Distribution of farm inputs (seeds, fertilisers, etc.)
- This scheme will also provide Kisan credit cards to the beneficiaries to help them to obtain farm credit and finance.

### 15.5 Kisan Credit Card

- Under this scheme, farmers are given collateral free loan up to ₹1.60 lakh based on the extent of land holding and the extent of crop.
- Nationalised Banks, Co-operative Banks and Regional Rural Banks in Tamil Nadu are issuing KCC.

### 15.6 Soil Health Card Scheme

- Earlier it was covered under the NADP, and then under the RKVY and now KAVIADS.
- Soil samples are collected in a particular field once every 3 years.
- It is planned to collect, analyse and distribute 4 lakh soil health cards during 2025-26 at the cost of ₹ 300 per soil sample.
- Soil Sampling and Health Card demonstration and awareness campaign under KAVI-ADS: @ 5 demos per Block at the cost of ₹ 5,000/ per demo (1,150 demos in 21 districts).
- To create awareness among school children on soil health, 2 State Government Schools and 1 PM Shri KV School will be selected for implementing the Soil Health Card Programme.

## 15.7 State Horticulture Development Scheme (SHDS)

- *Coconut area expansion:* Subsidy 50% or ₹ 12,000/ha per farmer for a maximum of 2 ha per farmer.
- *Ber area expansion*: Subsidy 40% or ₹ 18,000/ha per farmer for a maximum of 2 ha per farmer.
- *Loose flower area expansion:* Subsidy 40% or ₹ 18,000/ha per farmer for a maximum of 2 ha per farmer.
- *Vertical gardening and Roof Gardening for area expansion of horticulture crops*- Distribution of terrace garden kits containing 6 kinds of vegetable seeds, polybags, coir pith, biofertilizers, biopesticides and neem oil- 50% subsidy or ₹ 450 per family, maximum 2 kits per family.
- *Distribution of vegetable seeds- fruit plants sapling kits*: 6 vegetables (tomato, brinjal, chilli, okra, cluster bean and green vegetables) and 3 orchard plants (Guava, papaya and lemon) will be distributed at 75% subsidy.
- Promotion of hi-tech protected cultivation methods.
- *Promotion of intercropping*; Seeds of cowpea will be given free of cost to promote intercropping in coconut. Subsidy @ 50% is available for farmers growing nutmeg, banana or bush pepper or intercropping in Jack fruit plantation.
- Establishment of low-cost onion storage structures
- *Chillies cultivation after removal of Prosopis tree:* 40% subsidy or ₹ 12,000/ha per farmer for a maximum of 2 ha per farmer.
- Establishment of cottage mushroom units.
- *Promotion of traditional vegetable cultivation*: Launched in 2025-26 to encourage farmers to cultivate traditional varieties of vegetables. Cultivation of traditional vegetable varieties such as Manaparrai Kathari, Sillukodi Kathari, Kulasai Kathari, Periya Kollampatti Kathari, Tharuvai Thakkali, Manjalkudam Thakkali, Anaikomban Vendai, Sivappu Vendai, Siragu Avarai and Mukkuthi Avarai will be encouraged. Subsidy for area expansion- 40% or ₹ 2,400/ha per farmer for a maximum of two ha per farmer.
- *Special Schemes:*

  *(i) Special scheme for jasmine:* In the districts of Madurai, Dharmapuri, Thiruvallur, Salem, Dindigul, Thiruvannamalai, Krishnagiri and Erode.

  *(ii) Special scheme for scented rose cultivation*: In Tamil Nadu, scented roses are cultivated widely in an area of 9,600 acres in Krishnagiri, Dharmapuri, Tiruvannamalai, Salem, Dindigul and Tirupattur districts.

  *(ii) Special scheme for spices and condiments*: Cultivation of important spices like pepper, coriander, chillies, nutmeg, cloves, cinnamon, garlic, ginger and turmeric will be promoted.

## 15.8 Sugarcane Development Scheme

- *Incentive Cane Price:* Incentive of ₹ 349 per ton of cane, so the total price will be ₹ 3,500 per ton for the 2024-25 season.
- *Micro-irrigation scheme:* Drip and Sprinkler irrigation will be promoted to increase water use efficiency. For the setting up of drip irrigation in sugarcane fields, 100% subsidy is extended to small and marginal farmers and 75% subsidy to other farmers. Special financial assistance of ₹32,715 to ₹43,534 per ha is given to farmers from the State fund for the procurement of equipment required for installing drip irrigation.
- *Sugarcane Harvesters*: So far, 119 harvesters have been provided till 2023-24.
- *Infrastructure development in sugar mills:* In Cooperative (12 Nos) and public sector (2 mills) sugar mills, works such as construction of cement concrete sugarcane yard for easy operation of sugarcane-loaded vehicles, installation of Hydraulic tipplers for unloading mechanically harvested sugarcane loads, and modernising weigh bridges

## 15.9 TN Cotton Production Enhancement Scheme

- This Scheme has been in force since 2021-22.
- Subsidy of ₹ 2,400/acre (100% subsidy) for farmers adopting high density planting system (HDPS).
- Adoption of ecologically benign IPM– subsidy ₹ 1960/acre
- Distribution of micronutrient at 75% subsidy or ₹ 500/acre.
- Hiring charges for drone spray: ₹ 500/acre or 50% subsidy, whichever is lesser.

**Sources:**


- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for Agriculture and Farmers' Welfare. Government of Tamil Nadu.
- https://cmhelpline.tnega.org/

# (15) வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பிறத் திட்டங்கள்

## 15.1 வேளாண் காடுகள் திட்டம்

- நிதி ஆதாரம்: மத்திய-மாநில அரசின் நிதிப் பகிர்வு விகிதம் 60:40.
- வன நாற்றங்கால் அமைப்பதற்கான மானியம்: 1 ஹெக்டேருக்குக் குறைவான சிறிய நாற்றங்கால் அமைக்க (உண்மையான பரப்பு 1 ஹெக்டேர் அல்லது அதற்குக் குறைவாக இருக்கலாம், ஆனால் நாற்றங்கால் பகுதி 0.5 ஹெக்டேராக இருக்கலாம்) ஒரு நாற்றங்காலுக்கு ரூ. 5 லட்சம்.
- வேளாண் காடுகள் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நாற்றங்கால்கள், இந்திய அரசின் 'கிருஷிமேப்பர்' செயலியில் ஜியோ-டேக் செய்யப்பட வேண்டும்.
- தரமான நாற்றுகளை வளர்ப்பதற்கான ஆதார விதைகளை வனத்துறை, மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து பெறலாம்.
- மஹோகனி, மலை வேம்பு, செம்மரம், சந்தனம், ஈட்டி, தேக்கு, வேம்பு, புங்கம் போன்ற விலையுயர்ந்த, உள்ளூர் மர இனங்களை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
- சம்பந்தப்பட்ட வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் தகுதியான தனியார் நாற்றங்கால்களை அடையாளம் கண்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவார்கள்.
- அரசு நாற்றங்கால்களில் வளர்க்கப்படும் மரக்கன்றுகள், சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அவர்களால் விவசாயிகளுக்கு 100% மானியத்தில் விநியோகிக்கப்படும். இது சாதாரண நடவுக்கு 160 மரக்கன்றுகள் அல்லது அடர் நடவுக்கு 500 கன்றுகள் (ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர் வரை) என்ற அளவில் வழங்கப்படும்.

## 15.2 மாற்றுப் பயிர் சாகுபடி திட்டம் (CDP)

- இத்திட்டத்தின் கீழ், விவசாயிகள் புகையிலைக்கு மாற்றுப் பயிராகக் காய்கறிகளைப் பயிரிட ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
- ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 20,000 மானியம் வீதம், அதிகபட்சமாக 2 ஹெக்டேருக்கு வழங்கப்படும்.

## 15.3 பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

- காப்பீடு செய்யப்படும் பயிர்கள்: நெல் (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், சிவகங்கை, அரியலூர் மாவட்டங்கள்); மக்காச்சோளம் (கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திண்டுக்கல், மதுரை); வறண்ட மாவட்டங்களில் கம்பு மற்றும் சோளம், உளுந்து, பாசிப்பயறு, துவரை; நிலக்கடலை (விழுப்புரம், திருவண்ணாமலை); எள், சூரியகாந்தி, பருத்தி (கோயம்புத்தூர், விருதுநகர், சேலம் மற்றும் பெரம்பலூர்); கரும்பு மற்றும் வாழை, கத்தரி, தக்காளி, வெங்காயம், மரவள்ளி, மஞ்சள் போன்ற தோட்டக்கலைப் பயிர்களும் காப்பீடு செய்யப்படுகின்றன.

- பயிர் காப்பீட்டிற்காக விவசாயிகள் செலுத்தும் பிரீமியத்தை மத்திய அரசு (PMFBY-திட்டத்தின் கீழ்) தீர்மானிக்கிறது. பொதுவாக, விவசாயிகள் செலுத்தும் பிரீமியம், குறிப்பிட்ட இழப்பீட்டு நிலைக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச பிரீமியத்தை விடக் குறைவாகவே இருக்கும். உதாரணமாக, தமிழ்நாட்டில், காரிஃப் பருவப் பயிர்களுக்கு விவசாயிகள் செலுத்தும் பிரீமியம், மொத்த பிரீமியத்தில் 2% ஆகும்; ரபி பருவப் பயிர்களுக்குப் பிரீமியம் 1.5%; வருடாந்திர அல்லது பல்லாண்டுத் தோட்டக்கலைப் பயிர்களுக்கு பிரீமியம் 5% ஆகும்.
- மீதமுள்ள தவனைத் தொகையை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50:50 விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. தமிழ்நாட்டில், நீர்ப்பாசன வசதியுள்ள மாவட்டங்களுக்கு 25% பிரீமியம் மற்றும் மழைமறை (மானாவாரி) மாவட்டங்களுக்கு 30% பிரீமியம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் செலுத்தப்படுகிறது.

## 15.4 மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம்

- 2025-26 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம், தமிழ்நாட்டில் உள்ள மலை மற்றும் மேட்டுப்பாங்கான இடத்தில் வசிக்கும் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- நிதி: 20 மாவட்டங்களில் உள்ள 63,000 மலைவாழ் விவசாயிகளை உள்ளடக்கும் வகையில் ரூ. 22.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தகுதியான மாவட்டங்கள் (20): திருவண்ணாமலை, நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருப்பத்தூர், திருநெல்வேலி, வேலூர், கன்னியாகுமரி, தேனி, தென்காசி, விருதுநகர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, திருப்பூர், விழுப்புரம், மற்றும் கோயம்புத்தூர்.
- செயல்படுத்தும் முகமை: வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைத் தோட்டப்பயிர்கள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறைகளின் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- கவனம் செலுத்தப்படும் பயிர்கள் மற்றும் செயல்பாடுகள்:
    - அ) சிறுதானிய சாகுபடி (உ.ம்., வரகு, தினை போன்றவை)
    - ஆ) மலைப் பகுதியில் விளையும் காய்கறிகளின் சாகுபடியை விரிவாக்குதல்
    - இ) விவசாய விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல்
    - ஈ) ஒருங்கிணைந்த பண்ணையம்
    - உ) நுண் நீர்ப்பாசனம்
    - ஊ) பண்ணை இயந்திரமயமாக்கல்
    - எ) விவசாய இடுபொருட்கள் (விதைகள், உரங்கள் போன்றவை) விநியோகம்
- இத்திட்டத்தின் மூலம் பயனாளிகள் விவசாயக் கடன் மற்றும் நிதியுதவி பெறும் வகையில் உழவர் கடன் அட்டைகளும் வழங்கப்படுகின்றன.

## 15.5 உழவர் கடன் அட்டை (KCC)

- இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயிகளின் நில அளவு மற்றும் பயிர் சாகுபடி பரப்பின் அடிப்படையில் ரூ. 1.60 லட்சம் வரை அடமானமின்றி கடன் பெற முடியும்.
- தமிழ்நாட்டில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் ஆகியவை உழவர் கடன் அட்டைகளை வழங்கி வருகின்றன.

## 15.6 மண்வள அட்டைத் திட்டம்

- இந்தத் திட்டம் முன்பு NADP-இன் கீழ் செயல்படுத்தப்பட்டது, பிறகு RKVY-இன் கீழ் கொண்டுவரப்பட்டது, தற்போது KAVIADS-இன் கீழ் செயல்படுத்தப்படுகிறது.
- இத்திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட நிலத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மண் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன.
- 2025-26 ஆம் ஆண்டில் ஒரு மண் மாதிரிக்கு ரூ. 300 செலவில், 4 லட்சம் மண் மாதிரிகள் சேகரித்து, பகுப்பாய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- KAVIADS திட்டத்தின் கீழ், மண் மாதிரி எடுத்தல், மண் வள அட்டை பற்றிய செயல் விளக்கம் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம்: ஒரு செயல் விளக்கத்திற்கு ரூ. 5,000 செலவில் ஒரு வட்டாரத்திற்கு 5 செயல் விளக்கங்கள் வீதம் 21 மாவட்டங்களில் சுமார் 1,150 செயல் விளக்கங்கள் நடத்தப்படவுள்ளது.
- மண்வளம் குறித்த விழிப்புணர்வை பள்ளி மாணவர்களிடையே ஏற்படுத்துவதற்காக, 2 மாநில அரசுப் பள்ளிகள் மற்றும் 1 பி. எம். ஸ்ரீ. கே. வி. பள்ளிகள் இத்திட்டத்தை செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்படும்.

## 15.7 மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்கள் (SHDS)

- *தேங்காய் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்:* 50% மானியம் அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ. 12,000 வீதம், ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படுகிறது.
- *இலந்தை சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்*: 40% மானியம் அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ. 18,000 வீதம் ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படுகிறது.
- *உதிரிப் பூக்கள் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்*: 40% மானியம் அல்லது ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர் வரை ஒரு ஹெக்டேருக்கு ரூ. 18,000 வரை மானியம் வழங்கப்படும்.
- *தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கத்திற்காகச் செங்குத்துத் தோட்டம் மற்றும் மாடித் தோட்டம்*: 6 வகையான காய்கறி விதைகள், பைகள், தென்னை நார்க் கழிவு, உயிர் உரங்கள், உயிரி பூச்சிக்கொல்லிகள், மற்றும் வேப்ப எண்ணெய் உள்ளடக்கிய மாடித் தோட்ட சிறுதளைகள் விநியோகிக்கப்படுகின்றன- இதற்கு, 50% மானியம் அல்லது ஒரு குடும்பத்திற்கு ரூ. 450 மானியம், அதிகபட்சம் ஒரு குடும்பத்திற்கு 2 சிறுதளைகள்.
- *காய்கறி விதைகள்- பழச்செடிகள் சிறுதளை விநியோகம்*: 6 காய்கறிகள் (தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை, கொத்தவரை மற்றும் கீரைகள்) மற்றும் 3 பழச்செடி நாற்றுகள் (கொய்யா, பப்பாளி மற்றும் எலுமிச்சை) 75% மானியத்தில் விநியோகிக்கப்படும்.
- ஹை-டெக் பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறைகள் ஊக்குவிக்கப்படும்.
- *ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல்*: தென்னையில் ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவிக்கத் தட்டைப் பயறு (காராமணி) விதைகள் இலவசமாக வழங்கப்படும். பலா தோட்டத்தில் பாக்கு, ஜாதிக்காய், வாழை, புதர் மிளகு அல்லது பிற ஊடுபயிர் செய்யும் விவசாயிகளுக்கு 50% மானியம் வழங்கப்படும்.
- குறைந்த செலவிலான வெங்காயச் சேமிப்புக் கட்டமைப்புகளை நிறுவுதல்.

- *சீமைக் கருவேல் மரங்களை அகற்றிய பிறகு மிளகாய் சாகுபடியை ஊக்குவித்தல்:* 40% மானியம் அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ. 12,000 வீதம், ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படும்.

- காளான் வளர்ப்பை குடிசைத் தொழிலாக மேற்கொள்ள நிதியுதவி.

- *பாரம்பரிய காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல்*: பாரம்பரிய வகைக் காய்கறிகளைப் பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் 2025-26-ஆம் ஆண்டிலிருந்து, மணப்பாறை கத்தரி, சில்லுக்கொடி கத்தரி, குலசை கத்தரி, பெரிய கொல்லம்பட்டி கத்தரி, தருவை தக்காளி, மஞ்சள்கூடம் தக்காளி, ஆனைக்கொம்பன் வெண்டை, சிவப்பு வெண்டை, சிறகு அவரை மற்றும் மூக்குத்தி அவரைப் போன்ற இரகங்களின் சாகுபடி ஊக்குவிக்கப்படுகிறது. இவற்றின் பரப்பு விரிவாக்கத்திற்கான மானியம்: 40% அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ. 2,400 வீதம், ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் இரண்டு ஹெக்டேருக்கு மானியம் வழங்கப்படும்.

- *சிறப்புத் திட்டங்கள்:*

  (i) *மல்லிகைக்கான சிறப்புத் திட்டம்*: மதுரை, தர்மபுரி, திருவள்ளூர், சேலம், திண்டுக்கல், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

  (*ii*) *வாசனை ரோஜா சாகுபடிக்கான சிறப்புத் திட்டம்*: தமிழ்நாட்டில் சுமார் 9,600 ஏக்கர் பரப்பளவில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, சேலம், திண்டுக்கல் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் வாசனை ரோஜா பரவலாகப் பயிரிடப்படுகிறது.

  (iii) *நறுமணப் பயிர்களுக்கான சிறப்புத் திட்டம்*: மிளகு, கொத்தமல்லி, மிளகாய், ஜாதிக்காய், கிராம்பு, இலவங்கப் பட்டை, பூண்டு, இஞ்சி மற்றும் மஞ்சள் போன்ற முக்கியமான நறுமணப் பயிர்களின் சாகுபடி ஊக்குவிக்கப்படுகிறது.

## 15.8 கரும்பு மேம்பாட்டுத் திட்டங்கள்

- *கரும்பு கொள்முதல் ஊக்கத்தொகை*: 2024-25 பருவத்திற்கு, ஒரு டன் கரும்புக்கு ரூ. 349 ஊக்கத்தொகையாக வழங்கப்படும் (ஒரு டன் கரும்பின் மொத்த விலை ரூ. 3,500 ஆகும்).

- *நுண் நீர்ப்பாசனத் திட்டம்*: நீர்ப் பயன்பாட்டுத் திறனை (WUE) அதிகரிக்கச் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. கரும்பு வயல்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100% மானியமும், பிற விவசாயிகளுக்கு 75% மானியமும் வழங்கப்படுகிறது. சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கான உபகரணங்களைப் பெறுவதற்காக விவசாயிகளுக்கு மாநில நிதியிலிருந்து ஒரு ஹெக்டேருக்கு ரூ. 32,715 முதல் ரூ. 43,534 வரை சிறப்பு நிதியுதவி வழங்கப்படுகிறது.

- *கரும்பு அறுவடை இயந்திரங்கள்*: இதுவரை, 2023-24 வரை 119 அறுவடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- *சர்க்கரை ஆலைகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு*: கூட்டுறவு (12) மற்றும் பொதுத் துறை (2) சர்க்கரை ஆலைகளில், கரும்பு ஏற்றிய வாகனங்கள் எளிதாகச் செல்ல சிமெண்ட் கான்கிரீட் தளம் கட்டுதல், இயந்திரத்தால் அறுவடை செய்யப்பட்ட கரும்புகளை இறக்குவதற்கு ஹைட்ராலிக் டிப்பர்களை நிறுவுதல் மற்றும் எடை மேடைகளை நவீனப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 15.9 தமிழ்நாடு பருத்தி உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்

- இத்திட்டம் 2021-22 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது.
- அடர் நடவு முறையைப் (HDPS) பின்பற்றும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 2,400 மானியம் (100% மானியம்) வழங்கப்படுகிறது.
- சுற்றுச் சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைக்கு (IPM) ஏக்கருக்கு ரூ. 1,960 வழங்கப்படுகிறது.
- நுண்ணூட்டச் சத்துகள் விநியோகம் 75% மானியத்தில் (ஏக்கருக்கு ரூ. 500) வழங்கப்படுகிறது.
- வாடகை ட்ரோன் மூலம் மருந்து தெளிக்க மானியம்: ஏக்கருக்கு ரூ. 500 அல்லது 50% மானியம், இதில் எது குறைவோ அது.

**ஆதாரங்கள்:**


- GoT. 2025. Citizen Charter (மக்கள் சாசனம்). Agriculture and Farmers' Welfare Department, Government of Tamil Nadu.
- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for Agriculture and Farmers' Welfare. Government of Tamil Nadu.
- https://cmhelpline.tnega.org/

# (16) Animal Husbandry and Dairy Development Schemes

## 16.1 Animal Husbandry Schemes

- The Animal Husbandry scheme is implemented by the Adi Dravidar and Tribal Welfare Department, Tamil Nadu. This scheme offers 50 to 75% subsidy to SC/ST and Tribal beneficiaries for purchase of sheep units, milch animals, and calves.
- Another Animal Husbandry scheme is implemented by the Department of Co-operation, Food, and Consumer Protection, Tamil Nadu. The Primary Agriculture Cooperative and Rural Development Banks offer loan for the purchase of 2 buffaloes @ ₹ 20,000; Loan for purchasing 21 goats @ ₹ 24,500. The interest rate for the loan is 14.5 to 16.5% (subject to revision). This scheme is open to all farmers residing in Tamil Nadu engaged in animal husbandry.

## 16.2 Mini Dairy Scheme

- The scheme is implemented through Tamil Nadu Cooperative Milk Producers' Federation Limited (TN-CMPF) and 27 Milk Producers Co-operative Unions.
- The objective of the scheme is to help milk producers to establish/expand mini dairy units (i.e., 4-6 milch animals) with financial support (bank loan + interest subsidy) + technical support (insurance, training, fodder inputs) for sustainable dairy farming.
- This scheme is implemented for milk producers who, by providing bank loan facilities with interest subsidy, can engage in sustainable dairy farming.
- Beneficiary must be a regular member of any of the 27 Milk Producers Co-operative Unions or a member of a Milk Producers' Co-operative Society, should already maintain at least one milch animal and produce milk, must have a bank account in the society's bank for milk payment transfers, and must be between 21 and 60 years.
- Priority is given for the milk-pouring members registered under the Thayumanavar Scheme, those owning or leasing a minimum of 0.50 acres of land, women milk producers, and SC/ST and tribal farmers.
- Maximum loan amount is ₹ 2.7 lakh for the mini dairy unit (4 milch animals). The loan is provided by a bank, with an interest subsidy component (via cooperative union + federation).
- Along with the loan, the scheme provides Cattle insurance for the newly purchased animals for up to 3 years, Fodder seed/material support and training for dairy farm management.
- Apply through the online portal for the Mini Dairy Farm Scheme (https://tnahr.co.in/ONLINE). Documents required are Aadhaar card, PAN card, family card, bank passbook, passport-size photos, land documents (Chitta & Adangal), society membership proof.

## 16.3 Mobile Veterinary Unit (MVU)

- The scheme was inaugurated by the Hon'ble CM on 20th August 2024.
- The Mobile Veterinary Unit (MVU) scheme provides veterinary services to remote areas, covering two villages per day as per a scheduled programme. Farmers can request doorstep veterinary care through the toll-free number 1962.
- Each MVU covers approximately one lakh livestock and equipped with diagnostic tools, minor surgery equipment, and audio-visual aids.
- Each MVU team consists of one veterinarian, one para-veterinarian, and one driver-cum-attendant.

## 16.4 National Livestock Mission (NLM)

- The Department of Animal Husbandry and Dairying, Government of India, is implementing the restructured National Livestock Mission since 2021-22.
- The mission is implemented in Tamil Nadu through the Tamil Nadu Livestock Development Agency, to promote entrepreneurship and improve breeds in poultry, sheep, goat, and piggery, along with feed and fodder development.
- Individuals, FPOs, SHGs, Farmers Cooperative Organisations (FCOs), Joint Liability Groups (JLGs) can apply for assistance through the NLM Entrepreneurship Scheme by submitting an online application, which is screened by the State Level Executive Committee (SLEC). Based on the recommendation, the Department of Animal Husbandry and Dairying (DAHD) then approve the subsidy, and funds are disbursed.
- The subsidy details of the *National Livestock Mission – Entrepreneur Development Scheme* implemented in TN are shown below.

| Activity | Minimum Unit Requirement | Subsidy |
|---|---|---|
| Backyard Poultry Farming | Rural Poultry Entrepreneurship Model – Establishing 100 units of small-scale native chicken Farm Units- Each unit may have 250 parent birds- Hatchery for production of chicks and brooder mother units for brooding and rearing of the chicks. | Up to 50% of total capital cost – Maximum ₹25 lakhs |
| Goat Farming (Goat/Sheep) | 100 Does + 5 bucks<br>200 Does + 10 bucks<br>300 Does + 15 bucks<br>400 Does + 20 bucks<br>500 does + 25 bucks | Up to 50% of capital cost – Maximum ₹10/₹20/₹30/₹40/ ₹50 lakhs, depending on unit size, disbursed in two instalments |
| Pig Farming | 50 female pigs + 5 male pigs or 100 female pigs + 10 male pigs | Up to 50% of capital cost – Maximum ₹15/₹30 lakhs depending on unit size |
| Feed and Fodder Infrastructure | Dry fodder production / Silage production– 2000 to 2400 MT per year; | Up to 50% of capital cost – Maximum ₹ 50 lakhs |

| | | |
|---|---|---|
| | Compound Feed production / Fodder crop Block production – 30 MT per day;<br>Fodder crop storage and related works | |

## 16.5 Rashtriya Gokul Mission (RGM)

- This is a centrally sponsored scheme.
- As part of the Nationwide Free Artificial Insemination Programme (NAIP), strengthening the frozen semen production station at Hosur, Ooty and Eachenkottai is being undertaken. Free artificial insemination is implemented in the districts of Chennai, Cuddalore, Kancheepuram, Nagapattinam, Pudukkottai, Ramanathapuram, Salem, Sivagangai, The Nilgiris, Thiruvallur, Tiruvannamalai, Villupuram, and Virudhunagar at the Farmers' doorstep with semen from High Genetic Merit Bulls.
- Further, to increase heifer (female) calf production, *'production and supply of gender sorted bovine semen'* is implemented in Coimbatore, Erode, Kanyakumari, Krishnagiri, Madurai, Namakkal, Perambalur, Ranipettai, Thanjavur, The Nilgiris, Tiruchirappalli, Tirunelveli, Tirupattur, Thoothukudi and Vellore Districts.
- Farmers are charged ₹175/- for the first Artificial Insemination with gender sorted semen, and in case of animals not conceiving on the first AI, the second AI would be charged at ₹ 150. The probability of the birth of a female calf is > 85%.

## 16.6 State Fodder Development Schemes (SFDS)

This scheme aims to increase fodder availability for livestock by distributing fodder seeds, slips, and tree saplings to the farmers. Also supports farmers and livestock entrepreneurs by providing equipment for fodder cutting and infrastructure for fodder cultivation, processing, and storage. Individual farmers, Self-help groups (SHGs), Farmer Producer Organisations (FPOs), Cooperative societies and Section 8 companies are eligible to apply and get assistance. Subsidy details are given below.

a) *Distribution of power-driven chaff cutters*: The cost of power operated chaff cutter is about ₹ 29,000 to 30,750. Small and marginal farmers will get a 50 per cent subsidy, so assistance of ₹ 14,500 to 15,375 is given per farmer for one chaff cutter.

b) *Establishing Fodder Cultivation Infrastructure*: It includes silage pits, drying yards, and storage sheds. Subsidy of up to 50% on capital cost, capped at ₹ 50 lakhs, is available.

c) *Fodder Crop Production Support*: Encouragement for growing high-yield fodder crops- 50% subsidy, but varies depending on crop and area. To promote intercropping of fodder in plantation/orchards, incentives of ₹ 3,000 per acre are given. Also, seeds of fodder crops (Fodder sorghum varieties Redchari, CoFS 31, Cowpea-DC 15, Velimasal, Cumbu-Napier hybrids – CO 4 and CO 5), along with fertiliser at 50% subsidy, are given to livestock farmers in Tamil Nadu.

## 16.7 The Rural Backyard Poultry / Backyard Poultry Development Scheme

- This scheme in Tamil Nadu aims to provide livelihoods for rural women through poultry farming, offering training and financial support.

- Under the scheme, eligible women receive native chicks and assistance for building a backyard shed, with beneficiaries selected by the Tamil Nadu State Rural Livelihood Mission (TNSRLM).
- The scheme is implemented by the Department of Animal Husbandry and TNSRLM. Beneficiaries receive training in backyard poultry rearing from veterinary doctors, besides getting 4-week-old chicks.
- The subsidy / financial assistance varies- 100% (borne by the central and state governments) or 50% subsidy on the cost of works and other paraphernalia.
- During the financial year 2025–26, 74 *Backyard Poultry clusters* (group of 20 women) will be established @ 2 per district in all districts of Tamil Nadu except Chennai. Selected members should be willing to contribute a minimum of ₹ 1000/- as a membership fee. Each member of the cluster will rear 100 healthy chicks. The supply of chicks to them will be done in two phases: Phase 1: 50 chicks, Phase 2: 50 chicks (after one month). An amount of ₹3 lakhs will be released to each cluster.
- In addition, 4-week-old native chicks – 40 chicks are given at 50% subsidy to the rural poor/ destitute women and ₹ 1600/woman as back ended subsidy.

### 16.8 Vallalar Palluyir Kaappagangal

- This programme was announced during the FY 2022-23.
- NGO/Animal Welfare Organizations are involved in this programme to support the following activities.
    1. Feeding and medical treatment for abandoned, sheltered, and injured pet and stray animals.
    2. Providing ambulance to Society for the Prevention of Cruelty to Animals (SPCAs) /AWOs / NGOs to ensure that emergency Veterinary care is provided at all times for the animals in distress.
    3. Providing infrastructure, including the provision of shelters on a scientific basis in the name of 'Vallalar Palluyir Kaapagangal'.
    4. Animal Birth Control (ABC) and Immunisation Program for stray and pet dogs and cats.

**Sources:**


- GoT. 2022. Invitation for Expression of Interest (EOI) for Entrepreneurship Development Programme under National Livestock Mission. Tamil Nadu Livestock Development Agency, Government of Tamil Nadu, Chennai. Tender Document Dt: 07.01.2022
- GoT. 2025. Policy Note 2025 – 2026. Demand no.6. Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department, Government of Tamil Nadu. Presented by Hon'ble Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry, Thiru. Anitha R. Radhakrishnan.
- Mini Dairy Scheme. https://aavin.co.in/ONLINE/
- TNCDE. 2025. Guidelines on Establishing Backyard Poultry Clusters. The Tamil Nadu Corporation for Development of Women (TNCDW). Rural Development and Panchayat Raj Department, Government of Tamil Nadu. https://www.tncdw.org/

- https://cdn.s3waas.gov.in/s37eacb532570ff6858afd2723755ff790/uploads/2024/07/ 2024070135-1.pdf
- https://loansubsidy.in/tn-animal-husbandry-loan-scheme/#
- https://nlm.udyamimitra.in/Home/SchemePage#
- https://www.myscheme.gov.in/schemes/ahtn
- https://www.tnlda.tn.gov.in
- https://tnahr.co.in/

# (16) கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள மேம்பாட்டுத் திட்டங்கள்

## 16.1 கால்நடை பராமரிப்புத் திட்டங்கள்

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், எஸ்.சி/எஸ்.டி மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்குச் செம்மறி ஆடுகள், கறவை மாடுகள் மற்றும் கிடேரி கன்றுகளை வாங்குவதற்கு 50 முதல் 75% வரை மானியம் வழங்குகிறது.
- தமிழ்நாடு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் மற்றொரு கால்நடை பராமரிப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், அதிகபட்சம் 2 எருமை மாடுகள் வாங்குவதற்கு கடன் ரூ. 20,000, மற்றும் 21 ஆடுகளை வாங்குவதற்கு கடன் ரூ. 24,500 வழங்குகின்றன. கடனுக்கான வட்டி விகிதம் 14.5 முதல் 16.5% வரை இருக்கும் (திருத்தத்திற்கு உட்பட்டது). இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பொருந்தும்.

## 16.2 சிறிய (மினி) பால் பண்ணைத் திட்டம்

- இந்தத் திட்டம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு லிமிடெட் (TN-CMPF) மற்றும் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- இதன் நோக்கம் நிலையான பால் பண்ணை நடத்துவதற்கு நிதியுதவி (வங்கிக் கடன் + வட்டி மானியம்) மற்றும் தொழில்நுட்ப ஆதரவு (காப்பீடு, பயிற்சி, தீவன இடுபொருள்கள்) அளித்துப் பால் உற்பத்தியாளர்கள் சிறிய பால் பண்ணைகளை நிறுவுதல் (அதாவது, 4-6 கறவை மாடுகள் கொண்ட பண்ணை) அல்லது பண்ணையை விரிவாக்குவதாகும்.
- நிலையான பால் பண்ணைக்காக வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்காக இந்தத் திட்டம் பெரிதும் உதவியாக இருக்கும்.
- இந்த திட்டப் பயனாளிகள், 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் ஏதேனும் ஒன்றில் வழக்கமான உறுப்பினராகவோ அல்லது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராகவோ இருக்க வேண்டும், குறைந்தபட்சம் ஒரு கறவை மாடாவது வைத்திருக்க வேண்டும், பால் உற்பத்தி செய்ய வேண்டும், பால் பரிமாற்றங்களுக்கு சங்கத்தின் வங்கியில் கணக்கு வைத்திருக்க வேண்டும், மற்றும் வயது 21 முதல் 60 வரை இருக்க வேண்டும்.
- தாயுமானவர் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பால் ஊற்றும் உறுப்பினர்கள், குறைந்தபட்சம் அரை ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்திருப்பவர்கள் அல்லது குத்தகைக்கு சாகுபடி செய்பவர்கள், பெண் பால் உற்பத்தியாளர்கள், எஸ்.சி/எஸ்.டி மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- மினி பால் பண்ணை அலகுக்கு (4 கறவை மாடுகள் கொண்ட பண்ணை) அதிகபட்சக் கடன் தொகை ரூ. 2.7 லட்சம்வரை வழங்கப்படுகிறது. இந்தக் கடன் வங்கியால் வழங்கப்படுகிறது, ஆனால் வட்டி மானியக் கூறுகள் கூட்டுறவு சங்கம் / கூட்டமைப்பு வழியாக வழங்கப்படும்.

- இந்தத் திட்டத்தில், கடனுடன் புதிதாக வாங்கப்படும் கால்நடைகளுக்கு 3 ஆண்டுகள் வரை காப்பீடு, தீவன விதை / நடவுப்பொருள் மற்றும் பால் பண்ணை மேலாண்மை பற்றிய பயிற்சிகள் சேர்த்து வழங்கப்படுகிறது.
- இத்திட்டத்திற்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும் (https://tnahr.co.in/ONLINE). தேவையான ஆவணங்கள்- ஆதார் அட்டை, பான் அட்டை, குடும்ப அட்டை, வங்கி பாஸ்புக், பாஸ்போர்ட் அளவுப் புகைப்படம், நில ஆவணங்கள் (சிட்டா மற்றும் அடங்கல்), மற்றும் சங்க உறுப்பினர் சான்று.

## 16.3 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு (MVU)

- இத்திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் 20 ஆகஸ்ட் 2024 அன்று தொடங்கி வைத்தார்கள்.
- இத்திட்டத்தின்படி, ஒரு நாளைக்கு தொலைதூரப் பகுதிகளில் உள்ள இரண்டு கிராமங்களில் கால்நடை மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் 1962 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம், கால்நடை மருத்துவர்களை தொடர்புகொண்டு அவர்கள் வீட்டிலேயே சிகிச்சை மேற்கொள்ளலாம்.
- ஒவ்வொரு MVU-வும் தோராயமாக ஒரு லட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கும் வசதிகளைக் கொண்டிருக்கும். நோயறிதல் கருவிகள், சிறிய அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஒலி-ஒளிக் கருவிகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- ஒவ்வொரு MVU குழுவிலும் ஒரு கால்நடை மருத்துவர், ஒரு துணை கால்நடை மருத்துவர் மற்றும் ஓர் ஓட்டுநர் மற்றும் உதவியாளர் இருப்பார்கள்.

## 16.4 தேசிய கால்நடை இயக்கம் (NLM)

- இந்திய அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை, 2021-22-ஆம் ஆண்டு முதல் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கால்நடை இயக்கத்தை செயல்படுத்தி வருகிறது.
- கோழி வளர்ப்பு, ஆடு / செம்மறி ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கும், கால்நடை இனங்களை மேம்படுத்துவதற்கும், தீவனம் மற்றும் தீவனப் பயிர் மேம்பாட்டிற்கும் இந்த இயக்கம் நிதியுதவி அளிக்கிறது, இந்தப் பணிகள், தமிழ்நாட்டில் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.
- தனிநபர்கள், FPO-கள், சுய உதவிக் குழுக்கள், விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகள் (FCO-கள்), கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் (JLG-கள்) தேசிய கால்நடை இயக்கம்-தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ் ஆன்லைன் மூலம் உதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் மாநில அளவிலான நிர்வாகக் குழுவால் (SLEC) பரிசீலனை செய்யப்படுகிறது. SLEC பரிந்துரையின் அடிப்படையில், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை (DAHD) மானியத்தை அங்கீகரித்து நிதியை விடுவிக்கிறது.
- தமிழகத்தில் செயல்படுத்தப்படும் *தேசிய கால்நடை இயக்கம்-தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்* மானிய விவரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயல்பாடுகள் | குறைந்தபட்ச அலகு தேவை | மானியம் |
|---|---|---|
| புறக்கடை (கொல்லைபுற) கோழி வளர்ப்பு | சிறிய அளவிலான நாட்டுக் கோழிப் பண்ணை -100 அலகுகளை நிறுவுதல் - ஒவ்வொரு அலகும் 250 தாய்க் கோழிகளைக் கொண்டிருக்க வேண்டும்; குஞ்சு பொரிப்புக் கூடம் அடைகாத்தல் தாய்ப்பெட்டகம், மற்றும் குஞ்சுகளை வளர்ப்பதற்கான வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும். | மொத்த மூலதனச் செலவில் 50% வரை - அதிகபட்சம் ரூ. 25 லட்சம் |
| ஆடு வளர்ப்பு (வெள்ளாடு / செம்மறி ஆடு) | 100 பெண் ஆடு + 5 கிடா<br>200 பெண் ஆடு + 10 கிடா<br>300 பெண் ஆடு + 15 கிடா<br>400 பெண் ஆடு + 20 கிடா<br>500 பெண் ஆடு + 25 கிடா | மூலதனச் செலவில் 50% வரை மானியம் - அதிகபட்சம் ரூ.10/ ரூ.20/ ரூ.30/ ரூ.40/ ரூ.50 லட்சம்- ஆடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மாறுபடும் - இரண்டு தவணைகளில் வழங்கப்படும். |
| பன்றி வளர்ப்பு | 50 பெண் பன்றிகள் + 5 ஆண் பன்றிகள் அல்லது 100 பெண் பன்றிகள் + 10 ஆண் பன்றிகள் | மூலதனச் செலவில் 50% வரை – பன்றிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அதிகபட்சம் ரூ.15/ ரூ. 30 லட்சம் வரை. |
| தீவனம் மற்றும் தீவன உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | உலர் தீவன உற்பத்தி / சைலேஜ் உற்பத்தி- வருடத்திற்கு 2,000 முதல் 2,400 டன்;<br>கூட்டுத் தீவன உற்பத்தி / செறிவூட்டப்பட்ட தீவனப் பயிர் உருண்டைகள் உற்பத்தி - ஒரு நாளைக்கு 30 டன்;<br>தீவனப் பயிர் சேமிப்பு மற்றும் தொடர்புடைய பணிகள். | மூலதனச் செலவில் 50% வரை – அதிகபட்சம் ரூ. 50 லட்சம் |

## 16.5 ராஷ்ட்ரிய கோகுல் இயக்கம் / தேசிய பசு மேம்பாட்டு இயக்கம் (RGM)

- இது ஒரு மத்திய அரசு நிதியுதவி பெற்ற திட்டமாகும்.
- நாடு தழுவிய இலவச செயற்கை கருத்தரிப்பு திட்டத்தின் (NAIP) ஒரு பகுதியாக, ஒசூர், ஊட்டி மற்றும் ஈச்சன்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள உறைந்த கால்நடை விந்து அதிகரிக்கும் நிலையங்களை வலுப்படுத்தும் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. உயர்தர மரபணுத் திறன் கொண்ட காளைகளின் விந்தினைப் பயன்படுத்தி, சென்னை, கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம்,

சிவகங்கை, நீலகிரி, திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் வீடுகளுக்கே சென்று அவர்களின் பசுக்களுக்கு இலவச செயற்கை கருத்தரிப்பு செய்யப்படுகிறது.

- மேலும், பெண் கன்று (கிடேரி) உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 'பாலினம் பிரிக்கப்பட்ட கால்நடை விந்து உற்பத்தி மற்றும் விநியோகம்' திட்டம் கோயம்புத்தூர், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், ராணிப்பேட்டை, தஞ்சாவூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பத்தூர், தூத்துக்குடி மற்றும் வேலூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.
- பாலின பிரிக்கப்பட்ட விந்தைக் கொண்டு மேற்கொள்ளப்படும் முதல் செயற்கை கருத்தரிப்புக்கு விவசாயிகளிடமிருந்து ரூ. 175/- வசூலிக்கப்படுகிறது. மேலும் முதல் கருத்தரிப்பில் கருத்தரிக்காத பசுக்களுக்கு இரண்டாவது கருத்தரிப்புக்கு ரூ. 150/- மட்டும் வசூலிக்கப்படும். இதன் மூலம், பெண் கன்று (கிடேரி) பிறக்கும் வாய்ப்பு 85% -கும் மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 16. 6 மாநில தீவன அபிவிருத்தித் திட்டங்கள் (SFDS)

கால்நடை தீவனங்களின் உற்பத்தி மற்றும் இருப்பை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்குத் தீவன விதைகள், நாற்றுகள் மற்றும் மரக்கன்றுகளை விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், தீவன சாகுபடிக்கு தேவையான தீவனம் வெட்டும் உபகரணங்கள், தீவனப் பதப்படுத்தல் மற்றும் சேமிப்புக்கான உள்கட்டமைப்புகள் இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் கால்நடை தொழில்முனைவோர்களுக்கு வழங்கப்படுகிறது. தனிப்பட்ட விவசாயிகள், சுய உதவிக் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பிரிவு 8-இன் கீழ் வரும் நிறுவனங்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பித்து உதவி பெறலாம். மானிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ) *மின்சாரம் மூலம் இயங்கும் புல் வெட்டும் இயந்திரங்கள் விநியோகம்*: இந்தக் கருவியின் விலை சுமார் ரூ. 29,000 முதல் ரூ. 30,750 வரை இருக்கும். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இதன்படி ஒரு விவசாயிக்கு ஓர் இயந்திரத்திற்கு ரூ. 14,500 முதல் ரூ. 15,375 வரை உதவி வழங்கப்படுகிறது.

ஆ) *தீவன சாகுபடி உள்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல்:* இதில் சைலேஜ் குழிகள், தீவனம் உலர்த்தும் களம் மற்றும் சேமிப்பு கிடங்குகள் அடங்கும். மூலதன செலவில் 50% வரை மானியம், அதிகபட்சம் ரூ. 50 லட்சம் வரை வழங்கப்படுகிறது.

இ) *தீவனப் பயிர் உற்பத்திக்கு ஆதரவு:* உயர்விளைச்சல் தீவன பயிர்களின் (இரகங்கள்) சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் 50% மானியம் வழங்கப்படுகிறது, ஆயினும் மானியம் பயிர் மற்றும் பரப்பளவைப் பொறுத்து மாறுபடும். தோப்புகள் / பழத் தோட்டங்களில் தீவனப் பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதை ஊக்குவிக்க ஏக்கருக்கு ரூ. 3,000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. மேலும், தீவனச் சோளம் (ரெட்சாரி, CoFS 31 இரகங்கள்), தட்டைப் பயறு (DC 15), வேலிமசால், கம்பு-நேப்பியர் கலப்பின இரகம் (CO 4 மற்றும் CO 5) போன்ற தீவன பயிர்களின் விதைகள் மற்றும் அவற்றிற்கான உரங்களுடன் 50% மானியத்தில் தமிழக கால்நடை வளர்ப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 16.7 ஊரக கொல்லைப்புற கோழி வளர்ப்புத் திட்டம் / புறக்கடை கோழி வளர்ப்பு அபிவிருத்தித் திட்டம்

- இந்தத் திட்டம் கோழி வளர்ப்பு, பயிற்சி மற்றும் நிதி உதவிகள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், தகுதியுள்ள பெண்கள் நாட்டுக் கோழிக்குஞ்சுகளைப் பெறுவதோடு, கொல்லைப்புறத்தில் கொட்டகை கட்டுவதற்கான உதவியையும் பெறுகிறார்கள். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் (TNSRLM) பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- தமிழகத்தில், இத்திட்டம் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் TNSRLM மூலம் செயல்படுத்தப்படுகிறது. பயனாளிகள் கால்நடை மருத்துவர்களிடமிருந்து கொல்லைப்புற கோழி வளர்ப்புப் பற்றி பயிற்சி பெறுகிறார்கள், மேலும் 4 வார வயதுடைய கோழிக் குஞ்சுகளையும் பெறுகிறார்கள்.
- மானியம்/ நிதி உதவி: 100% (மத்திய மற்றும் மாநில அரசுகளால் ஏற்கப்படுகிறது) அல்லது 50% (பணிகள் மற்றும் பிற உபகரணங்களின் விலையில்).
- 2025–26 நிதியாண்டில், சென்னையைத் தவிர தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்டத்திற்கு 2 தொகுப்புகள் என்ற கணக்கில் 74 *கொல்லைப்புற கோழி வளர்ப்புத் தொகுப்புகள்* (20 பெண்கள் கொண்ட குழு) நிறுவப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உறுப்பினர் கட்டணமாகக் குறைந்தபட்சம் ரூ. 1000/- செலுத்த வேண்டும். தொகுப்பில் உள்ள உறுப்பினர் ஒவ்வொருவரும் 100 ஆரோக்கியமான குஞ்சுகளை வளர்ப்பார்கள், அவர்கள் கொள்முதலை இரண்டு கட்டங்களாகப் பெறுவார்கள்: முதற்கட்டம் : 50 குஞ்சுகள், இரண்டாம் கட்டம்: 50 குஞ்சுகள் (ஒரு மாதத்திற்குப் பிறகு). ஒவ்வொரு தொகுப்புக்கும் ரூ. 3 லட்சம் மானியம் வழங்கப்படும்.
- இதைத்தவிர, 4 வார வயதுடைய நாட்டுக் கோழிக்குஞ்சுகள் கிராமப்புற ஏழை/ ஆதரவற்ற பெண்களுக்கு 50% மானியத்தில் 40 குஞ்சுகளும், பின் ஏற்பு மானியமாக ஒரு மகளிருக்கு ரூ. 1600 வழங்கப்படுகிறது.

## 16.8 வள்ளலார் பல்லுயிர்க் காப்பகங்கள்

- இந்தத் திட்டம் 2022-23-ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்டது.
- அரசு சாரா நிறுவனங்கள்/விலங்கு நல அமைப்புகள் இந்தத் திட்டத்தின் கீழ்க்கண்ட செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்தப்படுவார்கள்.
    1. கைவிடப்பட்ட, வீட்டில் வளர்க்கப்படும் காயமடைந்த செல்லப்பிராணிகள் மற்றும் தெரு விலங்குகளுக்கு உணவளித்தல் மற்றும் மருத்துவச் சிகிச்சை அளித்தல்.
    2. ஆபத்தில் உள்ள விலங்குகளுக்கு எந்த நேரங்களிலும் அவசர சிகிச்சை வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக விலங்குகள் வதை தடுப்பு சங்கம் (SPCAs) / AWOs / அரசு சாரா நிறுவனங்களுக்கு ஆம்புலன்ஸ் வழங்குதல்.
    3. வள்ளலார் பல்லுயிர்க் கப்பகங்கள் என்ற பெயரில் விலங்குகள் தங்குமிடங்கள் மற்றும் அதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை அறிவியல் ரீதியாக நிறுவுதல்.
    4. தெரு நாய் மற்றும் பூனைகளுக்குப் பிறப்புக் கட்டுப்பாடு (ABC) மற்றும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**ஆதாரங்கள்:**


- GoT. 2022. Invitation for Expression of Interest (EOI) for Entrepreneurship Development Programme under National Livestock Mission. Tamil Nadu Livestock Development Agency, Government of Tamil Nadu, Chennai. Tender Document Dt: 07.01.2022
- GoT. 2025. Policy Note 2025 – 2026. Demand no.6. Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department, Government of Tamil Nadu. Presented by Hon'ble Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry, Thiru. Anitha R. Radhakrishnan
- Mini Dairy Scheme. https://aavin.co.in/ONLINE/
- TNCDE. 2025. Guidelines on Establishing Backyard Poultry Clusters. The Tamil Nadu Corporation for Development of Women (TNCDW). Rural Development and Panchayat Raj Department, Government of Tamil Nadu. https://www.tncdw.org/
- https://cdn.s3waas.gov.in/s37eacb532570ff6858afd2723755ff790/uploads/2024/07/2024070135-1.pdf
- https://loansubsidy.in/tn-animal-husbandry-loan-scheme/#
- https://nlm.udyamimitra.in/Home/SchemePage#
- https://www.myscheme.gov.in/schemes/ahtn
- https://www.tnlda.tn.gov.in
- https://tnahr.co.in/

## (17) Fisheries Development and Fishermen Welfare Schemes

### 17.1 Fishermen Welfare Schemes

**1) Support to societies:** The Tamil Nadu State Apex Fisheries Co-operative Federation Limited (TAFCOFED) offers credit support, marketing support, and equipment to fisheries cooperative societies.

**2) Skill Development and Extension:** Training programmes are offered to the fisherman and entrepreneurs through the Fisheries Staff Training Institute and Extension Services to improve their technical know-how.

**3) National Scheme for Welfare of Fishermen**: This is a government-backed scheme aids in constructing houses for fishermen, providing a base area of up to 35 sqm at a cost not exceeding ₹ 2.4 lakhs.

**4) Supply of tax-exempted diesel:** The mechanised boat fishermen can avail subsidised diesel from the TAFCOFED, subject to a maximum of 19,000 litres per boat per year (during active fishing months), and motorised country craft can avail a maximum of 4,400 lit per boat per year.

**5) Supply of subsidised industrial kerosene to traditional motorised boats:** TAFCOFED is supplying kerosene to fishermen through 13 Primary Fishermen Cooperative Societies @ ₹ 25/- per litre, subject to a maximum of 370 litres per month per boat.

**6) Supply of Outboard Motors or Inboard Engines under the Programme on Motorisation of Traditional Crafts:** This is a Centrally sponsored scheme. Subsidy of ₹ 48,000 or 40% of the cost of the engine, whichever is less is given.

**7) Supply of Life Jackets to Motorised Country Crafts:** Subsidy is 75% of the cost of the life jacket.

**8) Daily relief assistance to the families of missing fishermen while fishing and those apprehended by neighbouring countries**: ₹ 350/day or ₹ 10,500/month for the family of fishermen.

**9) To procure new Tuna Long liner-cum-Gill Netter boats:** 50% subsidy or ₹ 30 lakh per boat.

**10) Construction of FRP Boat with accessories**: Financial assistance under this Centrally sponsored scheme- to replace traditional or wooden boats-40% subsidy of ₹ 2.0 lakh (60% for SC/ST and Women).

**11) Supply of Two Wheelers with Ice Boxes for Retail Marketing:** 25% subsidy is given by the TAFCOFED.

*Note: Few more welfare schemes are given under section 3.5.*

### 17.2 Pradhan Mantri Matsya Sampada Yojana (PMMSY)

**About the PMMSY**: The Pradhan Mantri Matsya Sampada Yojana (PMMSY) is a flagship scheme launched by the Government of India in 2020 (extended till 2025-26), focusing on (i) increasing production and productivity, (ii) modernisation of infrastructure, (iii) improve quality and traceability across the entire value chain, and (iv) establishing a

strong fisheries management framework to support the socio-economic welfare of fishers and fish farmers.

**Funding Pattern and Assistance:** The PMMSY is an umbrella scheme with two separate components, *viz.*, (a) Central Sector Scheme (CS): Fully funded and implemented by the Central Government and (b) Centrally Sponsored Scheme (CSS): Partially supported by the Central Government and implemented by the states. The fund sharing pattern for CSS is 60: 40 between Centre and States (90:10 for NE States and 100% by Centre in UT. The Scheme provides activity-based grants directly to beneficiaries through the Direct Benefit Transfer (DBT) mechanism.

**PMMSY implementation in Tamil Nadu**

**1) Infrastructure development:** Upgradation of the Pazhayar fishing harbour in Chennai; construction of four integrated fish landing centres at Nettukuppam, Thazankuppam, Arangankuppam, and Goonankuppam; approval for projects including 40 ice plants, 1,528 post-harvest transportation facilities, 3 fish retail markets, and 55 fish vending kiosks; establishment of climate-resilient coastal villages with infrastructure like disaster-resilient housing. The State also proposed a Rs 120 crore project to secure five coastal villages in Mayiladuthurai district with river training walls, groynes, and canal dredging to protect landing facilities.

**2) Beneficiary-focused activities:** Promoting seaweed farming with subsidy support for rafts, monoline, and seed material; supporting fish farmers and fishermen, including women and women self-help groups, with training and financial assistance; providing financial aid of up to 60% of the unit cost for women beneficiaries in various activities like fish farming, hatcheries, and fish processing; extensive insurance coverage for licensed fishermen against death, disability, and hospitalization.

*Welfare package*: In April 2025, the State government announced a package of Rs 576 crore for fishers, including seaweed farming, cage fish & crab farming, value-added products, net weaving & repair, boat building, and non-marine livelihood alternatives.

*Marketing and support infrastructure*: Tamil Nadu Fisheries Development Corporation (TNFDC) supports fish seed production, feed mill, subsidised diesel/kerosene supply for fishing crafts, ornamentals, etc. Assistance is also available for setting up fish feed mills to support aquaculture operations.

**3) Climate resilience:** Incorporating initiatives like seaweed cultivation and artificial reefs to make the sector more climate-resilient; addressing climate change impacts through sustainable practices and the promotion of climate-resilient fishing villages.

**How to apply for the scheme?**

1) The interested beneficiaries need to prepare a detailed project report (DPR) that includes: species of fish to be cultured, capital and recurring costs, proof of land ownership or a registered lease for at least seven years, employment and production benefits, and a timeline for implementation. Submit the DPR to the District Fisheries Office for further processing.

2) The beneficiaries can get government assistance as follows:

a) For ponds: An individual can receive support for up to 2 units of 0.1 hectare; Groups or Societies can get support as 2 units of 0.1 ha multiplied by the number of members of the group/society, with a ceiling of 20 units of 0.1 ha per group

b) For tanks (commonly referring to smaller, intensive systems like Biofloc tanks, Recirculating Aquaculture System tanks, or lined tanks for high-density farming): An individual can receive support for one large, one medium, or one small tank setup. Groups or Societies can receive support for up to 2 large, 3 medium, or 4 small tank setups. The subsidy is generally:
    - 40% of the unit cost for general category beneficiaries.
    - 60% of the unit cost for SC/ST/Women beneficiaries.

**Key assistance details for tank-based activities:**

**1. Biofloc Technology Tanks (Common Intensive Tank Setup)**

- Small Biofloc Unit: Typically 7 tanks (each 4m diameter, 1.5m height).
    - Unit cost: ₹7.5 lakh.
    - Subsidy: ₹3 lakh (40%) for general; ₹4.5 lakh (60% for SC/ST/Women).
- Medium Biofloc Unit: Larger setups (e.g., 25-30 tanks or equivalent capacity).
    - Unit cost: Up to ₹25-50 lakh depending on configuration.
    - Subsidy: 40-60% as above.
- Freshwater Biofloc Tanks (including inputs like liners, aerators): Unit cost ~₹14 lakh per 0.1 ha equivalent.
    - Subsidy: Up to ₹5.6 lakh (general) or ₹8.4 lakh (SC/ST/Women).
- Brackish/Saline Biofloc Tanks: Higher unit cost ~₹18 lakh per 0.1 ha.
    - Subsidy: Up to ₹7.2 lakh (general) or ₹10.8 lakh (SC/ST/Women).

**2. Recirculating Aquaculture System (RAS) Tanks**

- Small RAS: 1 tank (minimum 100m$^3$ capacity) or equivalent Biofloc.
    - Unit cost: ₹7.5 lakh.
    - Subsidy: ₹3 lakh (40%) or ₹4.5 lakh (60%).
- Medium RAS: 4-6 tanks (minimum 30-50m$^3$ each, ~4-10 tonne/crop capacity).
    - Unit cost: ₹20-25 lakh.
    - Subsidy: ₹8-10 lakh (40%) or ₹12-15 lakh (60%).

## 17.3 Schemes for Inland Fisheries & Aquaculture

*Freshwater Finfish hatcheries and Biofloc Systems*: Financial assistance is provided for constructing hatcheries, rearing ponds, grow-out ponds, and biofloc systems to promote intensive aquaculture.

Biofloc farming is a sustainable aquaculture method that uses microorganisms to convert waste into protein-rich food for fish. In this system, a high-density culture of shrimp/fishes are maintained with minimal to zero water exchange by using strong aeration and creating a beneficial microbial community known as 'biofloc'. These flocs, composed of bacteria, fungi, algae, and other organic matter, break down and convert waste products like ammonia, unused feed, and faeces into a protein-rich supplemental feed for the animals.

*Re-Circulatory Aquaculture Systems (RAS):* Support/Subsidy is given for setting up RAS units to ensure efficient water use and high-density fish farming.

*Genetically Improved Farmed Tilapia (GIFT) Hatcheries*: Hatcheries for genetically improved fast-growing Tilapia (Jilebi Meen) have been established in Krishnagiri, Cuddalore, and Kancheepuram Districts.

*Murrel hatchery*: The Fishery Department established, for the first time in Tamil Nadu, a Murrel Hatchery (Viral meen) at Lalpet Fish Farm in Cuddalore under the World Bank-funded TNIAMP Scheme and with the ttechnical guidance from the ICAR-CIFWA, Bhubaneswar.

Under the Scheme on '*Subsidy Assistance to Inland fishermen for the purchase of fishing implements* (State-funded)', fishing nets and coracles were procured and distributed to fishermen.

*Stocking fish seeds in Rural Development and Panchayat Raj Department tanks*: One crore fish fingerlings will be stocked during 2025-26 in 5,000 ha of panchayat tanks, at 2,000 nos/ha at a total cost of ₹ 75 lakh (Under the Rural Development and Panchayat Raj Department). This initiative will provide high-protein fish food at a low cost to the rural population and increase the fish production in rural areas of Tamil Nadu.

*Ornamental Fish Culture*: Establishment of 56 ornamental fish units: Subsidy will be provided. Ornamental Fish Trade Centre will be established at Kolathur, Chennai.

## 17.4 Schemes for Marine Fisheries

**Deep Sea Fishing Vessels**: Subsidies for replacing traditional boats with deep-sea fishing vessels to reduce pressure on coastal resources.

**Mariculture Initiatives**: Mariculture is a sector of aquaculture that involves the rearing of aquatic organisms under controlled or semi-controlled conditions in coastal and offshore waters. Mariculture activities such as Seaweed Culture, Open Sea Cage Culture have been successfully taken up by the State as an alternate livelihood measures to the coastal fisherfolk. Subsidy given for the establishment of marine finfish nursery rearing units at Mayiladuthurai and Ramanathapuram districts. This scheme is supported by the Government of India.

About 2000 families are involved in seaweed farming (particularly *Kappaphychus*) in seven districts, namely Nagapattinam, Thiruvarur, Thanjavur, Pudukkottai, Ramanathapuram, Thoothukudi and Kanyakumari. Tamil Nadu Government support for seaweed farming includes the supply of inputs and procurement and distribution of rafts.

Open Sea Cage Culture mainly focus on farming marine species such as finfish and shellfish, in large floating cages that are placed in open sea or offshore waters. Cages have been provided to coastal fisherfolk under various schemes.

Sea Ranching of economically important and high-value finfish and shellfish is another activity carried out by the Fisheries Department near shore areas to replenish the fishery stock. Ranching of marine fish seeds is undertaken in the locations where the artificial reefs have been deployed through the Sea ranching programme.

## 17.5 Schemes for Reservoir Development

The Government of Tamil Nadu has allocated ₹11.08 crore under the Integrated Development of Reservoirs scheme to promote cage culture in inland reservoirs and to establish alternate livelihoods for fishers. This initiative is expected to increase fish production in inland water bodies and boost the income of fishers and fish farmers.

**Sources:**


- GoT. 2025. Policy Note 2025 – 2026. Demand no. 7. Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department, Government of Tamil Nadu. Presented by Hon'ble Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry, Thiru. Anitha R. Radhakrishnan
- MFAHF. 2020. Pradhan Mantri Matsya Sampada Yojana. Operational Guidelines. Ministry of Fisheries, Animal Husbandry and Dairying, Government of India.
- https://www.fisheries.tn.gov.in/
- https://www.pib.gov.in/PressNoteDetails.aspx?NoteId=155173&ModuleId=3#

# (17) மீன்வள மேம்பாடு மற்றும் மீனவர் நலத்திட்டங்கள்

## 17.1 மீனவர்களுக்கான நலத்திட்டங்கள்

**1) மீனவச் சங்கங்களுக்கு ஆதரவு:** தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (TAFCOFED) மீனவ கூட்டுறவு சங்கங்களுக்குக் கடன், மீன் வணிகத்திற்கு நிதியுதவி மற்றும் மீன்பிடி உபகரணங்களை வழங்குகிறது.

**2) திறன் மேம்பாடு மற்றும் விரிவாக்கம்:** மீனவர்கள் மற்றும் தொழில் முனைவோர் -களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த அவர்களுக்கு மீன்வளப் பணியாளர் பயிற்சி நிறுவனம் மற்றும் விரிவாக்கச் சேவைகள் மையத்தின் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**3) தேசிய மீனவர் நலத்திட்டம்**: இது மத்திய அரசு ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இது மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு உதவுகிறது, அதாவது 35 சதுர மீட்டர்வரை பரப்பளவு கொண்ட வீடுகள் அல்லது ரூ. 2.4 லட்சத்திற்கு மிகாமல் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**4) வரி விலக்குப் பெற்ற டீசல் விநியோகம்:** இயந்திரமயமாக்கப்பட்ட படகுகளுக்கு TAFCOFED-லிருந்து மானிய விலையில் டீசலைப் பெறலாம். ஒரு படகுக்கு ஆண்டுக்கு அதிகபட்சம் 19,000 லிட்டர்வரை டீசல் (மீன்பிடி மாதங்களில்) பெறலாம். மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப்புற படகு ஒன்றுக்கு ஆண்டுக்கு அதிகபட்சம் 4,400 லிட்டர்வரை டீசல் பெறலாம்.

**5) பாரம்பரிய மோட்டார் படகுகளுக்கு மானிய விலையில் தொழில்துறை மண்ணெண்ணெய் வழங்கல்:** TAFCOFED, 13 முதன்மை மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு லிட்டர் ரூ. 25/- விலையில், ஒரு படகுக்கு அதிகபட்சமாக மாதத்திற்கு 370 லிட்டர் வரை மண்ணெண்ணெய் வழங்கிவருகிறது.

**6) பாரம்பரியப் படகுகளின் மோட்டார்மயமாக்கல் திட்டத்தின் கீழ் வெளிப்புற மோட்டார்கள் அல்லது உள் மோட்டார்கள் வழங்குதல்:** இது ஒரு மத்திய நிதியுதவி பெறும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் மோட்டார் விலையில் 40% அல்லது ரூ. 48,000, இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

**7) மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு உயிர்காக்கும் ஜாக்கெட்டுகள் வழங்கல்:** உயிர்காக்கும் ஜாக்கெட்டின் விலையின் 75% மானியம் வழங்கப்படுகிறது.

**8) மீன்பிடிக்கும்போது காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கும், அண்டை நாடுகளால் கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கும் தினசரி நிவாரண உதவி** : ஒரு நாளைக்கு ரூ. 350 அல்லது மாதம் ரூ. 10,500.

**9) புதிய டுனா லாங் லைனருடன் சேர்ந்த கில் நெட்டர் படகுகளை வாங்குவதற்கு உதவி:** 50% மானியம் அல்லது படகுக்கு ரூ. 30 லட்சம்.

**10) உபகரணங்களுடன் கூடிய FRP படகு கட்டுதல்:** பாரம்பரிய/ மரப்படகுகளை மாற்றுவதற்கான மத்திய அரசு ஆதரவு திட்டத்தின் கீழ், ரூ. 2.0 லட்சம் வரை அல்லது 40% மானியம் (SC/ST மற்றும் பெண்களுக்கு 60%) வழங்கப்படுகிறது.

**11) சில்லறை விற்பனைக்கு ஐஸ் பெட்டிகளுடன் கூடிய இரு சக்கர வாகனங்கள் வழங்கல்:** TAFCOFED மூலம் 25% மானியம் வழங்கப்படுகிறது

*குறிப்பு: மேலும் சில நலத்திட்டங்கள் பிரிவு 3.5 இல் கொடுக்கப்பட்டுள்ளன.*

## 17.2 பிரதான் மந்திரி மத்ஸய சம்பதா யோஜனா (PMMSY) / பிரதம மந்திரி மீன்வளத் திட்டம்

**PMMSY திட்டத்தைப் பற்றி**: பிரதான் மந்திரி மத்ஸய சம்பதா யோஜனா என்பது இந்திய அரசாங்கத்தால் 2020-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு பிரதானத் திட்டமாகும் (இது 2025-26 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது). இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்: (i) உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல், (ii) அடிப்படை வசதிகளை நவீனப்படுத்துதல் (மீன்பிடி துறைமுகங்கள், குளிர்சாதன வசதிகள், பதப்படுத்தும் மையங்கள்), (iii) தரத்தையும், தடயத்தன்மையையும் மேம்படுத்துதல் அதாவது முழு மதிப்புச் சங்கிலியில் தரக் கட்டுப்பாடு, மற்றும் (iv) வலுவான மீன்வள மேலாண்மை அமைப்பை உருவாக்கி மீனவர்கள் மற்றும் மீன் உற்பத்தியாளர்களின் சமூக-பொருளாதார நலன்களை மேம்படுத்துதல்.

**நிதிப் பகிர்வு மற்றும் உதவி:** PMMSY என்பது இரண்டு தனித்தனி கூறுகளைக் கொண்ட ஒரு பெரிய திட்டமாகும், அதாவது (அ) மத்தியத் துறைத் திட்டம் (CS): மத்திய அரசால் முழுமையாக நிதியளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது மற்றும் (ஆ) மத்திய நிதியுதவித் திட்டம் (CSS): மத்திய அரசால் நிதியுதவி அளிக்கப்பட்டு மாநிலங்களால் செயல்படுத்தப்படும் திட்டம். மத்திய நிதியுதவித் திட்டங்களுக்கான (CSS) நிதிப் பகிர்வு முறை மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே 60:40 ஆகும் (வடகிழக்கு மாநிலங்களுக்கு 90:10 மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு 100%). இந்தத் திட்டத்தின் மூலம் செயல்பாடுகளின் (தொழில்களின்) அடிப்படையிலான மானியங்களை நேரடிப் பலன் பரிமாற்றம் (DBT) முறையில் பயனாளிகளுக்கு வழங்குகிறது.

**தமிழ்நாட்டில் PMMSY-இன் செயல்பாடுகள்**

**1) உள்கட்டமைப்பு மேம்பாடு:** சென்னையில் உள்ள பழையார் மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்துதல்; நெட்டுக்குப்பம், தாழங்குப்பம், அரங்கங்குப்பம் மற்றும் கூனாங்குப்பம் ஆகிய இடங்களில் நான்கு ஒருங்கிணைந்த மீன் இறங்குதளங்களை நிர்மாணித்தல்; 40 ஐஸ்கட்டி ஆலைகள், 1,528 அறுவடைக்குப் பிந்தைய போக்குவரத்து வசதிகள், 3 மீன் சில்லறை சந்தைகள் மற்றும் 55 மீன் விற்பனை மையங்கள் உள்ளிட்ட திட்டங்களுக்கு ஒப்புதல்; பேரிடர்களை-தாங்கும் வீடுகள் போன்ற உள்கட்டமைப்புகளுடன் காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் கடலோர கிராமங்களை நிறுவுதல் ஆகியன இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஐந்து கடலோர கிராமங்களில் ஆறு நெறிப்படுத்தும் சுவர்கள், கடலரிப்புத் தடுப்பு அரண், கால்வாய் தூர்வாருதல் ஆகிய பணிகளுக்காக சுமார் ரூ. 120 கோடி திட்டம் முன்மொழியப் -பட்டுள்ளது.

**2) பயனாளிகளை மையமாகக் கொண்ட செயல்பாடுகள்:** கடற்பாசி வளர்ப்பை ஊக்குவிப்பதற்காகத் தெப்பம், மோனோலைன் மற்றும் விதைப் பொருட்களுக்கான மானிய ஆதரவு; பெண்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உட்பட மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் மீனவர்களுக்குப் பயிற்சி மற்றும் நிதியுதவி; மீன் வளர்ப்பு, குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் மீன் பதப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் பெண் பயனாளிகளுக்கு அலகு ஒன்றிற்கு செலவில் 60% வரை நிதியுதவி; உரிமம் பெற்ற மீனவர்களுக்கு இறப்பு, இயலாமை மற்றும் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற நேர்ந்தால் அவற்றிற்கான விரிவான காப்பீட்டுத் தொகை ஆகியன இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றன.

*நலத்திட்டத் தொகுப்பு*: கடந்த 2025 ஏப்ரல் மாதத்தில், மாநில அரசு மீனவர்களுக்காக ரூ.576 கோடி மதிப்பிலான நலத்திட்டத் தொகுப்பை அறிவித்தது. இதில் கடல்பாசி வளர்ப்பு, கூண்டு மீன் & நண்டு வளர்ப்பு, மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு,

வலை நெய்தல் & பழுது பார்த்தல், படகு கட்டுதல் மற்றும் கடல் சாரா வாழ்வாதார மாற்று வாய்ப்புகள் ஏற்படுத்துதல் ஆகியன அடங்கும்.

*வணிகம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு உதவி:* தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டு கழகம் (TNFDC) மீன் விதை உற்பத்தி, மீன் தீவன ஆலை, மீன்பிடி படகுகளுக்கான மானிய டீசல்/ மண்ணெண்ணெய் வழங்கல், அலங்கார மீன்கள் போன்றவற்றுக்கு நிதியுதவி அளித்துவருகிறது.

**3) காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளல்:** கடற்பாசி சாகுபடி மற்றும் செயற்கை பாறைகள் உருவாக்கம் போன்ற முயற்சிகளை இணைத்து, இந்தத் துறையைக் காலநிலை மாற்றத்திற்கு மீள்தன்மை கொண்டதாக மாற்றுதல்; காலநிலை மாற்றத் தாக்கங்களை எதிர்கொள்ளும் வகையில் நிலையான மீன்பிடித்தல் நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் அதற்கேற்றவாறு மீன்பிடி கிராமங்களை மேம்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

**இத்திட்டத்திற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?**

1) ஆர்வமுள்ள பயனாளிகள் ஒரு விரிவான திட்ட அறிக்கையை (DPR) தயாரிக்க வேண்டும், அதில் கீழ்க்கண்ட விவரங்கள் இடம்பெற வேண்டும்: வளர்க்கப்படும் மீன் இனங்கள், மூலதனம் மற்றும் தொடர் (மீளும்) செலவுகள், நில உரிமைச் சான்று அல்லது குறைந்தது ஏழு ஆண்டுகளுக்குப் பதிவு செய்யப்பட்ட குத்தகை ஆவணம், வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தி சலுகைகள், செயல்படுத்துவதற்கான காலக்கெடு ஆகியன. இந்த DPR-ஐ பரிசீலனைக்காக மாவட்ட மீன்வள அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

2) பயனாளிகள் பின்வரும் அரசு உதவிகளைப் பெறலாம்:

அ) குளங்களுக்கு: ஒரு தனிநபர் 0.1 ஹெக்டேர் அளவிலான 2 அலகுகளுக்கு நிதியுதவிப் பெறலாம்; குழுக்கள் அல்லது சங்கங்கள் ஒரு உறுப்பினருக்கு 0.1 ஹெக்டேர் அளவிலான 2 அலகுகள் வீதம், மேற்படி குழு/ சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் நிதிஉதவி (அதிகபட்சம் ஒரு குழுவிற்கு 0.1 ஹெக்டேர் அளவிலான 20 அலகுகளுக்கு மட்டும்).

ஆ) தொட்டிகளுக்கு (பொதுவாக சிறிய, பயோப்ளாக் போன்ற தீவிர வளர்ப்பு அமைப்பு தொட்டிகள், மறுசுழற்சி மீன் வளர்ப்பு அமைப்பு தொட்டிகள், அல்லது உயர் அடர்த்தி வளர்ப்புக்கான அகவுறை (பூச்சு) தொட்டிகள்): தனிநபர் ஒரு பெரிய, ஒரு நடுத்தர அல்லது ஒரு சிறிய தொட்டி அமைப்பிற்கு மானியம் பெறலாம். குழுக்கள் அல்லது சங்கங்கள் 2 பெரிய, 3 நடுத்தர அல்லது 4 சிறிய தொட்டி அமைப்புகளுக்கு மானியம் பெறலாம். மானிய அளவு:

- பொது வகை பயனாளிகளுக்கு அலகு செலவின் 40%.
- எஸ்சி/எஸ்டி/பெண் பயனாளிகளுக்கு அலகு செலவின் 60%.

**தொட்டி அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கான வழங்கப்படும் உதவிகள்:**

**1. பயோப்ளாக் தொழில்நுட்பத் தொட்டிகள் (பொதுவான தீவிர தொட்டி அமைப்பு)**

- சிறிய பயோப்ளாக் அலகு: பொதுவாக 7 தொட்டிகள் (ஒவ்வொன்றும் 4மீ விட்டம், 1.5மீ உயரம்).
    - அலகு செலவு: ரூ. 7.5 லட்சம்.
    - மானியம்: ரூ. 3 லட்சம் (40%) பொதுப் பிரிவினருக்கு; ரூ. 4.5 லட்சம் (60%, எஸ்.சி/எஸ்.டி/பெண்களுக்கு.
- நடுத்தர பயோப்ளாக் அலகு: பெரிய அமைப்புகள் (எ.கா., 25-30 தொட்டிகள் அல்லது சமமான திறன்).
    - அலகு செலவு: உள்ளமைவைப் பொறுத்து ரூ. 25-50 லட்சம் வரை.

- மானியம்: மேலே குறிப்பிட்டபடி 40 முதல் 60% வரை.
- நன்னீர் பயோப்ளாக் தொட்டிகள் (லைனர்கள், ஏரேட்டர்கள் போன்ற வசதிகளுடன்): அலகு செலவு ~ரூ. 14 லட்சம் ஒரு 0.1 ஹெக்டேர் அல்லது அதற்கு சமமாக.
    - மானியம்: ரூ. 5.6 லட்சம் வரை (பொதுப் பிரிவு) அல்லது ரூ. 8.4 லட்சம் (எஸ்சி/எஸ்டி/பெண்கள்).
- உவர்நீர்/உப்புநீர் பயோப்ளாக் தொட்டிகள்: உயர் அலகு செலவு ~ரூ. 18 லட்சம் ஒரு 0.1 ஹெக்டேர் அல்லது அதற்கு சமமாக.
    - மானியம்: ரூ. 7.2 லட்சம் வரை (பொதுப் பிரிவு) அல்லது ரூ. 10.8 லட்சம் (எஸ்.சி/எஸ்.டி/பெண்கள்).

**2. மறுசுழற்சி மீன் வளர்ப்பு அமைப்பு (RAS) தொட்டிகள்**

- சிறிய RAS: 1 தொட்டி (குறைந்தது 100மீ$^3$ திறன்) அல்லது சமமான பயோப்ளாக்.
    - அலகு செலவு: ரூ. 7.5 லட்சம்.
    - மானியம்: ரூ. 3 லட்சம் (40%) அல்லது ரூ. 4.5 லட்சம் (60%).
- நடுத்தர RAS: 4-6 தொட்டிகள் (ஒவ்வொன்றும் குறைந்தது 30-50மீ$^3$, ~4-10 டன்/பயிர் திறன்).
    - அலகு செலவு: ரூ. 20-25 லட்சம்.
    - மானியம்: ரூ. 8-10 லட்சம் (40%) அல்லது ரூ. 12-15 லட்சம் (60%).

## 17.3 உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புக்கான திட்டங்கள்

*நன்னீர் துடுப்புமீன் குஞ்சு உற்பத்தி மையங்கள் மற்றும் பயோப்ளாக் அமைப்புகள்*: தீவிர *துடுப்புமீன்* வளர்ப்பை ஊக்குவிப்பதற்காகக் குஞ்சு பெருக்க மையங்கள், வளர்ப்புக் குளங்கள், வளர்ச்சிக் குளங்கள் மற்றும் பயோப்ளாக் அமைப்புகளை நிறுவுவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

பயோஃப்ளாக் விவசாயம் என்பது ஒரு நிலைத்த மீன்வளர்ப்பு முறையாகும், இதில் நுண்ணுயிரிகள் கழிவுகள் மீன்களுக்குப் புரதம் நிறைந்த உணவாக மாற்றப்படுகின்றன. இந்த அமைப்பில், இறால்/மீன்களின் அதிக அடர்த்தி கொண்ட வளர்ப்பு, வலுவான காற்றோட்டத்தைப் பயன்படுத்தி குறைந்த அளவு அல்லது பூஜ்ஜிய அளவு நீர் பரிமாற்றத்துடன் பராமரிக்கப்பட்டு, 'பயோஃப்ளாக்' எனப்படும் நன்மை பயக்கும் நுண்ணுயிர் சமூகம் உருவாக்கப்படுகிறது. பாக்டீரியா, பூஞ்சை, பாசிகள் மற்றும் பிற கரிமப் பொருட்களால் ஆன இந்த மந்தைகள்/தொகுப்புகள், அம்மோனியா, பயன்படுத்தப்படாத தீவனம் மற்றும் மலம் போன்ற கழிவுப்பொருட்களை சிதைத்து விலங்குகளுக்கு புரதம் நிறைந்த துணைத் தீவனமாக மாற்றுகின்றன.

*மறுசுழற்சி மீன்வளர்ப்பு அமைப்புகள் (RAS)*: திறமையான நீர்ப் பயன்பாடு மற்றும் அதிக அடர்த்தி கொண்ட மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக RAS அலகுகளை அமைப்பதற்கு நிதியுதவி /மானியம் வழங்கப்படுகிறது.

*மரபணு மேம்படுத்தப்பட்ட வளர்ப்பு திலாப்பியா (GIFT) குஞ்சு உற்பத்தி நிலையங்கள்*: மரபணு ரீதியாக மேம்படுத்தப்பட்ட வேகமாக வளரும் திலாப்பியா (ஜிலேபி) மீன்கள் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் கிருஷ்ணகிரி, கடலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன.

*விரால் குஞ்சு பொரிப்பகம்*: உலக வங்கி நிதியுதவி பெற்ற TNIAMP திட்டத்தின் கீழ், புவனேஸ்வரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் - நன்னீர் மீன்வளர்ப்பு மத்திய நிறுவனம் (ICAR-CIFWA)-இன் தொழில்நுட்ப வழிகாட்டுதலின்படி,

தமிழ்நாட்டில் முதன்முறையாகக் கடலூரில் உள்ள லால்பேட்டை மீன் பண்ணையில் மீன்வளத் துறை ஒரு முர்ரல் குஞ்சு பொரிப்பகம் (விரால் மீன்) ஒன்றை நிறுவியுள்ளது.

'*உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி கருவிகள் வாங்குவதற்கு மானிய உதவி* (மாநில அரசு நிதியுதவி)' என்ற திட்டத்தின் கீழ் மீன்பிடி வலை மற்றும் பரிசல் (ஓடம்) ஆகியவை வாங்கப்பட்டு மீனவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

*ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் உள்ள குளங்களில் மீன் குஞ்சுகளை சேமித்து வைத்தல்*: 2025-26-ஆம் ஆண்டில் சுமார் 5,000 ஹெக்டேர் பஞ்சாயத்து தொட்டிகளில், ஒரு ஹெக்டேருக்கு 2,000 குஞ்சுகள் என்ற அளவில், மொத்தம் ரூ. 75 லட்சம் செலவில் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ்) ஒரு கோடி மீன் குஞ்சுகள் சேமித்து வைக்கப்படும். இந்த முயற்சிமூலம் கிராமப்புற மக்களுக்கு குறைந்த விலையில் அதிக புரத மீன் உணவு கிடைக்கும் மற்றும் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் மீன் உற்பத்தி அதிகரிக்கும்.

*அலங்கார மீன் வளர்ப்பு:* இதுவரை, 56 அலங்கார மீன் வளர்ப்பு அலகுகள் நிறுவப்பட்டுள்ளன; அலங்கார மீன் வளர்ப்புக்கு மானியம் வழங்கப்படுகிறது; மேலும், கொளத்தூரில் (சென்னை) அலங்கார மீன் வர்த்தக மையம் ஒன்றை நிறுவப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## 17.4 கடல்சார் மீன்வளத் திட்டங்கள்

**ஆழ்கடல் மீன்பிடி கப்பல்கள்**: கடலோர வளங்கள் மீதான அழுத்தத்தைக் குறைக்க பாரம்பரிய படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றுவதற்கு மானியங்கள் வழங்கப்படுகிறது.

**கடல்மீன் வளர்ப்பு முயற்சிகள்**: கடல்மீன் வளர்ப்பு என்பது கடலோர மற்றும் கடல் நீரில் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது பகுதி கட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகளில் நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்பதை குறிக்கும் மீன் வளர்ப்பின் ஒரு பிரிவாகும். கடலோர மீனவர்களின் மாற்று வாழ்வாதார நடவடிக்கைகளாகக் கடற்பாசி வளர்ப்பு, திறந்தவெளி கடல் கூண்டு மீன் வளர்ப்பு போன்ற கடல் மீன் வளர்ப்பு நடவடிக்கைகள் மாநிலத்தால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மயிலாடுதுறை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கடல் துடுப்புமீன்கள் குஞ்சு உற்பத்தி நாற்றங்கால்களை நிறுவுவதற்கு மானியம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் மத்திய அரசின் நிதியுதவி மூலம் ஆதரிக்கப்படுகிறது.

நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள சுமார் 2,000 மீன்பிடி குடும்பங்கள் கடற்பாசி வளர்ப்பில் (குறிப்பாக கப்பாபைக்கஸ் என்னும் வெள்ளை அல்லது பெப்சி கடற்பாசி) ஈடுபட்டுள்ளனர். இதற்காக, தமிழக அரசு தேவையான இடுபொருட்கள் வாங்குதல், படகுகள் கொள்முதல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்குகிறது.

திறந்தவெளி கடல் கூண்டு மீன்வளர்ப்புத் திட்டத்தில், முக்கியமாகத் துடுப்பு மீன்கள் மற்றும் சிப்பி மீன்கள் வளர்ப்பதில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மீன்கள் திறந்த கடல் அல்லது கடலோர நீரில் பெரிய மிதவைக் கூண்டுகளில் வைக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் கீழ் கடலோர மீனவர்களுக்கு மிதவைக் கூண்டுகள் வழங்கப்படுகின்றன.

கடற்கரைப் பகுதிகளுக்கு அருகில் மீன்வளத்தை நிரப்புவதற்காக "கடலில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்தல்" அல்லது "கடல் பண்ணை முறை" அல்லது sea ranching என்ற திட்டத்தின் கீழ், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் அதிக மதிப்புள்ள துடுப்பு மீன்கள் மற்றும் சிப்பி மீன்களின் குஞ்சுகளைக் கடலில் விடும்

பணிகள் மீன்வளத் துறையால் மேற்கொள்ளப்படும் மற்றொரு நடவடிக்கையாகும். இவை, பொதுவாக செயற்கை பவளப் பாறைகள் ஏற்படுத்தப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

## 17.5 நீர்த்தேக்கங்களில் மீன்வளர்ப்புத் திட்டங்கள்

உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் கூண்டு மீன் வளர்ப்பு மற்றும் மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரங்களை ஏற்படுத்த ஒருங்கிணைந்த நீர்த்தேக்கங்கள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 11.08 கோடி நிதியைத் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. இதன்மூலம், உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தி அதிகரிப்பதோடு, மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போரின் வருமானமும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆதாரங்கள்:**


- GoT. 2025. Policy Note 2025 – 2026. Demand no. 7. Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department, Government of Tamil Nadu. Presented by Hon'ble Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry, Thiru. Anitha R. Radhakrishnan
- MFAHF. 2020. Pradhan Mantri Matsya Sampada Yojana. Operational Guidelines. Ministry of Fisheries, Animal Husbandry and Dairying, Government of India.
- https://www.fisheries.tn.gov.in/
- https://www.pib.gov.in/PressNoteDetails.aspx?NoteId=155173&ModuleId=3#

# (18) Digital Agricultural Initiatives in Tamil Nadu

## 18.1 Aavin Plus and Aavin Covai

- These are the mobile apps related to supply of milk and milk products to the general public.
- The Aavin Plus allows users to order Aavin dairy products like milk, curd, butter, and ghee, and schedule deliveries.
- It functions as a one-stop shop for dairy needs, allowing users to browse, select, and schedule orders for home delivery
- Aavin: Covai**-** By using this mobile app, Coimbatore's general public and Aavin booth agents can purchase milk and milk products online from the comfort of their homes.

## 18.2 AgriStack / Tamil Nadu Farmers' Registry

AgriStack is a digital agricultural data platform being developed by the Government of India and adopted by Tamil Nadu. It creates a unified farmer database for farmers that links each farmer to a **unique Farmer ID**. This ID connects them to various government schemes (PM-KISAN, insurance, credit, inputs, markets), subsidies, insurance, and advisory services via a single window, leveraging data like land records, KYC, etc.

**Key features**

- *Digital Initiative*: Joint effort by State & Central Governments to build a unified farmer database.
- *Farmer ID:* Each farmer gets a unique ID for easy access to schemes (PM-KISAN, insurance, credit, inputs, markets).
- *Unified Digital Platform*: Centralizes farmer info (Aadhaar, land, bank details) under one system.
- *Single Window Access:* All services and benefits available through one platform.
- *Data Sources:* Uses land records, Aadhaar/KYC, soil health, and other details for better service delivery.
- *Improved Scheme Access:* Enables direct benefit transfers (DBT), easier credit, quality inputs, localized advice, and market linkages.
- *Data-Driven Insights:* Supports farm management with soil, water, and climate data; encourages Agri-Tech innovation.
- *Awareness Campaigns:* Tamil Nadu Agriculture Department is conducting drives for 100% farmer enrollment.
- *Plot-wise Coverage:* Ensures every farmer and every landholding is included, so no one misses benefits.
- *Registration:* Farmers register via the TNFR portal (tnfr.agristack.gov.in) or authorized centers, submitting land survey numbers and personal details.

## 18.3 Bharat Sanjeevani

- It is a digital livestock management and veterinary healthcare platform, launched as a flagship Corporate Social Responsibility (CSR) initiative by Bharat Financial Inclusion Limited (BFIL), a subsidiary of IndusInd Bank.

- This App is being used various state governments such as Jharkhand, Madhya Pradesh, Rajasthan, Karnataka, Maharashtra, and Telangana.
- In 2025, this mobile app was launched in Tamil Nadu collaboration with AAVIN and Tamil Nadu Co-operative Milk Producers' Federation Limited (TNCMPFL).
- Through this App essential veterinary services and animal husbandry information are provided to the livestock owners associated with AAVIN.
- A toll-free helpline (**1800-425-2577**) has also been introduced to assist dairy farmers across Tamil Nadu.

### 18.4 e-NAM

- The app is part of the larger e-NAM online platform, which aims to create a national market for agricultural produce by providing a common platform for farmers, traders, and other stakeholders.
- Many mandis in TN are integrated with the e-NAM portal. Therefore, the mobile app can be used by regulated mandis for knowing price & arrival information and remote bidding.
- The mobile app has limited features compared to the web version. So, readers are requested to check the website for more details.

### 18.5 e-Thottam

- e-Thottam is a mobile App released by the Tamil Nadu Horticulture Department (https://ethottam.in/)
- This App is designed to benefit the farmers, consumers and traders by connecting them on one platform.
- The App will also help farmers to grow horticultural crops such as vegetables, fruits and others. It contains a variety of information, especially for those who want to do gardening on the rooftop or in the backyard of their house
- This will be useful for farmers for the sale of fruits/vegetables and kits to consumers and traders.
- Mobile phone users with Android and iOS operating systems can download and use this App from google play store or apple store.

### 18.6 e-Vaadagai

- e-Vaadagai Service is a feature /component in the Uzhavar mobile app and or Aagricultural engineering Department portal (https://aed.tn.gov.in).
- This app helps facilitate farmers to book the required agricultural machinery and implements from anywhere and to pay advance hire charges online.
- It also contains details on farm machinery of state-owned and private person/ firm available for rent, rental rates and availability, etc.

### 18.7 FARMS

- FARMS- **FAR**m **M**achinery **S**olutions is a multi-language Mobile App developed by the Department of Agriculture & Farmers' Welfare, Government of India.
- This app may be downloaded from the Google Play Store. See the details on the website https://agrimachinery.nic.in/Index/farmsapp
- This app facilitates farmers and citizens of different States across the country to know the Custom hiring services of Farm Machinery Banks (FMBs), Custom Hiring Centres (CHCs) and Hi-tech Hubs established under the various Schemes of M/o A & FW, Government of India, without any computer support system.
- Individual farmers who are willing to provide their agricultural machinery & equipment on a rental basis can register their details in the app to increase their business.
- This app will provide a platform for the sale and purchase of old agricultural machinery to farmers also.

## 18.8 GRAINS

- GRAIN- **G**rower Online **R**egistration of **A**griculture **In**puts **S**ystem is a web portal (https://grains.tn.gov.in) developed by the Government of Tamil Nadu.
- This portal serves as a single point of contact for farmers to apply for benefits like crop loans, disaster relief, and incentives from various departments (e.g., agriculture, horticulture, and disaster response). This will eliminate the need for them to visit multiple offices and submit multiple forms.
- It enables easy application for benefits such as crop loans, incentives for crops like paddy and sugarcane, and relief assistance.
- This portal collects and digitises farmer details, including Aadhaar and bank account information. Records land details, ownership, and crop cultivation information.
- GRAINS is accessible via smartphones, tablets, and desktop PCs. Designed for easy and one-time registration.
- It allows farmers to report calamities directly from their dashboard.

## 18.9 Meengal

- This is a government-backed mobile application of the Tamil Nadu Fisheries Development Corporation (TNFDC) for ordering fresh seafood online.
- The app currently serves customers in Chennai but plans to expand across Tamil Nadu.
- Users can browse and purchase a variety of fish and seafood from both government-run stalls and mobile stalls.

## 18.10 Tamil Mannvalam Portal

- This portal (https://tnagriculture.in/mannvalam/soils/) was developed exclusively for the farmers to know the survey number-wise soil nutrient status, suitable fertiliser recommendation and the respective crop suitability for their land based on the soil test results.

- Farmers can register on the Website by providing details such as their district, block, village, survey number, and subdivision number.
- The portal provides soil fertility status for the registered land, survey number-wise.
- Farmers can download their Soil Health Card in an electronic format through the portal.
- The portal can be accessed via computers or mobile phones, making the information readily available to farmers.
- Soil test results of 40 lakh survey numbers are available in the portal.

### 18.11 Thoondil

- The Department of Fisheries and Fishermen Welfare, Tamil Nadu, in association with the National Centre for Coastal Research (NCCR), Ministry of Earth Sciences (MoES), has created the mobile application
- THOONDIL is a WebGIS-based Decision Support System for monitoring the movements of fishing vessels and registering the crews venturing for fishing.
- This app assists the fishermen by dispensing vital information on real-time positioning, navigation to safe locations, facility to mark fishing grounds, Potential Fishing Zones (PFZ), weather forecast and fishing trip records, etc.
- The app includes an SOS feature for emergencies, live boat tracking, and can be used to report incidents.
- This app may be downloaded from the Google Play Store and see the details on the website https://www.fisheries.tn.gov.in/Thoondil.html

### 18.12 Uzhavar

1. The Uzhavar mobile app (formerly Uzhavan) was developed by the Agriculture & Farmers Welfare Department, Government of Tamil Nadu.
2. The app is aimed at providing farmers with real-time and consolidated information on a variety of services, including government schemes, crop insurance status, seed and fertiliser availability, market prices, and weather forecasts.
3. This app will be useful to farmers to manage their activities more effectively and plan for potential issues like seasonal adversities and natural calamities.
4. This is available in Android version (in Google Play Store) and iOS (in Apple Store). More details are available at https://www.tnagrisnet.tn.gov.in/.
5. It supports two languages- Tamil and English.
6. A web interface that backs many Uzhavan services (farmer registry, scheme list, dashboard) is also available on the website https://www.tnagrisnet.tn.gov.in/.
7. The following details are available in the mobile app:

- *Government schemes*: Information on scheme components and subsidy patterns.
- *Crop insurance*: Users can register for schemes and check their application status until compensation is received.

- *Input availability*: Details on the stock of seeds and fertilisers at government, private, and cooperative outlets.
- *Market prices*: Real-time information on prevailing market prices from various regulated markets.
- *Farm machinery*: Information on available machinery at Customer Hiring Centres.
- *Weather forecast*: Weather advisories and forecasts to help farmers plan their cultivation.
- *Extension services:* Information on the visits of extension officers to their villages.
- *Registration*: Farmers can register to avail the benefits of government schemes.
- *Other services*: Includes information on organic products, FPO products, pest/disease monitoring, and feedback options, among other things.

**Sources:**


- CSR: MoU signed with Tamil Nadu Government to expand 'Bharat Sanjeevani' initiative. https://thecsrjournal.in/corporate-social-responsibility-csr-news-indusind bank- mou-tamil- nadu-government-bharat-sanjeevani- initiative/#
- https://aed.tn.gov.in/en/services/evaadagai/land-developement/
- https://agrimachinery.nic.in/Index/farmsapp
- https://enam.gov.in/web/mobile-app
- https://ethottam.in/category/department-of-horticulture/
- https://ethottam.in/tn-horticulture-released-e-thottam-app/
- https://grains.tn.gov.in/
- https://play.google.com/store/apps/details?id=ageb.busyness.app&hl=en_IN&pli=1
- https://play.google.com/store/apps/details?id=in.kultivate.aavinkovai&hl=en_SG
- https://tnagriculture.in/mannvalam/soils/
- https://tnfr.agristack.gov.in/farmer-registry-tn/#/
- https://www.fisheries.tn.gov.in/Thoondil.html
- https://www.fisheries.tn.gov.in/TNFDC.html#home
- https://www.meengal.com/
- https://www.tnagrisnet.tn.gov.in/.
- https://www.tnagrisnet.tn.gov.in/people_app/dashboard/main/en
- Uzhavan App - one stop digital blessing ably helping the toiling farmers. 10 May 2020. https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1622680&reg=3&lang=2

# (18) தமிழ்நாட்டில் டிஜிட்டல் வேளாண்மை முன்முயற்சிகள்

## 18.1 ஆவின் பிளஸ் மற்றும் ஆவின் கோவை

- இவை பொதுமக்களுக்குப் பால் மற்றும் பால் பொருட்களை விநியோகிப்பதற்கான மொபைல் செயலிகளாகும்.
- ஆவின் பிளஸ் செயலிமூலம் பயனர்கள் பால், தயிர், வெண்ணெய் மற்றும் நெய் போன்ற ஆவின் பால் பொருட்களை ஆர்டர் செய்யவும், விநியோகத்தை திட்டமிடவும் முடியும்.
- இந்தச் செயலி பால் சார்ந்த தேவைகளுக்கு ஓரிடத் தீர்வாகச் செயல்படுகிறது; பயனர்கள் வீட்டு விநியோகத்திற்கான பொருட்களை இந்தச் செயலியில் தேடி, தேர்வு செய்து, ஆர்டர்களை அனுப்ப இது அனுமதிக்கிறது.
- ஆவின் கோவை: கோவையில் உள்ள பொதுமக்கள் மற்றும் ஆவின் பூத் முகவர்கள் இந்தச் செயலிமூலம் தங்கள் வீடுகளில் இருந்தபடியே பால் மற்றும் பால் பொருட்களை ஆன்லைனில் எளிதாக வாங்கலாம்.

## 18.2 அக்ரிஸ்டேக் / தமிழ்நாடு விவசாயிகள் பதிவேடு

AgriStack என்பது இந்திய அரசு உருவாக்கி, தமிழ்நாடு ஏற்றுக்கொண்டுள்ள ஒரு டிஜிட்டல் வேளாண்மைத் தரவுதளம் ஆகும். இது ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்துவமான **விவசாயி அடையாள எண் (Farmer ID)** வழங்கி, ஒருங்கிணைந்த விவசாயி தரவுத்தளத்தை உருவாக்குகிறது. இந்த ID மூலம் விவசாயிகள் பல்வேறு அரசுத் திட்டங்கள் (பி.எம்-கிசான், காப்பீடு), மானியங்கள், இடுபொருள்கள், வேளாண்வணிகம் மற்றும் ஆலோசனை சேவைகளை **ஒற்றைச் சாளரம்** வழியாகப் பெற முடிகிறது. இதற்காக நிலப் பதிவுகள், KYC போன்ற தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

**முக்கிய அம்சங்கள்**

- *டிஜிட்டல் முயற்சி*: மாநில மற்றும் மத்திய அரசுகள் இணைந்து ஒருங்கிணைந்த விவசாயி தரவுத்தளத்தை உருவாக்கிய முயற்சிக்கு இது சிறந்த உதாரணம்.
- *விவசாயி ID*: ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்துவமான ID வழங்கப்படுகிறது; இதன் மூலம் PM-KISAN, காப்பீடு, கடன், உள்ளீடுகள், சந்தைகள் போன்ற திட்டங்களை எளிதாகப் பெற முடியும்.
- *ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளம்:* ஆதார், நிலம், வங்கி விவரங்கள் அனைத்தும் ஒரே தளத்தில் தரவேற்றம் செய்யப்படுகிறது.
- *ஒற்றை சாளரம்*: அனைத்து சேவைகளும் மற்றும் நன்மைகளும் ஒரே தளத்தில் கிடைக்கின்றன.
- தரவு ஆதாரங்கள்: நிலப் பதிவுகள், ஆதார்/KYC, மண் ஆரோக்கியம் மற்றும் பிற விவரங்கள் சேவை வழங்கலை மேம்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன.
- *திட்ட அணுகல் மேம்பாடு*: நேரடி பலன் பரிமாற்றம், எளிய கடன், தரமான இடுபொருள்கள், உள்ளூர்-சார்ந்த ஆலோசனைகள், சந்தை இணைப்புகள் ஆகியவை இதன்மூலம் வழங்கப்படுகின்றன.

- *தரவு சார்ந்த அறிவு*: மண், நீர், காலநிலை தரவுகள் மூலம் சிறந்த பண்ணை மேலாண்மை; வேளாண் தொழில்நுட்ப புதுமைகளுக்கு ஊக்கம்.
- *விழிப்புணர்வு இயக்கங்கள்:* இதில், 100% விவசாயிகளைப் பதிவு செய்யும் நோக்கில் தமிழ்நாடு வேளாண்மைத் துறை விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகிறது.
- *புலம் வாரியாகப் பதிவு*: ஒவ்வொரு விவசாயியின் ஒவ்வொரு நிலப்பகுதியும் பதிவு செய்யப்படுகிறது; எந்தவொரு விவசாயியும் நன்மைகளை இழக்காமல் இருக்க இது உதவுகிறது.
- *பதிவு:* விவசாயிகள் TNFR என்ற இணைய போர்டல் (tnfr.agristack.gov.in) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சேவை மையங்கள் மூலம் நில சர்வே எண் மற்றும் தனிப்பட்ட விவரங்களை வழங்கிப் பதிவு செய்ய இயலும்.

## 18.3 பாரத் சஞ்சீவனி

- இது கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ சேவைகள் பற்றிய ஒரு டிஜிட்டல் தளமாகும். இது இந்துஸ் இந்த் வங்கியின் துணை நிறுவனமான பாரத் ஃபைனான்சியல் இன்க்ளூஷன் லிமிடெட் நிறுவனத்தால் தொடங்கப்பட்ட ஒரு கார்பரேட் சமூகப் பொறுப்புத் திட்டமாகும்.
- இந்தச் செயலியை ஜார்கண்ட், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் தெலுங்கானா போன்ற பல மாநிலங்கள் பயன்படுத்துகின்றன.
- இந்த மொபைல் செயலி 2025-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் ஆவின் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்துடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தச் செயலியின் மூலம், ஆவினுடன் இணைந்துள்ள கால்நடை உரிமையாளர்களுக்கு அத்தியாவசிய கால்நடை மருத்துவ சேவைகள் மற்றும் கால்நடை வளர்ப்பு தொடர்பான தகவல்கள் வழங்கப்படுகின்றது.
- தமிழ்நாடு முழுவதும் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காகக் கட்டணமில்லா தொலைபேசி உதவி எண் (1800-425-2577) ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 18.4 e-NAM இ-தேசிய வர்த்தகம்

- விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்களுக்கு ஒரு பொதுவான இணையவழி சந்தையை / தளத்தை வழங்குவதன் மூலம் விவசாய விளைபொருட்களுக்கான தேசிய சந்தையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட பெரிய e-NAM ஆன்லைன் தளத்தின் ஒரு பகுதியாக இந்தச் செயலி உள்ளது.
- இந்தச் செயலி, e-NAM எனப்படும் பெரிய ஆன்லைன் தளத்தின் ஒரு பகுதியாகும். இது விவசாயப் பொருட்களுக்குத் தேசிய சந்தையை உருவாக்கும் நோக்கத்துடன், விவசாயிகள், வணிகர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்குப் பொதுவான ஓர் இணைய தளத்தை / இணைய வழி சந்தையை வழங்குகிறது.
- தமிழ்நாட்டில் உள்ள பல மண்டிகள்/ ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் e-NAM போர்ட்டலுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. எனவே, விலை மற்றும் சரக்கு வருகைத் தகவல்களை அறிந்து கொள்ளவும், தொலைதூர ஏலத்தை

மேற்கொள்ளவும் ஒழுங்குமுறை மண்டிகள் இந்த மொபைல் செயலியைப் பயன்படுத்தலாம்.

- வலை பதிப்போடு ஒப்பிடும்போது மொபைல் செயலியில் குறைந்த அம்சங்களே உள்ளன. எனவே, கூடுதல் விவரங்களுக்கு வாசகர்கள் இணையதளத்தைப் பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## 18.5 இ-தோட்டம்

- இது (e-தோட்டம்) தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையால் வெளியிடப்பட்ட ஒரு மொபைல் செயலியாகும் (https://ethottam.in/).
- விவசாயிகள், நுகர்வோர் மற்றும் வர்த்தகர்களை ஒரே தளத்தில் இணைப்பதன் மூலம் அவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் இந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தச் செயலி விவசாயிகள் காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்ய உதவியாக இருக்கும். குறிப்பாக மாடித் தோட்டதில் அல்லது வீட்டின் கொல்லைப்புறத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்ய விரும்புவோருக்குத் தேவைப்படும் தகவல்கள் இந்தச் செயலியில் உள்ளன.
- மேலும் e-தோட்டம் செயலி, விவசாயிகள் பழங்கள் / காய்கறிகள் மற்றும் தொடர்புடைய சில பொருட்களை நுகர்வோர் மற்றும் வர்த்தகர்களுக்கு விற்பனை செய்வதற்கு பயனுள்ளதாக இருக்கும்.
- ஆண்ட்ராய்டு மற்றும் iOS இயங்குதளங்களைக் கொண்ட மொபைல் போன் பயனர்கள் இந்தச் செயலியைக் கூகுள் பிளே ஸ்டோர் அல்லது ஆப்பிள் ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

## 18.6 இ- வாடகை

- இ-வாடகை சேவை என்பது உழவன் மொபைல் செயலி மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறையின் இணைய தளத்தில் (https://aed.tn.gov.in) இயங்கும் ஓர் அம்சம் / செயலி ஆகும்.
- விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை எங்கிருந்தும் முன்பதிவு செய்யவும், முன்கூட்டியே வாடகைக் கட்டணங்களை ஆன்லைனில் செலுத்தவும் இந்தச் செயலி உதவியாக உள்ளது.
- அரசு மற்றும் தனிநபர்/தனியார் நிறுவனங்களின் மூலம் வாடகைக்கு கிடைக்கும் பண்ணை இயந்திரங்கள், வாடகை விவரங்கள் மற்றும் அவை எப்பொழுது கிடைக்கும் போன்ற தகவல்களும் இந்தச் செயலியில் உள்ளன.

## 18.7 பார்ம்ஸ்

- FARMS (**FAR**m **M**achinery **S**olutions) என்பது இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையால் உருவாக்கப்பட்ட பல மொழி மொபைல் செயலியாகும்.
- இந்தச் செயலியைக் கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். மேலும் விவரங்களுக்கு https://agrimachinery.nic.in/Index/farmsapp என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

- இந்தச் செயலிமூலம், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் பல்வேறு திட்டங்களின் கீழ் நிறுவப்பட்டுள்ள வேளாண் இயந்திர வங்கிகளின் (FMBs) வாடகை விவரங்கள், இயந்திர வாடகை மையங்கள் (CHCs) மற்றும் உயர் தொழில்நுட்ப மையங்கள் ஆகியவைபற்றி, கணினி ஆதரவின்றி (மொபைல் மூலம்) அறிந்து கொள்ள முடியும்.
- தங்களுடைய வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு வழங்கத் தயாராக உள்ள தனிப்பட்ட விவசாயிகள், தங்கள் வணிகத்தை அதிகரிக்க, இந்தச் செயலியில் தங்கள் விவரங்களைப் பதிவு செய்யலாம்.
- மேலும், இந்தச் செயலி விவசாயிகள் தங்கள் பழைய வேளாண் இயந்திரங்களை விற்பனை செய்வதற்கும் வாங்குவதற்கும் ஒரு மின்னணு தளமாகத் திகழ்கிறது.

## 18.8 கிரைன்ஸ்

- GRAIN (**G**rower Online **R**egistration of **A**griculture **In**puts **S**ystem) என்பது தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட ஒரு இணையதள போர்டல் (https://grains.tn.gov.in) ஆகும்.
- விவசாயிகள் பயிர் கடன்கள், பேரிடர் நிவாரணம் மற்றும் பல்வேறு துறைகளின் (எ.கா. வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் பேரிடர் மீட்பு) சலுகைகளுக்கு விண்ணப்பிக்க இந்தப் போர்டல் ஒரே தொடர்பு புள்ளியாகச் செயல்படுகிறது. இது விவசாயிகள் சில உதவிகளுக்காகப் பல அலுவலகங்களுக்குச் சென்று, பல படிவங்களை நிரப்பி, சமர்ப்பிக்க வேண்டிய அவசியத்தை நீக்குகிறது.
- இந்தப் போர்டல் மூலம் பயிர்க் கடன்கள், நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கான ஊக்கத்தொகை மற்றும் நிவாரண உதவி ஆகிய சலுகைகளுக்கு எளிதாக விண்ணப்பிக்க முடியும்.
- இந்தப் போர்டல் விவசாயிகளின் ஆதார் மற்றும் வங்கிக் கணக்குத் தகவல் உள்ளிட்ட விவரங்களைச் சேகரித்து அவற்றை டிஜிட்டல் மயமாக்குகிறது. நில விவரங்கள், நில உடமை மற்றும் பயிர் சாகுபடி விவரங்களைப் பதிவு செய்துகொள்கிறது.
- GRAINS-போர்டலை ஸ்மார்ட் போன், கைக்கணினி மற்றும் சாதாரண கணினி வழியாகப் பார்க்கலாம். இது, எளிய வடிவில் மற்றும் ஒரு முறை பதிவு செய்வதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தப் போர்டல், விவசாயிகள் தங்கள் கட்டுப்பாட்டு திரையிலிருந்து (டேஷ்போர்டு) பேரிடர்களைப் நேரடியாக அரசுக்குத் தெரிவிக்க ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 18.9 மீன்கள்

- இது அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும், தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டுக் கழகத்தால் (TNFDC) உருவாக்கப்பட்ட ஒரு மொபைல் செயலியாகும். இது புதிய கடல் உணவுகளை ஆன்லைனில் ஆர்டர் செய்வதற்கு பயன்படுகிறது.
- இந்தச் செயலி தற்போது சென்னையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு மட்டும் சேவை அளிக்கிறது, தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

- பயனர்கள் அரசாங்கத்தால் நடத்தப்படும் கடைகள் மற்றும் நடமாடும் கடைகள் ஆகிய இரண்டிலிருந்தும் பல்வேறு வகையான மீன் மற்றும் கடல் உணவுகளை இந்தச் செயலியில் தேடி, வாங்கலாம்.

## 18.10 தமிழ் மண்வளம் இணைய தளம்

- இந்த இணையதள போர்டல் (https://tnagriculture.in/mannvalam/soils/) விவசாயிகள், மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், தங்கள் நிலத்தின் ஊட்டச்சத்து நிலை (சர்வே எண் வாரியாக), பொருத்தமான உரப் பரிந்துரை மற்றும் அவர்களின் நிலத்திற்கு ஏற்ற பயிர் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்காகப் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது.
- விவசாயிகள் தங்கள் மாவட்டம், தொகுதி, கிராமம், சர்வே எண் மற்றும் உட்பிரிவு எண் போன்ற விவரங்களை இந்த இணைய போர்டலில் பதிவு செய்ய வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட நிலத்தின் மண் வள நிலையை, சர்வே எண் வாரியாக இந்த போர்டல் வழங்குகிறது.
- விவசாயிகள் தங்கள் மண் வள அட்டையை மின்னணு வடிவத்தில் இந்த இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.
- இந்தப் போர்ட்டலை கணினி அல்லது மொபைல் போன் வழியாக பார்க்கலாம், இதனால் விவசாயிகளுக்குத் தகவல்கள் உடனடியாகக் கிடைக்கும்.
- சுமார் 40 லட்சம் சர்வே எண்ணின் மண் பரிசோதனை முடிவுகள் இந்தப் போர்ட்டலில் உள்ளது.

## 18.11 தூண்டில்

- தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை. இந்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் தேசிய கடலோர ஆராய்ச்சி மையத்துடன் (NCCR) இணைந்து இந்த மொபைல் செயலியை உருவாக்கியுள்ளது.
- WebGIS அடிப்படையில் இயங்கும், கணினி உதவியுடன் முடிவு எடுக்கும் இந்தத் தூண்டில் செயலி மீன்பிடிக் கப்பல்களின் இயக்கங்களைக் கண்காணிப்பதற்கும், மீன்பிடிக்கச் செல்லும் குழுக்களைப் பதிவு செய்வதற்கும் உதவுகிறது.
- இந்தச் செயலி மீனவர்களுக்குத் தங்கள் நிகழ்நேர இடத்தைத் துல்லியமாக அறிதல், பாதுகாப்பான இடங்களுக்கு வழிகாட்டுதல், மீன்பிடி தளங்களைக் குறிக்கும் வசதி, சாத்தியமான மீன்பிடி மண்டலங்கள் (PFZ), வானிலை முன்னறிவிப்பு மற்றும் மீன்பிடி பயண பதிவுகள் போன்ற முக்கிய தகவல்களை வழங்கி உதவுகிறது.
- இந்தச் செயலியில் அவசர காலங்களில் அனுப்பப்படும் SOS அம்சம், நிகழ்நேர படகு கண்காணிப்பு வசதி ஆகியவை உள்ளன, மேலும் சில சம்பவங்களைப் புகாரளிக்க இதைப் பயன்படுத்தலாம்.
- இந்த செயலியைக் கூகிள் பிளே ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். மேலும் விவரங்களுக்கு https://www.fisheries.tn.gov.in/Thoondil.html என்ற இணையதளத்தை பார்வையிடவும்.

## 18.12 உழவர்

8. உழவர் மொபைல் செயலி (முன்பு உழவன் என்று இருந்தது) தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையால் உருவாக்கப்பட்டது.

9. அரசாங்கத் திட்டங்கள், பயிர் காப்பீட்டு நிலை, விதை மற்றும் உரங்களின் இருப்பு / விநியோகம், சந்தை விலைகள் மற்றும் வானிலை முன்னறிவிப்புகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் குறித்த நிகழ்நேர மற்றும் ஒருங்கிணைந்த தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதை இந்தச் செயலி நோக்கமாகக் கொண்டுள்ளது.

10. இந்தச் செயலி விவசாயிகள் தங்கள் வேளாண் செயல்பாடுகளைத் திறம்பட மேற்கொள்ளவும், பருவகால இடர்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளைத் திறம்பட எதிர்கொள்ளவும் பயனுள்ளதாக இருக்கும்.

11. இது ஆண்ட்ராய்டு (கூகிள் பிளே ஸ்டோரில்) மற்றும் iOS (ஆப்பிள் ஸ்டோரில்) இயங்குதளங்களில் கிடைக்கின்றது. மேலும் விவரங்கள் https://www.tnagrisnet.tn.gov.in/ என்ற இணையத்தளத்தில் கிடைக்கின்றன.

12. இந்த உழவர் செயலி இரண்டு மொழிகளில் செயல்படுகிறது- தமிழ் மற்றும் ஆங்கிலம்.

13. உழவன் செயலியில் உள்ள பல்வேறு சேவைகளை (விவசாயிகள் பதிவு, திட்டங்கள் பட்டியல், டேஷ்போர்டு) https://www.tnagrisnet.tn.gov.in/ என்ற இணையதளத்தில் ஒருங்கிணைக்கும் ஓர் இணைய இடைமுகம் உள்ளது.

14. பின்வரும் விவரங்கள் உழவன் மொபைல் செயலியில் கிடைக்கின்றன:

    - *அரசுத் திட்டங்கள்*: நடைமுறையில் உள்ள திட்டங்களின் விவரங்கள்/கூறுகள் மற்றும் மானிய முறைகள் பற்றிய தகவல்கள்.
    - *பயிர் காப்பீடு*: பயனர்கள்/விவசாயிகள் காப்பீட்டு திட்டங்களில் சேர்ந்த பிறகு, இந்தச் செயலியில் பதிவு செய்து, இழப்பீடு கிடைக்கும் வரை தங்கள் விண்ணப்ப நிலையைத் தெரிந்துகொள்ளலாம்.
    - *இடுபொருட்கள் கிடைக்கும் தன்மை*: அரசு, தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் கிடைக்கும் விதைகள் மற்றும் உரங்களின் இருப்பு பற்றிய விவரங்கள்.
    - *சந்தை விலை நிலவரம்*: பல ஒழுங்குமுறை சந்தைகளில் நிலவும் வேளாண் விளைபொருட்களின் சந்தை விலைகள் குறித்த நிகழ்நேரத் தகவல்.
    - *பண்ணை இயந்திரங்கள்:* வாடகை மையங்களில் கிடைக்கும் வேளாண் இயந்திரங்கள் பற்றிய தகவல்கள்.
    - *வானிலை முன்னறிவிப்பு*: விவசாயிகள் தங்கள் சாகுபடியைத் திட்டமிட உதவும் வானிலை ஆலோசனைகள் மற்றும் முன்னறிவிப்புகள்.
    - *விரிவாக்கச் சேவைகள்:* வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் கிராமங்களுக்குச் செல்வது பற்றிய தகவல்கள்.
    - *பதிவு*: பல்வேறு அரசுத் திட்டங்களின் பலன்களைப் பெற விவசாயிகள் இந்தச் செயலியில் பதிவு செய்யலாம்.
    - *பிற சேவைகள்*: அங்கக விளைபொருட்கள், FPO தயாரிப்புகள், பூச்சி/நோய் கண்காணிப்பு மற்றும் விவசாயிகள் தங்கள் கருத்துக்களைப் பகிர்தல் உள்ளிட்ட தகவல்கள் இந்தச் செயலியில் உள்ளன.

**ஆதாரங்கள்:**


- CSR: MoU signed with Tamil Nadu Government to expand 'Bharat Sanjeevani' initiative. https://thecsrjournal.in/corporate-social-responsibility-csr-news-indusind bank - mou-tamil- nadu-government-bharat-sanjeevani- initiative/#
- https://aed.tn.gov.in/en/services/evaadagai/land-developement/
- https://agrimachinery.nic.in/Index/farmsapp
- https://enam.gov.in/web/mobile-app
- https://ethottam.in/category/department-of-horticulture/
- https://ethottam.in/tn-horticulture-released-e-thottam-app/
- https://grains.tn.gov.in/
- https://play.google.com/store/apps/details?id=ageb.busyness.app&hl=en_IN&pli=1
- https://play.google.com/store/apps/details?id=in.kultivate.aavinkovai&hl=en_SG
- https://tnagriculture.in/mannvalam/soils/
- https://tnfr.agristack.gov.in/farmer-registry-tn/#/
- https://www.fisheries.tn.gov.in/Thoondil.html
- https://www.fisheries.tn.gov.in/TNFDC.html#home
- https://www.meengal.com/
- https://www.tnagrisnet.tn.gov.in/.
- https://www.tnagrisnet.tn.gov.in/people_app/dashboard/main/en
- Uzhavan App - one stop digital blessing ably helping the toiling farmers. 10 May 2020. https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1622680&reg=3&lang=2

# (19) Awards and Prize for Farmers and Researchers

## 19.1 Awards for Agriculture Innovation

- The Tamil Nadu Government has announced awards/prizes to the farmers who demonstrate innovation in technology and machinery. The innovation must be original, novel, low-cost, and easily adoptable by other farmers. It must also have its originality, certified by the Scientists of TNAU.
- The prize for a local innovation or new agricultural technology or new agricultural implements is:
    - First Prize : ₹ 2,50,000 (for 3 farmers)
    - Second Prize : ₹ 1,50,000 (for 3 farmers)
    - Third Prize : ₹ 1,00,000 (for 3 farmers)

## 19.2 Best Exporter-Farmer Award

- To recognize and encourage farmers engaged in agricultural exports, the Tamil Nadu Government has announced an award for the best exporter-farmer which carries cash prize of ₹ 2 lakh.

## 19.3 Best performing farmers/ producers/self-help groups

- Award for Best Performing Farmers Interest Group (FIG)/ Farm Producer Group (PG)/ Self-Help Group (SHG) is: ₹ 20,000 per award per group per year.

## 19.4 Bharat Ratna Dr. M.G.R traditional paddy variety conservator award

- This award is given since 2019. Crop yield competitions are conducted with traditional paddy varieties at the state level, and the first three farmers who recorded the highest yield are awarded the prize as detailed below.
    - First Prize : ₹ 1,00,000
    - Second Prize : ₹ 75,000
    - Third Prize : ₹ 50,000

## 19.5 District Level Yield Competition Award

| Sl No | Crops Covered | First Prize (₹) | Second Prize (₹) |
|---|---|---|---|
| 1 | Paddy, Cotton, Groundnut and Sugarcane | 15,000 | 10,000 |
| 2 | Sorghum, Cumbu, Maize, Black gram, Green gram and Red gram | 10,000 | 5,000 |

## 19.6 Dr.M.S. Swaminathan Research Grant

- A grant of ₹ 1 crore was created during the year 2025-2026 from State funds for promoting and recognising new research findings in Agriculture.

## 19.7 Gopal Ratna Awards and State Awards

- Gopal Ratna Award is a National Award and is given under three categories.
  1. Best Dairy Farmer Rearing Indigenous Cattle/buffalo Breeds
  2. Best Artificial Insemination Technician (AIT)
  3. Best Dairy Cooperative/ Milk Producer Company/ Dairy Farmer Producer Organisation.
- The Nathamkovilpatti Milk Producer Cooperative Society (MPCS) of the Dindigul district and Vadapathi MPCS of the Cuddalore District won the award during 2023 and 2024, respectively, under the Best Dairy Cooperative Society category.
- State award: At the district level, the best milk producers, the best society secretaries and the best bulk milk cooler secretaries are awarded by the District Collectors.

  First prize : ₹10,000
  Second prize : ₹ 5,000
  Third prize : ₹ 3,000

## 19.8 International Exposure Visit to Farmers

- During 2025-26, about 100 farmers will be selected for exposure visit to Japan, China and Vietnam to learn the latest technologies adopted in these countries, which have achieved high productivity in paddy.

## 19.9 Nammazhvar Award for Best Organic Farmers

- Three awards will be issued per year; each carry ₹ 2 lakhs cash award.

## 19.10 Prize/Awards for High-Yielding Farmers/ Best-Performing Farmer Award

- A total of 33 cash awards will be given to the farmers who achieved the highest yields by adopting improved technologies in 11 crops under millets, pulses, oilseeds and sugarcane.
  - First Prize : ₹ 2,50,000
  - Second Prize : ₹ 1,50,000
  - Third Prize : ₹ 1,00,000
- Farmers who wish to join the competition must register by paying a Fee of ₹ 150/ per crop (Use Uzhavan App or tnagrisnet web portal).

## 19.11 Tamil Nadu Scientist Award (TANSA)

- The TANSA award is given to State Scientists to recognise and honour their outstanding contributions in various disciplines, including Agricultural Science.
- This award is presented by the Tamil Nadu State Council for Science and Technology (TNSCST).
- The award carries cash prize of ₹ 50,000 and a citation.
- Heads of research and educational institutions in the State may forward the nominations.

### 19.12 Thiru C. Narayanasamy Naidu Award

- This award is given since 2011-12, for selected farmers who have achieved the highest paddy productivity in rice by adopting the SRI system (₹ 5 lakh cash award + Silver Plate)- Generally conferred on the Republic Day.

**Sources:**


- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for Agriculture and Farmers' Welfare. Government of Tamil Nadu.
- https://www.newindianexpress.com/states/tamil-nadu/2020/Dec/22/award-to-be-named-after-ryots-leader-2239452.html
- https://www.newindianexpress.com/states/tamilnadu/2025/Sep/28/makemodern-farm-tools-available-at-affordable-prices-to-farmers-cm-stalin?utm
- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1979339&utm
- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2076431&utm
- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2204575&lang=1&reg=3&ut

# (19) விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளுக்கான விருதுகள் மற்றும் பரிசுகள்

## 19.1 வேளாண் கண்டுபிடிப்புகளுக்கான புதுமை விருதுகள்

- வேளாண் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களில் புதுமைகளைக் கண்டுபிடிக்கும்/வெளிப்படுத்தும் விவசாயிகளுக்குத் தமிழ்நாடு அரசு புதுமை விருதுகளை அறிவித்துள்ளது.
- புதுமைகள் தனித்துவமாக, புதியதாக, குறைந்த செலவில் தயாரிக்க கூடியதாக, மற்ற விவசாயிகள் எளிதில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். அதன் தனித்துவம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (TNAU) விஞ்ஞானிகளால் சான்றளிக்கப்பட வேண்டும்.
- உள்ளூர் கண்டுபிடிப்பு/ புதுமை / புதிய வேளாண் தொழில்நுட்பம் / புதிய வேளாண் கருவிகளுக்கான பரிசுத் தொகை:
    - முதல் பரிசு : ரூ. 2,50,000 (3 விவசாயிகள்)
    - இரண்டாம் பரிசு : ரூ. 1,50,000 (3 விவசாயிகள்)
    - மூன்றாம் பரிசு : ரூ. 1,00,000 (3 விவசாயிகள்)

## 19.2 சிறந்த ஏற்றுமதி-விவசாயி விருது

- வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில், சிறந்த ஏற்றுமதி செய்யும் விவசாயிக்குத் தமிழ்நாடு அரசு ரூ. 2 லட்சம் ரொக்கப் பரிசுடன், விருது வழங்கிக் கௌரவிக்கிறது.

## 19.3 சிறப்பாகச் செயல்படும் விவசாயிகள் / உற்பத்தியாளர்கள் / சுய உதவிக் குழுக்கள்

- சிறந்த செயல்பாடு கொண்ட உழவர் ஆர்வக் குழு / உற்பத்தியாளர் குழு / சுய உதவிக் குழு ஆகியவற்றுக்கு ஆண்டுக்கு ஒவ்வொரு குழுவுக்கும் ரூ. 20,000 ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.

## 19.4 பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் இரகங்கள் பாதுகாவலர் விருது

- இந்த விருது 2019-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.
- மாநில அளவில் பாரம்பரிய நெல் இரகங்களுக்கான விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் அதிக விளைச்சல் பெற்ற முதல் மூன்று விவசாயிகளுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுகள் வழங்கப்படுகின்றன:
    - முதல் பரிசு : ரூ. 1,00,000
    - இரண்டாம் பரிசு : ரூ. 75,000
    - மூன்றாம் பரிசு : ரூ. 50,000

### 19.5 மாவட்ட அளவிலான விளைச்சல் போட்டி விருது

| வ. எண் | உள்ளடங்கிய பயிர்கள் | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) |
|---|---|---|---|
| 1 | நெல், பருத்தி, நிலக்கடலை, கரும்பு | 15,000 | 10,000 |
| 2 | சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப் பயறு, துவரை | 10,000 | 5,000 |

### 19.6 டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி

- வேளாண் துறையில் புதிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து, அவற்றை அங்கீகரிக்கும் நோக்கில், 2025–26-ஆம் நிதியாண்டில் மாநில நிதியிலிருந்து ரூ. 1 கோடி நிதி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

### 19.7 கோபால் ரத்னா விருதுகள் மற்றும் மாநில விருதுகள்

- கோபால் ரத்னா விருது என்பது தேசிய அளவிலான விருதாகும்; இது மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது:
  1. நாட்டின மாடு / எருமை இனங்களை வளர்க்கும் சிறந்த பால் உற்பத்தியாளர்கள்
  2. சிறந்த கால்நடை செயற்கை கருத்தரிப்பு நிபுணர்
  3. சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் / பால் உற்பத்தியாளர் நிறுவனம் அல்லது அமைப்பு
- திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நத்தம்கோவில்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள வடபாதி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஆகியவை முறையே 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் “சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்” பிரிவில் விருதுகளைப் பெற்றுள்ளன.
- மாநில விருது: மாவட்ட அளவில் சிறந்த பால் உற்பத்தியாளர்கள், சிறந்த சங்க செயலாளர்கள் மற்றும் சிறந்த மொத்த பால் குளிர்பதன நிலைய செயலாளர்கள் ஆகியோருக்கு மாவட்ட ஆட்சியர்களால் விருதுகள் வழங்கப்படுகின்றன.
  - முதல் பரிசு : ரூ. 10,000
  - இரண்டாம் பரிசு : ரூ. 5,000
  - மூன்றாம் பரிசு : ரூ. 3,000

### 19.8 விவசாயிகளுக்கான சர்வதேச கண்டுணர் சுற்றுலா /அனுபவப் பயணம்

- 2025–26ஆம் ஆண்டில் சுமார் 100 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு ஜப்பான், சீனா மற்றும் வியட்நாம் நாடுகளுக்குக் கண்டுணர் சுற்றுலா அனுப்பப்படுவார்கள். இது, அந்நாடுகளில் நெல் பயிரில் அதிக உற்பத்தியை எட்ட உதவும் நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள உதவும்.

### 19.9 சிறந்த இயற்கை விவசாயிகளுக்கான நம்மாழ்வார் விருது

- ஆண்டுக்கு மூன்று விருதுகள் வழங்கப்படும்; ஒவ்வொரு விருதுக்கும் ரூ. 2 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

## 19.10 அதிக விளைச்சல் பெற்ற மற்றும் சிறந்த விவசாயிகளுக்கு விருதுகள்

- சிறுதானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள் மற்றும் கரும்பு உள்ளிட்ட 11 பயிர்களில் மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சல் பெற்ற விவசாயிகளுக்கு மொத்தம் 33 ரொக்க விருதுகள் வழங்கப்படும்.
    - முதல் பரிசு : ரூ. 2,50,000
    - இரண்டாம் பரிசு : ரூ. 1,50,000
    - மூன்றாம் பரிசு : ரூ. 1,00,000
- போட்டியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள், ஒவ்வொரு பயிருக்கும் ரூ. 150 கட்டணம் செலுத்திப் பதிவு செய்ய வேண்டும் (உழவர் செயலி அல்லது தமிழ்நாடு வேளாண்மை வலைதளம் TNagrisnett என்ற இணையதளம் மூலமாக).

## 19.11 தமிழ்நாடு விஞ்ஞானி விருது (TANSA)

- வேளாண் அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பாற்றிய மாநில விஞ்ஞானிகளைக் கௌரவிக்கும் நோக்கில் தமிழ்நாடு விஞ்ஞானி விருது வழங்கப்படுகிறது.
- இவ்விருதைத் தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றம் வழங்குகிறது.
- இவ்விருது ரூ. 50,000 ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் கொண்டிருக்கும்.
- விண்ணப்பிக்க விரும்பும் மாநிலத்தில் உள்ள ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் நிறுவனத்தின் தலைவர்கள் பரிந்துரைகளுடன் விண்ணப்பத்தை அனுப்பலாம்.

## 19.12 திரு. சி. நாராயணசாமி நாயுடு விருது


- 2011–12-ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும் இவ்விருது, SRI எனப்படும் செம்மை நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி நெல் பயிரில் மிக உயர்ந்த உற்பத்தியைப் பெற்ற, தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.
- இவ்விருதுடன் ரூ. 5 லட்சம் ரொக்கப் பரிசும், வெள்ளித் தகடும் வழங்கப்படும். பொதுவாக, இவை ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும்.

**ஆதாரங்கள்:**


- GoT. 2025. Agriculture- Farmers' Welfare Department. Policy Note 2025-26. Demand No. 5. Thiru M.R.K. Panneerselvam. Hon'ble Minister for A&FW, Govt. of Tamil Nadu.
- https://www.newindianexpress.com/states/tamil-nadu/2020/Dec/22/award-to-be-named-after-ryots-leader-2239452.html
- https://www.newindianexpress.com/states/tamilnadu/2025/Sep/28/makemodern -farm-tools-available-at-affordable-prices-to-farmers-cm-stalin?utm
- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1979339&utm
- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2076431&utm
- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2204575&lang=1&reg=3&utm








ISBN: 978-93-85267-51-2